இலங்கை சமுர்த்தி அதிகார சபை

2011ம் ஆண்டிற்கான

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால்
பொருளாதார அபிவிருத்தி
கௌரவ அமைச்சர் அவர்களுக்கு
சமர்ப்பிக்கப்படுகின்ற

வருடாந்த அறிக்கை.

முகவுரை

ஆசியாவின் விந்தையுள்ள ஒரு நாடாக இலங்கையை உருவாக்கும் உயரிய குறிக்கோளை முன்வைத்துக்கொண்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபை வெற்றிகள் பலவற்றினை அடைந்து கொண்டுள்ளது.

சுபீட்சமிகு நாடொன்றை உருவாக்குவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்படுத்திய ''திவிநெகும - வாழ்வெழுச்சி'' வேலைத்திட்டத்தின் பொருட்டு 15 வருட காலமாக கிடைத்த அனுபவங்களை உத்வேகத்துடன் வழங்கிய ஒரு நிறுவனமாகும்.

குறைந்த வருமானம் பெறுவோர் தேசிய பொருளாதாரத்திற்கு பலம் வாய்ந்த ஒரு சங்கிலித் தொடராக இணைப்பது இதன் குறிக்கோளாகும்.அக்குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு குறைந்த வருமானம் பெறுவோருக்கான வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் சமுர்த்தி வங்கிக்கடன் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதன் ஊடாக கிராமிய மற்றும் நகரப் பிரதேச வறிய மக்களுக்கு செயற்பாடுள்ள நிலைபேறான வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

'' மகிந்த சிந்தனை தூரநோக்கின் பிரகாரம் தனிநபருடன் குடும்பத்தினை கட்டியெழுப்பி, கிராமத்தினை கட்டியெழுப்பி, வறுமையை ஒழித்து இலங்கையை ஆசியாவின் அபிவிருத்தியடைந்த ஒரு தேசமாக மாற்றுவதற்கு பங்களிப்புச் செய்வதே ஒருமித்த குறிக்கோளாகும்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

இலங்கை சமுர்த்தி அதிகார சபை

1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் அடிப்படை குறிக்கோளானது,

''இளைஞர்கள்,பெண்கள் மற்றும் குறைந்த வருமான நிலையில் காணப்படும் குழுக்களை பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் இணைத்துக்கொள்ளல், சமூக நிலைப்பாட்டினை மேம்படுத்தல் மற்றும் வறுமை நிலையினை ஒழித்தல்''ஆகியவற்றிற்கான திட்டமிடலை மேற்கொள்வதும் நடைமுறைப்படுத்தலுமாகும்.

நோக்கு

''வறுமை குன்றிய சுபீட்சமிகு ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புதல்''

பணி

மக்கள் பங்கேற்புடன் கூடிய அபிவிருத்தியின் மூலம் வறுமை குன்றிய நிலையான தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்தல்.

குறிக்கோள்

- சிறுகுழுக்களை உருவாக்கி அதனூடாக சமுர்த்திச் சங்கங்களை கட்டியெழுப்புவதன் மூலம் கிராமியக் குடும்பங்களின் உள்ளார்ந்த திறன்களை இனங்காண்பதும் அக்கிராம மக்களை பலப்படுத்துவதும்.
- 2013 ஆம் ஆண்டில் பௌதீக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் ஊடாக நகர,கிராமிய மற்றும் பெருந்தோட்டப்பகுதிகளை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒருங்கிணைப்பின் ஊடாக மாகாணம் சார்ந்த அபிவிருத்திகளுக்கு ஒத்துழைத்தல்.
- சிறிய அளவிலான நிதிக்கடன் வலையமைப்பினை பலப்படுத்துவதன் ஊடாக தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தல்.
- இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினை தொழில்நுட்ப ரீதியில் பலப்படுத்தப்பட்ட நிறுவனமாக கட்டியெழுப்புதல்.

இலங்கை அதிகாரசபை
அறிமுகமும் 2011ம் ஆண்டின் மதிப்பீடும்

1995ம் ஆண்டின் 30ம் இலக்க சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் முக்கிய குறிக்கோளான இலங்கையின் வறுமையினை ஒழிக்கும் பொருட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.அங்கு வறிய குடும்பங்களை இனங்காண்பதும் வறுமை நிலைக்கான காரணிகளுக்கமைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வலுவூட்டல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.
இவ்வாண்டில் பிரதான வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது ரூபா மில்லியன் 3260 ஆகும்.

இதில் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக ''திவிநெகும-வாழ்வெழுச்சி'' தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக நாடு பூராகவும் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் 75 மனைப்பொருளாதார அலகுகள் இக்கருத்திட்டத்தின் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது.முக்கியமாக இக்கருத்திட்டத்தினை செயற்படுத்துவதில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களினது போசனை மட்டத்தினை உயர்த்துவதற்காக இருந்ததுடன் அதன் மூலம் பொருளாதார மட்டத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதும் குறிக்கோளாகும்.

''திவிநெகும-வாழ்வெழுச்சி'' வேலைத்திட்டத்தோடு இணைந்ததாக செயற்படுத்தப்படுகின்ற நாற்றுமேடை மற்றும் பசுமை இல்ல அபிவிருத்தியின் 2011.12.31ம் திகதியன்றில் முன்னேற்றங்களாக 2163 பசுமை இல்லங்களும் 885 நாற்றுமேடைகளும் 23329 ஏனைய விவசாய வேலைத்திட்டங்களும் 469,537 வீட்டுத்தோட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன்பொருட்டு விடுவித்த தொகையானது ரூபா மில்லியன் 602.299 ஆகும்.

ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளது சமூக மற்றும் கலாச்சாரப் பெறுமதியினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. வறுமைத் தன்மை தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ள சமூக மற்றும் கலாச்சாரப் பெறுமதியினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. வறுமைத்தன்மை தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ள சமூகக்காரணிகளை இனங்காண்பதும் அவற்றை ஒழிப்பதற்கான

தகுதியான முறைகளை அறிமுகப்படுத்துவதும் இவ்வேலைத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. “ மத்தட்ட தித்த - மதுவுக்கு முற்றுபுள்ளி” வேலைத்திட்டத்தின் கீழ் போதைப்பொருளைத் தடுத்தல்,சிறுவர் துஷ்பிரயோகத்தினை தவிர்த்தல் மற்றும் தற்கொலை முயற்சியினை தவிர்த்தல் இதன் மூலம் செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களாகும்.இதற்கு மேலதிகமாக சர்வதேச ஞாபகார்த்த தினங்களும் கொண்டாடப்படுகின்றது. அவையாவன மகளிர் தினம்,சிறுவர் தினம், முதியோர் தினம்,எழுத்தறிவு தினம் மற்றும் வறுமை ஒழிப்புத்தினம் ஆகியவைகளாகும். எவ்வித உதவிகளும்(பாதுகாப்பு) இல்லாத பெண்களுக்கு வீட்டு வசதிகளை வழங்கும் பொருட்டு “திரியபியச” வீடமைப்புத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. 2011ம் ஆண்டில் 58578 ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களும், 69074 குடும்ப அலகில் மகிழ்ச்சியினையும் சுகவாழ்வினையும் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களும் 66369 போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையினை தவிர்க்கும் வேலைத்திட்டங்களும் 48848 கிராம மட்டத்தில் சிறுவர் நலன்புரி வேலைத்திட்டங்களும் சமூக மற்றும் கலாச்சார வேலைத்திட்டங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 13729, சர்வதேச தினங்களோடு இணைந்ததான 5670 வேலைத்திட்டங்களும் 3947 திரியபியச வீடமைப்புத்திட்டங்களும் 19158 ஏனைய அமைப்புக்களுடன் செயற்படுத்திய ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களுடன் மொத்தமாக 285373 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டத்திலிருந்து பயன்பெறுகின்றோரின் எண்ணிக்கையானது 477175 ஆகும்.

வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவியாகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பொருட்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபை கூடிய கவனத்தினை செலுத்தியுள்ளது. இதன் கீழ் ரூபா மில்லியன் 341.825 இற்கான தொகையில் சிறியளவிலான நீர்பாசன திட்டங்கள்,குடிநீர் வசதிகளை வழங்குதல், விவசாயக்கிணறுகள் மற்றும் கால்வாய்கள் நீர்த்தேக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கியுள்ளது. இதற்கமைய 259 நீர்பாசனத்திட்டங்களும் 170 குடிநீர் வசதிகளை வழங்குதலும் 5548 துப்புரவு ஏற்பாட்டு வேலைத்திட்டங்களும்,ஒரு பல்பணி நிலையமும் 4 சிறியளவிலான பாலங்களும்,120 கிராம மட்டத்திலான “கெமிதிரிய” வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளது.இதற்காக ரூபா 250000 இற்கான தொகை ஒரு பிரதேசசெயலகப்பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.2011ம் ஆண்டின் இறுதியில் ரூபா மில்லியன் 326.29 இற்கான நிதி முன்னேற்றத்துடன் 5950 கருத்திட்டங்களை செயற்படுத்தி 14423 பயனாளிகளுக்கு நன்மைகளை வழங்கியுள்ளது.

1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் குறைந்த வருமானம் பெறுவோரின் சேமிப்புக்களை விருத்திசெய்து அதனுடாக முதலீட்டுப் பலத்தினை அதிகரிப்பதற்கும் உற்பத்தி மற்றும் சேவை வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தினை (கடன் வசதிகளை) வழங்குவதற்கும் முறையற்ற கடன் கொடுக்கல்வாங்கல்களை குறைப்பதற்கும் அதன் மூலம் அவர்களை கடன் சுமையிலிருந்து மீட்டி இலாபகரமான ஒரு நிறுவன முறையினை உருவாக்குவதற்கும் உத்தேசித்தது. இதன்பொருட்டு 1043 சமுர்த்தி வங்கிச்சங்க வலையமைப்பினூடாக 2011.12.31ம் திகதியன்றில் மொத்த அங்கத்தவர்களாக 2869548 பேர் அங்கத்துவத்தினைப் பெற்றுள்ளனர். இவ்வாண்டிற்குள் மாத்திரம் 68015 அங்கத்தவர்கள் அதிகரித்துள்ளதுடன் ரூபா மில்லியன் 5370.68 இற்கான தொகையினை தொடர்ந்தும் வங்கிச்சங்கத்தின் பால் நம்பிக்கை வைத்து வைப்புக்களை மேற்கொண்டுள்ளனர். அதன்பிரகாரம் 2011.12.31ம் திகதியில் மொத்த வைப்பாக (ரூபா 000) 4100855 ஆகக் காட்டியதுடன் மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கையானது 9,889,010 ஆகும்.

சமுர்த்தி நிவாரண உதவி பெறுவோர் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சியாண்மை ஆற்றலை இனங்கண்டு சுவசக்தியின் மூலம் வறுமை நிலையில் இருந்து மீளுவதற்குத் தேவையான சூழலை கட்டியெழுப்புவதற்கு தேவையான குறுநிதியியல் வசதிகள் வங்கிச்சங்க கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.மேலும் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் முதலீட்டுத்தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு விசேட கடன் திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கான சுயதொழில், பயிர்ச்செய்கை, மிஹிஜய, மீன்பிடி, சுவசக்தி, இடர்,கிருல(மகுடம்), யொவுன்திரிய, நுகர்வு, ஜனபுபுது(மக்கள் எழுச்சி) ஆகிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் பணியாளர்களுக்கான நுகர்வு,வீடமைப்பு,மோட்டார் சைக்கிள் கடன் திட்டமும் விசேட கடன் திட்டத்தின் கீழ் ''விதுளி அத்வெல - மின்சாரத்திற்கான உதவி'' கடன் வேலைத்திட்டமும் செயற்படுகின்றது.

2011.12.31ம் திகதி அன்று பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு ரூபா மில்லியன் 71721இற்கான தொகை 4682822 எண்ணிக்கையானோருக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளதுடன் பணியாளர் கடன் திட்டத்தின் கீழ் நுகர்வுகடன் வேலைத்திட்டத்தில் இருந்து 22886 பேருக்கு ரூபா மில்லியன் 1367.62 இற்கான தொகை வழங்கப்பட்டுள்ளதுடன் வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் 1838 பேருக்கு ரூபா மில்லியன் 762ம் மோட்டார் சைக்கிள் கடன்

திட்டத்தின் கீழ் 3557 பேருக்கு ரூபா மில்லியன் 299.7 கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.மேலும் ‘‘விதுளி அத்வெல - மின்சார உதவி’’ கடன் வேலைத்திட்டத்தின் கீழ் 20.694 பேருக்கு மின்சார இணைப்பினை வழங்கியுள்ளதுடன் இதன் பொருட்டு ரூபா மில்லியன் 353 பயன்படுத்தப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டிற்குள் மாத்திரம் 522226 அங்கத்தவர்களுக்கு ரூபா மில்லியன் 13189 இற்கான தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்தில் கடன் அறவீட்டு விகிதாசாரமானது 111.90 வீதமும் அறவிடமுடியாக்கடன் விகிதாசாரமானது 5.51 வீதமும் ஆகும்.

உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவினாலும் இந்த வெற்றிகளை 2011ஆம் ஆண்டில் முடியுமானது பணிப்பாளர்சபை,பணிப்பாளர் நாயகம் உட்பட தலைமையலுவலகம்,மாவட்ட மற்றும் பிரதேச சகல பணியாளர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு மற்றும் சரியான தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டமையினாலாகும். இதன்பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் உட்பட பணியாளர்களிடமிருந்து கிடைத்த வழிகாட்டல்களும் விசேடமாக இருந்த குறைபாடுகளை உரிய நேரத்தில் சுட்டிக்காட்டி சரிசெய்யும் பொருட்டு அரசாங்க கணக்காய்வு பிரிவின் பணியாளர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பும் உள்ளகக் கணக்காய்வுப்பிரிவிலிருந்து கிடைத்த ஒத்துழைப்பினையும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

அதிமேன்மை தகு ஜனாதிபதி அவர்களின் மகிந்த சிந்தனை தூரநோக்கினை முன்வைத்துக்கொண்டு அதன் குறிக்கோள்களை உயர்த்திக்கொண்டு இலங்கையை ஆசியாவின் ஒரு விந்தையாக ஆக்கும் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினை நெறிப்படுத்துகின்ற கௌரவ அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு 2011ஆம் ஆண்டில் வெற்றிகரமானதற்கான ஒரு அரிய வழிகாட்டலாகும் என்பதை விஷேடமாக இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஆர்.பீ.பி.திலகசிரி
பணிப்பாளர் நாயகம்
இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

இலங்கை சமுர்த்தி அதிகார சபை

நிர்வாக ரீதியான விரிவாக்கம்

1. சமுர்த்தி வேலைத்திட்ட செயற்பாடு:

* மாவட்டங்களின் எண்ணிக்கை - 22
* பி.செ. பிரிவு எண்ணிக்கை - 316
* கிராமஉத்தியோகத்தர்பிரிவுகளின் எண்ணிக்கை - 14,008
* வங்கி / வலயங்களின் எண்ணிக்கை - 1043
* மகாசங்கங்களின் எண்ணிக்கை - 316
* சமுர்த்தி சங்கங்களின் எண்ணிக்கைகள் - 18,788
* சமுர்த்தி செயலணிகள் - 14,008

2. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை - 1,541,619

3. சிறு குழுக்களின் எண்ணிக்கை - 207,975

4. பணியாளர் தொடர்பான விபரங்கள்

1. பணிப்பாளர்/பிரதிப்பணிப்பாளர்/உதவிப்பணிப்பாளர் - 06
2. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்/
   உதவி உள்ளகக்கணக்காய்வாளர் - 02
3. உதவிப்பணிப்பாளர் (சட்டம்) - 01
4. சட்ட உத்தியோகத்தர் - 01
5. சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் - 16
6. நிர்வாக உத்தியோகத்தர் - 01
7. செய்தி உத்தியோகத்தர் - 01
8. சமுர்த்தி முகாமையாளர் எண்ணிக்கை - 2129
9. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கை - 22008
10. ஏனைய பணியாளர்கள் - 294

2011ம் ஆண்டில் வரவுசெலவு திட்டத்தின் மூலம் வாழ்வாதார அபிவிருத்தி,ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி,பிரிவுகள் மற்றும் வேலைத்திட்டங்களுக்கமைய பிரிந்து செல்லும் விதம்

தொ.இல	அபிவிருத்திப்பிரிவு		2011ம் ஆண்டில் திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்படுகின்ற விதம் ரூ.மி
1	**கிராம அபிவிருத்திப்பிரிவு**		346.00
2	**வாழ்வாதார அபிவிருத்தி**		2167.70
	சந்தைப்படுத்தல் பிரிவு	319.00	
	கைத்தொழில் பிரிவு	618.00	
	விவசாயப்பிரிவு	870.00	
	மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்புப்பிரிவு	390.70	
3	**சமூக அபிவிருத்திப்பிரிவு**		356.30
4	**வங்கி நிதிப்பிரிவு**		250.00
5	**மகாசங்கப்பிரிவு**		20.00
6	**மனிதவளப்பிரிவு**		20.00
7	**ஊடகப்பிரிவு**		25.00
8	**நிதிப்பிரிவு(தேடி வழங்கல் நடவடிக்கைகள்)**		23.00
9	**கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப்பிரிவு**		20.00
10	**நிர்வாகச்செலவுகள்**		2.00
மொத்தம்			3260.00

2011-12-31ம் திகதியன்று செலவுகளின் நிதியியல் முன்னேற்றம்

மூலதனச்செலவுகள்

விபரம்	2011 ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள்	2011.12.31ம் திகதியில் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் ரூபா	2011.12.31 ம் திகதியன்று மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் ரூபா	2011.12.31 ம் திகதியில் ஒதுக்கீடுகளின் நிலுவை ரூபா	2011.12.31ம் திகதியன்று உண்மையான மொத்தச் செலவுகள் ரூபா	2011.12.31 ம் திகதியன்று ஒதுக்கீட்டு நிலுவை (மொத்த உண்மைச் செலவிலிருந்து)
கிராம அபிவிருத்திப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	102,000,000.0	345,800,000.00	334,102,318.00	11,697,682.00	310,145,731.20	35,654,268.80
விவசாய அபிவிருத்திப்பிரிவின்வேலைத்திட்டங்கள்	1,000,000,000.0	870,000,000.00	860,710,050.00	9,289,950.00	549,140,074.19	320,859,925.81
மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்புப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	750,000,000.0	400,700,000.00	415,652,599.00	(14,952,599.00)	231,411,093.89	169,288,906.11
சந்தைப்படுத்தல் அபிவிருத்திப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	500,000,000.0	319,000,000.00	310,149,543.00	8,850,457.00	166,895,451.78	152,104,548.22
கைத்தொழில் பிரிவின் வேலைத்திட்டங்கள்	750,000,000.0	608,000,000.00	579,097,050.00	28,902,950.00	389,527,650.00	218,472,350.00
சமூக அபிவிருத்திப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	30,000,000.0	358,500,000.00	357,006,416.00	1,493,584.00	356,081,513.80	2,418,486.20
மனிதவள மற்றும் தாபன அபிவிருத்திப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	20,000,000.00	20,000,000.00	7,582,453.00	12,417,547.00	17,224,726.10	2,775,273.90
ஊடகப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	25,000,000.00	25,000,000.00	1,588,000.00	23,412,000.00	11,320,649.61	13,679,350.39
கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	20,000,000.00	20,000,000.00	6,746,019.00	13,253,981.00	6,384,011.80	13,615,988.20
மகாசங்கப்பிரிவின் வேலைத்திட்டங்கள்	20,000,000.00	20,000,000.00	19,487,026.00	512,974.00	10,236,565.24	9,763,434.76
வங்கி மற்றும் நிதி நடவடிக்கைப்பிரிவு	20,000,000.0	250,000,000.00	200,000,000.00	50,000,000.00	200,000,000.00	50,000,000.00
அபிவிருத்திச்செலவுகளின் கூட்டுத்தொகை	**3,237,000,000.00**	**3,237,000,000.00**	**3,092,121,474.00**	**144,878,526.00**	**2,248,367,467.61**	**988,632,532.39**
நிலையான சொத்துக்களை அறவிட்டுக்கொள்ளல்	23,000,000.00	23,000,000.00	8,056,335.00	14,943,665.00	12,405,529.14	10,594,470.86
மொத்தமூலதனச்செலவுகளின்கூட்டுத்தொகை	**3,260,000,000.00**	**3,260,000,000.00**	**3,100,177,809.00**	**159,822,191.00**	**2,260,772,996.75**	**999,227,003.25**

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
2011ம் ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்தின் குறிக்கோள்கள்

✶ சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

✶ கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படை திட்டமிடல் அலகாகும்.

✶ "கமநெகும" வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக ஒரு வளமிகு கிராமம் என்ற தலைப்பின் கீழ் 3060 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அதற்கு அப்பாற்பட்ட பிரிவுகள் ஆகியவற்றில் ஒழுக்காற்று மற்றும் ஆத்மீக அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தியுடன் வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியினை செயற்படுத்துதல்.

✶ கீழிருந்து மேல்நோக்கியதான தேவைகளை இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதன் பொருட்டான ஒரு வழிகாட்டல் மாத்திரம் நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

✶ அரசாங்க நிதியங்கள் (திறைசேரி ஒதுக்கீடுகள்) சமுர்த்தி வங்கிச்சங்க கடனூடாக மற்றும் பயனாளிகளின் பிரதான பங்களிப்புடனும் நிதியங்கள் வழங்கப்படுகின்றது.

✶ மிலேனிய அபிவிருத்தி இலக்கு "சார்க்" பிராந்திய சமூகக் கொள்கைகள்,மஹிந்த சிந்தனை இலக்குகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு வேலைத்திட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

✶ சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரை தங்கி வாழும் மனோநிலையில் இருந்து மீட்டி வலுவூட்டுவதனூடாக அபிவிருத்தியினை நோக்கி முன்வைத்தல்.

✶ மஹிந்த சிந்தனையை முன்வைத்து அதன் நோக்கங்களை உறுதிப்படுத்திக்கொண்டு " இலங்கையை ஆசியாவின் விந்தையாக ஆக்குவதற்கு முழுப்பங்களிப்பையும் வழங்குதல்"

✶ 1995ம் ஆண்டில் 26% ஆக இருந்த குறைந்த வருமானம் பெறும் மக்களது வீதாசாரமானது 2002ம் ஆண்டளவில் 22.5% வரையிலான அளவிற்கு கொண்டு வந்தமை உட்பட 2006/2007 ஆம் ஆண்டளவில் இவ்விகிதாசாரத்தினை 15% வரை குறைப்பதற்கும் 2009/2010ம் ஆண்டளவில் இவ்விகிதாசாரம் 8.9% வரையும் மற்றும் 2011 ஆண்டளவில் இவ்வீதாசாரமானது 7.6% வரை குறைப்பதற்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

முதலாவது பகுதி

➢ இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிருவாகக் கட்டமைப்பு

2011ம் ஆண்டிற்குள் செயற்பட்ட பணிப்பாளர் சபை

இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபையினை உருவாக்கும் சட்டத்திற்கமைய, அதிகார சபையின் பணிப்பாளர் சபை சட்டரீதியாக நியமிக்கப்படுகின்ற 04 பணிப்பாளர்களுடனும்,விடயப்பொறுப்பு அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற ஏனைய பணிப்பாளர்கள் மூவரையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். அதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் பணிப்பாளர் சபை செயற்படுகின்றது.

2011.01.01ஆம் திகதியிலிருந்து 2011.12.13ம் திகதிவரை செயற்படுகின்ற பணிப்பாளர் சபை

1).	சட்டத்தரணிதிரு. ஆர்.பி.பீ. திலகசிரி பணிப்பாளர் நாயகம்	பணிப்பாளர் சபைத்தலைவர்
2).	திருமதி.சந்திரா விக்ரமசிங்க சமுர்த்தி ஆணையாளர் நாயகம்	உத்தியோகபூர்வ உறுப்பினர்
3).	திரு.ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்கா மேலதிக செயலாளர்	உத்தியோகபூர்வ உறுப்பினர்
4)	செல்வி.கீத்தா விமலவீர திறைச்சேரி பிரதிநிதி	உத்தியோகபூர்வ உறுப்பினர்
5)	கலாநிதி பீ.ஏ.கிரிவந்தெனிய	நியமன உறுப்பினர்
6)	கலாநிதி விஜித்த நாணயக்கார	நியமன உறுப்பினர்
7)	திருமதி.சாந்தி பெர்ணாந்து	நியமன உறுப்பினர்

இலங்கை சமுர்த்தி அதிகார சபை- ஒழுங்கமைப்பு



இலங்கை சமுர்த்தி அதிகார சபை

➢ தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையிலான தாபனக் கட்டமைப்பு



குறிப்பு:இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் தாபனக்கட்டமைப்பானது தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை விரிவடைந்து செல்வதனைக் காட்டும் இந்த அட்டவணை மூலம் கிராமிய மட்டத்திலுள்ள சிறு குழுக்களை வலுவூட்டுகின்றமை நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோளாகவும் அதன் செயற்பாடு பற்றியதுமான கருத்து வெளியிடப்பட்டுள்ளது

அபிவிருத்தி மற்றும் தாபனச்சேவைகள் பிரிவு



இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் - 2011

1. சட்டத்தரணி திரு. ஆர்.பி.பந்துல திலகசிரி - பணிப்பாளர் நாயகம்/பிரதம நிறைவேற்றுநர்
2. திரு.சீ.டீ.களுஆரச்சி - பொது முகாமையாளர் இ.நி.சேவை தரம் I (2011.08.18ம் திகதி முதல்)
3. திரு. எம்.ஏ.எஸ். வீரசிங்க - பதில் பணிப்பாளர் சபைச் செயலாளர் பணிப்பாளர் (கிராம அபிவிருத்தி) பதில் பணிப்பாளர் - ஊடகம் இ.நி.சேவை தரம்I(2011.05.17ம் திகதி வரை)
4. திரு. எஸ்.பி. பண்டார - பணிப்பாளர் (கண்காணிப்பும் மதிப்பீடும்) இலங்.க.நி.சேவைதரம்I(2011.08.10ம் திகதி வரை)
5. திரு. எஸ். மடவலகமகே - பிரதிப் பணிப்பாளர் – (விசாரணை)
6. திரு.எஸ்.ஏ.டீ.பீ.மதங்கதீர - பிரதமஉள்ளகக்கணக்காய்வாளர் (2011.06.25ம் திகதி வரை)
7. திரு. எல்.ஜீ.ஜே.ஜீ.குணதிலக்க - பணிப்பாளர்(வாழ்வாதாரஅபிவிருத்தி) (2011.07.26 வரை)
8. திருமதி. சுனந்தா பியசீலி - பணிப்பாளர் (நிதி) இலங். கணக்காளர் சேவை தரம் II/I
9. திரு.எம்.நடேசராஜா - பணிப்பாளர் (கைத்தொழில்)
10. திரு. கே.கே.எல்.சந்திரதிலக்க - பிரதிப் பணிப்பாளர் (வங்கி நிதி) (2011.07.01முதல்)
11. திரு.கே.பி.குருகே - பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (2011.10.21திகதிமுதல்)
12. திருமதி. எச்.குலதுங்க - பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) (2011.10.27திகதிமுதல்)
13. திரு.பீலிக்ஸ் பெர்ணாந்து - உதவிப்பணிப்பாளர்(நிர்வாகம்) (2011.08.03திகதி முதல்)
14. திரு.பி.ஆர்.டி.எச். அனுர வன்ஷ - உதவி உள்ளகக்கணக்காய்வாளர்
15. செல்வி.டீ.யூ.எஸ்.பத்திரகே - உதவிப்பணிப்பாளர்(நீதி) (2011.05.05 திகதியிலிருந்து)
16. திருமதி.ஶ்ரீயா பொரலுகொட - நிர்வாக உத்தியோகத்தர்
17. திரு.சேனக்க உபயசிங்க - செய்தி உத்தியோகத்தர்

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தொடர்பான
தகவல்கள் -2011

அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்கள்

1. திருமதி.கீத்தா.விமலவீர - கௌரவ தலைவர்
   பணிப்பாளர் (அரச பாதீட்டுத்திணைக்களம்)
   பொது திறைசேரி,நிதி திட்டமிடல் அமைச்சு

2. திருமதி.சாந்தி பிரணாந்து - உறுப்பினர்
   ஜனாதிபதி ஒருங்கிணைப்பு பணிப்பாளர்
   பணிப்பாளர் சபை நியமன உறுப்பினர்

3. திரு.சுனில் பத்மசாந்த - உறுப்பினர்(2011.01.24 வரை)
   சமுர்த்தி ஆணையாளர் நாயகம்
   சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களம்

4. திருமதி.சந்திரா விக்ரமசிங்க - உறுப்பினர்(2011.05.23 முதல்)
   சமுர்த்தி ஆணையாளர் நாயகம்
   சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களம்

5. திரு.ஜீ.ஆர்.எல்.வசந்த - உறுப்பினர்
   கணக்காளர்,பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

6. திருமதி.சுனந்தா பியசீலி - உறுப்பினர்
   பணிப்பாளர் (நிதி)
   இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

7. திரு.காமினி விக்ரமபால - உறுப்பினர் (2011.06.01வரை)
   பணிப்பாளர் (வங்கிநிதி நடவடிக்கை)
   இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

8. திரு.கே.கே.எல்.சந்திரதிலக்க - உறுப்பினர் (2011.08.17முதல்)
   பிரதிப்பணிப்பாளர் (வங்கிநிதி நடவடிக்கை)
   இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

9. திரு.எம்.ஏ.எஸ்.வீரசிங்க - உறுப்பினர்(2011.03.23 வரை)
   பணிப்பாளர் சபைச்செயலாளர்
   இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

10. திரு. திரு. எஸ். மடவலகமகே - உறுப்பினர் (2011.06.01முதல்)
    பணிப்பாளர் சபைச்செயலாளர்
    இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

11. திரு. எஸ். மடவலகமகே - ஏற்பாட்டாளர் (2011.08.17முதல்2011.11.08 வரை)
    பணிப்பாளர் சபைச்செயலாளர்
    இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

12.திரு.சீ.டீ.களுஆரச்சி - உறுப்பினர் (2011.10.01முதல்)
பொது முகாமையாளர்

13.திரு.பீ.ஆர்.டீ.எச்.அனுரவன்ஷ - உறுப்பினர் (2011.08.17முதல்)
பதில் பிரதி உள்ளகக்கணக்காய்வாளர்
இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

14.திரு.எஸ்.ஏ.டீ.பீ.மதங்கதீர - ஏற்பாட்டாளர்(2011.16.01வரை)
பிரதான உள்ளகக்கணக்காய்வாளர்
இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

15.திரு.கே.பி.குருகே - ஏற்பாட்டாளர்(2011.11.17முதல்)
பிரதான உள்ளகக்கணக்காய்வாளர்
இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

2011ம் ஆண்டில் குழுக்கூட்டம் தொடர்பான தகவல்கள்
வருடத்திற்குள் 08 கூட்டங்கள் கூட்டப்பட்டுள்ளன.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் முன்னேற்றங்கள்

<u>பொருளடக்கம்</u>

01. பணிப்பாளர்சபைச் செயலாளர் பிரிவு
02. நிர்வாகப்பிரிவு
03. தாபனப்பிரிவு
04. கிராமிய அபிவிருத்திப்பிரிவு
05. விவசாய அபிவிருத்திப்பிரிவு
06. கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பிரிவு
07. கைத்தொழில் பிரிவு
08. சந்தைப்படுத்தல் அபிவிருத்திப்பிரிவு
09. மனிதவள மற்றும் தாபன அபிவிருத்திப்பிரிவு
10. மகாசங்கப்பிரிவு
11. சமூக அபிவிருத்திப்பிரிவு
12. ஊடகப்பிரிவு
13. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப்பிரிவு
14. வங்கிநிதிப்பிரிவு
15. உள்ளகக்கணக்காய்வுப்பிரிவு
16. நீதிப்பிரிவு
17. விசாரணைப்பிரிவு
18. நிதி முகாமைத்துவப்பிரிவு

1.0 பணிப்பாளர் சபை செயலாளர் பிரிவு

பணிப்பாளர் சபை செயலாளர் பிரிவின் பணிகள் இரு பிரிவாக உள்ளது.பணிப்பாளர் சபையின் செயலகமாக செயற்படுவது ஒரு பிரிவாகவும் அதற்கு அடுத்ததாக நிர்வாகத்தோடு தொடர்பு கொள்வதோடு பணிப்பாளர் சபை தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு நிறுவனத்தின் நிறைவேற்றுநருக்கு உதவுவதுமாகும்.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் தாபன, நிர்வாக, நிதி நடவடிக்கைகள் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான சட்டரீதியான சூழலை உருவாக்குதல்,அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரிய தகவல்களை சேகரித்தல், நிறுவனத்தின் செயற்பாட்டிற்குச் சாதகமான ஒழுக்காற்றினை பேணிச்செல்வதற்கு ஒத்துழைத்தலும் அதற்குரிய பின்னாய்வு நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் பொருட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு ஒத்துழைப்பது இப்பிரிவினால் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்பப்பணிகளாகும்.

1.1 கடமைகளும் பொறுப்புகளும்

ஒருங்கிணைப்பு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்ட நடவடிக்கைகள் இப்பிரிவின் அடிப்படைக் கடமைகளாகும் என்பதுடன் ஒப்படைக்கப்படுகின்ற பாரிய பொறுப்பானது தாபன மூலோபாய வழித்திட்டத்தினை தயாரிக்கும் பொருட்டு கொள்கை ரீதியான ஒத்துழைப்பினை வழங்குவதாகும்.

1.1.1 பணிப்பாளர் சபை செயலகமாக செயற்படும் போது:

1. தாபன நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் அபிவிருத்திச்செயற்பாடுகள் தொடர்பிலும் கொள்கை ரீதியில் மேற்கொள்ளவேண்டிய தீர்மானங்களுக்கான பின்னணி விடயங்கள் தொடர்பிலும் பணிப்பாளர் சபையினை விளக்கமளித்தல்.
2. பணிப்பாளர் சபை படிவங்களை சமர்ப்பித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பிரிவுத் தலைவர்களுக்கு ஒத்துழைப்பதும் அதன் பிரகாரம் செயற்படுவதும்.

3. தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பணிப்பாளர் சபைக்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் வழங்கி ஒத்துழைத்தல்.
4. பணிப்பாளர் சபை தீர்மானங்கள் தொடர்பிலான இரகசியங்களை பாதுகாத்தல்.

5. பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பில் பிரிவுத் தலைமைகளை விளக்கமளிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அது தொடர்பில் பின்னாய்வுகளை மேற்கொள்வதும்.
6. பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதும் அது தொடர்பில் பின்னாய்வு செய்வதும்.

அதற்கேற்ப, நடப்பாண்டில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சபைப்பத்திரங்களின் தொகையானது 167 ஆகும்.

i. தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்குரியவை	- 55
ii. மனிதவளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரியவை	- 04
iii. நிதி நடவடிக்கைகளுக்குரியவை	- 74
iv. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரியவை	- 11
v. நீதி மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குரியவை	- 18
vi. ஊடக நடவடிக்கைகளுக்குரியவை	- 02
vii.கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்குரியவை	- 03

1.1.2 பணிப்பாளர் நாயகத்தின் ஒருங்கிணைப்புச் செயலகமாக செயற்படும் போது

1. பணிப்பாளர் நாயகம் பங்குபற்றுகின்ற கூட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.
2. அமைச்சு மற்றும் பிற அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை பேணுதல்.
3. நிர்வாக நடவடிக்கைகள், ஒழுக்காற்று மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்குரிய தரவுகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தல் மற்றும் நிறுவனங்களுக் கிடையேயான தொடர்புகளைப் பேணல்.

4. பணிப்பாளர் நாயகத்திற்கும்,பணிப்பாளர் சபையின் செயலாளர் பிரிவிற்கும் நாளாந்தம் வரும் கடிதங்களை குறிப்பிட்ட பிரிவுகளுக்கு வழங்குவது,அது தொடர்பில் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வினை மேற்கொள்ளல்.
5. பிரிவின் உத்தியோகத்தர் தொடர்பில் தாபன செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

வருடத்தின் பணிப்பாளர் சபையினர்

01.	சட்டத்தரணி திரு.ஆ.பி.பீ.திலகசிரி பணிப்பாளர் நாயகம்	- தலைவர்
02.	திருமதி.சந்திரா விக்ரமசிங்க சமுர்த்தி ஆணையாளர் நாயகம்	- உத்தியோக பூர்வ உறுப்பினர்
03.	திரு.ஆர்ஏ.ஏ.கே.ரணவக்க மேலதிக செயலாளர்	- உத்தியோக பூர்வ உறுப்பினர்
04.	செல்வி.கீத்தா விமலவீர திறைசேரி பிரதிநிதி	- உத்தியோக பூர்வ உறுப்பினர்
05.	கலாநிதி பீ.ஏ.கிரிவந்தெனிய	- நியமன உறுப்பினர்
06.	கலாநிதி விஜித்த நாணயக்கார	- நியமன உறுப்பினர்
07.	திருமதி.சாந்தி பிரணாந்து	- நியமன உறுப்பினர்

2.0 நிர்வாகப் பிரிவு

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிர்வாகப்பிரிவானது தாபன மற்றும் நிர்வாகம் ஆகிய இரு பிரதான பிரிவுகளாக செயற்படுகின்றது.நிர்வாகத்தில் முகம்கொடுக்கக்கூடிய நாளாந்த செயற்பாடுகளை நிர்வாகப்பிரிவின் மூலமும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குரிய நடைமுறைச்செயற்பாடுகளை தாபனப்பிரிவின் கீழும் செயற்படுத்துகின்றது.

2.1 நிர்வாக மற்றும் நிறுவன பிரிவு இரண்டும் முக்கியமாக பொதுமுகாமையாளரின் நேரடி கண்காணிப்பிற்குள் உட்படுத்தப்பட்டுள்ளதோடு நிர்வாகப்பிரிவின் பணியாளர் எண்ணிக்கையானது 32 இனையும் தாபனப் பிரிவின் பணியாளர்களின் எண்ணிக்கையானது 42இனையும் கொண்டதாக அவை உள்ளது. மனித மற்றும் பௌதீக வளங்களை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதும் நிறுவக அபிவிருத்தியின் பொருட்டான அர்ப்பணிப்பு மற்றும் அதிகார சபையின் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு உதவிச்சேவைகளை வழங்குவதும் நிர்வாகப் பிரிவிற்கு வழங்கப்படுகின்ற முக்கிய பொறுப்புக்களாகும்.

2.2 நிர்வாகப் பிரிவின் நோக்கங்களும் ஏனைய செயற்பாடுகளும்:

2.2.1 முக்கிய நோக்கங்கள்

- பணியாளர்களின் தேவைகளை அறிந்து கொள்ளல், அதற்குரிய அடிப்படைகள் தொடர்பில் பிரதான நிறைவேற்றுநருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் பணியாளர்களை ஒழுங்கு செய்தல்.
- பணியாளர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல் மற்றும் பதவி உயர்வுகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவை தொடர்பான முறைகள் மற்றும் செயற்றிட்டங்கள் உள்ளடங்கிய மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அதனை முறைமைப்படுத்துதல்.
- பணியாளர்களின் சிறந்த நடவடிக்கைகள்,கட்டுப்பாட்டுடன் செயற்படுதல்,நாளாந்த கடமை நடவடிக்கைகளை இலகுவாக்கும் பொருட்டு செயற்படுதல்.
- தாபனத்தின் கௌரவத்தை உறுதிப்படுத்தல்.
- அலுவலக ஒழுங்கமைப்பு மற்றும் அலுவலக ஒழுங்கமைப்பு அட்டவணையைத் தயாரித்தல்.

2.2.2 **நாளாந்தக் கடமைகள்**

- நாளாந்த தபால் தொடர்பான நடவடிக்கைகள்
- பணியாளர்களின் அடையாள அட்டை விநியோகத்தை முகாமைத்துவம் செய்தல்.
  அவற்றினை வழங்கி முடித்தல்.
- பிரிவுகளிலும் பிரிவுகளுக்கிடையேயும் ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.
- பொது மக்களின் வேண்டுகோள்களை செயற்படுத்துதல்.
- பணியாளர்கள் கோரிக்கைகள் தொடர்பில் செயற்படுதல்.
- பணியாளர்களின் தனிநபர் கோவையினைப் பராமரித்தல்,பேணுதல் மற்றும் அதனை ஒழுங்குபடுத்தல்.
- சொத்து முகாமைத்துவம் மற்றும் பொருட் பட்டோலைகளை முறைமையாக பராமரித்துச்செல்லல்.
  (சொத்துக்களை பௌதீக ரீதியாகவும் ஆவணப்படுத்தும் முறையிலும் பாதுகாத்தல்)
- போக்குவரத்து அலகினை முகாமை செய்தல்.
- பணியாளர்களின் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச்செலவுகளுடனான சகல கொடுப்பனவுகள் தொடர்பிலும் பற்றுச்சீட்டுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குரிய செயற்பாடுகள்.

2.2.3 விசேட ஒப்படைப்புக்கள்

- பாராளுமன்ற கேள்விகளுக்கு உரிய பதில்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அந்தந்த பிரிவுகளுக்கு சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும்.
- கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை தயாரிப்பதும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளும்.
- பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது எழுப்பப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் செயற்படுவதும் அதுபற்றி பிரிவுத் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதும்.
- தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் பதவி உயர்வு பரீட்சைகளை நடாத்துதல்/ தொடர்பாடல் பணிகளைப் பூர்த்தி செய்துகொடுத்தல்.

2.2.4 ஒருங்கிணைப்பு நடவடிக்கை

- மறுசீரமைப்பின் கீழ் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு முறைகளைத் தயாரித்தல்.
- மாதாந்தம் நடைபெறும் கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- வருடாந்தம் நடைபெற வேண்டிய தகுதி காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான கடமை நடவடிக்கைகள்
- வருடாந்த ஆண்டறிக்கையை தயாரித்தல் மற்றும் அதற்குரிய விடயங்கள் தொடர்பில் செயற்படுதல்.
- தரவுகளையும், விபரங்களையும் சேகரித்தல்,ஒழுங்குபடுத்துதல் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தேவையான பிரிவுகளுக்கு வழங்குதல். (தரவுகளை அறிக்கையிட்டுக்கொள்ளல்)

2.3 இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணியாளர் குழு

களத்துறை கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் மொத்தப்பணியாளர்களாக 27,662 பேர் உள்ளனர். இக் குழு பிரதானமாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய செயற்குழு என இரு பிரதான பிரிவாக உள்ளனர்.

இவ்வாண்டில் வெற்றிடமாகவிருந்த பொது முகாமையாளர் பதவிக்கு திரு.சீ.டீ.களுஆரச்சி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் முழுப்பணியாளர்களில் ஊழியர்கள் ஓய்வு பெற்றமையால் ஏற்பட்ட பல வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்கள் தாமதமாகியதனாலும் ஊழியர்கள் வேறு நிறுவனங்களின் பொருட்டு விடுவிக்கப்பட்டமையும் சேவை விடுவிப்பு விடுக்கப்பட்ட அதிகமான ஊழியர்கள் மீண்டும் ஆரம்ப சேவை நிலையத்திற்கு அறிக்கையிடாமை, வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நிமித்தம் வெளிநாடு சென்ற காரணங்களினால் பணியாளர் பதவிகளில் வெற்றிடமாகியுள்ள தொகையின் வீதாசாரம் அதிகரித்துள்ளமை இங்கு தெளிவாகின்றது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள்

	பதவி	அங்கீகரித்துள்ள எண்ணிக்கை	உள்ள எண்ணிக்கை	பற்றாக் குறை
உயர் முகாமைத்துவம்	பணிப்பாளர் நாயகம்	01	01	-
	பொது முகாமையாளர்	01	01	-
	பணிப்பாளர் சபைச்செயலாளர்	01	-	01
	பணிப்பாளர்	09	04	05
	பிரதான உள்ளகக்கணக்காய்வாளர்	01	01	-
மொத்த எண்ணிக்கை(உப மொத்தம்)		**13**	**07**	**06**
நடுத்தர முகாமைத்துவம்	பிரதிப்பணிப்பாளர்	13	01	12
	பிரதி உள்ளகக்கணக்காய்வாளர்	02	-	02
	உதவி பணிப்பாளர் (நீதி)	01	01	-
	உதவி பணிப்பாளர்	09	01	08
	உதவி உள்ளகக்கணக்காய்வாளர்	04	01	03
	சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	26	16	10
மொத்த எண்ணிக்கை(உப மொத்தம்)		**55**	**20**	**35**
முகாமைத்துவம்	நிதி உதவியாளர்	01	01	-
	நிர்வாக உத்தியோகத்தர்	02	01	01
	சட்ட உத்தியோகத்தர்	03	-	03
	செய்தி உத்தியோகத்தர்	02	01	01
	தொகுதிப்பகுப்பாய்வாளர்	01	01	-
	சமுர்த்தி முகாமையாளர்கள்	2500	2129	371
	உள்ளகக்கணக்காய்வு உத்தியோகத்தர் V	34	-	34
	பிரதான எழுதுநர்	09	03	06
	தொகுதிக்கட்டுப்பாட்டாளர்	01	-	01
மொத்த எண்ணிக்கை(உப மொத்தம்)		**2553**	**2135**	**418**
களத்துறை உத்தியோகத்தர்கள்	சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	24370	22008	2362
உதவி பணியாளர்கள்	உள்ளகக்கணக்காய்வு உத்தியோகத்தர் VI	95	65	30
	கணணி நிகழ்ச்சித்திட்ட செய்தி நிறுவர்	2	-	2
	மொழிபெயர்ப்பாளர்	2	1	1
	வீடியோ படப்பிடிப்பாளர்	3	2	1

	எழுதுவினைஞர்	455	60	395
	சுருக்கெழுத்தாளர்	11	4	7
	கணக்கு பதியுநர்	4	1	3
	சிறாப்பர்	2	2	-
	வரவேற்பு உத்தியோகத்தர்	1	1	-
	களஞ்சியப்பொறுப்பாளர்	1	1	-
	தட்டெழுத்தாளர்	11	10	1
	கணணி தரவு நிறுவுனர்	14	11	3
மொத்த எண்ணிக்கை(உப மொத்தம்)		**24,971**	**22,170**	**2,801**
	சாரதிகள்	37	34	3
	அலுவலக உதவியாளர்கள்	26	26	-
	பாதுகாப்பு ஊக்குவிப்பாளர்கள்	01	01	-
	தொழிலாளர்கள்	06	05	01
மொத்த எண்ணிக்கை(உப மொத்தம்)		70	66	01
மொத்த கூட்டுத்தொகை		**27,662**	**24,516**	**3,264**

(மூலம்: சம்பளங்கள் மற்றும் ஊழியர் எண்ணிக்கைக்குழு அறிக்கை - 2011)

2.4 நிர்வாகப்பிரிவின் பணியாளர்களது அமைப்பு

பொது முகாமையாளரின் தலைமையில் இனங்காணப்பட்டுள்ள இப்பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் 32 போராக இருந்தாலும் தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையானது 21 பேர்களைக் கொண்டதாகவேயுள்ளது.

3.0 தாபனப் பிரிவு

பொதுவான நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு முறையான ஒரு குழுவாக ஒன்றிணைந்து கடமையில் ஈடுபடும் ஒரு இடமாக, நிறுவன அமைப்பாக அழைக்க முடியும்.

அமைப்பு ஒன்றின் உள்ளக நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைப்பானது பலம் வாய்ந்ததாகவும் முறையானதாகவும் அமையுமிடத்து அதன் ஒன்றுதிரண்ட குறிக்கோள்களை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதை நாமனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். இங்கு ஆரம்பமாக தனிநபர் மேற்பார்வை, மனிதர் உள்ளிட்ட ஏனைய களத்துறை முகாமைத்துவம் அலுவலக முகாமைத்துவத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

நிறுவனத்திற்குத் தேவையான பணியாளர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல், பணிக்குழுவினைத் திட்டமிடல், பணியாளர்களின் சம்பளத்தை தீர்மானித்தல், பணியாளர்களின் வினைத்திறனை மதித்தல், பதவி உயர்வினை மேற்கொள்ளல், இடமாற்றம் செய்தல், பணிநிறுத்தம் செய்தல், பணியாளர்களின் பிரச்சினைகளின் போது தீர்வுகாணல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில்சங்க நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் போன்ற பல்வேறு பணிகளை ஊழியர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது தாபனப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

3.2 தாபனப்பிரிவின் நோக்கம்

1. சமுர்த்திமுகாமையாளர்/சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கடமை ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்
2. கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. உத்தியோகத்தர்களின் கடமை ரீதியான தேவைகளை தாமதமின்றி பயனுள்ள விதத்தில் நிறைவேற்றிக்கொடுப்பதன் மூலம் அவர்களுடைய செயல் திறனை அதிகரிக்கச்செய்தல்.

2011ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- ❖ மாவட்ட/பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் இடமாற்றுச்சபையை அமைத்தல்
- ❖ இடமாற்றம் வழங்கப்பட்ட சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை - 21
- ❖ இடமாற்றம் வழங்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 53
- ❖ தகுதிகாண் காலத்தின் பின் சேவை நிரந்தரமாக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 125
- ❖ தகுதிகாண் காலத்தின் பின் சேவை நிரந்தரமாக்கப்பட்ட சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை(திரட்டிய) - 398
- ❖ பதவி விலகலை ஏற்றுக்கொண்ட சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை - 22
- ❖ பதவி விலகலை ஏற்றுக்கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 21
- ❖ பதவி வெறிதாக்கல் செய்யப்பட்டவர்கள்
  - சமுர்த்தி முகாமையாளர்கள் - 05
  - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - 14
- ❖ தரம் V இற்கு பதவி உயர்த்தப்படட் சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை - 119
- ❖ தலைமையலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்பட்டவற்றின் எண்ணிக்கை
  - சமுர்த்தி முகாமையாளர்கள் - 126
  - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - 98
- ❖ தலைமையலுவலகத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களின் சம்பள மாற்றங்கள் முகாமைத்துவசேவை சுற்றறிக்கை இலக்கம் 43(i)இன் பிரகாரம் மேற்கொள்ளல்.
- ❖ உத்தியோகத்தர்களின் தனிநபர் கோவைகளில் குறைபாடாக இருந்த பல்வேறு ஆவணங்களை தலைமையலுவலகத்திற்கு வரவழைத்துக்கொள்வதும் அவற்றினை முறைமைப்படுத்துவதும்.
- ❖ 11ம் தர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பதவியுயர்வு செய்யும் நேர்முகப்பரீட்சைகளை மாவட்ட மட்டத்தில் நடாத்தி முன்நடவடிக்கையின் பொருட்டு அந்நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளை தலைமையலுவலகத்திற்கு வரவழைத்துக்கொள்ளல்.

- ❖ கிராம உத்தியோகத்தர் பிரிவு, சமுர்த்தி வங்கிச் சங்கம், சமுர்த்தி மகா சங்கம், பிரதேச செயலக மற்றும் மாவட்டச்செயலக மட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அறிக்கைகளை மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் சீர்செய்து பராமரித்து வருகின்றமை.
- ❖ சமுர்த்தி முகாமையாளர்கள் பதவியில் கடமைநிறைவேற்றம் செய்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சமுர்த்தி முகாமையாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.அத்தொகையானது 66 ஆகும்.
- ❖ வடக்கு கிழக்கு மற்றும் அனுராதபுரம்,புத்தளம்,பொலநறுவை,மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இருந்த சமுர்த்தி முகாமையாளர் பதவி வெற்றிடத்திற்காக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையானது 10 ஆகும்.
- ❖ 01.10.1998ம் திகதிக்கு முன்னர் இருந்த சமுர்த்தி ஊக்குவிப்பாளர் சேவைக்காலத்தினை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்காலத்திற்கு ஒன்று சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- ❖ குறைந்த தகுதிகளுடன் தற்போது கடமையிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்ளை IIIம் தரசமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் உள்வாங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- ❖ ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒரு முறை தாபனப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களினாலும் தம்பொறுப்பிலுள்ள கோவைகளை பரிசீலனைக்கு உட்படுத்தி அவற்றிலுள்ள குறைபாடுகள் பற்றிய அறிக்கையை மேலதிக நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிப்பதும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதும்.

4.0 கிராமிய அபிவிருத்திப் பிரிவு

கிராம அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் கீழ் வசதி வாய்ப்புகளற்ற வறிய மக்கள் பிரிவினரை வலுவூட்டி அவர்களை சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உருவாக்கி அவர்களுடைய சமூக அந்தஸ்தை உயர்த்தும் சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குள் கிராமிய அபிவிருத்திப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படும் பணியும் பங்களிப்பும் பாரிய பெறுமதியினைக்கொண்டுள்ளது.கிராம அபிவிருத்தியின் போது உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட சமூகத்தின் சகல பிரிவினருக்கும் அபிவிருத்தியை கவனத்திற்கொள்வதும் அதன் பொருட்டு அர்ப்பணிப்புச்செய்வது கிராம அபிவிருத்தி பிரிவின் குறிக்கோளாகும்.

மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் கிராமிய அபிவிருத்திப்பிரிவின் பிரதான பணியானது கிராமிய பிரதேசங்களில் பொருளாதார சமூக மற்றும் ஆத்மீக அபிவிருத்திக்கு நேரடியாக நன்மை பயக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதும் அவற்றின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள், வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதுமாகும்.

அதற்கமைய முதலில் 1995ம் ஆண்டில் ரூபா 10000/- தொகையினை வழங்கி ரூபா 50000/- ஐத் தாண்டிய முடிவுப்பெறுமதியினைக்கொண்ட கருத்திட்டம் ஒன்றினை ஒவ்வொரு கிராமத்திலும் நடைமுறைப்படுத்தச்செய்வதற்கு கிராமிய அபிவிருத்திப் பிரிவுக்கு முடியுமாக இருந்தது. இதன் பிரகாரம் 1995ம் ஆண்டில் ஆரம்பித்த இவ் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களை இடைவிடாது 2006ம் ஆண்டு வரைக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் நடைமுறைப்படுத்தியதுடன் 2007ம் ஆண்டில் 4000 கிராமங்களை முன்னணியாக வைத்து 2008 இலிருந்து 2010ம் ஆண்டு வரை 3060 கிராமங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவண்ணம் ஏனைய சகல கிராமங்களிலும் செயற்படுத்தப்பட்டது. எவ்வாறிருந்தும் 2011ம் ஆண்டில் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் திவிநெகும - வாழ்வெழுச்சி வேலைத்திட்டத்தில் முன்னணி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதனால் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் பொருட்டு கிராமிய அபிவிருத்திப்பிரிவுக்கு கிடைத்த நிதி ஒதுக்கீடானது வரையறுக்கப்பட்டதாக

இருந்தது.அதன் பிரகாரம் கிராமம் அல்லது பிரிவுகள் தெரிவு செய்யப்படவில்லை என்பதுடன் பொதுவாக பிரதேச செயலகப்பிரிவொன்றுக்கு ஒரு கருத்திட்டம் என்ற வகையில் நிதி ஒதுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் 2011ம் ஆண்டில் வாழ்வாதார அபிவிருத்திக்கு மிக உதவியளிக்கக்கூடிய நீர்ப்பாசன மற்றும் நீர் விநியோகக் கருத்திட்டங்கள் தொடர்பில் கூடிய கவனத்தினைச்செலுத்தி அதாவது அதிக முன்னுரிமையினை வழங்கி கருத்திட்டங்களை செயற்படுத்தியது என விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது.

இதற்கமைய 2011ம் ஆண்டில் கிராம அபிவிருத்திப்பிரிவிற்காக திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூ.மில்லியன் 335.98 ஒதுக்கப்பட்டதுடன் அந்த நிதி ஒதுக்கீடானது கீழ் குறிப்பிடப்படுகின்றவாறு இரு வேலைத்திட்டங்களினூடாக அபிவிருத்திப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டது.

1) வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய விசேட உட்கட்டமமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்
2) இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டம்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்	அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு (ரூ.மி)	மாவட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு (ரூ.மி)	செலவிட்ட தொகை (ரூ.மி)	பூர்த்தியாக்கப் பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	மக்கள் பங்களிப்பு (ரூ.மி)	பயனாளி குடும்பங் களின் எண்ணிக்கை
வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய விசேட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்	331.64	331.64	311.14	5969	275.94	145,552
இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டம் (நிருவாகச்செலவின் பொருட்டு)	4.34	4.34	*3.31	92 (பயிற்சி மற்றும் பிரயாணச் செலவு)	-	2910 (உத்தியோகத் தர்களினது)
மொத்தம்	**335.98**	**335.98**	**314.45**	**5969**	**275.94**	**145,552**

*110 கிராமங்களில் 27647 பயனாளிக்குடும்பங்களது வாழ்க்கைத்தரத்தினை விருத்தி செய்து கொடுக்கும் பொருட்டு உதவிகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கும் பொருட்டு உரிய உத்தியோகத்தர்களுக்கு இந்த நிதி செலவிடப்பட்டுள்ளது.

01. வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய விசேட உட்கட்டமமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்

வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய விசேட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் 2011ம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் பல துறைகள் ஊடாக செயற்படுத்தப்பட்டது.

- ❖ திவிநெகும - வாழ்வெழுச்சி மற்றும் வாழ்வாதார வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக அதற்கு உதவக்கூடிய அத்தியாசியமான நீர்ப்பாசன மற்றும் நீர் விநியோகக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- ❖ பல கட்டங்களின் ஊடாக பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களது வேலையினைப் பூர்த்தி செய்தல்.
- ❖ அத்தியாவசியமானதும் விசேட முன்னுரிமையளிக்கக் கூடியதுமான பயனுகரி அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- ❖ யாழ்ப்பாண மாவட்டத்தின் அத்தியாவசிய துப்புரவேற்பாட்டு வசதிகள் கருத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

திவிநெகும - வாழ்வெழுச்சி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக அதற்கு உதவக்கூடிய அத்தியாசியமான நீர்ப்பாசன மற்றும் நீர் விநியோகக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

இதன் கீழ் திவிநெகும - வாழ்வெழுச்சி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்குரியவாறு அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டத்தினை செயற்படுத்துவது தொடர்பில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது. இங்கு விசேடமாக சிறு குளங்களின் புனரமைப்பு,வாவிகள்,கால்வாய் அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன பக்கச்சுவர் நிர்மாணமும் நீர் விநியோகக் கருத்திட்டத்தின் கீழ் குடிநீர் விவசாய மற்றும் பொது நீர் விநியோகக் கருத்திட்டமும் நிர்மாணங்களும் செயற்படுத்தப் பட்டுள்ளது என விசேடமாக குறிப்பிடப்படல் வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் 305 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் ஒரு பிரதேச செயலகப்பிரிவுக்கு ரூபா 250,000/- வீதம் ரூபா மில்லியன் 73.72இற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்தது. கம்பஹா மாவட்டத்தில் செயற்படுத்தக் கூடியதாக இருந்த உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் திரியபியச வீடமைப்புக்களை அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதனால் உட்கட்டமைப்பு வசதிகள் ஒதுக்கீடு அதன்பொருட்டு ஒதுக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

அதற்கமைய இங்கு நீர்ப்பாசன,நீர் விநியோகக்கருத்திட்டங்கள் முன்னணியாக பல்வேறு வகையான 391 கருத்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையானது 31411 மட்டளவிலாகும். இதன் பொருட்டு செலவான தொகையானது ரூபா.மி.60.00 ஆகும்.

கட்டங்கட்டமாக பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களது வேலையினைப் பூர்த்தி செய்தல்

பல கட்டங்களின் கீழ் முடிப்பதற்கு திட்டமிட்டு முன்னைய வருடங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 09இன் வேலைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இவ்வாண்டில் ரூபா மில்லியன் 9.42 இற்கான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டதுடன் அதில் ரூ.மில்லியன் 7.76 இற்கான நிதி ஒதுக்கீட்டினைச் செலவிட்டு அக்கருத்திட்டங்களின் வேலைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு இவ்வாண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இங்கு அதிகமாக நீர் விநியோக கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதனை குறிப்பிடல் வேண்டும்.

அத்தியாவசியமானதும் விசேட முக்கியத்துவம் வழங்க வேண்டியதுமான அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

இக்கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது விசேடமாக செலவு செய்யப்பட்ட பிரிவு ஒன்று அல்லது பிரதேசம் ஒன்றினை இலக்காகக் கொள்ளவில்லை என்பதுடன் நிதி ஒதுக்கீடுகளைப்

பிரித்துக்கொடுக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட்டதானது கருத்திட்டத்தின் அத்தியாவசியத்தன்மையும் முக்கியத்துவமும் மாத்திரமாகும். இங்கு பொருளாதார சமூக மற்றும் சுகாதார பெறுமதியினையுடையதாக இருந்தும் சிறிய தொகையினைக்கொண்டு நிறைவேற்றிக்கொள்ள முடியாது போன மிகப் பயனுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு நிதி ஒதுக்கீட்டினை செலவிட முடியுமாக இருந்தது.

இதன்பொருட்டு ரூ.மில்.28.80 இற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன் அதில் ரூ.மில.23.27 இற்கான நிதி ஒதுக்கீட்டினை செலவிட்டு மிகப்பயனுள்ள கருத்திட்டங்கள் 69ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யக்கிடைத்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசிய துப்புரவேற்பாடு வசதிகள் கருத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்றும் போது இதுவரை முறையான துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத மனை அலகுகளுக்கும் துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினை வழங்குவது இங்கு மேற் கொள்ளப்பட்டது.

மாவட்டத்திற்குள் குறைந்த வருமானம் பெறும் மக்களது துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தி உள மற்றும் உடல் சுகாதாரத்தினைப் பாதுகாக்கும் நோக்கில் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் இங்கு கட்டாயமாக நீர் வசதிகளையுடைய கழிவறைகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் ஒரு கழிவறையினை நிர்மாணிக்கும் பொருட்டு தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் பயிற்றப்பட்ட உழைப்புக்கும் ரூபா 40000/- இற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன் சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் ஊடாக

நிர்மாணங்களின் முன்னேற்றத்திற்கேற்ப தேவையான நிதியினை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.மேற்படி ரூபா 40000/- வுடன் பிரதேச நில முரண்பாடுகளுக்கமைய குறித்த பயனாளிகளின் நிதியும் உழைப்பின் பங்களிப்பானது ரூபா 37000/- மட்டளவில் செலவிட்டு ரூபா 77000/- மட்டளவிலான முடிவுப்பெறுமதியுடன் கழிவறையினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய நீர்வசதிகளுடனான கழிவறைகள் 5500ஐ நிர்மாணிக்கும் பொருட்டு ரூபா மில்லியன் 218.50 இற்கான நிதி ஒதுக்கீட்டினை செலவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இதன் கீழ் துப்புரவேற்பாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு தலைமையலுவலகத்தின் ஊடாக ரூ.மில்லியன் 1.61 இற்கான நிதி ஒதுக்கீடு செலவிடப்பட்டுள்ளது.

இதற்கமைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பல துறைகள் ஊடாக இப்பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட சகல அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டளவானது ரூபா மில்லியன் 331.64 மட்டளவிலாகும்.இதில் ரூபா மில்லியன் 311.14 இற்கான நிதியினைப் பயன்படுத்தி 5969 கருத்திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து பயன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கையானது 145552 ஆகும். முடிவுப்பெறுமதியானது ரூபா மில்லியன் 575.13 ஆகும்.

விசேட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களை வகைப்படுத்தி கீழ் குறிப்பிடப்படுகின்றவாறு காட்ட முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் பகுப்பாய்வு

கருத்திட்ட வகை	பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	சமுர்த்தி அதிகார சபையின் பங்களிப்புப் பெறுமதி (ரூ.மி)	மக்கள் பங்களிப்பின் பெறுமதி (ரூ.மி)	முடிவுப் பெறுமதி (ரூ.மி)	பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை
பாதைகள்/பாலங்கள்	12	7.81	1.58	9.49	8168
நீர்ப்பாசன கருத்திட்டங்கள்	248	56.33	11.44	68.65	20383
நீர் விநியோகம்	166	26.01	4.00	24.01	11459
துப்புரவேற்பாட்டு வசதிகள்	5543	218.92	254.16	472.98	105,542
நிர்வாகச்செலவுகள்(மா.செ /பி.செ)	0	0.46	0	0	0
தலைமையலுவலகம்	0	1.61	0	0	0
மொத்தம்	**5969**	**311.14**	**271.18**	**575.13**	**145,552**



02. இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டம்.(கெமிதிரிய)

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, கெமிதிரிய நிறுவனத்துடன் ஒன்றிணைந்து கெமிதிரிய மக்களாட்சி முறையொன்றினை 110 கிராமங்களில் செயற்படுத்த 2010ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்தது.இது 3 வருடத்திற்குள் அதாவது 2010-2012 வரையில் செயற்படுகின்ற ஒரு கருத்திட்டமாகும்.

கீழ்குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 7 மாவட்டங்களில் 110 கிராமங்களில் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டத்தின் பொருட்டு அந்தந்தக் கிராமங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையின் அளவினை நிர்மாணிக்கும் காரணியானது கிராமத்தில் உள்ள மொத்த சனத்தொகையாகும்.அதாவது ஒருவருக்கு ரூபா 5000/- ஒதுக்கப்படுவதுடன் அந்தந்த கிராமங்களில் மொத்த சனத்தொகைக்கு ஏற்ப ரூபா மில்லியன் 552.97 கிராம அபிவிருத்தி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இது உலக வங்கி கடன் உதவி திட்டத்தின் கீழ் செயற்படுகின்ற ஒரு கருத்திட்டம் என்பதனால் குறித்த கிராம அபிவிருத்தி நிதியம் கெமிதிரிய நிறுவனத்தின் ஊடாக அந்தந்த கிராம அமைப்புகளுக்கு உத்தேச கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு வழங்கப்படுகின்றது.

கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற கிராமங்களின் எண்ணிக்கையும் அதன் நிதியமும்

மாவட்டம்	பி.செ.பிரிவுகளின் எண்ணிக்கை	செயற்படுத்தப்படுகின்ற கிராமங்களின் எண்ணிக்கை	ஒதுக்கப்படுகின்ற கிராம அபிவிருத்தி நிதியம்
இரத்தினபுரி	09	13	59.49
மொனராகலை	05	08	36.98
பொலநறுவை	04	08	44.02
பதுளை	05	08	39.39
ஹம்பாந்தோட்டை	06	18	102.73
கேகாலை	11	31	160.78
நுவரெலியா	04	24	109.58
மொத்தம்	**44**	**110**	**552.97**

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி நிதியத்தினூடாக கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் மக்களது ஆற்றல்கள் விருத்திக்கும் தாபன அபிவிருத்திக்கும் உதவியாக கொள்ளக்கூடியவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தித் திட்டமிடலை செயற்படுத்தும் பொருட்டு நிதியம் ஒதுக்கப்பட்டுள்ள விதம்

மாவட்டம்	*செயற்படுத்தப்படும் கிராமங்களின் எண்ணிக்கை*	*ஒதுக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி நிதியம் (ரூ.மி)*	*கருத்திட்டத்தின் பொருட்டு நிதியம் ஒதுக்கப்பட்டுள்ள விதம்*		
			ஆற்றல்கள் மற்றும் தாபன விருத்திக்கு ரூ.மி	*வாழ்வாதாரத்தின் பொருட்டு ரூ.மி*	*உட்கட்டமைப்பு வசதிகளின் பொருட்டு ரூ.மி*
இரத்தினபுரி	13	59.49	8.92	8.92	41.64
மொனராகலை	08	36.98	5.55	5.55	25.89
பொலநறுவை	08	44.02	6.60	6.60	30.81
பதுளை	08	39.39	4.80	12.22	22.38
ஹம்பாந்தோட்டை	18	102.73	12.75	30.46	59.51
கேகாலை	32	160.78	24.12	24.12	112.54
நுவரெலியா	24	109.58	16.44	16.44	76.70
மொத்தம்	**111**	**552.97**	**79.18**	**104.31**	**369.47**

மேற்படி கிராம அபிவிருத்தி நிதியத்தினை கிராமங்களுக்கு வழங்கும் பிரதான ஏற்பாட்டுப் பணியினை செயற்படுத்தும் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதன் கண்காணிப்பு நடவடிக்கைகளை சமுர்த்தி வலய முகாமையாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடமைப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த உத்தியோகத்தர்கள் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் தங்களது ஸ்தீரமான கடமை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இக்கருத்திட்டத்தின் ஏற்பாட்டுப் பணியில் ஈடுபட்டிருப்பது இங்கு விசேடமாக சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

அத்துடன் இந்த நிதியத்தினை கிராமங்களுக்கு வழங்கும் போது கெமிதிரிய மக்களாட்சி முறைக்கு உரியவாறு தேவையான பயிற்சிகளை உரிய சமுர்த்தி உத்தியோகத்தர்கள்/ முகாமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அப்பயிற்சிகளில் அதற்குரிய சகல செலவுகளையும் செலவிடுவது கெமிதிரிய செயற்திட்டத்தினூடாக இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறிருந்தும் இதற்குத் தேவையான நிர்வாகச்செலவுகளை மேற்கொள்ள அதாவது பங்கேற்புக் கொடுப்பனவு,இணைந்த/போக்குவரத்துச் செலவுக் கொடுப்பனவுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான எழுதுகருவிகளை வழங்கும் பணியின் பொருட்டு செலவுகளை மேற்கொள்வது இரண்டு நிறுவனங்களுக்குமிடையே உள்ள ஒன்றிணைந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக 2011ம் ஆண்டில் ரூபா.மில்.4.34 இற்கான நிதி ஒதுக்கீட்டளவினை இக்கருத்திட்டத்தின் நிர்வாகச்செலவின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 2011/12/31ம் திகதியன்று செலவிடப்பட்டுள்ளது.

இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் பொருட்டான நிர்வாகச் செலவினை மேற்கொள்ளல் 2011.12.31ம் திகதியில்

அட்டவணை இலக்கம் - 05

மாவட்டம்	செயற்படுத்தப் படுகின்ற கிராமங்களின் எண்ணிக்கை	நடாத்தப்பட்ட பயிற்சிகள்/ கூட்டங்களின் எண்ணிக்கை	கலந்து கொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	அங்கீகரித்த மொத்த தொகை ரூ.	செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.
இரத்தினபுரி	13	10	282	468,144.00	257,280.00
மொனராகலை	08	06	64	245,100.00	179,525.00
பொலநறுவை	08	16	586	344,430.00	269,909.00
பதுளை	08	07	143	234,050.00	208,290.00
ஹம்பாந்தோட்டை	18	18	799	800,400.00	674,178.00
கேகாலை	31	20	484	1,271,035.00	872,549.00
நுவரெலியா	24	14	524	948,350.00	783,418.95
சமுர்த்தி அதிகாரசபை		01	28	31,000.00	23,650.00
மொத்தம்	**110**	92	2910	4,342,509	3,268,799.95

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தாங்கள் சுயமாகப் பெற்றுக்கொண்ட மக்கள் ஆட்சி முறையின் பயிற்சிகளின் ஊடாக அந்தந்தக் கிராமங்களில் கிராம அபிவிருத்தி திட்டத்திற்குரியதான கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை கிராமிய அமைப்புகளுக்கு வழங்கி கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கருத்திட்டங்களை செயற்படுத்துவது இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் பகுப்பாய்வு- 2011.12.31ம் திகதியன்று

அட்டவணை இலக்கம்-06

மாவட்டம்	செயற்படுத்தப்படுகின்ற கிராமங்களின் எண்ணிக்கை	2011ம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை			மொத்தம்
		ஆற்றல் விருத்தி மற்றும் தாபன அபிவிருத்திக் கருத்திட்டம்	வாழ்வாதாரம்	உட்கட்டமைப்பு வசதிகள்	
இரத்தினபுரி	13	67	146	27	173
மொனராகலை	08	38	261	7	268
பொலநறுவை	08	42	249	8	257
பதுளை	08	31	29	11	40
ஹம்பாந்தோட்டை	18	71	78	22	100
கேகாலை	31	58	0	55	55
நுவரெலியா	24	24	0	24	24
மொத்தம்	**110**	**331**	**763**	**154**	**917**

- ❖ மேலுள்ள பிரகாரம் தாபன ஆற்றல்களை விருத்தி செய்வதன் கீழ் அந்தந்தக் கிராமத்தில் கருத்திட்ட அலுவலகம் ஒன்றினை நடாத்துவதற்குரியவாறு தேவையான உபகரணங்களையும் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்குத் தேவையான நிர்வாகச்செலவினை மேற்கொள்வது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.அத்துடன் ஆற்றல் அபிவிருத்தியினை மேற்கொள்வதன் கீழ் மக்களுக்கு வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ வாழ்வாதார நிதியத்தின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகையிலிருந்து வாழ்வாதாரத்தின் பொருட்டு தேவையான கடன்களை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது ஒரு சுழற்சி நிதியமாகும்.
- ❖ உட்கட்டமைப்பு வசதிகள் நிதியத்தின் உத்தேச கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது மக்களது நேரடித் தலையீடும் மக்களாலேயே இக்ருத்திட்டத்தினை செயற்படுத்துவதும் விசேடமானதாகும் என்பதுடன் இதன் கீழ் பாதைகள் மற்றும் நீர் விநியோகக் கருத்திட்டங்கள் முன்னணி வகித்துள்ளது.

2012ம் ஆண்டு முடிவடையும் போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டின் ஊடாக அந்தந்த கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த கிராம அபிவிருத்தி நிதியத்தின் கீழ் மேலும் உட்கட்டமைப்பு வசதிகளையும் வாழ்வாதாரக் கருத்திட்டங்களையும் செயற்படுத்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மொத்த முன்னேற்றம் - 2011

அட்டவணை இலக்கம் - 07

கருத்திட்ட வகை	பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	சமுர்த்தி அதிகார சபையின் பங்களிப்புப் பெறுமதி (ரூ.மி)	மக்கள் பங்களிப்பின் பெறுமதி (ரூ.மி)	முடிவுப் பெறுமதி (ரூ.மி)	பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை
பாதைகள்/பாலங்கள்	12	7.81	1.58	9.49	8168
நீர்ப்பாசன கருத்திட்டங்கள்	248	56.33	11.44	68.65	20383
நீர் விநியோகம்	166	26.01	4.00	24.01	11459
துப்புரவேற்பாட்டு வசதிகள்	5543	218.92	254.16	472.98	105542
*பயிற்சி வேலைத்திட்டங்கள்	*92	3.31			*2910
நிர்வாகச்செலவுகள்(மா.செ /பி.செ)	0	0.46	0	0	0
**தலைமையலுவலகம்	0	1.61	0	0	0
மொத்தம்	**5969**	**314.45**	**271.18**	**575.13**	**145,552**

* உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்படுவதனால் பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கையும் பயிற்சி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் மொத்த கூட்டுத்தொகையில் உட்படுத்தப்படவில்லை.

** துப்புரவேற்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு துப்புரவேற்பாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு

அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பொருட்டு கிராம அபிவிருத்திப் பிரிவின் முதலீடுகள் (ரூ.மி)

தொ. இல	வேலைத்திட்டம்	ஆண்டு		
		2009	**2010**	**2011**
1	விசேட கருத்திட்டம்	72.74	55.64	311.47
2	விசேட கிராம அபிவிருத்திக் கருத்திட்டம்	53.89	0	0
3	உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம்	1475.22	758.48	0
4	துரித உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம்	0	774.95	0
5	குறைவேலைக் கருத்திட்டம்	0	5.32	0
6	கமநெகும இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டம்	0	1.56	3.24
மொத்தம்		**1601.85**	**1595.95**	**314.74**

மூலம்: செலவறிக்கையிலிருந்து

5.0 விவசாய அபிவிருத்திப்பிரிவு

இலங்கையின் மொத்த சனத்தொகையில் அதிகமானோரின் பிரதான வாழ்வாதாரமானது விவசாயத்துறையாகும் என்பதுடன் அதன் பயனை வீட்டுத்துறை மட்டும் கிராமிய மட்டத்தில் மேம்படுத்தி அவர்களது பொருளாதார மற்றும் போசனை மட்டத்தினை உயர்த்துவதற்கும் உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டும் பொருத்தமான முறையொன்றினை உருவாக்கிக்கொடுப்பது இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

பண்டைய காலத்தில் இருந்து எமது நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படையானது விவசாயக் கைத்தொழிலாகும்.அதனூடாக நாட்டின் திட்டமிடப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட முறைகளைப் பயன்படுத்தும் போது விவசாயப்பிரிவானது தொடர்ச்சியாக முக்கிய பணியினை நிறைவேற்றியது.தேசிய மட்டத்தில் சுயநிலையினை அடைந்துகொள்ளல்,உணவு பாதுக்காப்பினை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் வறுமையினை ஒழிக்கும் பொருட்டு பொதுவாக வருமானத்தினையும் செல்வ வளர்ச்சியினையும் உருவாக்கும் பொருட்டு விசேடமாக உள்ளூர் உணவு உற்பத்தி, அலங்கார மலர்ச்செய்கை மற்றும் ஏற்றுமதி பயிர்ச்செய்கைப் பிரிவு உட்பட மொத்த விவசாயக் கைத்தொழில் துறையில் விரைவான வளர்ச்சியொன்று ஏற்படுவது அத்தியாவசியமான ஒரு விடயமாகும். இதன் காரணமாக இந்நாட்டு மக்களது பொருளாதார சௌபாக்கியத்தினை உருவாக்கும் பொருட்டு விவசாயப்பிரிவினது வளர்ச்சியை விரைவுபடுத்துவதனூடாக இப்பாரிய சவாலை வெற்றிகொள்ளும் பொருட்டு அரசாங்கத்தினால் இப்பிரிவின் வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கையை ஆசியாவின் விந்தையுள்ள ஒரு நாடாக ஆக்கும் பணிக்கு பங்களிப்புச்செய்யும் பொருட்டும் விவசாயத்துறைக்கு முன்னுரிமை வழங்கி இத்துறைகளை மேம்படுத்துவதனுடாக மக்களது பொருளாதாரத்தினை மேம்படுத்துவதும், குடும்பபோசனை மட்டத்தினை உயர்த்துவதோடு நாட்டின் உணவு பாதுக்காப்பினை உருவாக்குவதனையும் குறிக்கோளாகக் கொண்டு பிரதான வேலைத்திட்டங்கள் பலவற்றினூடாக திவிநெகும-வாழ்வெழுச்சி வேலைத்திட்டத்தோடு இணைந்ததாக பலமுள்ள மற்றும் நிரந்தர விவசாயம் சார்ந்த 52587 கருத்திட்டங்கள் முழுநாடும் உட்படுகின்றவாறு செயற்பட்டது.

செயற்படுத்தப்படுகின்ற பிரதான வேலைத்திட்டங்கள்

1. கன்றுகள் மற்றும் நடுகைப்பொருட்கள் உற்பத்திக் கருத்திட்டத்தினை மேம்படுத்துதல்
2. உள்ளூர் உணவுப்பயிர்ச்செய்கை மேம்பாடு

3. சிறியளவிலான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உரிமையாளர்களை ஊக்குவிக்கும் கருத்திட்டம்
4. போசனை மேம்பாட்டின் பொருட்டான வீட்டுத்தோட்ட அபிவிருத்தி
5. நவீன விவசாயத்தொழில்நுட்ப முயற்சியாண்மை அறிவும் திறன் அபிவிருத்தியும்

1. கன்றுகள் மற்றும் நடுகைப்பொருட்கள் உற்பத்திக் கருத்திட்டத்தினை மேம்படுத்துதல்

அதிகரிக்கின்ற சனத்தொகைக்கு ஏற்றவாறு உணவு உற்பத்தியினை மேம்படுத்துதல்,ஏற்றுமதிச் சந்தையினை இலக்காகக் கொண்ட மரக்கறி,மலர் உற்பத்திகள் மூலம் வெளிநாட்டுச் செலவாணியை உழைத்துக்கொள்ளும் பொருட்டு பயனாளிகளை ஈடுபடச்செய்வதும் திவிநெகும - வாழ்வெழுச்சி வேலைத்திட்டம் மற்றும் பல்வேறு பயிர்ச்செய்கைகளுக்காக தேவைப்படுகின்ற நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கில் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் புதிய தொழில்நுட்பத்தினை கிராமிய குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.இதன் கீழ் நாடு பூராகவும் 2236 பாதுகாப்பான உள்ளக அரங்குகள் நிர்மாணிக்கப்பட்டது. இப்பாதுகாப்பான உள்ளக அரங்குகளில் மரக்கறி, பழவகைகள், அலங்கார மலர் உட்பட அலங்கார இலைத்தாவர வித்துக்கள் மற்றும் ஏற்றுமதிப் பயிர்கள் உட்பட பிறநாற்று உற்பத்திகள் செய்யப்படுகின்ற 1746 நாற்று மேடைகளும் மரக்கறி மற்றும் மலர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 490 பயனாளிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பெரிய வெங்காய விதை உற்பத்தி - தம்புள்ளை பிரதேச செயலகப்பிரிவு

2. உள்ளூர் உணவுப்பயிர்ச்செய்கை மேம்பாடு

பிரதேச ரீதியாக உள்ள வளங்கள்,திறன்கள் மற்றும் சந்தைக்கேள்விகளை கவனத்திற்கொண்டு உள்ளூர் ரீதியாக பயிர் செய்யக்கூடிய பயிர்ச்செய்கைகளை மேம்படுத்துவதன் ஊடாக பயனாளிகளது வருமான நிலையினை உயர்த்துவதும் நிரந்தரமாக்குவதும் உள்ளூர் நுகர்வுத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு பங்களித்தல் என்பன இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் பலவாகும்.

❖ பயிர்ச்செய்கைக் கருத்திட்டம் - பழவகைகள்,கீரை வகைகள்,கிழங்கு வகைகள்,களப் பயிர்கள்,தானிய வகைகள்

திராட்சைப் பயிர்ச்செய்கை - உடபலாத்த பிரதேச செயலகப்பிரிவு

கோவா பயிர்ச்செய்கை - வெலிமடை பிரதேச செயலகப்பரிவு

விசேடமாக இவ்வாறான கருத்திட்டங்களை கிராமிய மக்களிடத்தேயே வழங்குவதும் பல்வேறு பிரிவுகளாகச் செயற்படுத்துவதும்,புதிய முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதும்,மரபு ரீதியான எண்ணங்களிலிருந்து விலகி சிந்திப்பதை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய விவசாய தொழில் நுட்ப முறைகளைப் பின்பற்றி மற்றும் சிறந்த முகாமைத்தின் ஊடாக பயனாளிகளின் வருமான நிலை உயர்ச்சியடைந்திருப்பதனையும் கடந்த ஆண்டில் சுட்டிக்காட்டியுள்ளது.

22267 உள்நாட்டு உணவுக்கருத்திட்டங்களை நாடு பூராகவும் செயற்படுத்துவதன் ஊடாக பல பயனாளிகளுக்கு நன்மை கிடைப்பதற்கும் அதன் மூலம் அவர்களது வருமான வழியினை மேம்படுத்துவதன் ஊடாக தேசிய உற்பத்திக்கு பங்களிப்பினை வழங்கக்கூடியதாகவுமிருந்தது.

அம்பரெல்லா பயிர்ச்செய்கை - ஹிங்குறங்கொடைப் பிரதேச செயலகப்பிரிவு

3. சிறியளவிலான பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை உரிமையாளர்களை பலப்படுத்தும் கருத்திட்டம்

சிறியளவிலான காணியினைக்கொண்ட சிறியளவிலான பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதும் பயிர்ச்செய்கையின் பொருட்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதும் இதன் முக்கிய குறிக்கோளாகும். இதன் கீழ் தேயிலை,இறப்பர்,தென்னை பயிர்ச்செய்கைகளுக்கு மேலதிகமாக கறுவா பயிர்ச்செய்கை மேம்பாடு தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டது.இங்கு விசேடமாக குறித்த பகுதிகளில் நாற்று மேடைகளை ஆரம்பிக்கும் பொருட்டு முக்கிய இடம் வழங்கப்பட்டது.



அத்தனகலைப் பிரதேச செயலகப்பிரிவில் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொண்ட விசேட விவசாய கருத்திட்டம்
தேயிலை பயிர்ச்செய்கை அத்தனகலைப் பிரதேசசெயலகப்பிரிவு

4. போசனை மேம்பாட்டின் பொருட்டு வீட்டுத்தோட்டத்தினை அபிவிருத்தி செய்தல்

தமது வீட்டுத் தோட்டத்திலேயே அன்றாட போசனைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதும் உணவு பாதுகாப்புத் தன்மையினை பேணுவதும் மேலதிக வருமானத்தை உழைத்துக்கொள்ளக்கூடிய கருத்திட்டம் ஒன்றினை மனைச்சூழலிலேயே உருவாக்குவதனை நோக்கமாகக்கொண்டு சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் 13598 வீட்டுத்தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் திவிநெகும வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் 469,537 மனை அலகுகள் அபிவிருத்தி செய்யப்பட்டன அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத்தோட்டங்களில் கீழ் உள்ள வகைகளும் அடங்குகின்றன.

வீட்டுத்தோட்டப்பயிர்ச்செய்கை - அத்தனகலை பிரதேசசெயலகப்பிரிவு

I. பழப்பயிர்ச்செய்கை

மா,வாழை,பப்பாளி,அன்னாசி,மங்குஸ்தான்,ரம்புட்டான்,தோடை, எலுமிச்சை,கொடித் தோடை போன்ற பழவகைகள்

II. மரக்கறி

கத்தரி,தக்காளி,மிளகாய்,பயற்றங்காய்,பாகற்காய்,புடலங்காய்,பூசணி,வெண்டி,மஞ்சள்முள்ளங்கி,பீற்றூட்,அவரை போன்ற மரக்கறி வகைகள்

III. கீரை வகைகள்

அகத்தி,வல்லாரை,பொன்னாங்கன்னி,கங்கூன்,பசளிக்கீரை போன்றவை

IV. கிழங்கு வகைகள்

வற்றாளை,மரவள்ளி,பால்கிழங்கு,கொடிக்கிழங்கு,இராசவள்ளி, கருணைக்கிழங்கு போன்றவை

V. உள்நாட்டு மூலிகை வகைகள்

கண்டங்கத்தரி,கற்றாளை,இஞ்சி,மஞ்சள்,தேங்காய்ப்பூ,கீரை, சேரை

VI. ஏனைய பயிர்கள்

தென்னை,செவ்விளநீர்,கமுகு,கறிவேப்பிலை,சேரை,வெற்றிலை போன்றவை

VII. சேதனப்பசளை உற்பத்தியலகு

VIII. தேனீ வளர்ப்பு அலகு

வீட்டுத்தோட்டத்திற்குள் தேனீ வளர்ப்பு

5. நவீன விவசாயத்தொழில்நுட்ப முயற்சியாண்மை அறிவும் திறன் அபிவிருத்தியும்

விவசாயம் சார்ந்த கருத்திட்டங்கள் மற்றும் சுயதொழில்களின் தரத்தினையும் மற்றும் விளைச்சலையும் அதிகரிப்பது,நிரந்தரமான நிலைக்குக் கொண்டு வருதல் போன்றவற்றுக்குத் தேவையான விவசாய தொழில்நுட்ப அறிவை கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் விருத்தி செய்யும் நோக்கில் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.விவசாய திணைக்களம் உட்பட நேரொத்த நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

அந்தூரியம் பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சி - தாவரவியற் பூங்கா கம்பஹா

2011 விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்





6.0 கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டம்

சமுர்த்திப்பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்வாதார அபிவிருத்தியின் பொருட்டு கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தச்செய்யும் பாரிய பொறுப்புக்கு உதவி செய்து செயற்படுவது இந்த வேலைத்திட்டத்தின் பொறுப்பாகும்.

இலங்கையில் விவசாயத் தொழிலை அடிப்படை வாழ்க்கை முறையாகக் கொண்டு மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர்.இங்கு விவசாயத்துறையின் கீழ் கால்நடை வளர்ப்பு முக்கிய இடத்தினை வகிக்கின்றது.நீர்பற்றாக்குறை, பூமியில் ஏற்படும் பல்வேறு செயல்கள் காரணமாக பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளமுடியாத நிலத்தினை பயன்படுத்திக்கொண்டு கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்களை செயற்படுத்த முடியுமாக இருந்தது. அத்துடன் இலங்கையானது நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு என்பதுடன் நாட்டிற்குள் பல்வேறு அளவினையுடைய நீர்த்தேக்கங்கள் பல்வேறு வகையான குளங்களும் உள்ளன.இவற்றினை பயன்படுத்திக்கொண்டு மீன்பிடிக்கைத்தொழிலை பிரபல்யப்படுத்துவதற்கும் கூடிய திறன்களுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை சமுர்த்திப்பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்வாதார அபிவிருத்தியின் பொருட்டு பல்வேறு கருத்திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தச்செய்யும் பாரிய பொறுப்பிற்கு உதவிய வண்ணமுள்ளது.மேற்படி திறன்களை கவனத்திற்கொண்டு விசேடமாக கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி வேலைத்திட்டங்களை சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்டு இதுவரை செயற்படுத்தியுள்ளது. இங்கு கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி திட்டங்களில் ஆட்களை ஈடுபடுத்தச்செய்வதன் ஊடாக அவர்களது தொழில்வாய்ப்பின்மை குறைதல், பொருளாதார ரீதியில் பலமாக இருப்பதுடன் குடும்பத்தின் போசனை நிலையும் வளர்ச்சியடையும்.

2011ம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் நாடு பூராகவும் பத்து இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை உருவாக்கும் ‘‘திவிநெகும - வாழ்வெழுச்சி’’ தேசிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித் துறையின் பொருட்டும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

திவிநெகும வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்கள் கீழ் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை முன்வைத்துக்கொண்டு 2011ம் ஆண்டின் பல்வேறு கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

1. நிரந்தரமாகவும் செயன்திறன் மிக்கதாகவும் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களில் ஈடுபடும் பொருட்டு சமுர்த்திப்பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வசதிகளை வழங்குவதன் ஊடாக அவர்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல்.
2. பதனிடல் செயற்பாடுகள் ஊடாக கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி ஆரம்ப உற்பத்திகளின் பெறுமதியினை அதிகரிக்கும் கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் விற்பனை வசதிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதும்.
3. ஒன்றிணைந்த போசனை வேலைத்திட்டத்தின் ஊடாக சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் போசனை மட்டத்தினை அதிகரித்தல்.
4. கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களின் நன்மைகளை அதிகரிப்பதற்குத் தேவையான சேவைகள் மற்றும் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்குரிய சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டம்

2011ம் ஆண்டில் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி அபிவிருத்தித்திட்டங்களுக்கு திறமையாக உள்ள சகல கிராமசேவைப்பிரிவுகளும் உள்ளடங்குகின்றவாறு இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி வேலைத்திட்டத்தின் பொருட்டு 2011ம் ஆண்டில் ரூபா மில்லியன் 400.7 நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதி ஒதுக்கீட்டினை செலவு செய்து கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரதான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

1. கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களை உருவாக்கி அதில் பயனாளிகளை ஈடுபடுத்தல்.
2. ஆரம்ப உற்பத்திகளின் பெறுமதியினை அதிகரிக்கும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
3. குடும்பத்தின் போசனை நிலையினை உயர்த்தும் பொருட்டு தகுதியான கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
4. கருத்திட்டத்தின் பொருட்டு நேரடியாக தொடர்புபடும் பயனாளிகளுக்கு கருத்திட்டத்துடன் இணைந்த அறிவை வழங்குதல்.

1. **கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களை உருவாக்கி அதில் பயனாளிகளை ஈடுபடுத்தல்**

இதன் கீழ் முக்கிய கருத்திட்டமாக கறவைப்பசு அபிவிருத்திக் கருத்திட்டத்தினைக் குறிப்பிட முடியும்.இங்கு கறவைப்பசுக்களை வழங்குதல், மாட்டுத்தொழுவங்களை அமைத்தல்,உயிர்வாயு அலகுகளை ஆரம்பித்தல்,பசு இனப்பெருக்க அலகினை ஆரம்பித்தல் என்பனவற்றினைக் குறிப்பிட முடியும்.

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரிடத்தேயுள்ள சிறியளவிலான பாற்பண்ணையாளர்களின் பால் உற்பத்தியினை அதிகரிப்பதும்,வருடாந்தம் இந்நாட்டு பால்மா இறக்குமதியின் பொருட்டு செலவாகும் அதிகமான அந்நியநாட்டுச்செலவாணியினை ஓரளவாவது குறைத்து தேசிய தூயபால் நுகர்வினை அதிகரிக்கச்செய்வதும் இக்கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகக் குறிப்பிட முடியும். மேலும் மரபு ரீதியான முறைகளிலிருந்து ஓரளவாவது விலகி கூடிய பாலுற்பத்தியினைப் பெற்றுக்கொள்ளல், எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மற்றும் கறவைப்பசு கருத்திட்டத்தின் பொருட்டு தேவையான கறவைப்பசுக்களின் பற்றாக்குறைக்கான தீர்வின் பொருட்டு இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக பிரதேச ரீதியாகவுள்ள திறன்கள் மற்றும் பயனாளிகளின் விருப்பத்தின் பிரகாரம் ஆடு வளர்ப்பு,பன்றி வளர்ப்பு,வர்த்தக ரீதியான முட்டை உற்பத்தி, புறொயிலர் உற்பத்தி, உயிர்வாயு அலகினை ஏற்படுத்துதல், நன்னீர் மற்றும் உவர்நீர் மீன்பிடிக்கருத்திட்டங்களை செயற்படுத்துதல், அலங்கார மீன்வளர்ப்பு போன்ற கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.2010ம் ஆண்டிற்குள் 6345 கருத்திட்டங்கள் 2011ம் ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட்டது.

2. ஆரம்ப உற்பத்திகளின் பெறுமதியினை அதிகரிக்கும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

கருத்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆரம்ப உற்பத்திகள் அதிகமாகவுள்ள காலங்களில் அவை வீணாகாது அவற்றின் பெறுமதியினை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக கூடிய வருமானத்தினை பெற்றுக்கொள்வதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.இதன் கீழ் பாலோடு சார்ந்த உற்பத்திகள்,மீன்பிடி உற்பத்திகள் முக்கியமானவையாகும்.2011ம் ஆண்டில் இவ்வாறான கருத்திட்டங்கள் 134 ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



3. குடும்பத்தின் போசனை நிலையினை உயர்த்தும் பொருட்டு தகுதியான கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

குடும்பத்தின் போசனை நிலையினை உயர்த்துவதற்கு வீட்டுத்துறை சார்ந்த கோழி வளர்ப்புக் கருத்திட்டத்தினை பிரபல்யப்படுத்துவது பிரதானமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒருமாத வயதினையுடைய கோழிக்குஞ்சுகள் 10 மட்டளவில் ஒரு குடும்பத்தின் பொருட்டு வழங்கப்பட்டதுடன் கடந்த வருடத்திற்குள் 1914 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

மேலும் இக்கருத்திட்டத்திற்குத் தேவையான ஒரு மாத வயதினையுடைய கோழிக்குஞ்சுகளை பயனாளிகள் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் காலி, களுத்துறை, புத்தளம், பொலநறுவை, மாத்தறை, வவுனியா, அனுராதபுரம், மாத்தளை, கேகாலை, குருணாகலை, பதுளை ஆகிய மாவட்டங்களில் ஒரு நாளைய வயதினையுடைய கோழிக்குஞ்சுகளை ஒரு மாதம் வரை வளர்ப்பதற்கு பயனாளிகள் தொடர்புபட்டதுடன் இதன் கீழ் நேரடியாக ஒரு மாத வயதினையுடைய 76165 கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டது.

இதற்கமைய மாவட்ட மட்டத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்கள் 8393இன் பொருட்டு ரூபா மில்லியன் 234.378 செலவிடப்பட்டுள்ளது.

4. கருத்திட்டத்தின் பொருட்டு நேரடியாக தொடர்புபடும் பயனாளிகளுக்கு கருத்திட்டத்துடன் இணைந்த அறிவை வழங்குதல்.

விடயத்தோடு இணைந்த தொழில்நுட்பப்பயிற்சி மற்றும் உதவிச்சேவைகளை ஒருங்கிணைப்புச் செய்வதே பிரதான குறிக்கோளாகும். கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களில் ஈடுபடுகின்ற மற்றும் புதிதாக ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ள கருத்திட்டங்களின் பயனை உயர்த்தி தேசிய வருமானத்திற்கு கூடிய பங்களிப்பை வழங்குவதனை இங்கு நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.கருத்திட்டமொன்று வெற்றியடைய வேண்டுமாயின் புதிய அறிவுகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை கருத்திட்டப்பயனாளிகளுக்கு அடிக்கடி வழங்கவேண்டியுள்ளது.

பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் கருத்திட்டப் பயனாளிகளை அணிதிரட்டி குறித்த துறையில் நிபுணத்துவம் வாய்ந்த வளனர்களை ஈடுபடுத்திக்கொண்டு வெற்றிகரமான பயிற்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் ஏனைய நேரொத்த நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பயிற்சித்திட்டங்களுக்கும் பயனாளிகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

நேரடி ஒதுக்கீடுகள் மற்றும் சமுர்த்தி வங்கி மூலம் செயற்படுத்தப்படும் பல்வேறு கடன்களைப் பெற்றுக்கொண்டு கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கருத்திட்டங்களை செயற்படுத்தும் பயனாளிகளுக்கு அப்பயிற்சித்திட்டம் வழங்கப்பட்டது. கறவைப்பசு வளர்ப்பு,முட்டை உற்பத்தி, பன்றி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு போன்ற பல்வேறு துறைகளுக்குத் தேவையான பயிற்சி வேலைத்திட்டங்கள் இதன் கீழ் செயற்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக வேலைத்திட்டக் கண்காணிப்பு

மற்றும் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. இதன்பொருட்டு ரூபா 113,972 செலவிடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பிற வேலைத்திட்டங்களின் பொருட்டு தலைமையலுவலகத்திலிருந்து ரூபா 613,350.00 இற்கான தொகையினை செலவிட்டுள்ளது.அதற்கமைய கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பிரிவுக்கு 2011ம் ஆண்டிற்குள் மில்லியன் 234.992இற்கான தொகை இத்துறையில் கருத்திட்ட அபிவிருத்தியின் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டது.

2011ம் ஆண்டிற்குள் மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களும் செலவிடப்பட்ட தொகையும்

மாவட்டம்	ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	தொகை ரூ.மில்
கொழும்பு	66	2.310
கம்பஹா	352	12.093
களுத்துறை	221	5.869
காலி	183	7.046
மாத்தறை	223	5.308
ஹம்பாந்தோட்டை	103	2.414
மொனராகலை	59	1.304
பதுளை	281	9.530
கண்டி	405	11.018
மாத்தளை	146	5.099
நுவரெலியா	493	13.289
அனுராதபுரம்	457	15.147
பொலநறுவை	266	8.022
குருணாகலை	446	15.123
புத்தளம்	657	19.971
இரத்தினபுரி	176	5.062
கேகாலை	181	5.315
வவுனியா	287	11.234
யாழ்ப்பாணம்	1,699	30.749
திருகோணமலை	424	12.909
அம்பாறை	675	18.908
மட்டக்களப்பு	593	16.651
மொத்தம்	**8393**	**234.378**



முதலீடுகள் ரூ.மில்லியன் மாவட்ட மட்டத்தில்
ரூ.மி
35
30
25
20
15
10
5
0
கொழும்பு
கம்பஹா
களுத்துறை
காலி
மாத்தறை
ஹம்பாந்தோட்டை
மொனராகலை
பதுளை
கண்டி
மாத்தளை
நுவரெலியா
அநுராதபுரம்
பொலநறுவை
குருணாகலை
புத்தளம்
இரத்தினபுரி
கேகாலை
வவுனியா
யாழ்ப்பாணம்
திருகோணமலை
அம்பாறை
மட்டக்களப்பு
மாவட்டம்



ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில்
ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை
1800
1600
1400
1200
1000
800
600
400
200
0
கொழும்பு
கம்பஹா
களுத்துறை
காலி
மாத்தறை
ஹம்பாந்தோட்டை
மொனராகலை
பதுளை
கண்டி
மாத்தளை
நுவரெலியா
அநுராதபுரம்
பொலநறுவை
குருணாகலை
புத்தளம்
இரத்தினபுரி
கேகாலை
வவுனியா
யாழ்ப்பாணம்
திருகோணமலை
அம்பாறை
மட்டக்களப்பு
மாவட்டம்

ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களை வகைப்படுத்தல்

கருத்திட்டம்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை
கறவைப்பசு வளர்ப்பு	1973
ஆடுவளர்ப்பு	1023
பன்றி வளர்ப்பு	198
முட்டை உற்பத்தி (போசனை)	1914
முட்டை உற்பத்தி (வியாபாரம்)	893
புறொயிலர் உற்பத்தி	281
மாட்டுத்தொழுவம் அமைத்தல்	640
உவர்நீர் மீன்பிடி உற்பத்தி	996
நன்னீர் மீன்பிடி உற்பத்தி	183
அலங்கார மீன் உற்பத்தி	56
மீன்பிடி உற்பத்திகள்/பால்சார்ந்த உற்பத்திகள்	134
ஏனையவை	102
மொத்தம்	**8393**



7.0 கைத்தொழில் பிரிவு

சமுர்த்தி பயனாளிக்குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களை செயற்படுத்தும் பொழுது கைத்தொழில் கருத்திட்டங்களுக்கு விசேடமானதொரு இடம் கிடைத்துள்ளது.தற்போதைய போட்டிச்சந்தைக்கு பொருத்தமான கைத்தொழில் உற்பத்திகளை மேற்கொள்ளும் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் உட்பட குடிசைக்கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சமுர்த்தி பயனாளிகளால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச்செல்லப்படுகின்ற கைத்தொழில் கருத்திட்டங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு நிகழ்கால சந்தைக்கு தரம்வாய்ந்ததும் உயர் ரக உற்பத்திகளை உற்பத்தி செய்யும் பொருட்டு கைத்தொழில் கருத்திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதனை பிரதான குறிக்கோளாகக்கொண்டு 2011ம் ஆண்டில் கைத்தொழில் வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

2011ம் ஆண்டின் திவிநெகும - வாழ்வெழுச்சி வேலைத்திட்டத்தினை ஒரு தேசிய வேலைத்திட்டமாக முழு நாடும் உட்படுகின்றவாறு செயற்பட்டது. இத்தேசிய வேலைத்திட்டத்தின் பிரதான ஒரு பிரிவாக வீட்டுக் கைத்தொழில் அலகினை உருவாக்குவது ஒரு முக்கியமான ஒரு இடத்தினை கொண்டுள்ளது.அதன் பிரகாரம் பயணித்து சமுர்த்திப்பயனாளி மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் போசனையினையும் உணவுப்பாதுகாப்பு உட்பட பொருளாதார மட்டத்தினை விருத்திசெய்யும் பொருட்டு சமுர்த்தி அதிகாரசபையின் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுகின்ற கைத்தொழில் அபிவிருத்திப்பிரிவு விசேட ஒரு இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளது.

தனது வீட்டிலிருந்தே பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு நிகழ்கால போட்டிச்சந்தைக்கு பொருத்தமான கைத்தொழில் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டது.சமுர்த்திப் பயனாளிகளால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச்செல்லப்படுகின்ற கைத்தொழில் கருத்திட்டங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு நடைமுறைச்சந்தைக்கு தரம் வாய்ந்த மற்றும் உயர்ந்த வகையான முடிவினையும் கொண்ட உற்பத்திகளை ஒன்றுசேர்ப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களையும் அறிவினையும் வழங்குவதனை பிரதான குறிக்கோளாகக் கொண்டு இவ்வாண்டில் கைத்தொழில் வேலைத்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது.

வீட்டுக்கைத்தொழில் அலகுகளை அபிவிருத்தி செய்வதனை முன்வைத்துக்கொண்டு இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் உள்ளூர் சந்தைத் தேவைகளுக்குப் பொருத்தமான பிரகாரம் மரபுரீதியானதும் பரம்பரை வழியாக வந்ததுமான 14204 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினையுடைய சிறுகைத்தொழில் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா மில்லியன் 373.4 பெறுமதியான நிதிப்பங்களிப்பு கைத்தொழில் பிரிவினால் வழங்கப்பட்டது.

1.சிறியளவிலான கைத்தொழில் கருத்திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம்.

சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் விசேட ஒரு உணர்வும் ஊக்கமும் இவ்வாண்டில் இவ்வேலைத்திட்டத்தில் கண்டுகொள்ளக்கூடியதாய் இருந்ததுடன் புதிய தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவுசெய்து தனது கைத்தொழிலை மேம்படுத்திக்கொள்வதற்கும் உழைப்பினை மிகக் கூடுதலாக பயன்படுத்தி வீட்டுத்துறை சார்ந்த இக்கருத்திட்டத்தினை நடாத்திச்செல்வதன் மூலம் அவர்களினதும் குடும்பத்தினரதும் வருமான மட்டத்தினை அதிகரித்துக்கொண்டுள்ளனர்.

திவிநெகும - வாழ்வெழுச்சி தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக முழு நாடும் உட்படுகின்றவாறு இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. சிறிய மற்றும் குறுகிய அளவிலான தனிக்கருத்திட்டங்கள் இதன் கீழ் அதிகளவில் அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருந்தது. 2011ம் ஆண்டிற்குள் இவ்வாறு அபிவிருத்தி செய்த கருத்திட்டங்களின் எண்ணிக்கையானது 14204 ஆகும். செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் 373.4 ஆகும்.இவ்வாண்டில் அபிவிருத்தி செய்த கருத்திட்டங்களின் தொகுப்பும் படங்களும் கீழ் உள்ளவாறாகும்.

- ஒட்டுக்கைத்தொழில்
- தச்சுக்கைத்தொழில்
- ஆடைதயாரித்தல்
- கம்மாலைக் கைத்தொழில்
- மேசன் கைத்தொழில்
- லாக்சா கைத்தொழில்
- செங்கல் உற்பத்தி கைத்தொழில்
- தங்க ஆபரணம் மற்றும் இரத்தினக்கல் கைத்தொழில்
- அரிசி பதனிடல் கைத்தொழில்

- பிரம்பு மற்றும் நார் சார்ந்த உற்பத்திகள்
- வாகனம் திருத்தல்
- அப்பியாசப்புத்தக உற்பத்தி
- தோற்பொருள் உற்பத்தி
- அலுமினியக்கைத்தொழில்
- இரத்தினக்கல் கைத்தொழில்
- சீமெந்து சார்ந்த உற்பத்திகள்
- தோல் சார்ந்த உற்பத்திகள்
- இலக்ரோனிக் உற்பத்தி
- அலுமினியப்பொருள் உற்பத்தி
- தேங்காய் எண்ணெய் உற்பத்தி
- ஊதுபத்தி விளக்குத்திரி உற்பத்தி
- பாணி/கருப்பட்டி/இனிப்புப்பண்டங்கள் உற்பத்தி
- வாசனைத்திரவியங்கள் மற்றும் தானியங்கள் அரைத்தல்
- களிமண் சார்ந்த உற்பத்திகள்
- தும்பு சார்ந்த உற்பத்திகள்
- அப்பியாசப்புத்தகங்கள் மற்றும் காகிதம் சார்ந்த உற்பத்திகள்
- வெதுப்பகக் கைத்தொழில்
- கைத்தொழில் வேலைகள்

சிறியளவிலான கைத்தொழில் கருத்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில்

1	கொழும்பு	843	25,992631.65
2	கம்பஹா	2060	58,002,435.17
3	களுத்துறை	665	16,932,980.00
4	காலி	1166	30,459,396.92
5	மாத்தறை	1064	24,627,780.16
6	ஹம்பாந்தோட்டை	834	12,580,071.34
7	கண்டி	999	26,667,952.06
8	மாத்தளை	548	14,895,926.36
9	நுவரெலியா	316	7,735,961.50
10	குருணாகலை	706	18,796,135.97
11	புத்தளம்	282	8,767,696.00
12	அனுராதபுரம்	647	16,719,594.00
13	பொலநறுவை	163	4,285,587.62
14	பதுளை	193	4,129,061.24
15	மொனராகலை	147	4,133,951.55
16	இரத்தினபுரி	972	26,307,984.43
17	கேகாலை	855	22,231,725.11
18	அம்பாறை	282	7,589,453.33
19	திருகோணமலை	165	4,238,128.52
20	மட்டக்களப்பு	273	17,885,398.53
21	வவுனியா	87	2,797,469.50
22	யாழ்ப்பாணம்	937	17,588,003.63
	மொத்தம்	**15540**	**389,656,995.30**


2500
2000
1500
1000
500
0
கொழும்பு
கம்பஹா
களுத்துறை
காலி
மாத்தறை
ஹம்பாந்தோட்டை
கண்டி
மாத்தளை
நுவரெலியா
குருணாகலை
புத்தளம்
அநுராதபுரம்
பொலநறுவை
பதுளை
மொனராகலை
இரத்தினபுரி
கேகாலை
அம்பாறை
திருகோணமலை
மட்டக்களப்பு
வவுனியா
யாழ்ப்பாணம்

சிறியளவிலான கைத்தொழில்கள் கருத்திட்ட மட்டத்தில்

தொ.இல	கைத்தொழில்	எண்ணிக்கை
1	ஒட்டுக்கைத்தொழில்	502
2	தச்சுக்கைத்தொழில்	2916
3	ஆடைத்தயாரித்தல்	2984
4	கம்மாலைக் கைத்தொழில்	161
5	மேசன் கைத்தொழில்	1201
6	லாக்சா கைத்தொழில்	25
7	செங்கல் கைத்தொழில்	996
8	தங்கஆபரணம் மற்றும் இரத்தினக்கல் கைத்தொழில்	82
9	அரிசி பதனிடும் கைத்தொழில்	271
10	களிமண் சார்ந்த உற்பத்திகள்	892
11	தும்புசார்ந்த உற்பத்திகள்	787
12	அப்பியாசப்புத்தகம் மற்றும் கடதாசி சார்ந்த உற்பத்திகள்	354
13	பிரம்பு மற்றும் நார் சார்ந்த உற்பத்திகள்	71
14	சீமேந்து சார்ந்த உற்பத்திகள்	621
15	தோல் சார்ந்த உற்பத்திகள்	119
16	இலத்திரனியல் உற்பத்திகள்	41
17	அலுமீனியப்பொருள் உற்பத்தி	36
18	தேங்காய் எண்ணெய் உற்பத்திகள்	47
19	சந்தனப்பத்திகள்/மங்கள விளக்குத்திரி உற்பத்திகள்	146
20	மெழுகுதிரி உற்பத்தி	52
21	பாணி,கருப்பட்டி இனிப்புப்பண்ட உற்பத்திகள்	724
22	வாசனைத்திரவியங்கள் மற்றும் தானியங்கள் அரைத்தல்	201
23	வெதுப்பகக் கைத்தொழில்	327
24	கைத்தொழில் வேலைகள்	648
	மொத்தம்	14204



8.0 சந்தைப்படுத்தல் அபிவிருத்திப்பிரிவு

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு கைத்தொழில்கள், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்துகொள்ளும் பொருட்டு தேவையான சந்தைப்படுத்தல் வசதிகளையும் பல்வேறு உதவிகளை வழங்குவதும் அவர்களது உற்பத்திகளின் பொருட்டு சிறந்த சந்தை வாய்ப்புகளையும் விலையினையும் பெற்றுக்கொடுப்பது சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படை குறிக்கோளாகும்.

சந்தைப்படுத்தல்கள் மற்றும் சேவைகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களானது பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்டு,

- சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள் கருத்திட்டங்களை ஏற்கனவே நடாத்திச்செல்லும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்துவதும் ஸ்தீரமான நிலைக்கு உட்படுத்துவதும்,

- சிறியளவிலான தொழில் முயற்சியொன்றினை ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள மேற்படி குடும்பங்களின் அங்கத்தவர்களுக்குத் தேவையான மூலதன உபகரணங்களை வழங்குவதன் ஊடாக (நிதி வசதிகளை வழங்கி) அவர்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல்.

அத்துடன் மேற்படி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய உதவிச்சேவைகளை வழங்குவதன் ஊடாக அவர்களது உற்பத்திகளுக்கு இடைத்தரகர்களைக் குறைத்து சாதாரண ஒரு விலையினை வழங்குவதும் தற்போதைய சந்தை அமைப்பிற்கு பொருத்தமானவாறு உற்பத்திகளை மேற்கொள்வதன் ஊடாக புதிய சந்தை வாய்ப்புகளை நோக்கி அவர்களது உற்பத்திகளை முன்வைப்பதற்கு உதவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த அடிப்படை நோக்கங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் 2011ம் ஆண்டில் சந்தைப்படுத்தல் பிரிவினால் 10 இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை ஆரம்பிக்கும் திவிநெகும - வாழ்வெழுச்சி தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் பிரதான கருத்திட்டங்கள்/ வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டினை வழங்கி அவை களத்தில் செயற்படுத்தப்பட்டது.

(i) சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்கள்

* வீட்டு விற்பனை நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள்
* அரிசி விற்பனைக்குத் தேவையான உபகரணங்கள்
* நடமாடும் விற்பனை (வியாபாரம்)

(ii) சேவைகள்

* சிகை அலங்கார நிலையத்திற்கான உபகரணங்கள்
* துவிச்சக்கர வண்டி பழுது பார்ப்பதற்கான உபகரணங்கள்
* உணவுச்சாலை/உணவு பரிமாறல் சேவை
* வாகனம் திருத்துதல்
* வாகன சேவை நிலையங்கள்
* அழகுக்கலை நடவடிக்கைகள்
* மனைத்துறைச்சேவைகள்
* சிறுவர் நலன்புரி நிலையங்களுக்குத் தேவையான மரத்தளபாடங்களும் உபகரணங்களும்
* தொடர்பாடலுக்குத் தேவையான உபகரணங்கள்

2011ம் ஆண்டில் சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்திற்கு ரூபா. மில்.310 இற்கான திறைசேரி நிதிஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட சந்தைப்படுத்தல் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா மில்லியன் 309.98 இற்கான நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது.இருப்பினும் வருட இறுதியில் மேற்குறிப்பிடப்பட்ட சந்தைப்படுத்தல் கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு இந்நிதி ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா.மில்.144.16 செலவிட்டு சந்தைப்படுத்தல் மற்றும் சேவைக்கருத்திட்டங்கள் 7727 ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் உள்ள சுழற்சி நிதியத்தினை பயன்படுத்தி 2186 சந்தைப்படுத்தல் மற்றும் சேவைக்கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்பொருட்டு ரூ.மி.61.32 ஈடுபடுத்தப்பட்டுள்ளது.(இணைப்பு இலக்கம் 01)

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடத்திற்குள் மேலே வகைப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்களின் பொருட்டு பயனாளிகளை ஈடுபடச்செய்து அவர்களை வெற்றிகரமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களாக ஆக்குவதற்கு சமுர்த்தி சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் ஊடாக பயனுள்ள ஒரு பணி நிறைவேற்றப்பட்டுள்ளதாக களத்துறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் பிரகாரம் தெளிவாகியுள்ளது.

2011.12.31ம் திகதியளவில் செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் சேவைக்கருத்திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள் கருத்திட்டங்களின் வகைப்படுத்தல் அறிக்கை இணைப்பிலக்கம் 02இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

திவிநெகும தேசிய வேலைத்திட்டத்தோடு இணைந்ததாக செயற்படுத்திய சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பித்த சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள் கருத்திட்டம் தொடர்பான தகவல்கள்

கருத்திட்ட வகை	செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	கருத்திட்ட வகை	செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை
சில்லறை விற்பனைக்கடை	2239	அரிசி விற்பனை	195
நடமாடும் விற்பனை கருத்திட்டம்	791	நன்னீர் மீன் விற்பனை	32
உணவுச்சாலை கருத்திட்டம்	546	லொத்தர் விற்பனை	25
விவசாய உபகரணங்கள் விற்பனை	186	அலங்காரம்/மணமகள் வடிவமைப்பு	258
தைத்த ஆடைகள் விற்பனை	235	தொடர்பாடல் நிலையம்	168
மின்சாரப்பொருத்தல் சேவை	66	துவிச்சக்கர வண்டி திருத்தல்	119
உபகரணங்களை வாடகைக்கு விடல்	73	நிறப்பூச்சு/வர்ணம் தீட்டுதல்	131
ஆடைத்தயாரிப்பு	313	ஒட்டுத்தொழில்	119
சலவைத்தொழில்	05	சாரதிப்பயிற்சி	7
ஒலிபெருக்கி சாதனங்கள்	23	டின்கரிஸ்(சட்டமடித்தல்)	78
புகைப்படக்கலை	68	மீன்விற்பனை	239
மலர்செடி விற்பனை	37	வாகனம் திருத்துதல்	161
பழ மற்றும் மரக்கறி விற்பனை	234	ஏனைய சேவைகள்	1323
அலங்காரப்பொருள் விற்பனை	56		
மொத்தக்கூட்டுத்தொகை			**7727**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் அந்தந்த பிரதான சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்களின் கீழ் 2011ம் ஆண்டிற்குள் சமுர்த்தி வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்ட சகல கிராமசேவகர் பிரிவுகளிலும் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோராலும் களத்தில் கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட விதமும் அதன் பொருட்டு சந்தைப்படுத்தல் அபிவிருத்திப்பிரிவின் மூலம் நேரடியாக வழங்கப்பட்ட நிதிப்பங்களிப்பு சுட்டிக்காட்டப்படுவதுடன் அதன் ஊடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு சமுர்த்தி சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பங்களிப்பும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த வருடத்தினைப் போன்று 2011ம் ஆண்டிலும் சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த தொகையிலிருந்து கூடிய அளவினை செலவிடப்பட்டிருப்பது,சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரால் நடாத்திச்செல்லப்படுகின்ற சிறியளவிலான தொழில் முயற்சிகளுக்குத் தேவையான மூலதன உபகரணங்களை வழங்கும் பொருட்டேயாகும்.

இதன் கீழ் நடமாடும் விற்பனை வண்டிகள், நடைபாதை விற்பனைக்கொட்டில், துவிச்சக்கர வண்டி போன்ற நடமாடும் வர்த்தக முயற்சிகளை நடாத்திச்செல்கின்ற சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்தி நடாத்திச்செல்வதற்கும் புதிதாக ஆரம்பிப்பதன் கீழ் 791 கருத்திட்டங்களும் 2011ம் ஆண்டில் சுட்டிக்காட்டக்கூடியதாக செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் வேலைத்திட்டமாகும் என்பது தரவுகளின் பிரகாரம் தெளிவாகின்றது.

அத்துடன் சேவைகள் துறையின் கருத்திட்டங்களுக்கு கூடிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதனை புள்ளிவிபரங்கள் மூலம் காணக்கூடியதாவுள்ளது.

விசேடமாக நடைமுறைச் சந்தையில் கூடிய கேள்வியும் கவர்ச்சியுமுள்ள அழகுக்கலை நடவடிக்கைகள், தொடர்பாடல் நிலையங்கள். வைபவ விழாக்களுக்கான பொருட்களை வழங்கல்,உணவு பரிமாறல் விநியோகம், புகைப்படக்கலை, ஒட்டுத்தொழில், டின்கரின் வேலை, உபகரணங்களை வாடகைக்கு விடல், ஒலிபெருக்கி இயந்திரங்களை வாடகைக்கு விடல் போன்ற கருத்திட்டங்களுக்கு விசேட கவனத்தினைச் செலுத்தி அதன் பொருட்டு தேவையான நிதி ஒதுக்கீடுகளையும் தேவையான வழிகாட்டல்களையும் வழங்குவதன் ஊடாக அவர்களை வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாக ஆக்கியுள்ளது.

அத்துடன் 2011ம் ஆண்டில் ஒரு மாவட்டத்திற்கு திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 150,000/- மட்டளவில் வழங்கி சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களது உதவியுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெற்றிகரமான 22 விற்பனைக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.அதற்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு கண்டி,போகம்பறை விளையாட்டரங்கில் தேசிய மட்டத்திலான விற்பனைக் கண்காட்சி 2011 டிசம்பர் 18,19 மற்றும் 20 ஆகிய மூன்று தினங்களிலும் நடாத்தப்பட்டது.

திவிநெகும தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக செயற்படுத்தப்படுகின்ற வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2011 இணைப்பு 02

சந்தைப்படுத்தல் மற்றும் சேவைப்பிரிவு

முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் வகைப்படுத்தலுக்கு ஏற்ப முன்னேற்றம்(எண்ணிக்கை அடிப்படையில்) 2011.12.31ம் திகதியன்று

கருத்திட்ட வகை	கொழும்பு	கம்பஹா	களுத்துறை	காலி	மாத்தறை	ஹம்பாந்தோட்டை	கண்டி	மாத்தளை	நுவரெலியா	குருணாகலை	புத்தளம்	அநுராதபுரம்	பொலநறுவை	கேகாலை	இரத்தினபுரி	பதுளை	மொனராகலை	அம்பாறை	திருகோணமலை	மட்டக்களப்பு	வவுனியா	யாழ்ப்பாணம்	மொத்தம்
சில்லறை விற்பனை கடை	95	187	192	328	196	56	133	41	122	79	42	93	62	236	167	30	22	36	19	42	38	23	2239
நடமாடும் விற்பனை கடை	4	132	224	115	35	12		13	12	27	15	65	3	29	12	3	3	7	4	54		22	791
உணவு தயாரித்தல் கருத்திட்டம்	11	50	25	84	4	32	48	47	8	16	3	87	9		6	41	6	2	1	9	10	47	546
விவசாய உபகரணங்கள்				106		0					4				1			0				75	186
தைத்த ஆடை விற்பனை		11	50	14	55	11		2	16		12	12			12		1	0		28		11	235
மின்சார பொருத்தல் வேலை		29		5	4				1		12	3										12	66
உபகரணம் வாடகைக்கு விடல்		18		16	10	10		4			7	1	5		1		1						73
ஆடை தயாரிப்பு	9	51		13	65	10					81	14	32		29			5	3		1		313
சலவைத்தொழில்		5																					5
ஒலிபெருக்கி சாதனங்கள்				6	2	1		2		2	5	1			1			0		3			23
புகைப்பட கலை		15		7	6	1	3	1	3	1	7	2	20		2								68
மலர்செடி விற்பனை		17				1			10		6	1			1							1	37
பழ மற்றும் மரக்கறி விற்பனை	95			6	20	8			10			41	5		19			1	3	26			234
அலங்காரப்பொருள் விற்பனை		8						1		5	8	3			2		2					27	56
அரிசி விற்பனை	121			1								1			1		1	43		27			195
நன்னீர் மீன் விற்பனை		2		2							25				1							2	32
லொத்தர் விற்பனை		3		5	12	1						2			2								25
அலங்காரம்/மணமகள் வடிவமைப்பு	18	47	22	29	15	2	20	10	6	19	18		10	19	11		2	1	2	3	4		258
தொடர்பாடல் நிலையம்		19		10		2		2				5		3	120		1	1	5				168
துவிச்சக்கர வண்டி திருத்தல்		15	28	13	5	5		2		9			2			2		11	3		24		119
நிறப்பூச்சு/வர்ணம் தீட்டுதல்		36	0	24	47	2				3	9	7	1		2								131
ஒட்டுத்தொழில்		22	15	14	41	2					14	6	2		2					1			119
சாரதிப்பயிற்சி															7								7
டின்கரிஸ்(சட்டமடித்தல்)		2		15	14		6				31		9		1								78
மீன் விற்பனை			89	14	31	5		4			28	43	3		1			18		3			239
வாகனம் திருத்தல்		11		41	6	8	10	2	1	8	42	18	2		2		3	1		2	2	2	161
பிறசேவைகள்		23	173	341	33	7	73	1	15	83	105	57	13	207	146		6	24	1	7		8	1323
முடிக்கப்பட்ட மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை	**353**	**703**	**818**	**1209**	**601**	**176**	**293**	**132**	**204**	**252**	**474**	**462**	**178**	**494**	**549**	**76**	**48**	**150**	**41**	**205**	**79**	**230**	**7727**

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டம் 2011.12.31ம் திகதியன்று

தொ. இல	மாவட்டம்	விடுவித்தல் ரூபா			அங்கீகரித்த கருத்திட்டங்கள்		முடிந்த கருத்திட்டங்கள்		பயிற்சி/பட்டறை ஏனைய விசேட வேலைத் திட்டங்கள்	செலவிட்ட மொத்தத்தொகை ரூபா	சுழற்சி	
		கருத்திட்டம்	பயிற்சி	பட்டறை	எண்ணிக்கை	தொகை ரூ	எண்ணிக்கை	தொகை ரூ			எண்ணிக்கை	தொகை
1	கொழும்பு	19,794,381	65,000	778,572	677	19,794,381.00	353	8,267,470.00	727,289.00	8,994,759.00	77	1,263,766.00
2	கம்பஹா	42,021,515	65,000	1,470,000	2420	63,949,920.00	703	15,847,570.72	1,827,014.23	17674584.95	1,078	23,626,311.00
3	களுத்துறை	22,505,976	70,000	990,450	1019	20,730,000.00	818	8,762,584.80	819,296.70	9581881.5	380	11,710,000.00
4	காலி	31,115,150	150,680	1,135,000	1248	30,430,000.00	1,209	15,207,921.43	1,087,945.39	16295866.82		8,880,000.00
5	மாத்தறை	21,554,739	880,000	730,000	693	16,130,000.00	601	12,119,223.23	788,344.48	12907567.71	124	1,674,090.00
6	ஹம்பாந்தோட்டை	7,966,950		848,125	368	7,380,500.00	176	3,690,525.49	729,683.00	4420208.49	123	2,247,413.31
7	மொனராகலை	1,336,800	3,300	489,000	50	1,278,517.00	48	1,102,019.02	514,448.00	1616467.02		
8	பதுளை	3,565,825	75,000	150,000	56	1,365,000.00	76	908,976.20	681,427.31	1590403.51		
9	கண்டி	17,466,150	115,100	1,438,000	357	10,881,950.00	293	2,441,323.84	1,593,625.60	4034949.44	25	500,000.00
10	மாத்தளை	8,074,000	205,000		252	8,074,000.00	132	1,642,661.54	655,843.10	2298504.64	97	2,493,633.00
11	நுவரெலியா	6,485,200	50,000	669,900	334	7,865,500.00	204	5,580,563.31	630,124.00	6210687.31		
12	அனுராதபுரம்	11,265,900		932,000	511	10,390,881.00	462	8,693,835.95	705,964.30	9399800.25	16	451,916.00
13	பொலநறுவை	10,693,252	50,000	330,000	325	10,160,700.00	178	4,992,274.17	480,290.40	5472564.57	35	1,045,545.00
14	குருணாகலை	7,437,268	172,946	1,910,000	279	7,192,650.00	252	5,089,962.48	1,668,803.86	6758766.34	27	623,417.20
15	புத்தளம்	14,559,742	-	634,180	518	14,198,928.00	474	6,586,167.06	720,856.55	7307023.61	9	1,668,803.86
16	இரத்தினபுரி	14,920,000	93,950	810,000	585	14,789,415.55	545	12,372,201.29	837,681.50	13209882.79		
17	கேகாலை	10,535,500	51,815	889,360	446	10,535,500.00	494	8,849,037.52	821,655.70	9670693.22		
18	வவுனியா	3,440,400	52,575	205,525	107	3,440,400.00	79	2,320,400.00	252,625.00	2573025		
19	யாழ்ப்பாணம்	13,606,380	225,000		731	13,606,380.00	230	6,084,025.95	5,521,797.80	11605823.75		
20	திருகோணமலை	3,690,000	100,000		91	3,690,000.00	41	1,730,485.88	201,883.00	1932368.88		
21	அம்பாறை	11,192,400	708,000		364	10,206,520.00	150	2,883,284.70	840,783.95	3724068.65	117	3,218,525.00
22	மட்டக்களப்பு	8,566,451	222,450	418,000	292	8,566,451.00	205	6,354,032.39	630,745.00	6984777.39	78	1,918,091.00
	தலைமை அலுவலகம்							2,630,777.14	-	2630777.14		
	மொத்தம்	**291,793,979**	**3,355,816**	**14,828,112**	**11723**	**294,657,593.55**	**7,723**	**144,157,324.11**	**22,738,127.87**	**166,895,452**	**2,186**	**61,321,511.37**

செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள் கருத்திட்டங்களின் எண்ணிக்கை (வகைப்படுத்தலுக்கமைய)



9.0 மனிதவளங்கள் மற்றும் தாபன அபிவிருத்திப்பிரிவு

நிகழ்காலத்தினையும் எதிர்காலத்தினையும் இணைத்து சர்வதேச நிலையில் பிரவேசிக்கத் தெளிவான வழியானது அறிவு,திறமை மற்றும் ஆற்றல்களை சரியாகப் பெற்றுக்கொண்ட உங்களிடமிருந்து மட்டுமே.

அறிமுகம்:

மனித நேயமிக்க தேசமொன்றினைக் கட்டியெழுப்புவதில் ''தனிமனிதனை சீராக்கி குடும்பத்தை சீராக்குவோம்,குடும்பத்தை சீராக்கி நாட்டை சீராக்குவோம்,நாட்டை சீர்செய்து உலகை வெல்வோம்.'' என்பதனை மெய்யாக்கும் பொருட்டு கிராம நகரங்களுக்கிடையே வேறுபாடின்றி பொது மக்களின் நன்மைகளின் ஊடாக பொருளாதார சமூக மற்றும் ஆத்மீக ரீதியில் பூரணத்துவமுள்ள ஒரு மனிதனை உலகிற்கு கொண்டு வரும் பொருட்டு சிதைப்படாத ஒரு சங்கிலித்தொடராக பலத்தினை வழங்கும் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் முன்னோடிகளது அறிவுத்தாகத்தை நிவர்த்தி செய்வதற்கு மனித வளங்கள் அபிவிருத்திப்பிரிவு பாரிய முயற்சியினை மேற்கொண்டுள்ளது.அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுகின்ற உலகில் எமது உத்தியோகத்தர்கள் பின்வாங்காது முன்னோக்கிச்செல்லும் பொருட்டு தொழில்நுட்ப அறிவு மற்றும் விடய அறிவு என்ற வகையில் தொடர்ச்சியான போசனையினை வழங்குதல் வேண்டும்.இதன் பொருட்டு மனித வளங்கள் அபிவிருத்திப்பிரிவினால் இனங்காணப்பட்ட பல்வேறு துறைகள் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வி மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் உருவாக்கிக்கொடுக்கப்பட்டுள்ளன.அதன் ஊடாக செயற்றிறன் மிக்க மற்றும் படைப்பாக்க மிக்க உத்தியோகத்தர்களை உருவாக்கியுள்ளோம்.அது எமது தேசத்தின் வறுமை நிலையினை ஒழிப்பதற்கு பல்வேறு அணுகுமுறைகளை உருவாக்குவதற்குப் பலமாக இருந்தது. 30 வருட துயரமான அனுபவங்கள் மற்றும் மனோநிலையிலிருந்து நொறுங்கியிருந்த எமது சமூகத்தினரை நோக்கி இரக்க சிந்தையுடன் சிறந்த குடும்ப பின்னணியினை கட்டியெழுப்புவதற்கும் முழு தேசத்தையுமே விரைவான அபிவிருத்தியின் பொருட்டு உயர்த்தி வைப்பதற்கு எமது உத்தியோகத்தர்கள் கூட்டாக மேற்கொள்ளும் முயற்சியானது அறிவு,ஆற்றல்,மற்றும் திறன் விருத்தியின் ஊடாக முழுமையாக்கியது, இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் மனித வள அபிவிருத்திப்பிரிவாகும்.அதன் பொருட்டு எம்மால் முக்கிய கூறுகள் பலவற்றின் ஊடாக உத்தியோகத்தர்கள் நெறிப்படுத்தப்படுகின்றனர்.

செயற்பாடுகள்

1. தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான பயிற்சித்தேவைகளை இனங்காணுதல் மற்றும் பயிற்சி தொடர்பில் திட்டமிடுதல் மற்றும் பயற்சித் திட்டங்களை செயற்படுத்துதல்

2. வெளிநாட்டு புலமைப்பரிசில்களின் பொருட்டு உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதும் அதில் கலந்து கொள்ளச்செய்வதும்

3. சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களுக்குச் சொந்தமான காணிகளை சுவீகரித்துக்கொள்ளல்.

4. பிரிவுக்குரியதாக திறைசேரியிலிருந்து கிடைத்த ஒதுக்கீட்டின் பொருட்டு மாதாந்த,தவணை மற்றும் வருடாந்த முன்னாய்வு அறிக்கையினைத் தயாரிப்பதும் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் அளவை செய்வதும்.

5. சமுர்த்தி உத்தியோகத்தர்களது மேலதிக கல்வி பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்துதல்.
6. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினையும் திறமையினையும் அபிவிருத்தி செய்தல்.
7. மனைப்பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் பயிற்சி வேலைத்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் ஒழுங்குசெய்தல்.

2011ம் ஆண்டின் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

ஒதுக்கப்பட்ட தொகையும் செலவுகளும்			
தொ. இல	**வேலைத்திட்டம்**	**ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.மி**	**செலவுகள் ரூ.மி**
1	ஆற்றல் மற்றும் வினைதிறன் அபிவிருத்தி	5.00	4.885
2	சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மேலதிக கல்விப்பயிற்சி வாய்ப்புக்கள்	5.00	7.255
3	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமை அபிவிருத்தி	3.00	3.469
4	சமுர்த்தி அதிகார சபையின் சொத்துக்களையுடைய காணிகளின் சட்டபூர்வ உரிமையினைப் பெற்றுக் கொள்ளல்	3.00	2.794
5	மனைப்பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்	4.00	1.265
மொத்தம்		20.00	19.668



வறுமை ஒழிப்புச்செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான முன்னேற்றகரமான அலுவலக அமைப்பு மற்றும் தொழில் ரீதியான அபிவிருத்தியினைப் பெற்றுக்கொள்வதும் அதிகாரசபையின் நோக்கு மற்றும் பணிகளை எதிர்பார்க்கைகளின் பிரகாரம் நிறைவேற்றிக்கொள்ள ஆற்றலுள்ள அறிவும் திறமையும் நிறைந்த உத்தியோகத்தர் குழுவினை உருவாக்குவதும் அதிகாரசபையின் பணிகள் மற்றும் அதிகாரங்களை சிறப்பாக முகாமை செய்து கொள்வதும் வறுமையினைக் குறைப்பதற்காக சர்வதேச தொடர்புகளை பலம் வாய்ந்த ரீதியில் பலப்படுத்துவதும் அதிகார சபையின் செயற்பாடுகளை நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி முகாமை செய்வதும் சமுர்த்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீடுகள் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கி மற்றும் மகாசங்கங்கள் அமைந்துள்ள காணிகளின் பிரச்சினையற்ற உரித்துவத்தினைப் பெற்றுக்கொள்வதும் சமுர்த்தி அதிகாரசபையின் களஞ்சியசாலைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் போன்ற வேலைத்திட்டங்களை, மனைப்பொருளாதார அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்வதும் மனித வளங்கள் பிரிவின் பிரதான பணிகளாகக் குறிப்பிட முடியும்.

<u>பயிற்சி வேலைத்திட்டங்கள்</u>

வறுமைத்தன்மையினை ஒழிக்கும் பாரிய வேலைத்திட்டத்தினைச் செயற்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் செயற்றிறனை உயர்த்தும் பொருட்டும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் அறிவு மற்றும் திறமையினை அதிகரிப்பதற்கும் விடயத்தோடு இணைந்த அறிவினை விருத்தி செய்யக்கூடிய மற்றும் தொழில்நட்ப அறிவினை வழங்கக் கூடிய பாடநெறிகள் பட்டபின் படிப்பு, டிப்போளமா போன்ற பாடநெறிகளை அறிமுகப்படுத்துவது மனிதவளங்கள் மற்றும் தாபன அபிவிருத்திப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய ரீதியிலான பயிற்சி வேலைத்திட்டங்கள்,மாவட்ட மட்டத்திலான பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் பிரதேச மட்டத்திலான பயிற்சிப் பாடநெறிகளாக இந்த வேலைத்திட்டத்தினை மூன்று பிரிவுகளாக பிரித்து இந்த உத்தியோகத்தர்களின் திறமையினை விருத்தி செய்யும் பொருட்டு இப்பிரிவினரால் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது.நவீன தொழில்நுட்பத்தினை கிராமத்திற்கு எடுத்துச்செல்லும் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக தொழில்பயிற்சி அதிகாரசபையுடன் ஒன்றிணைந்த அடிப்படை கணணிப் பயிற்சியினை பிரதேச மட்டத்தில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்றது.அங்கு மின்னஞ்சல்,இணையத்தள வசதிகளை பயன்படுத்துவது தொடர்பில் அவ்வுத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு புலமைப்பரிசில்களை வழங்கி உத்தியோகத்தர்களின் அறிவு,திறமை,ஆற்றல் மற்றும் அனுபவப்பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட மட்டத்தில் விசேட திறமையினை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.அங்கு இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான், ஆஸ்திரியா,ஜப்பான்,தாய்லாந்து,பங்களாதேஷ்,அவுஸ்ரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் வறுமையினை ஒழிக்கும் முறைகளையும் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளும் நோக்கில் வெளிநாட்டில் புலமைப் பரிசில்களை பெற்றுக்கொள்ள உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன.

‘‘திவிநெகும - வாழ்வெழுச்சி’’ வேலைத்திட்டத்திற்குத் தேவையான உத்தியோகத்தர்களது அறிவினை உயர்த்தி அவ்வுத்தியோகத்தர்கள் ஊடாக மாவட்ட மட்டத்தில் மனைப்பொரளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவுத்திறமை அபிவிருத்தி

மாவட்டம்		செலவு ரூ.
1.	கொழும்பு	36,520.00
2.	கம்பஹா	14,750.00
3.	களுத்துறை	17,400.00
4.	காலி	11,050.00
5.	மாத்தறை	14,700.00
6.	ஹம்பாந்தோட்டை	14,550.00
7.	கண்டி	31,000.00
8.	மாத்தளை	15,600.00
9.	நுவரெலியா	12,000.00
10.	குருணாகலை	32,950.00
11.	புத்தளம்	25,050.00
12.	அனுராதபுரம்	15,050.00
13.	பொலநறுவை	6,000.00
14.	பதுளை	26,800.00
15.	மொனராகலை	7,350.00
16.	இரத்தினபுரி	19,650.00
17.	கோகாலை	14,550.00
18.	அம்பாறை	12,550.00
19.	மட்டக்களப்பு	28,950.00
20.	யாழ்ப்பாணம்	20,750.00
21.	தலைமை காரியாலயம்	3,091,667.00
மொத்தம்		**3,468,887.00**

முழு நாடு பூராகவும் விரிவாக செயற்படுகின்ற சமுர்த்தி வங்கிச் சங்கங்களை வலையமைப்புக்குட் படுத்தும் போது உருவாகும் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு சமுர்த்தி உத்தியோகத்தர் இடத்தேயே கணணி வன்பொருள் அறிவுடைய குழுவினரை பயிற்சியளிக்கும் பொருட்டு சகல மாவட்டங்களும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றவாறு 168 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை மூலம் பயிற்றுவித்துக் கொள்வதற்காக 6 மாதகால பாடநெறிகள் கட்டணமாக ரூபா.2,016,000 வை esamurdhi வேலைத்திட்டத்தின் கீழ் நாடுபூராகவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தரவுகளை கணணிமயப்படுத்தும் பொருட்டு சமுர்த்தி பணியாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட 577 உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு இலங்கை தொழில்பயிற்சி அதிகாரசபைக்கு பாடநெறி கட்டணமாக செலவிட்ட ரூபா 807,800 செலவும் தலைமை அலுவலகத்தின் செலவின் கீழ் உட்படுத்தப்பட்டது.

மனைப்பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்கள்

மாவட்டம்		செலவு ரூ.
1.	மாத்தறை	5,000.00
2.	கண்டி	5,000.00
3.	குருணாகலை	630,000.00
4.	பிரதான காரியாலயம்	625,359.00
மொத்தம்		**1,265,359.00**



சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மேலதிக கல்விப்பயிற்சி வாய்ப்புக்கள்

மாவட்டம்		செலவு ரூ.
1.	கொழும்பு	81,200.00
2.	கம்பஹா	268,850.00
3.	களுத்துறை	166,500.00
4.	காலி	442,250.00
5.	மாத்தறை	233,500.00
6.	அம்பாந்தோட்டை	259,000.00
7.	கண்டி	317,250.00
8.	நுவரெலியா	40,000.00
9.	குருணாகலை	303,900.00
10.	புத்தளம்	237,250.00
11.	அனுராதபுரம்	193,550.00
12.	பொலநறுவை	25,000.00
13.	பதுளை	467,500.00
14.	மொனராகலை	50,000.00
15.	இரத்தினபுரி	137,250.00
16.	கேகாலை	60,500.00
17.	அம்பாறை	206,500.00
18.	திருகோணமலை	50,000.00
19.	யாழ்ப்பாணம்	368,800.00
20.	தலைமையலுவலகம்	3,346,000.00
மொத்தம்		**7,254,800.00**

2011ம் ஆண்டில் மனிதவளங்கள் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட மேலதிக பயிற்சி தேவைகளின் கீழ் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ மட்டத்தில் தொழில் பயிற்சி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் மூலம் வங்கிநிதி நடவடிக்கை தொடர்பான டிப்ளோமா பாடநெறியும் வங்கிநிதி நடவடிக்கை தொடர்பான சான்றிதழ் படிவ பாடநெறியின் பொருட்டும் 40 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்காக ரூபா மில்லியன் 1.952 ஐ அந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அப்பாடநெறியினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ற வகையில் சமுர்த்தி வங்கி நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்யும் பொருட்டு அக்குழுவினர் ஈடுபடுத்தப் படுவார்கள். ஆகையினால் இது முக்கியமான ஒரு நிதி முதலீடாக கருதப்படுகின்றது. இந்த நிதி ஒதுக்கீடு தலைமை அலுவலகத்தின் மூலம் இலங்கை வங்கியாளர் நிறுவனத்திற்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ளதனால் 2011 ஆண்டிற்குரியவாறு மனித வளங்கள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தலைமை அலுவலக செலவாகவும் பதியப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றோம்.

ஆற்றல் மற்றும் செயற்றிறன் அபிவிருத்தி

மாவட்டம்		செலவு ரூ.
1.	கொழும்பு	23,000.00
2.	கம்பஹா	23,000.00
3.	களுத்துறை	23,000.00
4.	காலி	23,000.00
5.	மாத்தறை	23,000.00
6.	அம்பாந்தோட்டை	23,000.00
7.	மாத்தளை	23,000.00
8.	கண்டி	23,000.00
9.	நுவரெலியா	99,900.00
10.	குருணாகலை	42,200.00
11.	புத்தளம்	71,500.00
12.	அனுராதபுரம்	160,590.00
13.	பொலநறுவை	23,000.00
14.	பதுளை	23,000.00
15.	மொனராகலை	23,000.00
16.	இரத்தினபுரி	23,000.00
17.	கேகாலை	23,000.00
18.	அம்பாறை	70,500.00
19.	திருகோணமலை	178,545.00
20.	வவுனியா	23,000.00
21.	யாழ்ப்பாணம்	23,000.00
22.	மட்டக்களப்பு	60,530.00
23.	தலைமை காரியாலயம்	3,856,543.00
மொத்தம்		**4,885,308.00**

சமுர்த்தி அதிகாரசபையின் சொத்துக்களையுடைய காணிகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளல்

	மாவட்டம்	செலவு ரூ.
1.	கொழும்பு	531.00
2.	மாத்தறை	14,433.00
3.	ஹம்பாந்தோட்டை	944,000.00
4.	கண்டி	1,070,000.00
5.	அம்பாறை	765,000.00
மொத்தம்		**2,793,964.00**



10.0 மகாசங்கப்பிரிவு

குறைந்த வருமானம் பெறுவோரை வலுவூட்டும் பொருட்டு செயற்படுகின்ற சமுர்த்தி வேலைத்திட்டங்கள் பிரதேச மட்டத்தில் பயனுள்ளதாகவும் செயற்றிறன் மிக்கதாகவும் செயற்படுத்தும் பொருட்டு பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டுள்ள மக்கள் அமைப்புகளுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள மகாசங்கங்களை முறையாக நெறிப்படுத்துவது மகாசங்கப்பிரிவின் பிரதான பணிப்பொறுப்பாகும்.

வறுமையினை வெற்றிக்கொள்வதற்கு அணிதிரண்ட படைப்பாக்கமுள்ள மக்களுக்கு சிறுகுழுக்கள் கிராமச்சங்கங்கள் உட்பட பிரதேச மக்கள்அமைப்புகளுக்கு படைப்பாக்கமுள்ள பங்களிப்பினை வழங்கி மக்களமைப்பினை ஊக்குவித்து அவ்வமைப்பினை பலமுள்ளதாகவும் நடாத்திச்செல்கின்ற குறைந்த வருமானம் பெறுவோரின் செயற்பாடுகளை உயிரோட்டமுள்ளதாக நெறிப்படுத்துதல்.

செயற்பணிகள்:-

I. குறைந்த வருமானம் பெறுவோரின் குறுநிதித் தேவைகள் மற்றும் கருத்திட்டச் செயற்பாடுகளைப் பலமுள்ளதாக நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான தாபன அமைப்புக்களைக் கட்டியெழுப்புதல்.

II. சமுர்த்தி சிறுகுழுக்கள்,கிராமிய சங்கங்கள் உட்பட பிரதேச மக்கள் அமைப்புக்களை பலப்படுத்துதல்.

III. குறைந்த வருமானம் பெறுவோரது கூட்டுச்செயற்பாடுகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் ஊடாக (சந்தை,தொழில்நுட்பம்) பரவலாக்குவதற்கு வழிகாட்டல்.

IV. குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்வாதார அபிவிருத்திக்குரியதான செயற்றிறன் மிக்க தகவல் பரிமாற்ற வலையமைப்பொன்றினை மகாசங்க மட்டத்தில் கட்டியெழுப்புதல்.

பிரதான வேலைத்திட்டங்கள்

1. மக்கள் வலையமைப்பினை பலப்படுத்துதல்
2. தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
3. மகாசங்கங்களில் தாபன அபிவிருத்தி
4. i) நில்லம்பை பயிற்சி நிலைய அபிவிருத்தி

   ii) பலாங்கொடை சமனலவெவ பயிற்சி நிலைய அபிவிருத்தி

1. **மக்கள் வலையமைப்பினை பலப்படுத்துதல்**

சமுர்த்தி வேலைத்திட்டத்தில் கீழ் மட்டத்திலுள்ள பலம் வாய்ந்ததொரு அலகாக 2006ம் ஆண்டிலிருந்து 2011ம் ஆண்டு வரை கட்டியெழுப்பப்பட்ட சிறுகுழுக்களின் எண்ணிக்கையானது 242669 ஆகும். வங்கிச்சங்க செயற்பாடுகள் மற்றும் வங்கிச்சங்கங்களின் கடனை வழங்குவதன் அடிப்படையினை பலம் வாய்ந்ததாக பேணிக்கொள்வதற்கு இச்சிறுகுழு செயற்பாடுகள் மற்றும் சமுர்த்திச்சங்கங்கள் மிகப்பலம் வாய்ந்ததாகும்.மக்களோடு இணைந்த மகாசபை வருடாந்த தேர்தல்கள், நிறைவேற்றுக்குழுக்கள் சம்மேளனங்களை நடாத்தி மக்களை உயிர்ப்பூட்டும் தீர்மான ஆற்றல்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றது. 2011ம் ஆண்டில் இம்மக்கள் அமைப்பு பிரதிநிதிகளை பயிற்றுவிக்கும் பொருட்டு ரூபா 2 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

2. **தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக கிராமத்தில் மறைந்து போகின்ற தொழில் முயற்சியாண்மை ஆற்றலை தேசிய மட்டத்திற்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பாரிய முயற்சியாகும்.அவை பல்வேறு தோற்றங்களுடாக மறைந்துள்ள தொழில் முயற்சியாண்மை ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பின்வாங்காத ஒரு முயற்சியாகும்.அதாவது வங்கிச்சங்கங்கள் ஊடாக கடன் செயற்பாடுகளுக்கு உள்ளீர்க்கப்பட்ட ஊக்கமிகு மக்களை பிரதேச,மாவட்ட மற்றும் தேசிய மட்டம் வரை பயணிக்கச்செய்யும் வழிகாட்டியாக ''விஷ்கம் உதாணய''ஒவ்வொரு வருடத்திலும் வறுமை ஒழிப்புத்தினத்தை இணைந்ததாக நடாத்தப்படுகின்றது.

அது மாத்திரமின்றி பிரதேச மட்டத்தில் உருவாகும் திறமை மிக்க தொழில் முயற்சியாளர்களை மாவட்ட மட்டத்திற்கும் மொத்த 25 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்டோர்களை தேசிய மட்டத்திற்கும் வந்து இறுதியில் 250 மட்டளவிலானோர் மிக முன்னேற்றமடைந்த நிலையில் திறமை மிக்க தொழில் முயற்சியாளர் குழுவாக விஷ்கம் உதாணய ஊடாக இனங்காணப்படுகின்றது. 2011ம் ஆண்டில் தேசிய தொழில் முயற்சியாண்மைக்குழுவினை அமைப்பதற்கு இவ்வாறானவர்கள் மகாசங்கப்பிரிவில் இருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையும் யூனிலீவர் நிறுவனமும் ஒன்றிணைந்து அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டத்திலும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத சமுர்த்திப் பயனாளிகளை சௌபாக்கியா சுயகருத்திட்டங்களினூடாக மாத்திரம் 3000த்திற்கு மேற்பட்ட பெண்கள் குழுவினருக்கு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக்கொடுத்துள்ளது. அத்தோடு அப்பெண்களின் திறமை வாய்ந்த பிள்ளைகளுக்கு வருடாந்தம் 300 புலமைப் பரிசில்களை ஒவ்வொரு வருடமும் வழங்குகின்றது.அந்த ஒரு புலமைப்பரிசிலில் வருடாந்தப்பெறுமதியானது ரூபா 30,000 ஆகும். இதற்கு மேலதிகமாக ''சௌபாக்கியா'' கண்காணிப்பு உத்தியோகத்தர் 41 பேருக்கு மேற்பார்வையாளர்கள் என்ற வகையில் விற்பனை பிரதிநிதி என்ற பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

3. மகாசங்க தாபன அபிவிருத்தி

இதுவரை 317 மகாசங்கங்கள் நாடு பூராகவும் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் தாபனச்செயற்பாடுகளை பலப்படுத்தச்செய்யும் பொருட்டு தனது தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக இணையத்தள வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

2011.01.31ம் திகதியிலிருந்து 2011.12.30ம் திகதி வரை மகாசங்க உபகரணங்களை வழங்கும் முன்னேற்றம்.

உபகரணம்	எண்ணிக்கை	தொகை (ரூ)
கணணி	24	1,755,447
அலுவலக உபகரணங்கள்	16	2,117,909
மின்விநியோகம்	1	14,250
தொலைநகல்	5	83,269
மகாசங்க பெயர்ப்பலகை	3	39,830
போட்டோபிரதி	38	2,653,307
தண்ணீர் வசதி	1	23,220

மேலும் தனது மகாசங்க நிதியங்களிலிருந்து (ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட மகாசங்கங்களுக்கு) 41 போட்டோ பிரதி இயந்திரங்கள் தொலைநகல்/பிரொஜக்டர் 17 மடிக்கணணி 12 மேசைக் கணணி 16உம் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பமும் அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

4. பயிற்சி நிலைய அபிவிருத்தி

நில்லம்பை மற்றும் பலாங்கொடை சமனலவெவ பயிற்சி நிலைய அபிவிருத்தியின் மூலம் 120 பேருக்கான நில்லம்ப பயிற்சி நிலையத்தில் தங்குமிட வசதிகளின் கீழும் சமனலவெவ பயிற்சி நிலையத்தில் 135 பேருக்கான தங்குமிட வசதிகளுடாக பயிற்சிகளை வழங்குவதற்கான ஆற்றல்கள் உள்ளன.இலங்கை சமுர்த்தி அதிகாரசபையில் அதிகமான தங்கியிருந்து பயிற்சித்திட்டங்கள் இதன் கீழ் சேவையைப் பெற்றுக்கொள்கின்றன.அத்தோடு பயிற்சி நிலைய அபிவிருத்திக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் மிளகு பயிர்ச்செய்கையும் 2 ஏக்கரில் தேயிலைப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. நில்லம்பையில் கறவைப்பசு கருத்திட்டமொன்றும் சமனலவெவ பயிற்சி நிலையத்தில் தேனீ வளர்ப்பு கருத்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக பூமி அலங்கார நடவடிக்கைகள் நீர் முகாமைத்துவத் தொகுதி ஆரோக்கியமான ஆண் மற்றும் பெண்களுக்கான பயண விடுதிகள் கழிவறைகளும் குளியல் அறைத்தொகுதியும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நில்லம்ப சமுர்த்தி பயிற்சி நிலையத்திற்கு	ரூபா 8,426,685/-
சமனலவெவ சமுர்த்தி பயிற்சி நிலையத்திற்கு	ரூபா 1,435,276/-

மேற்படி தொகை செலவிடப்பட்டு அவ்விடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

11.0 சமூக அபிவிருத்திப்பிரிவு

சமூக அபிவிருத்தி என்பது சமூகத்தின் சகல பிரிவுகளிலும் ஏற்படுகின்ற அபிவிருத்தியாகும்.மொத்த சமூகத்தின் ஆத்மீக அபிவிருத்தி என்ற வகையில் முழுமையான குடும்பச்சூழலை உருவாக்குவதே அடிப்படை கருத்தாகும்.

பின்னணி

- வசதி வாய்ப்புகளற்ற சகல சமூக பிரிவினருக்கும் சமூகப் பெறுமதி ஒன்றினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- வறுமைத்தன்மைக்கு மூலகாரணியான சமூக காரணிகளை இனங்கண்டு அவற்றிற்கு தீர்வினை வழங்குதல்.
- குறைந்த வருமானம் பெறுவோரின் சமூக மற்றும் கலாச்சார விழுமியங்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- **நடைமுறைச்செயற்பாடுகள்**

மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு சமூக அபிவிருத்திப்பிரிவிற்கு ரூ.மி.366.3இற்கான திறைசேரி ஒதுக்கீடுகள் 2011ம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்றுள்ளது.

2011ம் ஆண்டில் தேசிய வேலைத்திட்டமான திவிநெகும-வாழ்வெழுச்சி வேலைத்திட்டத்தோடு இணைந்ததாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் மூலம் செயற்படுத்த உத்தேசித்துள்ள வேலைத்திட்டங்கள் இடத்தேயே ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்படி நிதியினைப் பயன்படுத்திக்கொண்டு நாடு முழுவதும் செயற்படுத்த சமூக அபிவிருத்திப்பிரிவு திட்டமிட்டது.

சமூக அபிவிருத்தி வேலைத்திட்டமானது பிரதான மூன்று பிரிவுகளைக் கொண்டது.

01. ஆத்மீக அபிவிருத்தியும் சமூக அபிவிருத்தியும்
02. திரியபியச வீடமைப்புத்திட்டம் (குறைந்த வருமானம் பெறுவோர்/ அங்கவீனர்கள்)
03. மாதிரிக்கிராம வேலைத்திட்டம்

01. ஆத்மீக அபிவிருத்தியும் சமூக அபிவிருத்தியும்

1.1 ஆத்மீக அபிவிருத்தி

- சமயத்தளங்களின்பால் மக்களை ஒன்றுசேர்த்தல்
- அறநெறிப் பாடசாலைகளை பலப்படுத்தும் வேலைத்திட்டங்கள்
- சமய மற்றும் கலாச்சார விவகாரம்,சிரமதானம்,மூலிகைப்பூங்காக்களை உருவாக்குதல்,தேசிய பழக்க வழக்கத்திற்கு பழக்கப்படுத்துதல்
- பொதுச்சொத்துக்களை சரியாக பயன்படுத்துவதும் எமக்குச் சொந்தமான எமது பொருட்களை பாதுகாக்கும் வேலைத்திட்டமும்

✶ இதன்படி வருடத்தில் ஆத்மீக அபிவிருத்திமற்றும் ஒழுக்காற்றினை கட்டியெழுப்பும் 62040 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் இதன்பொருட்டு செலவான மொத்தத் தொகை ரூபா.மில்லியன் 0.2 ஆகும்.

1.2 போதை மற்றும் புகைத்தலை தடுக்கும் வேலைத்திட்டம்

- குறைந்த வருமானம் பெறுவோரின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய ஒரு சவாலாக போதை மற்றும் புகைத்தல் பாவனையினால் ஏற்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக சீரழிவுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டி போதையற்ற ஒழுக்கநெறி மிக்க கிராமமொன்றினை உருவாக்குவது அடிப்படை குறிக்கோளாக இருந்தது.

  கடந்த வருடங்களில் தேசிய மட்டத்தில் செயற்பட்ட போதை தடுப்பு வேலைத்திட்டங்கள் நடப்பாண்டிலும் மேலும் மேம்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டதுடன் பிரதேச ரீதியாக இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களும் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளன.

1.2.1 போதைப்பொருள் பாவனை,விநியோகம்,கேள்வி மற்றும் ஆற்றல் தொடர்பில் (நடைமுறையிலுள்ள நிலைமைகள்)தகவல்களை ஒன்றுசேர்த்து விமர்சனம் செய்தல்

1.2.2 சிறுவர் மற்றும் இளைஞர் குழுக்களை பயனுள்ள போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களின் பொருட்டு ஈடுபடுத்தச்செய்வதும் கவர்ச்சியினைக் குறைக்கச் செய்யும் செயற்பாடுகளும்

1.2.3 மக்களிடத்தேயே மதுசாரம் பாவிப்போரின் அசாதாரமான நடத்தைகளுக்கு இடங்கொடுக்காத செயற்பாடுகள்

- சிறுவர்களையும் மகளிரையும் விழிப்பூட்டுதல்
- சிறுவர்,மகளிர்,முதியோர் மற்றும் இளைஞர் குழுக்களை அதன் பொருட்டே உருவாக்கி செயற்படுத்துதல்

1.2.4 சிறுவர்களை இலக்காகக் கொண்டு செயற்படுகின்ற பிரசார மற்றும் ஏனைய வற்புறுத்தல்களுக்கு எதிராக செயற்படும் பெற்றோர் குழுக்களை உருவாக்குதல்

1.2.5 மதுசாரம் புகைத்தல் பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருட்களைப் பாவிப்போரை விடுவிக்கச்செய்யும் வேலைத்திட்டம்

- சமூக மைய உளவள சிகிச்சை வேலைத்திட்டங்கள்
- சிகிச்சை நிலையங்கள் அல்லது சிகிச்சையகங்களின் பால் அவர்களை முன்வைத்தல்

1.2.6 புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை சட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு மக்களிடமிருந்து வற்புறுத்தல்களை ஏற்படுத்துதல்

1.2.7 புகைப்பொருள் பாவனை மற்றும் பிரசாரங்களை பலவீனமாக்கும் விற்பனை நிலையங்களை உருவாக்கும் செயற்பாடுகள்

- கடை உரிமையாளர்களுடன் சட்டத்தின் கொள்கைகள் தொடர்பில் கலந்துரையாடுதல்
- நிறுவனத்தினை வலியுறுத்தக்கூடியவாறு கிராமப்பிரிவுக்குரிய வணிக சங்கங்களை விழிப்பூட்டுதல்

- ❖ மேற்படி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூ.மி.5.14 செலவிடப்பட்டுள்ளது.

முன்னேற்றம் கீழ் உள்ளவாறாகும்.

	ஆண்டு		
	2009	**2010**	**2011**
போதைப் பாவனையிலிருந்து விடுவிக்கப்பட்ட நபர்கள்	14895	24154	20385
புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்வதனை இடைநிறுத்திய கடைகள்	6750	7664	7560
புகைத்தல் பாவனையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	16750	22352	22100

1.3 சமூக மற்றும் கலாசார விழுமியங்களை மேம்படுத்தல் (இளைஞர் குழுக்கள்/சிறுவர் கழகங்கள்/தொண்டர் குழுக்கள்)

1.3.1 நல்ல பழக்கவழக்கங்கள் கொண்ட வாழ்வு முறைக்குப் பழக்கப்படுத்துதல்

- பழக்கவழக்கங்கள்,நடத்தைகள்,சடங்குசம்பிரதாயங்கள்,உணவுப் பழக்கங்கள், உடைகள் மற்றும் திருமண மரண வைபவங்கள் போன்றவை

1.3.2 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விசேட வேலைத்திட்டங்கள்

- உளவளம், ஆத்மீகவேலைத்திட்டங்கள், தாலாட்டுப்பாடல்கள், மரநடுகை போன்றவை

1.3.3 உடல் உள சுகத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்கப்படுத்தலும் வழிகாட்டலும்

- சமயக் கலந்துரையாடல்கள் குழுக்களின் கலந்துரையாடல்கள்
- சமய சொற்பொழிவுகள்
- அன்னதானம்,தியான வேலைத்திட்டங்கள்

1.3.4 தற்கொலையினைக் குறைப்பது தொடர்பில் மக்களை விழிப்பூட்டுதல்

1.3.5 முறையான போசனைகள் நோயற்றிருத்தல் மற்றும் உடல் வளர்ச்சி

1.3.6 19-30 வயதினையுடைய இளவயதினருக்கு

- இரசனை விருந்து,தலைமைத்துவம்,விளையாட்டுக்கள்,அன்றாட வாழ்வுக்குப் பழக்கப்படுத்துதல்,நல்லெண்ணங்களை உருவாக்குதல்,தொழில் வழிகாட்டல்கள், சிறந்ததொரு திருமணத்திற்கு ஆயத்தப்படுத்துதல்

1.3.7 இலகுவான ரசனை விருந்துக்கான வழி மேம்பாடு

1.4 <u>குடும்ப அலகில் மகிழ்ச்சியினையும் பாசத்தினையும் மேம்படுத்துதல்</u>

1.4.1 வீட்டு வன்முறைகளைக் குறைத்தல்

1.4.2 குடும்பத்திற்குள் சரியான தொடர்பாடலை மேம்படுத்துவதும் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஒருவருக்கொருவரின் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துதல்

1.4.3. சிறந்த மனைப்பொருளாதார முகாமையினை உருவாக்குதல்

1.4.4 குடும்பத்திற்குள் இலகுவான ரசனை விருந்து செயற்பாடுகளின் மேம்பாடு

1.4.5 குடும்பத்திற்குள் சரியான ஆண்/பெண் சமூக நிலை தொடர்பான தெளிவு

1.4.6 பாதுகாப்பு,போசனை மற்றும் சுதந்திரம் என்பனவற்றினை குடும்ப அலகிற்குள் உறுதிப்படுத்துவதற்கு உதவும் சிறுவர்,இளைஞர்,முதியோர் கூட்டு அபிவிருத்தி பணியில் ஈடுபட முதியோரை ஊக்குவித்தல்.(முதியோர் செயலகத்துடன் ஒன்றிணைந்து)

- செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை - 15344

இவ்வேலைத்திட்டங்கள் பிரதேச ரீதியாக செயற்படுத்தப்பட்டதுடன் தேவையான வளங்கள் நேரொத்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

1.5 சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்றை கிராமத்திற்குள் செயற்படுத்தல்

1.5.1 ஒவ்வொரு கிராமத்திலும் செயற்பாடுள்ள சிறுவர் கழகமொன்றை உருவாக்குவதும் அச்சிறுவர் கழகங்களை வளர்ச்சியடைய வைக்கும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்

1.5.2 ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் சிறுவர் கழக பிள்ளைகளுக்காக அழகியல் வேலைத்திட்டங்கள் கலாச்சாரப் போட்டிகள் மற்றும் விடய அறிவிற்குரிய வினாவிடை நிகழ்ச்சிகளை நடாத்துதல், ரசனை விருந்து வேலைத்திட்டங்கள், தொழில் வழிகாட்டல்கள் கலாச்சார நிலையங்களின்பால் சிறுவர்களை ஒன்றுசேர்த்தல்.

1.5.3 சேமிப்பு மற்றும் சிக்கனங்களின் பொருட்டு சிறுவர்களை பழக்கப்படுத்தல் (சிசுரக்க/கெக்குளு கணக்கு)

1.5.4 சகல சிறுவரினதும் சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தல் எதிர்காலத்தினை பொறுப்பேற்கவுள்ள சிறுவர்களது உலகினை பட்டை தீட்டுவதற்கும் அவர்களது திறமைகளை விருத்திசெய்து உடல் உள மற்றும் ஆத்மீக அபிவிருத்தியினை ஏற்படுத்தி எதிர்காலத்தின் பொருட்டு தற்போதுள்ள சிறுவர்களை பயிற்றுவிப்பதும் இந்த வேலைத்திட்டத்தின் குறிக்கோளாகும். இதுவரையில் 13400 மட்டளவிலான செயற்பாடுள்ள சிறுவர் கழகங்கள் செயற்படுவதுடன் 293000 அங்கத்தவர்கள் அங்கத்துவத்தினைப் பெற்றுள்ளனர்.

இச்சிறுவர் கழக பிள்ளைகளின் கலாச்சார மற்றும் இலக்கிய ஆற்றல்களை மெருகூட்டுவதும் மற்றும் அவ்வாற்றல்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு வரும் பொருட்டு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான போட்டிகள் நடாத்தப்பட்டது. 2011ம் ஆண்டின் தேசிய மட்டத்திலான போட்டிகள் 2011 டிசம்பர் 27,28ம் திகதிகளில் எம்பிலிபிட்டிய கிராமிய தலைவர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.அதில் நாட்டின் சகல மாவட்டங்களிலும் சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல சிறுவர் கழக பிள்ளைகள் ஒன்பது போட்டிகளிலும் மூன்று வயதெல்லைகளில் போட்டிகளில் கலந்துகொள்ளச்செய்யப்பட்டது. மேலும் இங்கு போட்டிகளில் கலந்து கொண்ட சகல பிள்ளைகளுக்கும் பரிசுப்பொதி வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக 2010ம் ஆண்டில் தேசிய போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர் கழக பிள்ளைகளுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் பிரதான வைபவம் இம்முறை தென்மாகாணத்தின் வெலிகமை நகர மண்டபத்திலும் வட மாகாணத்தின் வவுனியா தமிழ் மகாவித்தியாலத்திலும் வெகு விமரிசையாக நடாத்தப்பட்டது. இதன் கீழ் பாதுக்காப்பு மற்றும் நலன்புரி வேலைத்திட்டங்கள் 5195 செயற்படுத்தப்பட்டன.

1.6 <u>சர்வதேச தினங்களுடன் இணைந்ததாக நடாத்தப்படுகின்ற வேலைத்திட்டங்கள்</u>

1.6.1 சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08

உலகின் எதிர்கால சந்ததியினை உருவாக்கி தாய்மை என்ற உன்னத பதவியைக் கொண்டுள்ள மற்றும் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் அபிவிருத்தி பணிகளில் தோலோடு தோல்கொடுத்து செயற்படுகின்ற ஒருவராக பெண்ணின் பங்களிப்பானது அதிவிசேடமானதாகும். இவ்வாறான முயற்சிகளினூடாக வசதிவாய்ப்புகளற்ற நிலைக்குள்ளாகியுள்ள குறைந்த வருமானம் பெறும் பெண்களின் உள அழுத்தத்தின் ஒரு துளியையாவது குறைப்பதற்கு உதவுவது ஒரு பேறாகவே கருதுகின்றேன். தொடர்ந்து நிவாரணத்தில் மாத்திரம் தங்கி வாழ்வதற்கு பதிலாக அவர்களது சக்தி விருத்திக்கு,ஆற்றல் அபிவிருத்திக்கு உதவுவதும் அவர்களை விழிப்பூட்டுவது

அதனோடு இணைந்த இலக்குடைய கடன் வசதிகளை வழங்குவதனூடாக அவர்களை வலுவூட்டி வாழ்வுக்குப் பேருதவியாக இருப்பது மிகவும் பயனுள்ள ஒரு முயற்சியாகவே நாம் காண்கின்றோம்.

குடும்பத்தினையும் வெளி உலகினையும் ஒன்றோடொன்று கூட்டிப் பிணைக்கும் பலம் வாய்ந்த ஒரு சங்கிலி தான் பெண்ணாகும். வறியோர் குறைந்த சுபீட்சமிகு தேசமொன்றினை நோக்கிச்செல்லும் போது நாம் முதலில் பெண்களின் பலம் தொடர்பில் நம்பிக்கை வைப்போம்.இவ்வாறான பெண்களின் பொருட்டு பிரதேச மாவட்ட மட்டங்களில் பல்வேறு பாராட்டு வைபவங்களையும் அப்பெண்களை ஊக்குவித்தல் மற்றும் விழிப்பூட்டல் வேலைத்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகளிருக்காக பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்

- ஆற்றல் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
- கர்ப்பிணித்தாய்மார் வேலைத்திட்டம்
- பெற்றோர் யாத்திரிகை வேலைத்திட்டம்
- வீட்டு முகாமைத்துவம் மற்றும் குடும்ப அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
- சமுர்த்தி வேலைத்திட்டத்தினூடாக முன்னேறி வந்துள்ள ஊக்கமிகு பெண்களைப் பாராட்டி கௌரவிக்கும் வேலைத்திட்டம்
- இரத்தத் தான வேலைத்திட்டங்கள்
- பெண்களின் பலத்தை வெளிக்கொணரும் வேலைத் திட்டங்கள்

1.6.2 சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத்தினம்

வறுமைக்குச் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளிடத்தே போதைப்பொருள் பாவனையும் புகைத்தல் பாவனையும் பிரதானமான ஒரு விடயமாகும்.ஆகையினால் ஒவ்வொரு வருடமும் மே 31ம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தினைத் தலைப்பாகக் கொண்டு பிரதேச,மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக நாடு பூராகவும் கொடி விற்பனை வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது.அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற நிதி பிரதேச மட்டத்தில் சமூக அபிவிருத்தி மன்றங்களில் வைப்புச்செய்யப்படுகின்றது. அந்நிதியினைப் பயன்படுத்திக் கொண்டு பிரதேச அபிவிருத்தி மற்றும் பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை பெற்றுக்கொண்ட கொடி வருமானங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

ஆண்டு	கொடி வருமானம் ரூ.மி
2007	51.9
2008	68.1
2009	83.2
2010	79.3
2011	86.3

1.6.3 சர்வதேச எழுத்தறிவு தினம்

பாடசாலை செல்ல வேண்டிய வயதைக் கொண்டிருந்தும் குடும்பத்தில் வசதிவாய்ப்புக்கள் இன்மையின் காரணமாக பாடசாலை செல்லாத எழுத வாசிக்கத்தெரியாத 5-14 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகளை முறையாக பாடசாலைகளுக்கு அனுமதித்தல், எழுத்தறிவு வகுப்புகளுக்கு அனுமதித்தல் மற்றும் ஏனைய தொழில்களின் பொருட்டு ஈடுபடச்செய்வது இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை - 1265

‘‘சிசுதிரிய’’புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை - 3458

1.6.4 சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்

''முதியோர் என்றுமே எமது வளமாகும்''என்ற தலைப்பின் கீழ் முதியோர் தினத்தை கொண்டாடி முதியோர் பராமரிப்பு வேலைத்திட்டங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவும் உள்ளடங்குகின்றவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.அங்கு முதியோருக்கு ஆத்மீக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் (தியானம்,போதி பூஜை,பிரித் ஓதுதல் போன்றவை) நடாத்தப்பட்டதுடன் விசேட சொற்பொழிவுகள் ஊடாக முதியோரை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களும் ரசனையினை மேம்படுத்துவதற்காக ரசனை விருந்து வேலைத்திட்டங்களும் முதியோருக்கும் சிறியோர்களுக்கும் இடையிலான அனுபவப்பரிமாற்றல் வேலைத்திட்டங்களும் பெற்றோர் யாத்திரிகை சமயத்தலங்களை தரிசிக்கும் வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

1.6.5 வறுமை ஒழிப்புத் தினம்

இந்த தினத்தினை தலைப்பாகக் கொண்டு விசேட வேலைத்திட்டமொன்றாக சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களது மாவட்ட மட்ட வர்த்தக கண்காட்சியொன்றினை நடாத்துவதற்கும் சமூக அபிவிருத்திப்பிரிவு பங்களிப்புச்செய்துள்ளது. அவர்களை தேசிய மட்டம் வரை அழைத்துவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>02. திரியபியச வீடமைப்புத்திட்டம்</u>

2.1 திரியபியச வீடமைப்பு வேலைத்திட்டம்

சமுர்த்தி வேலைத்திட்டத்தில் மிகக்கவர்ச்சிகரமான வேலைத்திட்டமாக திரியபியச வீடமைப்பு வேலைத்திட்டம் செயற்படுவதுடன் இவ்வாண்டிற்குள் ரூபா மில்லியன் 337.3ஐ செலவிட்டு இவ்வாறான 3403 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒரு வீட்டுக்கு ரூபா 100000/- இற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதுடன் இதன் முடிவுப்பெறுமதியானது ரூபா 500,000 த்தையும் தாண்டியுள்ளது.

இங்கு விசேடமாக தமது வயது முதிர்ந்த பெற்றோர்களை பார்த்துக்கொள்ளும் குடும்பங்களுக்கும் குடும்பத்தில் பாடசாலை செல்லும் வயதினையுடைய பெண்பிள்ளைகள் உள்ள,அத்துடன் வலது குறைந்த பெற்றோர்கள்,சகோதரர்களைக் கொண்ட குடும்பங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் அமைக்கப்படுகின்ற திரியபியச வீட்டுக்குரியவர்களின் வீட்டுத்தோட்டத்தினை அமைத்தல்,வீட்டு முகாமைத்துவம் மற்றும் குடும்ப அபிவிருத்தி தொடர்பான விழிப்பூட்டல்களும் அவர்களுக்கான பொருத்தமான வாழ்வாதாரத்தினைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக அவர்கள் வலுவூட்டப்பட்டவர்களாக ஆக்கவும் முடியுமாக இருந்தது.

மேற்படி திறைசேரி நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக லொத்தர் நிதியம் 500 வீடுகளை நிர்மாணித்துள்ளதுடன் அதன்பொருட்டு செலவிட்டுள்ள தொகையானது ரூபா மில்லியன் 50 ஆகும்.இதற்கு மேலதிகமாக பிரதேச ரீதியாக சமூக அபிவிருத்தி மன்ற நிதியத்தில் இருந்து 1500 வீடுகள் மட்டளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி	நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை
திறைசேரி ஒதுக்கீடு	337.50	3403
வீடமைப்பு லொத்தர் நிதியம்	50	500
சமூக அபிவிருத்தி மன்றம்	75	1500

வீடு முன்பிருந்த நிலை

வீடு தற்போதைய நிலை

எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப்பிரிவின் திருமதி.W.M.சோமாவதி

03.ஏனைய நலன்புரி வேலைத்திட்டங்களும் விசேட வேலைத் திட்டங்களும்

3.1 மாற்றுவலுவுள்ளோர் நலன்புரிகள்

இங்கு நாட்டுக்காக யுத்தம் செய்து அந்த நடவடிக்கைகளின் போது அங்கவீனமான படைவீரர்களுக்கு மாற்றுவலுவுள்ளோர் நலன்புரி வேலைத்திட்டத்தின் கீழும் ஏனைய மாற்றுவலுவுள்ளோர் சகலரும் பொதுவான மாற்றுவலுவுள்ளோர் நலன்புரி வேலைத்திட்டத்தின் கீழும் தெரிவுசெய்யப்பட்டு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இதற்கு சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.2 சிறைபிடிக்கப்பட்டோரின் குடும்ப நலன்புரிகள்

இக்குடும்பங்களின் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை குறைக்கும் பொருட்டு அக்குடும்பங்களின் அங்கத்தவர்களை அங்கீகரிக்கக்கூடிய நிலையிலுள்ள நபர்களாக மாற்றும் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.அவர்கள் சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் ஊடாக கடன் வேலைத்திட்டங்களில் முன்வைக்கப்பட்டு உற்பத்தி நடவடிக்கையின் பால் முன்வைக்கப்பட்டுள்ளனர்.

3.3 சிறுவர் துஷ்பிரயோகத்தினை தடுக்கும் வேலைத்திட்டம்

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை இனங்காணுதல்

- பணிக்கமர்த்தும் சேவை
- பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றமை
- பாடசாலை செல்லும் வயதினையுடைய பிள்ளைகளை கொண்டு குடும்பத்தினை பராமரித்துக்கொள்ளல்.
- வீட்டு வன்முறை

மேற்படி சம்பவங்களை இனங்கண்டு அக்குடும்பங்களின் வயது வந்தோர்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல், அவ்வாறான பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதித்தல், புலமைப்பரிசில்களை வழங்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3.4. தற்கொலை முயற்சியினை தடுக்கும் வேலைத்திட்டம்

நாடு பூராகவுமுள்ள சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் ஊடாக பிரதேச மட்டத்தில் இந்த வேலைத்திட்டங்கள் ஏனைய வேலைத்திட்டங்களுடன் இணைந்ததாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.தற்கொலை முயற்சியினை குறைக்கும் பொருட்டு பிரதேச மட்டத்தில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இதன் கீழ் தற்கொலை செய்துகொள்வதற்கான அடிப்படை பின்னணியினை ஆராய்ந்து பார்த்தல்
- அவ்வாறான குடும்பங்களது நபர்களுக்கு விழிப்புணர்வினை மேற்கொள்வதும் உளவளச்சேவை வேலைத்திட்டங்களை நடாத்துதல்
- அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தகுதியான வேலைத்திட்டங்களை உருவாக்குதல்
- சிறுவர் கழகங்களின் பால் சிறுவர்களை ஒன்றுசேர்த்தல்
- சமய கலாச்சார பொருளாதார அபிவிருத்தி பிரிவுகளில் இந்த நிலையினை தவிர்த்தல்

3.5. விசேட வேலைத்திட்டங்கள்

- **மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வு**

  இது இரு மாதத்திற்கு ஒன்று என்ற வீதம் மாவட்டச்செயலாளர்/ சமுர்த்தி உதவி ஆணையாளரது தலைமையில் மாவட்ட சமூக அபிவிருத்தி விடய முகாமையாளர், மாவட்ட முன்னேற்ற முகாமையாளர், தலைமையக முகாமையாளர்கள், முகாமைப்பணிப்பாளர், வலய முகாமையாளர், சமூக அபிவிருத்தி உதவியாளரின் பங்கேற்புடன் நடாத்தப்படுகின்றது. இதற்கான ஒதுக்கீடுகள் சமூக அபிவிருத்திப்பிரிவினால் விடுவிக்கப்படுகின்றது. 2011ம் ஆண்டில் செலவிட்ட தொகை 1.2 மில்லியன் ஆகும்.

2011ம் ஆண்டு வேலைத்திட்டங்களின் மொத்த முன்னேற்றம்

வேலைத்திட்டம்	ஒதுக்கிய தொகை ரூ.மி	செலவு ரூ.மி	முன்னேற்றம்
1.ஆத்மீக அபிவிருத்தி	1.0	0.117	62040
2.	-	-	13931
3.போதைத்தடுப்பு மற்றும் புகைத்தல் தடுப்பு	5.5	5.14	12958
4.சிறுவர் பாதுகாப்பு நலன்புரி	5.0	-	9195
5.சமூக கலாச்சார பெறுமதிகளை மேம்படுத்தல்	0.5	0.00	9824
6.சர்வதேச ஞாபகார்த்த தின வைபவங்கள்	5.0	10.876	5271
7.முன்னேற்ற மீளாய்வு	3.0	1.165	13802
8.திரிய பியச வீடமைப்பு அபிவிருத்தி	340.4	338.2	3947
மொத்தம்	366.3	354.8	

12.0 ஊடகப்பிரிவு

வறுமையினைக் குறைக்கும் பொருட்டு குறைந்த வருமானம் பெறுவோர்களின் முயற்சிகளுக்கு உதவும் தொடர்பாடல் முறையொன்றினைக் கட்டியெழுப்புவதும் அதனூடாக சமுர்த்தி வேலைத்திட்டத்தின் அபிவிருத்தி முறைகளை மக்களிடத்தேயே பிரபல்யப்படுத்தி சமுர்த்தி வேலைத்திட்டம் சார்ந்த புதிய அபிவிருத்தி கலாச்சாரத்தினைக் கட்டியெழுப்புவுதும் குறைந்த வருமானம் பெறும் மக்களை அரச சார்பற்ற தொண்டர் பணியாளர்களது, தொழில் நிபுணர்களது மற்றும் அரசியல் தலைமைத்துவத்தின் அன்னியோனிய அனுபவங்களை சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் புரட்சிகரமாக முன்னெடுத்துச்செல்லும் பொருட்டு பொருத்தமான ஒரு கருத்தாடலை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் பயன்பாட்டினால் கட்டியெழுப்புதல்.

தொடர்பாடலூடாக வறுமையினை ஒழிப்பதற்கான அறிவு திறமை ஆற்றல் விருத்தியினூடாக சமுர்த்தி வேலைத்திட்டத்தினை 'விரிவான' ஒரு கலந்துரையாடலுக்கு உட்படுத்தி அதன் அபிவிருத்தியினை மிகப்பயனுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவதோடு இலங்கை மற்றும் சர்வதேச சமூகங்களிடத்தேயே அதனை பிரபல்யப்படுத்தல்.

வழிவகைகள் -

- சமுர்த்தி வேலைத்திட்டத்தினை பிரபல்யப் படுத்துவதும் கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதற்குரிய ஊடக வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளல்.

- சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளிடத்தே ஊடக ஒருங்கிணைப்பொன்றினை கட்டியெழுப்புவதன் மூலம் அப்பிரிவுகளின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளல்.

- அரசியல்,அரசு சார்பற்ற பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டு புதிய தொடர்பாடலை மிகப்பயனுள்ளதாக முன்னெடுத்துச்செல்லல்.

செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்

- சமுர்த்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தினை ஆய்விற்கு உட்படுத்துகின்ற ''நவயுகயக்க உதானய - புதுயுகத்தின் எழுச்சி'' என்ற வாராந்த தொலைக்காட்சி வேலைத்திட்டமொன்று
- சமுர்த்தி அதிகாரசபை மூலம் செயற்படுத்தப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பான விளம்பரப்படுத்தப்பட்ட விசேட தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 02.

வாராந்தம் -சமுர்த்தி அதிகாரசபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற விசேட வானொலி கேள்வி பதில் நிகழ்ச்சித்திட்டங்கள் - 50

அச்சு ஊடகம் - சமுர்த்தி செய்திப்பத்திரிகை - மலர் 02
வெளியீடு - 80,000 பிரதிகள்

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட விளம்பர ரீதியான செய்தித்தாள் விளம்பரங்கள் - 05

ஏனைய வெளியீடுகள் - 05

ஊடக பரவல்கள் - களத்துறை ஊடாக பரவல்கள் - 03

இலத்திரனியல் ஊடகம் - ''சமுர்த்தி வினாவிடை'' வானொலி நேரடி கருத்தாடல்

சமுர்த்தி அதிகார சபை மற்றும் வானொலி கூட்டுத்தாபனத்திற்குமிடையே மேற்கொள்ளப் பட்ட ஒப்பந்தத்திற்கமைய செயற்படுத்தப் படுகின்ற சமுர்த்தி வினாவிடை வானொலி நிகழ்ச்சி ஒவ்வொரு சனிக்கிழமை தினத்திலும் மு.ப.9.30 இலிருந்து 10.30 வரை சிங்கள வர்த்தக சேவையில் ஒலிபரப்பப்படும்.

இந்த வேலைத்திட்டத்தினூடாக சமுர்த்திப்பயனாளிகள் மற்றும் பொதுமக்களை தொலைப்பேசி ஊடாக தொடர்புப்படுத்திக்கொண்டு தேசிய ரீதியாக செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் பிரதேச வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உட்பட சந்தேகங்களை விவாதத்திற்கு உட்படுத்தி தீர்வுகள் வழங்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும்.அங்கு நேயர்களிடம் கேள்வி கேட்கப்பட்டு அதற்கான பதிலும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படுகின்றது.

2011ம் ஆண்டில் 50 வார நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

“ நவயுகயக்க உதாணய” புதுயுகத்திற்கான நிகழ்ச்சி சமுர்த்தி அதிகார சபை மற்றும் தேசிய தொலைக்காட்சி நிறுவனத்திற்குமிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மு.ப.6.45 இலிருந்து 7.00 மணிவரை “ நவயுகயக்க உதாணய” - புதுயுகத்திற்கான நிகழ்ச்சி தொலைக்காட்சி நிகழ்ச்சி செயற்படுத்தப்பட்டது.

கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உட்பட பயனாளி மக்களுக்கு வருமானமீட்டல் வேலைத்திட்டங்கள் ஊடாக வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புகின்ற விதம் கலந்துரையாடலுக்குட்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டு ஒளிப்பரப்பப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும்.

இந்த நிகழ்ச்சி 2011.01.02ம் திகதி மாத்திரம் ஒளிபரப்பப்பட்டது.

சமுர்த்தி விளம்பர ஒளிபரப்பு

சமுர்த்தி வேலைத்திட்டத்தினூடாக செயற்படுத்தப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வாழ்வாதார அபிவிருத்தி ஒழுக்க அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் திவிநெகும- வாழ்வெழுச்சி தேசிய வேலைத்திட்டம் ஆகிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் காலை 6.30 மணிக்கு சுயாதீன தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படுகின்ற அன்றைய நாளின் செய்திப்பத்திரிகை நிகழ்ச்சியிலும் இரவு 9.30 செய்தி ஒளிபரப்புக்கும் இடையே 30 செக்கனுக்குள்ளான குறுகிய விளம்பரத்தினை ஒளிபரப்புதல்.

2011மார்ச் தொடக்கம் ஜூலை வரை 30 செக்கன் விளம்பரங்கள் 54 உடன் 05 செக்கன் விளம்பரம் 505 என்றளவில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

13.0 கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப்பிரிவு

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப்பிரிவின் பணிகள் பிரதானமாக இரண்டு வகையாகும்.சமுர்த்தி வேலைத்திட்டத்தில் இணங்கிய செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் செயற்பாடுகள் முறையாக செயற்படுகின்றனவா? என்பது தொடர்பில் பௌதீக மற்றும் நிதி ரீதியில் மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதும் பின்னணி பெறுமதிகள் தொடர்பான ஆய்வின் பிரகாரம் மதிப்பீட்டினை மேற்கொள்வதும் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணிகளாகும்.காலாண்டு மற்றும் அரையாண்டில் மேற்கொள்ளப்படுகின்ற முன்னேற்ற ஆய்வின் மூலம் உருவாகும் விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடவும் பிரச்சினைகளை இனங்கண்டு அப்பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதும் எதிர்பார்க்கப்படுகின்ற அடுத்த குறிக்கோளாகும்.இதன் பிரகாரம் வருடாந்த திட்டமிடலுக்கு தேவையான திருத்தங்களை பிரேரிப்பதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

13.1 வருடாந்த திட்டமும் முன்னைய வருடங்களின் ஒன்றிணைந்த திட்டத்தினையும் தயாரித்தல்

நடைமுறையில் உள்ள நிலைமையின் கீழும் பின்பற்ற வேண்டிய அரசகொள்கைகளின் கீழும் வருடாந்த திட்டமிடலை உருவாக்கி அதன் பிரகாரம் முன்வரும் ஐந்தாண்டுகளின் பொருட்டான ஒன்றிணைந்த திட்டமிடலை தயாரித்தல் வேண்டும் என அரசாங்கம் கொள்கை ரீதியில் அங்கீகரித்துள்ளது.நல்லாட்சிக்கான சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் வருடாந்தம் செயற்றிட்டமிடலை தயாரித்தல் உட்பட அத்திட்டத்திற்கு உட்பட்டதாக ஒன்றிணைந்த திட்டத்தினையும் முறைமைப்படுத்தல் வேண்டும். இப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவிற்காகும்.

13.2 முன்னேற்ற மீளாய்வுகளை நடாத்துதல்

சமுர்த்தி பயனாளிகள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரும் பொருளாதார சமூக மற்றும் கலாச்சார ரீதியில் இணைந்துள்ள வேலைத்திட்டமாக சமுர்த்தி வேலைத்திட்டத்தினை இனங்காண முடியும். ஆகையினால் பரவலான ஒரு முறையில் சிதறிச்செல்லும் விதத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களும் செயற்பாடுகளும் பயனாளிகளிடத்தேயே அறிமுகப்படுத்துவதும் அவற்றினை மிகப்பயனுள்ளதாக களத்துறையில் செயற்படுத்துவதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் போது அவை அடிக்கடி வருடாந்த சமுர்த்தி வேலைத்திட்டத்தில் (செயற்திட்டமிடலில்)உள்ளடங்க வேண்டியதுடன் அவை அடிக்கடி முன்னேற்ற ஆய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும்.

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே முன்னேற்ற மீளாய்வு முறையினை முறையாகவும் தரமாகவும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டது.முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகள் மூன்று பிரதான கட்டங்களில் செயற்படுத்தப்படுகின்றது.

(i) பிரதேச மட்டத்தில் முன்னேற்றத்தை ஆய்வுக்குட்படுத்தல்

(ii) மாவட்ட மட்டத்தில் முன்னேற்றத்தை ஆய்வுக்குட்படுத்தல்

(iii) தேசிய மட்டத்தில் முன்னேற்றத்தை ஆய்வுக்குட்படுத்தல்

இவ்வாறான முன்னேற்ற மீளாய்வு முறையொன்றினூடாக எதிர்பார்க்கப்படுவது மிக இலகுவில் அந்தந்த காலங்களில் உருவாகும் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் அப்பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதனை இலகுவாக்குவது செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதனூடாக எதிர்கால திட்டமிடலை மேற்கொள்வதற்குத் தேவையான தரவுகளை இலகுவில் சேர்த்துக்கொள்வதுமாகும். இவற்றின் பொருட்டு நிதமும் ஒன்று கூடுவதும் குழுப்பொறுப்புடன் பின்னணி ஆய்வினை மேற்கொள்வதும் இதில் காணப்படும் ஒரு விசேட அம்சமாகும்.

13.2.1 பிரதேச மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வு

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப்பிரிவின் கீழ் நேரடியாக நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளாதிருந்தாலும் பிரதேச மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் பலவாகும்.

- **வாராந்தக்கூட்டம் - பிரதேச செயலாளரின் தலைமையில் கீழ் நடைபெறும்.**

  ஒவ்வொரு புதன் கிழமையும் பிரதேச செயலாளரின் தலைமையில் நடைபெறும் வாராந்தக் கூட்டத்திற்கு பிரதேச செயலகப்பிரிவில் கடமையில் ஈடுபட்டுள்ள சகல முகாமையாளர்களும் கலந்துகொள்ள வேண்டியதுடன் களத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பிலும் அதற்குரிய ஏனைய விடயங்களும் இங்கு கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

- **வலயக்கூட்டம் - வலய முகாமையாளரின் கீழ் நடைபெறும்.**

  பிரதேச மட்டத்திலான கூட்டங்களிடத்தே வலயமட்டத்தில் நடாத்தப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமே பிரதானமானதாகும்.

தற்போது செயற்பாட்டிலுள்ள 1040 சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் வலய முகாமையாளர்களின் தலைமையில் வலய முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் நடாத்தப்படுகின்றது.இதில் வலயத்திறகுச் சொந்தமான சகல கிராம சேவகர் பிரிவிலும் கடமையாற்றுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொள்கின்றனர் இங்கு குறுநிதியியல் முறையின் கீழான சேமிப்புக்கள் கடன் வசதிகள் வழங்குவதற்குரிய ஆரம்ப கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பிரதேசக்கூட்டம் - பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறும்.**

மாதத்திற்கொரு முறை பிரதேச செயலாளரின் தலைமையில் நடைபெறும். பிரதேச கூட்டத்திற்கு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொள்வதுடன் இங்கு பிரதேசத்தின பொதுவான பிரச்சினைகள் பரந்தளவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்றது.முன்னேற்றத்தினை கலந்துரையாடுவது, ஊழியர்களின் பிரச்சினைகளை இனங்காண்பது, களத்துறையிலுள்ள பிணக்குகள் மற்றும் தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடலுக்கும் இக்கூட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

13.2.2 மாவட்ட மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம்

- **தலைமையக முகாமையாளர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் - மாவட்டச்செயலாளரின் தலைமையில் நடைபெறும்.**

மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படுகின்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமே தலைமையக முகாமையாளர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமாகும். இதில் பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றும் தலைமையக முகாமையாளர்கள்,முகாமைப்பணிப்பாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் கலந்துகொள்கின்றனர். 2011.12.31ம் திகதி வரை தலைமையக முகாமையாளர்களின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் 264 நடாத்தப்பட்டுள்ளது.

- **மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் - மாவட்டச்செயலாளரின் கீழ் நடைபெறும்.**

  மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் பொருட்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் விடயப்பொறுப்பு பணிப்பாளர்களும் கலந்துகொள்வதுடன் கூட்டத்தின் பொருட்டு மாவட்டத்தில் உள்ள சகல சமுர்த்தி முகாமையாளர்களும் கலந்து கொள்கின்றனர்.
  இவ்வாறான 05 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 2011ம் ஆண்டில் நடைபெற்றுள்ளது.

13.2.3 தேசிய மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வு

* **மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர்களின் கூட்டம் - பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நடைபெறும்.**

  சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பில் தேசிய மட்டத்தில் முன்னேற்றத்தினைக் கலந்துரையாடுதல்,கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்ளல், வேலைத்திட்டங்களை செயற்படுத்துவற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவது சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர்களின் மாதாந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. நடப்பாண்டிற்குள் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கையானது 08 ஆகும்.

13.3 தகவல் தொழில்நுட்ப அலகினை பராமரித்துச்செல்லல்

I. esamurdhi வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சகல பணிகளையும் கணணி மயப்படுத்தும் நோக்கில் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தோடு ஒன்றிணைந்து இவ்வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.இதன் மூலம் குறைந்த வருமானம் பெறுவோரை வலுவூட்டச்செய்யும் பொருட்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகின்ற சகல பணிகளையும் செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளும் பொருட்டு தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இவ்வேலைத்திட்டமானது இரு அடிப்படைக் கட்டங்களின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவை கீழுள்ளவாறாகும்.

முதலாம் கட்டம்

- மனிதவள முகாமைத்துவம் (HRM)
- பயனாளிகள்(வாடிக்கையாளர்) தகவல் முகாமைத்துவம் (CRM)
- கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் (PPM)

இரண்டாம் கட்டம்

- நிலையான சொத்து முகாமைத்துவம் (FAM)
- நிதி முகாமைத்துவம் (FCM)
- நிதிய முகாமைத்துவத் தொகுதி (FMS)
- இருப்பு முகாமைத்துவத் தொகுதி (IMS)

II. e திரிய வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்

அதிமேன்மைதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவிற்கமைய இலங்கையர்களது கணணி எழுத்தறிவினை மேம்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றாக இவ்வேலைத்திட்டம் உருவாகியுள்ளது. இதன் கீழ் 20000 சமுர்த்திப்பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஒரு நாள் கணணி பயிற்சி ஒன்றினை வழங்குவது மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

III. நிறுவனத்திடமுள்ள சேவைக்கணணி(server computer), அச்சுப்பொறி மற்றும் உள்ளக வலய அமைப்புத்தொகுதியினை பராமரிப்பதும் பேணிச்செல்வதும்

13.4 விசேட வேலைத்திட்டங்கள்

சமுர்த்தி வேலைத்திட்டத்தினை மிகப்பபலப்படுத்தி பராமரித்துச்செல்லும் நோக்கில் ஒழுங்கு செய்யப்படுகின்ற வேலைத்திட்டங்கள் பலவாகும். சமூகத்தினரின் தேவையின்படி பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் பிரகாரம் கிராம அபிவிருத்திக்குரியதாக மேற்கொள்ளப்படுகின்ற இந்த வேலைத்திட்டங்கள் பொது நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாறான விசேட வேலைத்திட்டங்களை தலைமையலுவலகம், மாவட்டச்செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் தேவைகளின் பிரகாரம் திட்டமிடப்படுகின்ற வேலைத்திட்டங்களாக அறிமுகப்படுத்த முடியும். 2011ம் ஆண்டிற்குள் இவ்வாறான 32 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தென்னை உரமானிய விநியோக வேலைத்திட்டம் தொடர்பில் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளித்தல்

தென்னைப் பயிர்ச்செய்கையில் புதுமையானதொரு புரட்சியினை உருவாக்கும் பொருட்டு ''கப்ருக திரிய - கற்பக சக்தி'' உர மானியத்தினை வழங்குவது தொடர்பில் தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் மாவட்ட உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் விசேட கூட்டமொன்று நடாத்தப்பட்டது.இதனோடு இணைந்ததாக அவ்விளக்கமளிக்கும் வேலைத்திட்டத்தில் கலந்துகொண்ட மாவட்ட சமுர்த்திப் பிரதிப்பணிப்பாளர்கள், மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சகல தலைமையக முகாமையாளர்கள் ஆகியோருக்கு விசேட விழிப்புணர்வு பட்டறையொன்று நடாத்தப்பட்டது.அங்கு கப்ருக திரிய - கற்பக சக்தி வேலைத்திட்டம் 2011ம் ஆண்டில் சமுர்த்தி அதிகாரசபையின் செயற்பாட்டுத்திட்டமிடலுக்கு எவ்வாறு உட்படுத்துதல் வேண்டும். நாம் அதன்பொருட்டு அறிமுகப்படுத்துகின்ற வேலைத்திட்டங்கள் யாவை என்பதும் அதற்கு நேரொத்த விதத்தில் மாவட்ட திட்டமிடலை திருத்துவது தொடர்பிலும் இங்கு விசேடமாக கலந்துரையாடி தேவையான முன்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2011 செயற்பாட்டுத்திட்டமிடலை தயாரிப்பது தொடர்பான விசேட பட்டறை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புதிய நோக்கின் பிரகாரம் சமுர்த்திப்பயனாளிகளது குடும்பப்போசனை மற்றும் வருமானத்தினை மேம்படுத்தும் பொருட்டு செயற்படுத்தப்பட்ட 10 இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கருத்ததாடல் ஒன்றை உருவாக்கும் பொருட்டு இவ்விசேட வேலைத்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.இதில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்,சகல பணிப்பாளர்கள்,மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

மனைப்பொருளாதார அலகு அபிவிருத்தித்திட்டம்

இவ்வேலைத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் 10 இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் சமுர்த்தி அதிகாரசபையோடு தொடர்புள்ள சகல தலைமையக முகாமையாளர்கள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி விடயப்பொறுப்பு முகாமையாளர்கள் விளக்கமளிக்கப்பட்டனர்.

இதற்கு விவசாய அமைச்சு,மற்றும் கால்நடை வள அமைச்சு உட்பட அதனோடு இணைந்த நிறுவனத் தலைவர்களால் அந்தந்த நிறுவன மட்டத்தில் செயற்படுத்தவுள்ள குறிப்பிட்ட வேலைத்திட்டங்களும் அதனூடாக சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு வழங்கக் கூடிய பங்களிப்பு தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

13.5 பிரிவுகளுக்குட்பட்ட நிதி முன்னேற்றம்

கண்காணிப்பு மற்றும் நெறிப்படுத்தல் பிரிவின் மொத்த வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா மில்.20 ஐ நடப்பாண்டிற்குள் ஒதுக்கியது இத்தொகையில் இருந்து 2011ம் ஆண்டின் இறுதியில் ரூபா மில்.6.38 ஐ மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பிரதான 04 செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.அதற்கமைய நிதி முன்னேற்றமானது 31.9% ஆகும் என்பதுடன் அத்தகவல்கள் கீழே காட்டப்படுகின்றது.

செலவிட்ட நிறுவனம்	செலவு விடயம்								மொத்தத் தொகை	
	முன்னேற்ற மீளாய்வு		விசேட		பயிற்சி		ஏனையவை			
	ஒதுக்கிய தொகை ரூ.மி	செலவுகள் ரூ.மி	ஒதுக்கிய தொகை ரூ.மி	செலவுகள் ரூ.மி	ஒதுக்கிய தொகை ரூ.மி	செலவுகள் ரூ.மி	ஒதுக்கிய தொகை ரூ.மி	செலவுகள் ரூ.மி	ஒதுக்கிய தொகை ரூ.மி	செலவுகள் ரூ.மி
மாவட்டச் செயலகம்	9.04	1.96	8.5	2.61	0.5	0.18	1.96	0.08	20.00	4.83
தலைமை அலுவலகம்		0.17		1.23		0.07		0.08		1.55
மொத்தத் தொகை	9.04	2.13	8.5	3.84	0.5	0.25	1.96	0.16	20.00	6.38

13.6 சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம்

சகல சமுர்த்திப் பயனாளி குடும்பத்திற்கும் நிரந்தரமான வீடொன்றிற்கான உரித்தினை வழங்கும் நோக்கின் அடிப்படையில் 1995ம் ஆண்டின் 30ம் இலக்க சமுர்த்தி அதிகாரசபை சட்டத்தின் 20 (1 மற்றும் 2) பிரிவின் கீழ் 2011 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமுலிலுள்ளவாறு சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் பொருட்டு ஒவ்வொரு சமுர்த்திப்பயனாளியும் மாதாந்தம் ரூபா 10/- ஐ செலுத்துவதன் மூலம் நிறுவனத்திற்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும்.மொத்தமாக மாதத்திற்கு ரூ.மில்லியன் 16 மட்டளவிலான ஒரு தொகை நிதியத்திற்கு வரவாகின்றது.

இந்நிதியத்தின் நிர்வாகமானது அமைச்சரவைப் படிவம் ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வமான அதிகாரத்துடன் நியமிக்கப்படுகின்ற 07 அங்கத்தவர்களைக்கொண்ட நம்பிக்கைச்சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் தலைவராக அமைச்சின் செயலாளரும் ஏனைய அங்கத்தவர்களாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி ஆணையாளர் நாயகம்,நிதி அமைச்சின் பிரதிநிதியொருவர், சமுர்த்தி அமைச்சின் மேலும் ஒரு உத்தியோகத்தர்,சமுர்த்தி முகாமையாளர்களது சங்கத்தின் தலைவர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதான செயலாளரும் குறித்த குழுவின் அங்கத்தவர்களாவர்.

சீட்டிழுப்புக்குள்ளாகின்ற கால எல்லைக்குள் சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டான உரிமையுள்ள சகல பயனாளிகளின் தகவல்கள் உள்ளடங்கியதாக தயாரிக்கப்படுகின்ற கணணி செய்நிரலுக்குரிய தரவுகள் உள்ளடக்கப்படும்.ஒவ்வொரு சமுர்த்திப் பயனாளிகளுக்கும் லொத்தர் இலக்கமொன்று வழங்கப்படுவதுடன் சீட்டிழுப்புக்காக அந்த லொத்தர் இலக்கம் பயன்படுத்தப்படும்.

கடந்த காலத்தினை ஆராய்ந்து பார்க்கும் போது ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாதமும் வெற்றி பெற்ற 100 பயனாளிகளுக்கு வெற்றி வாய்ப்புக்கள் உரிதாக்கப்படுவதுடன் ஒரு பரிசின் பெறுமதியானது ரூபா 150000 வீதம் ஒரு வெற்றி மாதத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி மானியமானது ரூபா.மில்லியன் 15.00 மட்டளவிலாகும்.

13.6.1 2011ம் நிதியாண்டில் 2008,2009 மற்றும் 2010ம் ஆண்டுகளுக்குரிய வெற்றி பெற்றோரது பரிசுத் தொகையினை விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளதுடன் நிதியினை விடுவிக்கும் முன்னேற்றமானது 2011.12.31ம் திகதியில் கீழே காட்டப்பட்டுள்ளது.

கால வரையறை	பரிசுகளின் எண்ணிக்கை	பரிசுத்தொகை ரூ.மி	முன்னேற்றம்	
			பரிசு கிடைக்கப்பெற்ற அளவு	பெறுமதி ரூ.மி
2008	1200	180.00	179	153.15
2009	1200	180.00	109	163.65
2010	1200	180.00	95	165.75

மூலம்: லொத்தர் நிதியத்தின் இறுதி கணக்கறிக்கை

13.6.2 மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றோர் தெரிவு செய்யப்பட்டுள்ள விதமும் 2008ம் ஆண்டில் பரிசுத்தொகை விடுவித்துள்ள விதமும் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொ. இல	மாவட்டம்	மாதாந்த வெற்றிகளின் எண்ணிக்கை	தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	இடை நிறுத்தப்பட்ட வெற்றிகளின் எண்ணிக்கை	பரிசுத்தொகை கிடைத்த பயனாளிகளின் எண்ணிக்கை	மேலும் வழங்கவேண்டியுள்ள எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட பரிசுத்தொகையின் எண்ணிக்கை
1	கொழும்பு	4	48	10	37	1	5.55
2	கம்பஹா	8	96	16	80		12.00
3	களுத்துறை	4	48	8	39	1	5.85
4	காலி	5	60	10	50		7.50
5	மாத்தறை	5	60	10	50		7.50
6	அம்பாந்தோட்டை	4	48	10	38		5.70
7	கண்டி	7	84	12	72		10.80
8	மாத்தளை	3	36		36		5.40
9	நுவரெலியா	3	36	11	25		3.75
10	இரத்தினபுரி	7	84	16	67	1	10.20
11	கேகாலை	4	48	5	43		6.45
12	பதுளை	4	48	4	44		6.6
13	மொனராகலை	3	36	5	31		4.65
14	குருணாகலை	10	120	16	103	1	15.45
15	புத்தளம்	4	48	6	41	1	6.15
16	அனுராதபுரம்	5	60	12	48		7.2
17	பொலநறுவை	2	24	5	19		2.85
18	அம்பாறை	5	60	7	52	1	7.8
19	திருகோணமலை	3	36	10	26		3.9
20	மட்டக்களப்பு	6	72	3	69		10.35
21	வவுனியா	1	12	1	11		1.65
22	யாழ்ப்பாணம்	3	36	2	34		5.1
	மொத்தம்	**100**	**1200**	**179**	**1015**	**6**	**152.25**

மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றோர் தெரிவு செய்யப்பட்டுள்ள விதமும் 2009ம் ஆண்டில் பரிசுத்தொகை விடுவித்துள்ள விதமும் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொ. இல	மாவட்டம்	மாதாந்த வெற்றிகளின் எண்ணிக்கை	தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	இடை நிறுத்தப்பட்ட வெற்றிகளின் எண்ணிக்கை	பரிசுத்தொகை கிடைத்த பயனாளிகளின் எண்ணிக்கை	மேலும் வழங்கவேண்டியுள்ள எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட பரிசுத்தொகையின் எண்ணிக்கை
1	கொழும்பு	4	48	13	35		5.25
2	கம்பஹா	8	96	12	69	15	10.35
3	களுத்துறை	4	48	12	36		5.40
4	காலி	5	60	9	41	10	6.15
5	மாத்தறை	5	60	10	25	25	3.75
6	அம்பாந்தோட்டை	4	48		15	33	2.25
7	கண்டி	7	84		11	73	1.65
8	மாத்தளை	3	36		10	26	1.5
9	நுவரெலியா	3	36		6	30	0.90
10	இரத்தினபுரி	7	84	10	63	11	9.45
11	கேகாலை	4	48	5	43		6.45
12	பதுளை	4	48	9	24	15	3.6
13	மொனராகலை	3	36	6	11	19	1.65
14	குருணாகலை	10	120	15		105	
15	புத்தளம்	4	48			48	
16	அனுராதபுரம்	5	60		48	12	7.2
17	பொலநறுவை	2	24		19	5	2.85
18	அம்பாறை	5	60		53	7	7.95
19	திருகோணமலை	3	36			36	
20	மட்டக்களப்பு	6	72	2	56	14	8.4
21	வவுனியா	1	12	1	11		1.65
22	யாழ்ப்பாணம்	3	36	5	31		4.65
	மொத்தம்	**100**	**1200**	**109**	**607**	**484**	**91.05**

மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றோர் தெரிவு செய்யப்பட்டுள்ள விதமும் 2010ம் ஆண்டில் பரிசுத்தொகை விடுவித்துள்ள விதமும் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொ. இல	மாவட்டம்	மாதாந்த வெற்றிகளின் எண்ணிக்கை	தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	இடை நிறுத்தப்பட்ட வெற்றிகளின் எண்ணிக்கை	பரிசுத்தொகை கிடைத்த பயனாளிகளின் எண்ணிக்கை	மேலும் வழங்கவேண்டியுள்ள எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட பரிசுத்தொகையின் எண்ணிக்கை
1	கொழும்பு	4	48	16	32		4.8
2	கம்பஹா	8	96	17	73	6	10.95
3	களுத்துறை	4	48	9	37	2	5.55
4	காலி	5	60	12	40	8	6.00
5	மாத்தறை	5	60	10	25	25	3.75
6	அம்பாந்தோட்டை	4	48		15	33	2.25
7	கண்டி	7	84		9	75	1.35
8	மாத்தளை	3	36		10	26	1.50
9	நுவரெலியா	3	36		5	31	0.75
10	இரத்தினபுரி	7	84		70	14	10.50
11	கேகாலை	4	48	7	41		6.15
12	பதுளை	4	48	10	24	14	3.6
13	மொனராகலை	3	36	5	15	16	2.25
14	குருணாகலை	10	120			120	
15	புத்தளம்	4	48			48	
16	அனுராதபுரம்	5	60		48	12	7.20
17	பொலநறுவை	2	24		20	4	3.00
18	அம்பாறை	5	60			60	
19	திருகோணமலை	3	36			36	
20	மட்டக்களப்பு	6	72	5	59	8	8.85
21	வவுனியா	1	12	1	11		1.65
22	யாழ்ப்பாணம்	3	36	3	33		4.95
	மொத்தம்	**100**	**1200**	**95**	**567**	**538**	**85.05**

மூலம்: லொத்தர் நிதியத்தின் தரவுப்பதிவுகள்

14.0 வங்கிநிதிப்பிரிவு

1996ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி அதிகாரசபையின் ‘‘கடன்பிரிவு’’ கால அடிப்படையில் ஏற்பட்ட கொள்கை ரீதியான மாற்றங்கள் காரணமாக 1998ம் ஆண்டில் ‘‘வங்கி நிதி நடவடிக்கை’’பிரிவாக பெயரிடப்பட்டது.வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவு குறுநிதி நடவடிக்கை உட்பட சமுர்த்தி பயனாளிகளின் சேமிப்புப்பழக்கத்தினை மேம்படுத்தும் பொருட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அறிமுகம்:

1996ம் ஆண்டில் இலங்கை சமுர்த்தி அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டவுடன் அதன் ஒரு அங்கமாக கடன்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

கால ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இப்பிரிவு 1998ம் ஆண்டில் ‘‘வங்கி நிதி நடவடிக்கை’’ பிரிவாக பெயரிடப்பட்டது.

1995ம் ஆண்டின் 30ம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி தேசிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு 1996ம் ஆண்டில் சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் குறைந்த வருமானம் பெறுவோரின் சேமிப்பினை விருத்தி செய்து அதனூடாக முதலீட்டுப் பலத்தினை அதிகரிப்பதற்கும் உற்பத்தி மற்றும் சேவை விருத்திக்குத் தேவையான மூலதனத்தினை(கடன் வசதிகள்) வழங்கவும் முறையற்ற கடன் கொடுக்கல்வாங்கல்களை குறைப்பதற்கும் அதனூடாக அவர்களை கடன் சுமையில் இருந்து மீட்டெடுத்து இலாபகரமான ஒரு நிறுவன முறையினை ஏற்படுத்தவுமே எதிர்பார்ப்பாக இருந்தது.

01. 1043 சமுர்த்தி வங்கிச்சங்க வலையமைப்பானது குறுநிதியியல் துறையில் பிரதானமான வங்கியாக உருவாக்குதல்.

02. குறைந்த வருமானம் பெறும் சமுர்த்தி வங்கி வாடிக்கையாளர்களை நிதிக்கட்டுப்பாட்டுடனான பொருளாதார வளமுள்ள மக்களாக மாற்றுதல்

03. சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் பொருட்டு புதிய வங்கித்தொழில்நுட்ப முறையினை அறிமுகப்படுத்துதல்.

04. மேற்படி குறிக்கோளுக்கேற்ப செயற்பட்டு குறைந்த வருமானம் பெறும் மக்களின் வறுமையினை குறைத்தல்

அதற்கமைய ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி மகாசங்கங்கள் மற்றும் சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் தலைமைப் பணிமனையாக வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவு மாறியதுடன் மேற்குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களின் பால் அந்நிறுவனங்களை நெறிப்படுத்துவது வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் பொறுப்பும் செயற்பாடாகவும் மாறியது.

1) சமுர்த்தி வங்கிச்சங்கங்கள்,சமுர்த்தி மகாசங்கங்களின் கடன்கள், வைப்புக்கள்,காப்பீடு உட்பட சகல நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் நெறிப்படுத்தல் ஆலோசனைகள் சுற்றறிக்கைகள் மூலம் வழங்குவதும் முறைமைப்படுத்துவதும்

2) சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை முறையாக நடாத்திச்செல்லும் பொருட்டு தேவையான கடன்(மீள்நிதியீட்டல்) வசதிகளை வழங்குதல்.

3) சமுர்த்தி பணியாளர்களுக்கான ஊழியர் கடன்களை வழங்குதல்.

4) சமுர்த்தி வங்கிச்சங்கங்கள்/மகாசங்கங்களின் நிதியங்களை பயனுள்ளதாக முதலீடு செய்தல்

5) சமுர்த்தி வங்கிச்சங்கங்களுக்கு புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதும் வங்கிச்சங்கத்தினை கணணி மயப்படுத்துவதும்

6) வங்கிச்சங்கங்களின் பிரச்சினைகள் பின்னடைவுகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வினை நடாத்துதல்.

7) பணியாளர்களுக்கான விழிப்பூட்டல்களும் பயிற்சி வேலைத்திட்டங்களையும் நடாத்துதல்.

8) வங்கிச்சங்கங்களின் உள்ளக முகாமைத்துவத்தினை பரீட்சிக்கும் பொருட்டு திடீர் விஜயங்களை மேற்கொள்ளல்

9) சமுர்த்தி வங்கி வலையமைப்பினை முறையாக நெறிப்படுத்துவதற்கு தேவையான காப்பீட்டு(பாதுகாப்பு) முறை ஒன்றினை நடாத்திச் செல்லல்.

10) சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் செயற்பாட்டிற்கு தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்களை(Policy matters)பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்தல்,தீர்மானங்களை செயற்படுத்தல்.

11) சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் தொடர்பில் தேவையான தரவுத் தகவல்களை தேவையான நிறுவனங்களுக்குச் சமர்ப்பிப்பதும் அதன் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்த்தலும்.

இதற்கமைய வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் செயற்பாடுகள் இருவிதமானதாகவுள்ளது.

01. சமுர்த்தி வங்கிச்சங்க வேலைத்திட்டம்
02. வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவிற்குள் செயற்பாடு

01. சமுர்த்தி வங்கிச்சங்க வேலைத்திட்டம்

வங்கிச்சங்கங்களின் ஆரம்பமானது 07 கட்டங்களில் செயற்பட்டதுடன் 2011.12.31ம் திகதியன்று முல்லைத்தீவு,கிளிநொச்சி,மன்னார் ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங்களிலும் 1043 வங்கிச்சங்கங்கள் செயற்படுகின்றது.

இதன் பிரகாரம் பார்க்கும் போது வங்கிச்சங்கங்களாக ஆரம்பமாகிய கிளை வலையமைப்பு இந்நாட்டின் குறுநிதித்துறையில் நாடு பூராகவும் பரந்துள்ள பாரிய குறுநிதியியல் வங்கி நிறுவன அமைப்பாக குறுகிய காலதிற்குள் உருவாகியுள்ளதுடன் சமுர்த்தி வங்கிச்சங்க வலையமைப்பானது உலகின் நான்காவது பாரிய குறுநிதியியல் வங்கி நிறுவன அமைப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் இனங்காணப்பட்டுள்ளது.

சிறியளவிலான குறுநிதியியலில் பிரபலமானோரிடத்தே குறிப்பிட்டுக் காட்டக்கூடிய இடத்தினைக் கொண்டுள்ள சமுர்த்தி வங்கிச்சங்க வலையமைப்பு வறுமையினை ஒழிக்கும் நோக்கங்களுக்கு உட்பட்டு வைப்புக்களை திரட்டுதல் என்ற வகையில் விசேட இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் புதிய வங்கித்தொழில்நுட்ப முறையினை பின்பற்றுவதனை அடிப்படையிலேயே ஆரம்பித்துள்ளது.

2010ம் ஆண்டின் இறுதியில் 790 வங்கிச்சங்கங்கள் நிதியியலில் தன்னிறைவு நிலையினை கொண்டிருந்ததுடன் 2011இன் இறுதியில் பல்வேறு நிதி பிரச்சினைக்கு மத்தியில் அவ்வங்கிச்சங்கங்களின் எண்ணிக்கையானது 728 ஆகியது.

1.1 வங்கிச்சங்கங்களின் அங்கத்துவமும் பங்குமூலதன முன்னேற்றமும் 2011.12.31

சமுர்த்தி பயனாளிகள் ரூபா 500/-இற்கு பங்கொன்றினை கொள்வனவு செய்வதனூடாக அவர்களுக்கு சமுர்த்தி வங்கிச்சங்கத்தின் அங்கத்துவம் கிடைப்பதுடன் அவர்கள் வங்கிச்சங்கத்தின் பங்குதாரர்களாக மாறுகின்றனர்

வங்கிச்சங்கங்களின் அங்கத்துவ முன்னேற்றம் - 2011.12.31

ஆண்டு	பெண்கள்	ஆண்கள்	மொத்தம்	வளர்ச்சி	வளர்ச்சி வீதம்
1999	737458	507478	1244936		
2000	943142	628094	1571236	326300	26
2001	1042158	663905	1706063	134827	9
2002	1149226	716833	1866059	159996	9
2003	1275273	777222	2052495	186436	10
2004	1351769	806470	2158239	105744	5
2005	1428848	824846	2253694	95455	4
2006	1516985	853604	2370589	116895	5
2007	1575509	872490	2447999	77410	3
2008	1641872	859900	2501772	53773	2
2009	1691112	896947	2588059	86287	3
2010	1830840	970693	2801533	213475	8
2011	1881808	987740	2869548	68015	2

13 வருட காலத்திற்குள் அங்கத்துவ விருத்தியானது 1வது புள்ளிவிபர அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. 2010ம் ஆண்டுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது 2011ம் ஆண்டிற்குள் வங்கிச்சங்க அங்கத்துவம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது வளர்ச்சியொன்றினைக் காட்டுவதுடன் அவ்வளர்ச்சி வீதமானது 2% மாக உள்ளது. பல்வேறு பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு மத்தியில் நிதி நிறுவனங்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளுடனான பொருளாதார நிலைமையிலும் எமது சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் வைத்திருந்த நம்பிக்கையினை இதிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது.

விசேடமாக 2010ம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட மின்சார உதவி (விதுளி அத்வெல) விசேட கடன் திட்டங்களும் இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

அங்கத்தவர்கள் செலுத்திய தொகை

ஆண்டு	தொகை.ரூ.மி	வளர்ச்சி	வளர்ச்சி வீதம்
1999	587.18		
2000	985.16	397.98	67.80
2001	1383.15	397.99	40.40
2002	1679.79	296.64	21.40
2003	1930.37	250.57	14.90
2004	2206.62	276.25	14.30
2005	2601.01	394.40	17.90
2006	3096.44	495.42	19.00
2007	3639.53	543.10	17.50
2008	3989.90	350.37	9.63
2009	4,212.42	222.52	5.58
2010	4,790.47	578.05	13.72
2011	5,370.53	580.06	12.11



12 வருட காலத்திற்குள் பங்குமூலதனத்தின் விரிவாக்கம் 2வது புள்ளிவிபர அட்டவணை மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.ஆரம்பத்தில் பங்குமூலதனத்தின் வளர்ச்சி வீதமானது 68% போன்ற உயர்ந்த அளவினை சுட்டிக்காட்டினாலும் கடந்த வருடங்களில் வளர்ச்சி வீதமானது விரைவாக குறைவடைந்திருந்தது.நடப்பாண்டில் முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டு பார்க்குமிடத்து பங்குமூலதனத்தில் வளர்ச்சியினை காட்டினாலும் வளர்ச்சி வீதமானது ஆரம்பகால விருத்தியுடன் பார்க்குமிடத்து குறைந்துள்ளது.எவ்வாறிருந்தும் நடப்பாண்டில் பங்குமூலதனத்தின் வளர்ச்சியை கவனத்தில் கொள்ளும் போது பங்குமூலதன வீதங்கள் உயர்வடைவதனை காட்டுகின்றது.

இந்த நிலையினைத் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்து வங்கிச்சங்கங்களின் நிலைத்து இருக்கக்கூடியவாறு பங்களிப்புச்செய்கின்ற பிரகாரம் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவில் முன்வேலைத்திட்டங்களை தயாரிப்பது தொடர்பில் கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.

2010ம் ஆண்டில் ரூ.மி.4790 ஆக இருந்த பங்குமூலதனம் 2011ம் ஆண்டில் ரூபா மி.5370 வரையிலான வளர்ச்சியை காட்டியது.

1.2 வங்கிச்சங்கங்களின் வைப்புக்கள் வேலைத்திட்டம்

வைப்புக்கள்(அங்கத்தவர்,அங்கத்தவரல்லாத,கூட்டு,சிறுவர் மற்றும் திரியமாதா)

ஆண்டு	எண்ணிக்கை	வளர்ச்சி	தொகை ரூ.மி	வளர்ச்சி ரூ.மி
1999	1424652		768.957	
2000	2645574	1220922	2033.452	1264.500
2001	3035233	389659	3111.161	1077.710
2002	3296569	261336	3857.100	745.939
2003	3680786	384217	4710.802	853.702
2004	3989539	308753	5751.814	1041.010
2005	4229575	240036	6824.879	1073.070
2006	4394498	164923	8131.658	1306.780
2007	4613504	219006	9875.630	1743.970
2008	5081229	467725	11356.790	1481.160
2009	5167854	86625	13536.650	2179.860
2010	5505853	337999	15906.770	2370.120
2011	5,524,025	18,172	18,907.33	3,000.56

2011ம் ஆண்டிற்குள் 3000 மில்லியன் தொகையினை வைப்புச்செய்து வங்கிச்சங்க வேலைத்திட்டம் தொடர்பில் மேலும் நம்பிக்கை வைத்து செயற்பட்டுள்ளதுடன் விசேடமாக வங்கிச்சங்கங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்ட விசேட வைப்பு விருத்தி வேலைத்திட்டங்கள் இவ்வைப்புக்களின் முதிர்வு தொடர்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஏனைய போட்டி குறுநிதி நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாறான ஒரு வளர்ச்சியினை பெற்றுக்கொண்டுள்ளமை போற்றத்தக்கதாகும்.

1.3 சமுர்த்தி வங்கிச்சங்க கடன் வேலைத்திட்டங்கள்

* சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சி ஆற்றல்களை இனங்கண்டு சுயபலத்தின் மூலம் வறுமை நிலையில் இருந்து மீளுவதற்குத் தேவையான சூழலை கட்டியெழுப்புவதற்குத் தேவையான குறுநிதியியல் வசதிகள் வங்கிச்சங்க கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

* அங்கத்தவர்களின் மூலதன நிதியங்கள் மற்றும் அவசர நிதித்தேவைகளை தீர்த்துக்கொள்ளும் பொருட்டான விசேட கடன் வேலைத்திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப் பட்டுள்ளன.

* சுயதொழில்,மிஹிஜயகடன் திட்டத்தின் ஊடாக வருமானமீட்டல் கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா 100000திலிருந்து 250000 வரை கடன் விடுவிக்கப்படுகின்றது. பயிர்ச்செய்கைத் தேவைகளின் பொருட்டான நிதியங்களுக்கு ரூபா 75,000 வரையான கடன்களைப் பெற்றுக்கொள்ள வசதிகள் உள்ளன.2010ம் ஆண்டு நடுப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட ''கிருள''-''மகுட'' அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் (கிருளசங்வர்த்தனய) இதுவரை செயற்படுத்தப்பட்ட சுயதொழிலுக்கான ரூபா 100000 ஆக இருந்த எல்லையானது ரூபா 250000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

* வீடொன்றினை நிர்மாணித்தல், பகுதி அளவு முடிக்கப்பட்ட வீடொன்றின் வேலைகளைப் பூர்த்தி செய்தல் வீட்டினை திருத்துதல் போன்ற தேவைகளின் பொருட்டு ரூபா 50,000 வரையிலான கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டு வீட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அங்கத்தவர்களுக்கு ஒரு உதவியினை வழங்க வங்கிச்சங்கம் தயாராகவேயுள்ளது.

* அவசர நிதித் தேவையொன்றின் போது தனியார் வட்டிக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்து மீண்டு மிக இலகுவில் நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நுகர்வு, இடர், சுவசக்தி கடன் திட்டங்களின் ஊடாக அங்கத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 2010ம் ஆண்டிறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மின்சார உதவி(விதுளி அத்வெல) கடன் திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வங்கிச்சங்க அங்கத்தவர்களுக்கு உயர்ந்த

பட்சமானது ரூபா 30,000இற்கு உட்பட்டதாக கடன்வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

* தற்போது வருமானமீட்டல் கடன் கருத்திட்டங்களின் பொருட்டு வழங்கப்படுகின்ற கடனுக்கு சமுர்த்திப்பயனாளிகளாயின் 8%த்திற்கும் குறைந்த வருமானம் பெறுவோராயின் 10% வருடாந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படுவதுடன் ஏனைய கடன்களுக்கு 12% ஆகும்.(சுவசக்தி,மின்சார உதவி - விதுளி அத்வெல கடன் தவிர்ந்தவை)

* 2011 ஆண்டுக்குள் 522226 அங்கத்தவர்களுக்கு ரூபா.மில்.13.189 இற்கான தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

* 2011ம் ஆண்டில் கடன் அறவீட்டு வீதமானது 111.90 ஆகும். (முன்னைய தவணை அறவீடுகளும் உள்ளடங்களாக) அறவிட முடியாக்கடன் வீதமானது 5.51 ஆகும்.

2010.12.31ம் திகதியில் கடன் வழங்கல்கள்

ஆண்டு	எண்ணிக்கை (திரட்டியது)	தொகை ரூ.மி	ஆண்டிற்குள் கடன் வழங்கல்கள்
1999	209,818	966.31	966.31
2000	481,475	2,788.50	1,822.19
2001	813,334	5,552.75	2,764.24
2002	1,016,392	7,448.08	1,895.33
2003	1,340,126	10,503.30	3,055.22
2004	1,697,866	13,977.81	3,474.51
2005	2,149,135	20,725.03	6,747.22
2006	2,527,841	26,035.09	5,310.06
2007	2,952,840	32,843.04	6,807.93
2008	3,450,469	42,757.37	9,914.36
2009	3,721,662	48,352.73	5,595.36
2010	4,160,596	58,531.61	10,178.88
2011	4,682,822	71,721.04	13,189.43



கடன் வகைப்படுத்தல் 2010.12.31ம் திகதியில் திரட்டியது

கடன்வகை	ரூபா.மில்	பங்களிப்பு
சுயதொழில்	37,838	53
பயிர்ச்செய்கை	8,987	12
ஏனையவை (மிஹிஜய,மீன்பிடி,சுவசக்தி,இடர், கிருள கடன்,யொவுன்திரிய)	2,257	3
நுகர்வு	2,855	4
மக்கள் எழுச்சி (ஜனபுபுது)	13,456	19
வீடமைப்பு	6,328	9
மொத்தம்	**71,721**	**100**



1.4 வங்கிச்சங்கங்களின் மேலதிக நிதியங்களின் முதலீடு (நிலையான வைப்புகளும்,திறைசேரி உண்டியல்களும்)

வங்கிச்சங்கங்களின் சொத்துக்களிலிருந்து கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடனை விடுவித்ததன் பின்னர் மேலதிக (மிகைநிதி) நிதியங்களை மகாசங்கங்கள் ஊடாக திறைசேரி சுற்றறிக்கைகளின் பிரகாரம் அரசாங்க வங்கிகளில் மாத்திரம் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகாசங்கங்களை நிதியியல் ரீதியாக பலப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

சமுர்த்தி வங்கிச்சங்கங்கள்,மேலதிக நிதியினை முதலீடு செய்தல்

ஆண்டு	தொகை ரூ.மி	**வளர்ச்சி ரூ.மி**	**வளர்ச்சி%**
1999	583		
2000	1620	1038	178
2001	3175	1555	96
2002	5097	1922	61
2003	5914	817	16
2004	7828	1914	32
2005	7417	-410	-5
2006	9936	2519	34
2007	13791	3855	39
2008	18833	5042	37
2009	24039	5206	28
2010	27248	3209	13
2011	39,048	11,800	43



சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் மேலதிக நிதி முதலீடு மேலே புள்ளிவிபர அட்டவணை மூலம் சுட்டிக்காட்டப்படுவதுடன் வங்கிச்சங்கங்களின் ஆரம்ப காலப்பகுதியில் முதலீட்டு வளர்ச்சி கூடிய பெறுமதியினைச் சுட்டிக்காட்டினாலும் பிற்காலத்தில் அது குறைந்துள்ளது.கடன் வேலைத்திட்டத்தின் விரிவாக்கம் காரணமாக முதலீடு செய்யக்கூடிய நிதியத்தின் அளவு படிப்படியாக வரையறுக்கப்பட்டுள்ளது. அது ஒரு சிறந்த அறிகுறியாகும்.

2. வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவில் செயற்பாடுகள்

வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவு நாடு பூராவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிச்சங்கங்களினதும் மகாசங்கங்களினதும் நிதியியல் நெறிப்படுத்தல் அலகாக செயற்படுகின்ற போது அதனோடு இணைந்ததாக பிரிவிற்குள் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அதற்கமைய வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் சகல செலவுகளையும் அப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கான செலவுகள் விசாரணை உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் வங்கிச்சங்கங்களின் வருடாந்த அறிக்கையினை தயாரிக்கப்படும் செலவுகள் மற்றும் பயிற்சிச் செலவுகள் இதன் கீழ் உட்படுகின்றது. அத்தோடு மீள்நிதியீட்டல் கடன்களை வங்கிச்சங்கங்களுக்கு வழங்குதல், மிஹிஜய வட்டியினை ஈடுசெய்தல் பணியாளர் கடன்வசதிகளுக்காக நிதியங்களை வழங்குவதும் வங்கிசங்கங்களின் வருமானத்தினாலாகும்.வங்கிச்சங்கம் மற்றும் உரிய மேம்பாடு மற்றும் பிரசாரபணிகளின் பொருட்டும் இப்பிரிவினால் நிதி செலவிடப்படுகின்றது.

வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் மொத்த வருமானமும் செலவுகளும் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

வருமானம்	ரூபா.மில்
முதலீட்டிலிருந்து	1315
கடன் வழங்குவதிலிருந்து	132
அறவிடமுடியாக்கடன் மீள அறவிடல்	0
மேலதிக வருமானங்கள்	0.3
	1447.3

செலவுகள்	ரூபா.மி
கட்டாய சேமிப்பின் பொருட்டு செலுத்திய வட்டி	835.8
பிரிவின்நிர்வாகச்செலவுகள்	171
செலவினை மிஞ்சிய வருமானம்	441
	1447.3

வருமானம் **செலவு**





2.1 சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் கட்டாயச்சேமிப்புக் கணக்குச் செயற்பாடுகள்

2.1.1 அறிமுகம்

குறைந்த வருமானம் பெறும் மக்களை மேலும் மேலும் சேமிக்கப்பழக்குதல் என்ற வகையிலும் அவர்களது எதிர்கால நன்மையின் பொருட்டு கட்டாயச்சேமிப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிவாரணத்தொகையின் ஒரு பகுதியை மாதாந்தம் சேமிப்பது கட்டாயச் சேமிப்பு என அழைக்கப்படுகின்றது.

இதுவரை சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிவாரண முத்திரைகளிடத்தேயே ரூபா 1500,ரூபா 1015,ரூபா 900,ரூபா 600 முத்திரைகளில் இருந்து முறையே ரூபா 300,ரூபா 200,ரூபா 150 மற்றும் ரூபா 100 என்ற தொகை கட்டாயச்சேமிப்பாக மாதாந்தம் சேமிக்கப்படுகின்றது. இத்தொகையினை சமுர்த்தி அதிகாரசபைக்கு வரவழைத்து கூடிய வட்டிவீதத்தின் கீழ் வருடாந்தம் அரசாங்க வங்கிகளில் முதலீடு செய்து பயனாளிகள் திருப்தி அடையக்கூடிய சிறந்த நன்மையினை வழங்குவது இவ்வேலைத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். இந்த வேலைத்திட்டம் பிரதானமாக இரு கட்டங்களைக் கொண்டதாக செயற்படுகின்றது.

01. 1999 நவம்பர் மாதத்திலிருந்து இதுவரை அனுப்பப்பட்ட கட்டாயச்சேமிப்பு நிதியங்கள் இங்கு பிரதேச செயலாளர்கள் மூலம் அந்தந்த பயனாளிகளுக்கு உரித்துடைய வங்கிச்சங்கங்களின் பெயரில் குறித்த சமுர்த்தி பயனாளிகளின் கட்டாயச் சேமிப்பு நிதியத்தினை மாதாந்தம் முதலீட்டின் பொருட்டு சமுர்த்தி அதிகாரச் சபைக்கு அனுப்பப்படுகின்றது.

02. 1995ம் ஆண்டிலிருந்த 1999 ஒக்டோபர் மாதம் வரையில் மக்கள் வங்கியிலும் இலங்கை வங்கியிலும் முதலீட்டு நிதியங்களிலிருந்து சமுர்த்தி வங்கியினூடாக நன்றாக கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற பயனாளிகள் 25% வீதத்திற்கு உட்பட்டோரின் நிதியங்களை இலங்கை சமுர்த்தி அதிகாரச்சபைக்கு வரவழைத்து முதலீடு செய்தல்.

அதிகாரசபையில் முதலிடப்பட்ட கட்டாயச்சேமிப்பு நிதியங்கள் கீழ் குறிப்பிடப்படுகின்றவாறாகும்

2010.12.31ம் திகதியில் முதலீட்டின் பொருட்டு கிடைத்த கட்டாயச்சேமிப்புக்கள்

ஆண்டு	நிதியம் (ரூபா.மி)	வளர்ச்சி
2000	1045	-
2001	2424	132%
2002	3852	59%
2003	5510	43%
2004	6652	21%
2005	7349	10%
2006	8282	12%
2007	9099	11%
2008	9960	9%
2009	10,738	7%
2010	12,886	17%-
2011	13706	6%



2008ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் கட்டாயச்சேமிப்புக் கணக்கு நிதிய வளர்ச்சியானது ஓரளவுக்கு குறைந்திருப்பதற்கான காரணமானது சமுர்த்தி நிவாரத்தினைப் பெறுவோரின் மாற்றங்கள் என்பதே என இங்கு ஞாபகப்படுத்தப்படல் வேண்டும்.

2.1.2 கட்டாயச் சேமிப்பு வட்டியினை செலுத்துதல்

முதலீட்டின் பொருட்டு அதிகாரசபைக்கு அனுப்பப்படுகின்ற கட்டாயச்சேமிப்புக்கள் நிதியம் முதலீட்டு பிரிவினூடாக முதலீடு செய்வதன் மூலம் ஈட்டிய வட்டித்தொகையிலிருந்து ஒவ்வொரு வருட இறுதியிலும் வட்டிக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது.அத்துடன் 2006ம் ஆண்டிலிருந்து சமுர்த்தி மகாசங்க செயற்பாடுகளை பலப்படுத்தும் நோக்கில் இவ்வட்டிக்கொடுப்பனவுகள் சமுர்த்தி மகாசங்கங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது.அவ்வாறே சமுர்த்தி மகாசங்கம்,வங்கிச்சங்கங்களின் பொருட்டு தொழில்நுட்ப மற்றும் பயனுள்ள முறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் 2008ம் ஆண்டிலிருந்து கட்டாயச்சேமிப்பு வட்டிக்கொடுப்பனவுகள் நேரடியாகவே மகாசங்க நடைமுறை கணக்கிற்கு பணம் அனுப்பப்படுகின்றது. இச்செயற்பாடுகளிலிருந்து இதன் மூலம் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவுக்கு வருடத்திற்கு 3 மில்லியன் ரூபா மட்டளவிலான வருமானமொன்றை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.(வழியில் உள்ள பணத்தினை பிடிபணமாக வைத்துக்கொள்ளக்கூடிய காலமானது ஒரு நாள் வரை குறைத்ததன் ஊடாக) கட்டாயச்சேமிப்பின் பொருட்டு பயனாளிகளுக்கு கொடுக்கப்படுகின்ற வட்டி வீதமானது போட்டியுள்ள வணிக வங்கிகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது கூடிய பெறுமதியினை பெறுவதுடன் அது கணக்குகளையுடைய பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விசேட வரப்பிரசாதம் ஒன்றாகும்.

ஆண்டு	செலுத்திய வட்டி வீதம் %
2000	14.0
2001	17.75
2002	13.0
2003	8.1
2004	7.5
2005	7.75
2006	10.06
2007	14.0
2008	14.0
2009	14.0
2010	9.5
2011	7.1

2011ம் ஆண்டில் நிதிச்சந்தையில் வட்டிவீதம் குறைந்த பெறுமதியினையுடையதாக இருந்தாலும் கட்டாயச்சேமிப்புக்கு 7% வட்டிவீதம் வங்கிச்சங்கங்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்தது பாராட்டப்படல் வேண்டும். (இவ்வாண்டில் வணிக வங்கிகளால் தமது சேமிப்புகளுக்கு வழங்கியது 5.5% வட்டி வீதமாகும்.)

கட்டாயச்சேமிப்புக்கள்,செலுத்திய வட்டி



2.2 கடன் திட்டம்

வங்கிநிதி நடவடிக்கைப் பிரிவினால் வங்கிச்சங்கங்களில் செயற்படுத்துகின்ற கடன் திட்டங்களுக்குத் தேவையான நிதியை வழங்குவதுடன் சமுர்த்தி அதிகாரசபையின் நிரந்தர பணியாளர்களுக்கும் கடன் திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டுள்ளது.அதன்படி வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கடன் வேலைத்திட்டங்களை கீழுள்ள பிரகாரம் வகைப்படுத்திக்காட்ட முடியும்.

2.2.1 பயனாளிகளுக்கான கடன் திட்டம்
2.2.2 பணியாளர்களுக்கான கடன் திட்டம்

2.2.1 பயனாளிகளின் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற கடன் திட்டம்

2.2.1.1 மீள்நிதியீட்டல் கடன் திட்டம்

வங்கிச்சங்கங்கள் கடன்களை வழங்குவது தாம் ஒன்றுதிரட்டிய வைப்புக்களில் இருந்தாகும்.அதன் பொருட்டு வங்கிச்சங்கங்களுக்கு அனுமதி இருப்பது மொத்த வைப்புத்தொகையிலிருந்து 80% வரையிலாகும்.அதிலிருந்து எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற கடனின் பொருட்டு ஏற்படும் நிதிக் கஷ்டங்களை தீர்க்கும் பொருட்டு வங்கிநிதி நடவடிக்கைப் பிரிவால் மீள்நிதியீட்டல் வசதிகளை வங்கி வட்டி விகிதாசாரத்தினை விட குறைந்த வட்டி வீதத்தின் கீழ் வங்கிச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றது. சுயதொழில், விவசாயம், மீன்பிடி,கால்நடை வளர்ப்பு வர்த்தகம் மற்றும் சேவைகள் ரீதியான வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பொருட்டு கடன் வழங்கப்படுகின்றது. மீள்நிதியீட்டல் கடன் திட்டங்கள் சமுர்த்தி மகாசங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவு வருடாந்த வட்டியானது 4% வீதத்திற்கு மகாசங்கங்களுக்கு வழங்குவதுடன் மகாசங்கங்களால் வங்கிச்சங்கங்களுக்கு 7% வட்டிக்கு மீள்நிதியீட்டல் கடன் நிதியம் வழங்கப்படுகின்றது.

மீள்நிதியீட்டல் கடன் திட்டத்தின் முன்னேற்றம் - 2011.12.31ம் திகதியில்

ஆண்டு	கடன் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	விடுவித்த தொகை ரூ.மி	அறவீட்டு வீதம்
1999	11	523	3	100%
2000	175	5578	52	92%
2001	324	12588	117	101%
2002	472	18400	177	100%
2003	637	23223	233	100%
2004	786	27605	283	101%
2005	849	30351	315.8	102%
2006	971	36155	389	100%
2007	1040	40008	450	100%
2008	1072	42631	499.71	100%
2009	1097	44180	523.58	100%
2010	1110	45284	571.11	91%
2011	1112	45399	581.42	95%

மீள்நிதியீட்டல் கடன் திட்டத்தின் முன்னேற்றம் - 2011.12.31



2.2.1.2 சபத,மக்கள் எழுச்சி,வீடு கடன் வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டங்கள் 2011ம் ஆண்டிற்குள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இக்கடன் திட்டத்திற்கு மாற்றீடாக சுயதொழில்,பியச மற்றும் மிஹிஜய வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது.

2.2.1.3 மின்சார உதவிக்கான கடன் வேலைத்திட்டம் (விதுளி அத்வெல கடன் வேலைத்திட்டம்)

சகலருக்கும் மின்சாரத்தினை வழங்கும் நோக்கில் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தொகுதிகளுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் மின்சார உதவிக்கான கடன்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் மின்சக்தி எரிபொருள் அமைச்சுக்களின் வழிகாட்டுதலுடன் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையும் இதற்கு நேரடி பங்களிப்பினை வழங்குகின்றது.

நாடு முழுவதும் வங்கிச்சங்க வலையமைப்பின் ஊடாக ஒரேயடியாக இந்த நிவாரண ரீதியான ''மின்னிணைப்பு உதவி''(விதுளி அத்வெல) கடன் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு குறித்த நிதியத்தினை வங்கிநிதிப்பிரிவினால் வழங்கப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மையானது குறைந்த வருமானம் பெறுவோரால் நடாத்திச்செல்லப்படுகின்ற அல்லது நடாத்துவதற்கு உத்தேசித்துள்ள சிறு கைத்தொழில் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்றிறன் மிக்கதாக்கி பொருளாதார பலத்தினை உயர்த்துவதாகும்.

இதன் காரணமாக சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு கடன் கோரிக்கைகள் அதிகரித்து புதிய அங்கத்தவர்கள் சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் பால் கூட்டிணைத்து வைப்புக்கள் அதிகரிக்கின்றது.

வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைக்கட்டணங்கள் காரணமாக வங்கிச்சங்கங்களின் வருமானத்தினையும் அதிகரிக்க முடிந்தமை மேற்படி காரணத்தினால் சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் நிதிப்பலம்,செயற்றிறன்,நம்பிக்கை என்பன மேலும் அதிகரிக்கின்றது.

இந்த மின்னிணைப்பு உதவி ''விதுளி அத்வெல''கடன்திட்டத்தின் பொருட்டு பயனாளிகளுக்கு அதிகபட்சமாக வழங்கப்படுகின்ற தொகையானது ரூபா 30,000/- என்பதுடன் 60 மாத காலத்திற்குள் 12% வருடாந்த வட்டியுடன் கடன்தொகையினை தவணைகளாக அறவிட்டுக்கொள்கின்றது.
இங்கு மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற கடன் விண்ணப்பப்படிவத்தினை குறித்த வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் மூலம் பெற்றுக்கொண்டு நெறிப்படுத்தல் ஆலோசனை இலக்கம் 05இன் பிரகாரம் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பப் படிவங்களை முறையே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,சமுர்த்தி முகாமையாளர்,பிரதேச செயலாளர் சிபார்சு செய்து மின்சார சபைக்கு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்ததன் பின்னர் மின்சார வசதிகள் வழங்கப்படும்.

2010ம் ஆண்டிற்குள் இந்த மின்னிணைப்பு உதவிக்கடன் வேலைத்திட்டம் தொடர்பில் இருதரப்பு ஒப்பந்தத்தினை இலங்கை சமுர்த்தி அதிகாரசபையும்,இலங்கை மின்சாரசபையும் கைச்சாத்திட்டுள்ளதுடன் அவ்வாண்டிற்குள் கடன்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

2011ம் ஆண்டில் இவ்வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா மில்லியன் 350இற்கான தொகையினை வங்கிநிதி நடவடிக்கைப் பிரிவின் மூலம் வழங்கியுள்ளதுடன் 2011 டிசம்பர் 31ம் திகதியளவில் ரூபா மில்லியன் 335இற்கான தொகையினை அறவிட வேண்டியுள்ளது.

மேலும் மின்சாரசபை 2011.12.31ம் திகதியில் 20694 பேருக்கு ரூபா மில்லியன் 353இற்கான பெறுமதியில் மின்னிணைப்பினை வழங்கியுள்ளது.

2.2.2 இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணியாளர்களுக்கான கடன் திட்டங்கள்

2.2.2.1 நுகர்வுக் கடன் திட்டம்

2004 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பமான இவ்வேலைத்திட்டம் 2008 வரை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வருடாந்தம் 9% வட்டிவீதத்திற்கு ரூபா 50,000 இற்கான கடன்தொகை வழங்கப்பட்டது. தற்போது இக்கடன் திட்டம் சகல பணியாளர்களுக்கும் உரித்துடையது,கடன்தொகையினை மீளச்செலுத்தும் காலமானது 60 மாதங்களாகும 2010.10.18ம் திகதியிலிருந்து 50,000 ரூபாவில் இருந்த தொகையினை 100,000 ரூபா வரை அதிகரித்துள்ளது. 2011.12.31ம் திகதியளவில் 100,000 ரூபா கடன்தொகை 3731 வழங்கப்பட்டுள்ளது.

2011.12.31ம் திகதியில் ஊழியர் நுகர்வுக்கடன்(திரட்டியது)

வழங்கிய கடன்களின் எண்ணிக்கை	தொகை ரூபா.மில்	அறவிடும் வீதாசாரம் %
22886	1372.62	99.5

2.2.2.2. பணியாளர்களுக்கான வீடமைப்புக் கடன்திட்டம்

2004 ஜுன் மாதத்தில் ஆரம்பமான இந்த வேலைத்திட்டம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிரந்தர பணியாளர்களுக்கு வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் முதலீடுகளிலிருந்து ஈட்டிக்கொண்ட வருமானங்கள் மூலம் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.கடன் வேலைத்திட்டத்தின் கீழ் காணியினைக் கொள்வனவு செய்தல்,புதிய வீடொன்றினை நிர்மாணித்தல்,வீடொன்றினைக் கொள்வனவு செய்தல் மற்றும் வீடொன்றின் பகுதியொன்றினை சேர்த்தல் அல்லது விரிவாக்குதல் ஆகிய விடயங்களின் பொருட்டு கடன்கள் வழங்கப்படுகின்றது. கடன் தொகையினை மீளச்செலுத்தும் காலமானது 15 ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் 2011.12.31ம் திகதியில் கீழ்குறிப்பிடப்படுகின்றவாறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.2010.01.01ம் திகதியிலிருந்து குறித்த வட்டி வீதமானது 10% வரை குறைக்கப்பட்டுள்ளது.

2010.12.31ம் திகதியில் வீடமைப்புக்கடன்(திரட்டியது)

வழங்கிய கடன் எண்ணிக்கை	தொகை ரூ.மி
1838	762

2.2.2.3 மோட்டார் சைக்கிள் கடன் திட்டம்

2004 நவம்பர் மாதத்தில் ஆரம்பமான இக்கடன் திட்டத்தின் பொருட்டு வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவின் முதலீடுகளில் இருந்து ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானங்களிலிருந்து நிதி ஒதுக்கப்படுகின்றது. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிரந்தர பணியாளர்களுக்கு மாத்திரம் இக்கடன் திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது.வருடாந்த வட்டியானது 10% வீதத்தின் கீழ் உயர்ந்தபட்சமானது ரூபா 100000/- இற்கான கடன்தொகையினை 60 மாத காலத்திற்குள் மீளச்செலுத்துதல் என்ற அடிப்படையில் மோட்டார் சைக்கிள் கடன் வழங்கப்படுகின்றது.

2011.12.31ம் திகதியன்று மோட்டார் சைக்கிள் கடன்(திரட்டியது)

வழங்கிய கடன் எண்ணிக்கை	தொகை ரூ.மி
3557	299.7

2.3 ஊழியர் உடல் உபாதை காப்புறுதி

சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் மேலதிகமாக உள்ள கையிருப்பிலுள்ள பணத்தினை வங்கிச்சங்கங்களில் இருந்து வணிகவங்கிகளுக்கு வைப்புச்செய்ய எடுத்துச்செல்லும் போதும் வணிகவங்கிகளிலிருந்து சமுர்த்தி வங்கிச்சங்கங்களுக்கு பணத்தினை எடுத்து வரும் போதும் ஏற்படுகின்ற காசு கொள்ளைச்சம்பவங்களில் வங்கிப்பணியாளர்களுக்கு ஏற்படுகின்ற உடல் உபாதைகளின் பொருட்டுஇவ்வேலைத்திட்டத்தின் கீழ் நட்டஈடு வழங்கப்படுகின்றது. 2005 ஒக்டோபர் மாதத்திலிருந்து அமுல்படுத்தப்பட்ட உடல் உபாதை காப்புறுதி நிதியத்திற்கு ஒவ்வொரு வங்கிச்சங்கங்களும் வருடத்திற்கு ரூபா 1000/-ஐ செலுத்தி காப்புறுதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இதன் கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய நட்டஈட்டுத்தொகை

சமுர்த்தி முகாமையாளர்கள்	ரூபா 200,000/-
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	ரூபா 150,000/-

2011ம் ஆண்டில் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் காப்புறுதித் தவணையாக வங்கிச்சங்கங்கள் மூலம் 1434700/- ரூபாவுக்கான தொகை கிடைக்கப்பெற்றுள்ளது.2011ம் ஆண்டின் பொருட்டு நட்டஈடுகள் செலுத்தப்படவில்லை.

2.4 சமுர்த்தி வங்கிச்சங்க கையிருப்புக் காசுக் காப்புறுதி

2.4.1 சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் கையிருப்புக் காசினையும் மேற்படி வங்கிச்சங்கங்களிலிருந்து வணிக வங்கிகளுக்கு எடுத்துச் செல்லும் போது ஏற்படும் காசு களவாடல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களின் போது பணத்திற்கு ஏற்படுகின்ற இழப்பீடும் இதன் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது.

2.4.2 வங்கிச்சங்கங்கள் மகாசங்கங்கள் அன்றாட திரவத்தன்மைத் தேவையினைக் கவனத்திற் கொண்டு அதன் பிரகாரம் காப்பீட்டின் பொருட்டு வங்கி நிதிப்பிரிவினைக் கோர முடியும்.அதற்கு வருடாந்த தவணைப்பணத்தினை வங்கி நிதிப்பிரிவிற்கு அனுப்பி காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளத்தேவையான நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 2011.12.31ம் திகதியில் அதன் முன்னேற்றமானது 1043 வங்கிச்சங்கங்களும் 203 மகாசங்கங்களும் இக்காப்பீட்டினை பெற்றுக்கொண்டுள்ளது.

2.4.3 வங்கிச்சங்கங்கள்(உடல் உபாதை காப்புறுதிப்பணமும் உட்பட்டதாக) மற்றும் மகாசங்கங்களால் அனுப்பப்பட்டுள்ள தவணைப்பணத்தினை வங்கிநிதிப் பிரிவினரால் உருவாக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு வரவு வைத்து பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்தி நிதியத்தினை விஸ்தரித்துக்கொண்டுள்ளது. அதற்கமைய முதலிடப்பட்டுள்ள தொகையானது 2011ம் ஆண்டில் ரூபா மில்லியன் 113.52 ஆகும்.

2.4.4 2011ம் ஆண்டின் பொருட்டு வங்கிச்சங்கங்களால் கையிருப்பிலுள்ள காப்பீட்டுத் தவணையாக ரூபா 14,166,584.76 தொகை அனுப்பப்பட்டுள்ளது.2011ம் ஆண்டின் பொருட்டு நட்டஈடு செலுத்தப்படவில்லை.

2.5 நிலைபேறான விவசாய நீர் முகாமைத்துவ கருத்திட்டம்

அவுஸ்ரேலியா அரச கடன் உதவி திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சின் மூலம் சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் மற்றும் கமக்காரர் வங்கிகள் ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற ஒரு கருத்திட்டமாகும்.இக்கருத்திட்டத்தின் மூலம் முழு நேரமும் நிலப்பயிர் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு ½ ஏக்கர் நிலத்தின் பொருட்டு சூரியசக்தியினால் இயங்கும் துளிர்நீர்பாசனத்தொகுதிகள் வழங்கப்படுகின்றது.

புதிய தொழில்நுட்பத்தினைப்பயன்படுத்தி சிறந்த நீர் முகாமைவத்துடன் உற்பத்திச்செலவுகளை குறைத்து சிறிய காணிகளில் உற்பத்தி விளைச்சலை அதிகரித்து விவசாயிகளின் வருமான நிலையினை உயர்த்துவது இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

சூரியசக்தி துளிர்நீர் விநியோகத் தொழில்நுட்பத்தின் கீழ் மரக்கறி,பழவகை மிருக உணவுகள் எண்ணெய்க்கான பயிர்களை பயிரிடுவதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இந்நீர்ப்பாசனத் தொகுதியொன்று ரூபா 345,452.25 பெறுமதியினைக்கொண்டதுடன் சமுர்த்திப்பயனாளிகளான விவசாயிகளுக்கு இதன்பால் கூடிய கவனத்தினை செலுத்தி புதிய தொழில்நுட்பத்தின் கீழ் பயிர் செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வர்த்தக ரீதியான விவசாயத்துறையில் பிரவேசிக்கச் செய்வதனால் அவர்களது வருமான நிலையினை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் நிதிப்பலத்தினை மேம்படுத்துவதும் வங்கி நிதிப்பிரிவின் எதிர்பார்ப்பாகும்.இதுவரை சூரியசக்தி துளிர்நீர் விநியோகத்தொகுதிகள் 2715 மட்டளவில் சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் ஊடாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.6 வங்கிச்சங்கங்கள்,மகாசங்கங்களின் நிதிச்செயற்பாட்டு நடவடிக்கைகள்

சமுர்த்தி வங்கிச்சங்கங்களினதும் மகாசங்கங்களினதும் செயற்பாடுகள் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் அதாவது ஜனவரி 1ம் திகதியிலிருந்து டிசம்பர் 31ம் திகதி வரையிலான காலத்திற்குள் ஏற்பட்ட விவகாரங்கள் தொடர்பில் வருடாந்த கணக்காய்வறிக்கையினை தயாரிக்கின்றது. இக்கணக்காய்வு அறிக்கையினை தயாரிக்கும் அதிகாரம் பிரதேச செயலகத்தின் கணக்காளாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2011ம் ஆண்டுக்கு முன்னர் கணக்காய்வுகளை மேற்கொள்ளாத வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களுக்கு கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளியகக் கணக்காய்வாளராக அரசாங்க/அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களின் கணக்காளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

2.7 வங்கி கண்காணிப்பு அலகு

வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவில் வெளியிடப்பட்ட நெறிப்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைய சமுர்த்தி வங்கிச்சங்க மற்றும் மகாசங்க நெறிப்படுத்தல் செயற்பாடுகள் முறையாக செயற்படுகின்றதா? என்பதனைக் கண்காணிப்பதும் வழிகாட்டல்களை மேற்கொள்வதற்கும் முழு வங்கிச்சங்க வலையமைப்பு,செயற்றிறன் மற்றும் பயன்பாட்டினை விருத்தி செய்யும் நோக்கில் ‘‘வங்கி கண்காணிப்பு அலகு’’ வங்கி நடவடிக்கைப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் அவ்வலகிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

- வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களின் கணக்காய்வு விசாரணைகள் மூலமும் பிறிதொரு விதத்திலும் கிடைக்கின்ற முறைப்பாடுகளின் பிரகாரம் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதற்கமைய வெளிக்கொணரப்படுகின்ற குறைப்பாடுகளை சீர்செய்வதும் உள்ளகக் கணக்காய்வு, நீதி விசாரணை மற்றும் உரிய பிரிவுகளுக்குத் தேவையான தகவல்களை சமர்ப்பித்து தேவைப்படும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்கின்றது.

- வங்கிச்சங்கங்களினதும் மகாசங்கங்களினதும் கணக்கீட்டு நடவடிக்கைகளை தாபன நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதும்

- மாதாந்த தனித்தாள் பரீட்சை மீதியினை சமப்படுத்தும் நடவடிக்கைகள், வங்கி நடமாடும் சேவைகள்,சமுர்த்தி வங்கிச்சங்கங்களை ஒன்றிணைத்தல்,இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வங்கிச்சங்கங்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் காரணமாக வங்கியினை நெறிப்படுத்தும் நடவடிக்கைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதும் தவறுகளை திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும்

- வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களில் ஏற்படுகின்ற காலத்தேவைக்கேற்ப அவசியமாகின்ற நெறிப்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வெளியிடுவதன் மூலம் வங்கிச்சங்க மற்றும் மகாசங்கங்களின் நன்மைகளை உயர்த்துவதற்கு பங்களிப்பினைச்செய்வது ''வங்கிக்கண்காணிப்பு அலகின்'' மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- தொடர்ச்சியான கண்காணிப்பு உட்பட திடீரென ஏற்படும் தேவைகளுக்கு அவசியமான உதவியினை வழங்குவதும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை இலகுவாக்கும் பொருட்டு வங்கிக்கண்காணிப்பு அலகினை மாவட்ட மட்டத்தில் ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது.

2.8 பயிற்சி நடவடிக்கைகள்

1043 சமுர்த்தி வங்கிச்சங்க வலையமைப்பிலும் 317 மட்டளவிலான மகாசங்கங்களிலும் கடமையாற்றுகின்ற பணியாளர்களுக்கு வங்கி நடவடிக்கை மற்றும் ஏனைய விடயங்களுக்குரிய பயிற்சிகளை வங்கிநிதி நடவடிக்கைப் பிரிவின் பயிற்சி அலகுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு மிகத்திறமையான பயனுள்ள சேவையினை வழங்கும் பொருட்டு வங்கிப்பணியாளர்களுக்கு போதனைகள், திறமைகள் மற்றும் சிறந்த ஆற்றல்களை பூர்த்தி செய்துகொடுப்பது இப்பிரிவின் செயற்பாடாகும்.

இதன் பிரகாரம் வங்கியின் நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கத்தினை வழங்குகின்ற வங்கி நடவடிக்கைகள் மற்றும் கணக்கீட்டுச்செயற்பாடுகள் தொடர்பில் அடிப்படை பயிற்சி நெறிகளை ஒவ்வொரு வங்கி உத்தியோகத்தருக்கும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மகாசங்க நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்றப்படாத மகாசங்கப் பணியாளர்களைப் பயிற்றுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் களத்தில் கடமையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் வங்கிநடவடிக்கைகள் தொடர்பில் விளக்கத்தினை வழங்கும் நோக்கில் விசேட வேலைத்திட்டங்கள் பல நடாத்தப்பட்டது.

இதன் பிரகாரம் 2011ம் ஆண்டிற்குள் நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களில் 500 பேருக்குட்பட்டளவிலான வங்கி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன் பொருட்டு ரூ.மில்லியன் 2 மட்டளவில் செலவிடப்பட்டுள்ளது.

2.9 முகாமைத்துவ தகவல்கள் பிரிவு

1043 சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் தகவல்களை முகாமை செய்வது வங்கிநிதி நடவடிக்கைப் பிரிவின் முகாமைத்துவ தகவல் பிரிவின் மூலமேயாகும். அதன் பிரகாரம் ஒவ்வொரு வங்கிச்சங்கமும் மகாசங்கமும் மாதாந்தம் தனது வங்கிச்சங்க முன்னேற்றத்தினை வழங்கப்பட்டுள்ள படிவத்தின் மூலம் தகவல் மற்றும் முகாமைத்துவ அலகுக்கு அறிக்கையிட வேண்டியதுடன் அத்தகவல்களை தயாரித்து வங்கிச்சங்கங்களில் உள்ள நிலைமைகளை பகுப்பாய்வு செய்து தகவல்களை சமர்ப்பிப்பதும் வங்கிச்சங்கங்களின் முன்னேற்றத்தினை

மதிப்பீடு செய்யும் பொருட்டு தேவையான வீதாசாரப் பகுப்பாய்வுகளைக் கட்டியெழுப்பி,அதற்கமைய வங்கிச்சங்க மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கணணித் தொழில் நுட்பத்தினை பயன்படுத்திக்கொண்டு வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களின் தகவல்களை வங்கிநிதிப்பிரிவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுர்த்தி வங்கிச் சங்கங்களை கணணி மயப்படுத்தும் நடவடிக்கைகளை திருப்திகரமாக அமைந்ததுடன் இப்பிரிவின் மூலம் மேலும் பயனுள்ள மற்றும் செயற்றிறன் மிக்க விதத்தில் வங்கிச்சங்கங்களின் நடைமுறை நிலையினை பகுப்பாய்வு செய்வதும் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

2.10 சந்தைப்படுத்தல் மேம்பாட்டுப்பிரிவு

வங்கியியலில் முக்கிய ஒரு பிரிவான சந்தைப்படுத்தல் கோட்பாடுகளை அண்மைக்காலத்திலிருந்து சமுர்த்தி வங்கித்துறையிலும் அறிமுகப்படுத்துவதற்கு வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் வைப்பு மேம்பாட்டுப் பணிகளின் பொருட்டு வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் சந்தைப்படுத்தல் அலகின் மூலம் விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2011ம் ஆண்டிற்குள் நமது கலாச்சார பழக்கங்கள் மற்றும் கிராமிய விளையாட்டுக்களை எதிர்கால சந்ததியினரின் பொருட்டு பாதுகாத்துக் கொடுத்தல் மற்றும் சமுர்த்தி வங்கிச்சங்கங்களை மக்களிடத்தே பிரபல்யப்படுத்தும் நோக்கினைக் கொண்டதாக நாடு பூராகவும் ஒவ்வொரு வங்கிச்சங்கமும் உள்ளடங்குகின்றவாறு 1000 புத்தாண்டு வைபவங்கள் நடாத்தப்பட்டன. அதன் பொருட்டு ரூ.மி.11 இற்கான தொகையினை வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் மூலம் வங்கிச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் சேமிப்பு மேம்பாட்டின் பொருட்டு 2011ம் ஆண்டிற்குள் கீழ் குறிப்பிடப்படும் 08 வேலைத்திட்டங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

I. தமிழ் - சிங்கள புத்தாண்டு வைபவத்துடன் இணைந்ததாக புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்கள் என ஒரு வாரத்தினைப்பெயரிட்டு அதன் மூலம் ரூ.மி.606 இற்கான வைப்புக்கள் சேகரிக்கப்பட்டன.

II. 2008 மார்ச் 08 சர்வதேச மகளிர் தினத்தினைக் கொண்டாடி திரியமாதா வைப்புக்கள் மேம்பாட்டு முறைகளை 1043 வங்கிச்சங்கங்களில் செயற்படுத்தி வெற்றிகரமாக நடாத்தியது.

III. உலக சிறுவர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் வைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.

IV. வெசாக் பண்டிகையினை கொண்டாடும் ''2600வது சம்புத்த ஜயந்தியில் முறையாக அணிதிரள்வோம்'' என்ற தலைப்பின் கீழ் 2011ம் ஆண்டில் 1000 சமுர்த்தி வங்கிச்சங்கங்களையும் மகாசங்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு கொள்கை மற்றும் சமய பூஜைகளை நடாத்தி சமய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

V. தைப்பொங்கல் தினத்தை அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்

VI. நத்தார் வைபவத்தினை அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்

அதிகமாக பௌத்தர்கள் வாழும் பிரதேசங்களில் 2011ம் 1000 வங்கிச்சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கை மற்றும் சமய பூஜைகளை நடாத்தி சமய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமய தானமாக சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் பங்களிப்புடன் ''புதுசரண'' வெசாக் மலர் 3 இலட்சம் பிரதிகள் விநியோகிக்கப்பட்டதுடன் அதனோடு இணைந்ததாக நடாத்தப்பட்ட பிரதான தேசிய வெசாக் வைபவத்தின் பொருட்டு வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்டது.வங்கிச்சங்கங்களிலும் மகாசங்கங்களிலும் 1000

சமயப் பேருரைகளை நடாத்தி ஆத்மீக விருத்தியினை ஏற்படுத்த பங்களிப்புச் செய்தது. மேலும் சிறுவர் கணக்குகளை மேம்படுத்தும் நோக்கில் சிறுவர்களுக்காக வெசாக் ஒளிவிளக்கு பந்தல் போட்டி ஒன்றினை நடாத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நத்தார் தினத்தினை முன்னிட்டு நீர்கொழும்பை மையமாக வைத்து நத்தார் வைபவமொன்று மிகச்சிறப்பாக நடாத்தப்பட்டது.இதற்கு மேலதிகமாக நத்தார் விசேட வேலைத்திட்டங்கள் பல கத்தோலிக்கர்கள் அதிகமாக வாழும் ஏனைய பிரதேசங்களிலும் நடாத்துமாறு கோரப்பட்ட கோரிக்கைகளுக்கு வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவு பங்களிப்பினை வழங்கியது.

2.11. பொது விடயங்கள்

1.1 புது வருடத்திற்குள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏனைய வேலைத்திட்டங்களும் செயற்பாடுகளும்

- 2011ம் ஆண்டின் பொருட்டு வங்கிச்சங்கங்களுக்கு ஐந்து இலக்குகளுடன் முறையானவாறு வருடம் முழுவதும் ஊடறுத்துச் செல்லும் வங்கிச்சங்க செயற்பாடுகள் தொடர்பான செயற்பாட்டுத்திட்டத்தினை வடிவமைத்து வங்கிச்சங்கம் அதன் பொருட்டு முன்வைத்தது.

  அதிகமான வங்கிச்சங்க நடவடிக்கைகள் ஏற்கனவே கணணி வசதிகளை வழங்கி இணையத்தள வசதிகள் மூலம் தலைமையலுவலகத்தின் முகாமைத்துவ தகவல் பிரிவிற்கு தகவல்களை வழங்குவதும் தேவையான வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2011ம் ஆண்டிற்குள் அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் கீழ் வங்கிச்சங்கங்களினாலும் மகாசங்கங்களினாலும் உட் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் முன்னேற்றங்கள் கீழ் குறிப்பிடப்படுகின்றவாறாகும்.

வேலைத்திட்டம்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	நிதி முன்னேற்றம் ரூ.மி
புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வங்கிச்சங்க மற்றும் மகாசங்கக் கட்டிடங்கள்	19	45
புதுப்பிக்கப்பட்ட வங்கிச்சங்க மற்றும் மகாசங்க கட்டிடம்	164	86

- 2011ம் ஆண்டிற்குள் கணக்காளர்களுடன் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கும் வங்கிச்சங்கங்கள்,மகாசங்கங்களுக்கு விஜயம் செய்யும் பொருட்டு பிரயாணச்செலவாக ரூபா 1,364,364.93 தொகை வழங்கப்பட்டுள்ளது.

- விசாரணை நடவடிக்கையின் பொருட்டு கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துச் செலவுகள் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத் தொகையானது ரூபா 4,450,952/- ஆகும் எனக் கணக்கில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- வங்கிச்சங்கங்கள் கணணி மயப்படுத்தப்பட்டுள்ள இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மேலதிகமாக ஏனைய மாவட்டங்களில் உள்ள வங்கிச்சங்கங்களை கணணி மயப்படுத்தும் பொருட்டு தேவையான மென்பொருட்களை உருவாக்க ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சகல வங்கிச்சங்கங்களிலும் பயனாளிகளின் தரவுத்தொகுதியினை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

15.0 உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

தாபன நிர்வாக வரையறைக்குள் உள்ளக நிர்வாகத்தில் ஒரு பிரிவாக " உள்ளக கணக்காய்வினை" சுட்டிக்காட்டமுடியும். உள்ளகக்கணக்காய்வு என்பது நிதமும் நிறுவனத்தின் உத்தேசக்குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் மற்றும் அம்முயற்சிகளை எவ்வாறு நிறைவேற்றுகின்றது என்பதனை அவதானிப்பதும் அது தொடர்பில் நிறுவனத்தின் நிர்வாகத்தை விளக்கமளிப்பதுமாகும்.

01. உள்ளக கணக்காய்வு உள்ளக நிருவாகத்திற்கு உதவுவது போலவே அதன் உள்ளக நிர்வாக வரையறைக்குள் மேற்கொள்கின்ற சேவையும் விசாலமானதாகும்.கணக்காய்வினை பரந்த அளவில் ஆராய்ந்து பார்க்கும் போது அதனை பிரதானமாக இரண்டு பிரிவாக பிரித்து ஆராயலாம்.

- முகாமைத்துவ கணக்காய்வு மற்றும்
- நிதிக்கணக்காய்வு என்பனவாகும்.

1. முகாமைத்துவ கணக்காய்வில் தாபன நிர்வாக வரையறைகள் மற்றும் தீர்மானங்களும் அத்தீர்மானங்களினால் நிறுவனத்தின் எதிர்கால நிலைத்து நிற்கும் தன்மைக்கு காரணமான விதம் தொடர்பில் கருத்துக்களை கூறுவது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

    i. அதிகாரசபையின் சட்டம்,அதன் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப செயற்பட்டுள்ளதா?
    ii. அரசாங்க கொள்கையினை நடைமுறைப்படுத்தியுள்ளதா?
    iii. வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டுள்ளதா?

    என்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் எவ்விதத்தில் நிறுவனத்தின் செயற்றிறனுக்கு காரணமாக இருந்தது என்றும் ஆய்வுக்குட்படுத்தி அது தொடர்பில் கணக்காய்வின் அவதானங்கள் மற்றும் சிபார்சுகளை நிறுவனத்தின் நிருவாகத்துறைக்கு அறிக்கையிடுவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

2. நிதிக்கணக்காய்வின் போது நிறுவனத்தின் நிதியியல் நிருவாகத்திற்கு செயற்பாட்டிற்கு பிரயோகிக்கப்படுகின்ற விதம் தொடர்பில் வருடாந்த திட்டமிடலின் பிரகாரம் ஆராய்ந்து பார்ப்பது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதிகாரசபையின் சட்டம் மற்றும் குறிக்கோள்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு

i. 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச்சட்டத்தின் ஒழுங்கு முறைக்கமைய செயற்படுகின்றனவா?

ii.1995ம் ஆண்டின் 15ம் இலக்க கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப செயற்படுகின்றதா?

iii.திறைசேரி சுற்றறிக்கை ஆலோசனைகளைப் பின்பற்றப்படுகின்றதா? என்றும்

iv.நிர்வாக பிரமாணங்களை பின்பற்றுகின்றனவா?

v.நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய ஒழுங்குகளுக்கு ஏற்ப செயற்பட்டுள்ளதா? என்பதனை பரீட்சித்துப்பார்த்து அறிக்கையிடுவதுமாகும்.

இப்பணிகளை மேற்கொள்ளும் போது ஏதேனும் முறைகேடுகள் மோசடிகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் போன்றவை ஏற்பட்டுள்ளதா? என ஆராய்ந்து பார்த்து அவை தொடர்பில் குற்றவியல் சட்டத்தின் கீழும் சிவில் சட்டத்தின் கீழும் செயற்படும் பொருட்டு நிறுவனத்தினருக்கு பிரேரணையினை சமர்ப்பிப்பதும் இதன் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு கிடைத்துள்ள பணியாளர்களையும் வளங்களையும் பயன்படுத்திக் கொண்டு நடப்பாண்டில் கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து அவதான விடயங்களை மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவதும் கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு வருடாந்த, அரையாண்டு அறிக்கைகளை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய பணிகளாகும்.

02. வருடாந்த திட்டமிடலும் செயற்பாடும் பொதுச்செயற்பாடுகளும்

நடப்பாண்டில் செயற்படுத்த உத்தேசித்துள்ள வேலைத்திட்டங்களிடத்தேயே,

i. தலைமையலுவலகத்தின் சகல பிரிவுகளையும் உள்ளகக் கணக்காய்வு விசாரணைக்குள்ளாக்குதல்.

ii. மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உதவி சமுர்த்தி ஆணையாளர் அலுவலகத்தின் சகல செயற்பாடுகளையும் உள்ளகக் கணக்காய்வு விசாரணைக்குள்ளாக்குதல்.

iii. பிரதேச செயலகங்களின் சமுர்த்திப் பிரிவின் சகல நடவடிக்கைகளையும் உள்ளகக் கணக்காய்வு விசாரணைகுட்படுத்தல்.

iv. வலய அலுவலகம் மற்றும் சமுர்த்தி வங்கிச்சங்கம், மகாசங்கங்களில் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் தொடர்பில் விசாரணைகள்

v. சமுர்த்தி வேலைத்திட்டத்தின் செயற்பாடுகளை ஆய்வுக்குட்படுத்தல்

vi. ஏனைய விசேட முறைபாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரித்தல் விசேட விசாரணைகளை நெறிப்படுத்துதல் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவைகளாகும்.

விசேட செயற்பாடுகள்

i. இதற்கு மேலதிகமாக சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் (2010) வருட இறுதியில் கணக்குகளை தயாரிக்கும் நடவடிக்கைகளையும் எமது பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் வங்கிச்சங்கங்களின் இலாப நட்டங்களை சரியான நிலைக்கு கொண்டு வருவதும் அதன் பிரகாரம் இலாப ஒதுக்கீட்டின் பொருட்டு முன் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதும் மேற்கொள்ளப்பட்டது.

ii. இவ்வதிகாரசபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழுவினை முறைப்படி கூட்டுதல்,திட்டங்களை சமர்ப்பிப்பதும் குழுவின் சிபார்சுகளை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு விசேட பணியாகும்.அதன் மூலம் நிர்வாகத்திற்குரிய தீர்மானங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எமது பங்களிப்பும் வழங்கப்படுகின்றது.

03. உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டம்

03.1 உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டமானது அகில இலங்கை முழுவதும் அமைந்துள்ள சமுர்த்தி பணிப்பாளர் அலுவலகம் உட்பட பிரதேச மற்றும் வலய மட்டத்தில் செயற்படுகின்ற வேலைத்திட்டங்களை ஆய்வுக்குட்படுத்துமாறு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இவ்வேலைத்திட்டத்தின் மூலம் 1043 வங்கிச்சங்கங்களும் 316 மகாசங்கங்களும் மேற்படி விடயத்திற்கு உட்படுகின்றன.
இதற்கமைய

i. தலைமையலுவலகத்தின் சகல பிரிவுகளும்
ii. மாவட்ட சமுர்த்தி அலுவலகம்/பிரதி சமுர்த்தி அலுவலகம்/வலய அலுவலகம்
iii. சமுர்த்தி லொத்தர் நிதியம்
iv. சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம்
v. சமுர்த்தி நிதியம்
vi. சமுர்த்தி வங்கிச்சங்க சுழற்சி நிதியம்
vii. சமுர்த்தி உத்தியோகத்தரின் நலன்புரி நிதியம்
viii. ஊழியர் கடன்திட்டம் போன்ற நிதியங்கள் தொடர்பில்
x. வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்கள் ஆகிய பிரிவுகளும் இதன் மூலம் முழுமையாகவும் உதாரண அடிப்பயிலும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றது.

3.1.1 நடப்பாண்டில் பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக பிரிவுகளின் முன்னேற்றம் தொடர்பில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. விசேடமாக செயற்பாட்டுத்திட்டமிடல் முழுமையான கணக்காய்வுப் பணியாளர்களுடன் திட்டமிடப்பட்டாலும் அந்த எதிர்பார்ப்புக்களை வெற்றி கொள்வதற்கு பணியாளர்களின் பற்றாக்குறை வேறொரு விதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பதனை சுட்டிக்காட்டல் வேண்டும்.

நடப்பாண்டில் 29400 மனித நாட்களின் பொருட்டு மேற்கொண்ட திட்டமிடல்கள், ஊழியர் பற்றாக்குறை காரணமாக 3200 மட்டளவிலான மனித நாட்களும் பணியாளர்கள் பிற விசேட கடமையின் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக 3800 மனிதநாட்கள் மட்டளவில் கிடைக்கப்பெறவில்லை.(பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஓய்வு பெற்றதன் அடிப்படையில் 3 மாதம் மட்டளவிலான காலத்தினை பிரதி உள்ளக கணக்காய்வாளரால் கடமைகள் நிறைவேற்றப்பட்டன).இதன் காரணமாக ஆரம்ப திட்டமிடலில் 24% மட்டளவிலான அளவு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலிருந்து நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனது.

03.2 உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டத்தின் மூலம் விசேட கவனத்தினைச் செலுத்திய பிரிவு உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டத்தின் பிரகாரம் அலுவலக சோதனையின் போது கவனஞ் செலுத்தப்பட்ட ஆரம்பப்பிரிவுகளாக:

- உள்ளக நிர்வாக முறைகளின் சிறப்புக்கள் - போதுமானதாயும் தரமானதாகவும் இருந்ததனை ஆராய்ந்து பார்த்தல்.

- செலவுகள் மற்றும் கைவிடப்பட்டவைகளின் பகுப்பாய்வுகள்

- ஊழல்,மோசடி மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பானவை
- முறை மற்றும் வலையமைப்புக்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- நிதித்தகவல்களும் தரவுப் பகுப்பாய்வும்

03.3 வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணைகள்

உள்ளகக் கணக்காய்வு பிரிவில் உள்ள பணியாளர்களையும் வளங்களையும் பயன்படுத்திக்கொண்டு வருடத்திற்குள் கீழ்குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அலுவலகம்	எண்ணிக்கை
மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர் அலுவலகம்	16
பிரதி சமுர்த்திப்பணிப்பாளர் அலுவலகம்	295
தலைமையலுவலகம்	16
விசேட விசாரணைகள்	153
சமுர்த்தி வங்கிச்சங்கம்	345
சமுர்த்தி மகாசங்கம்	95
சமுர்த்தி வங்கிநிதிக்கூற்று கணக்காய்வு	1130

03.4 கணக்காய்வு ஐயவினாக்கள்

i) நடப்பாண்டிற்குள் வெளியிடப்பட்ட கணக்காய்வு விசாரணைகள் இடத்தேயே கணக்கியல் தவறுகள் தொடர்பான ஐயவினாக்கள் 64 இருந்ததுடன் அதற்குக் கிடைத்த பதில்களின் எண்ணிக்கையானது 36 ஆகும்.

ii) தலைமை அலுவலகம் சார்ந்ததாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் 16களில் வெளியிடப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கையானது 09 ஆகும் என்பதுடன் அதில் 07இற்கு பதில் கிடைத்துள்ளது.

03.5 விசேட விசாரணைகளை நெறிப்படுத்தல்

நடப்பாண்டிற்குள் விசேட விசாரணைகள் நெறிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் 153 ஆகும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த விசேட விசாரணைகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தலானது கீழுள்ளவாறாகும்.

- கணக்குப் பதிவுகளின் தாமதங்கள்(பரீட்சை மீதி தயாரிக்கப்படாமை)
- கணக்கு வைக்கப்படாமை
- ஊழல்,மோசடி மற்றும் துஷ்பிரயோகம்
- பொய்யான வைப்புக்கணக்குகளின் பதிவுகள்
- சுற்றறிக்கை ஆலோசனைகளைப் பின்பற்றாமை
- கடனை வழங்கும் போதும் வைப்புக்களை பொறுப்பேற்கும் போதும் மேற்கொள்ளப் படுகின்ற மோசடிகள்

இதில் 67 விசாரணைகளுக்குரிய அறிக்கைகள் ஆண்டிற்குள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதிகமான முறைப்பாடுகள் பெயர் குறிப்பிடப்படாமல் கிடைத்ததனால் விசாரணையின் போது அவற்றுக்குரிய சாட்சிகளை சமர்ப்பிக்காமையும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும். எவ்வாறு இருப்பினும் அவதானிப்பு விடயங்களின் பிரகாரம் அதற்கு காரணமாக இருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நிருவாகத்தினரின் கவனத்தினை செலுத்தியுள்ளது.

03.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம்

தாபன முன்னேற்றத்தின் பொருட்டு முகாமைத்துவ மற்றும் நிதிப்பிரிவுகளுக்கிடையே இணைந்த ஒருங்கிணைப்பொன்று இருக்க வேண்டியதுடன் அதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினதும் பணியாளர் குழுவினதும் கலந்துரையாடல்களின் போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டங்கள் 08ஐ வருடத்திற்குள் நடாத்த முடிந்ததுடன் குழுவினால் கலந்துரையாடி சிபார்சுகள் முன்வைக்கப்பட்ட விடயங்களை பணிப்பாளர் சபைக்கும் குறித்த பிரிவுகளுக்கும் முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

03.7 சமுர்த்தி வங்கிச்சங்க கணக்குகளின் கணக்காய்வு

i)சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் மகாசங்கங்களினது வருட இறுதி கணக்கு முடித்தல்கள் மற்றும் அக்கணக்குகளுக்கான கணக்காய்வுக் கருத்துக்கள் மற்றும் சிபார்சுகளை வழங்கும் நாடு தழுவிய

வேலைத்திட்டம் இவ்வாண்டிற்குள்ளும் செயற்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளுக்குரிய சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் 875 மட்டளவிலும் 255 மகாசங்கங்களும் கணக்கு கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது.

ii) 2006,2007,2008 ம் ஆண்டுகளுக்குரியவாறு 1395 வங்கிச்சங்கங்களின் பொருட்டு கணக்காய்வு அபிப்பிராயங்களுடனான நிதிக்கூற்றினை வெளியிட்டமை நடப்பாண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஒரு விசேட பணியாகும்.

இவ்விசாரணைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட விடயங்கள்

i. சமுர்த்தி வங்கிச்சங்க,மகாசங்க உத்தியோகத்தர்களால் நிறுவனத்தின் நிருவாகத்தினர் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு மாற்றமாக செயற்பட்டுள்ளமை தொடர்பிலான பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அதிகார சபைக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமை நிதி நீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டது.

ii. சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் மகாசங்கங்கள் அறிமுகப்படுத்தியுள்ள கணக்கு முறைகளில் உள்ள குறைபாடுகள் உட்பட பணியாளர்களிடமிருந்து அதற்கு ஒப்பானவாறு செயற்படும் போது பயிற்றப்பட்ட பணியாளர்களின் தேவைப்பாட்டினை சுட்டிக்காட்டியமை

iii. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களது பொறுப்புக்களும் மக்களுக்கான அவர்களது பொறுப்புக்கள் தொடர்பில் காட்டப்படுகின்ற மிகக் குறைந்தளவிலான கவனங்கள் தொடர்பிலும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

iv. முறையற்ற நிதிப் பயன்பாடுகள் மற்றும் போலித்தகவல்களின் அடிப்படையில் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல இருப்பது அவதானிக்கப்பட்டது.

v. கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் உரிய பிரகாரம் சட்டத்திட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கமைய செயற்படுவதில்லை எனவும் அவர்கள் அவற்றினை கவனத்தில் கொள்ளாது செயற்படுவதும் அவதானிக்கப்பட்டது.

vi. அரசாங்கத்தின் பங்களிப்பு மற்றும் ஏனைய பங்களிப்புக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தனித்தனியாக சுட்டிக்காட்டப்படுவதில்லை என்பதையும் அவதானிக்கப்பட்ட விடயங்களில் உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மொத்த கணக்காய்வு வேலைத்திட்டங்களும் செயற்பாட்டுத்திட்டங்களுக்கு அமைய கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து நடப்பாண்டில் பெற்றுக்கொண்ட வெற்றிகளிடத்தேயே திட்டம் மற்றும் வலய அமைப்பின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு தெரியவந்தமை ஒரு பெரிய வெற்றியாக அமைந்ததுடன் அங்கு கணக்காய்விற்கு பதில்களை வழங்கும் போது பிரிவு ரீதியாக சுட்டிக்காட்டப்பட்ட முயற்சிகளை போற்றுதல் வேண்டும்.

04. உள்ளகக் கணக்காய்வுப்பிரிவின் பணியாளர்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாளர்களுக்குச் சொந்தமான அலுவலகங்கள் மற்றும் பிரதேச மட்டத்தில் இணைப்புச்செய்யப்பட்டு செயற்படுகின்றனர். அப்பணியாளர்களின் அமைப்பு இவ்வாறாகும்.

பதவி	மொத்தத்தொகை	தலைமையலுவலகம்	மாவட்டச்செயலகம்
பிரதான நிறைவேற்றுனர்	02	02	-
நிறைவேற்றுனர் தர உத்தியோகத்தர்	03	03	-
கணக்காய்வு உத்தியோகத்தர்கள்	63	13	50
கணக்காய்வு முகாமையாளர்கள்	65	02	63
உதவிப்பணியாளர்	03	03	-
ஏனைய ஊழியர்கள்	05	05	-
மொத்த எண்ணிக்கை	141	28	113

16.0 விசாரணைப்பிரிவு

ஒழுக்க நெறியினை பாதுகாப்பதன் ஊடாக நிறுவன ரீதியான சிறந்த முகாமைத்துவத்தினை பேணுவது இலகுவானதாகும்.விசேடமாக விசாரணைப்பிரிவின் செயற்பாட்டின் மூலம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நற்பண்புகள் உறுதிப்படுத்தப்படுவது மாத்திரமன்றி முழு நிறுவனத்தினதும் பணிகளின் தெளிவுத்தன்மையும் பாதுகாக்கப்படுகின்றது.

16.1"ஒழுக்கமுள்ள பணியாளர் குழுவிற்காக" என்ற தலைப்பைக் கொண்டு இப்பிரிவின் பணிகள் அலுவலக ஊழியர்கள் உட்பட நிறுவனத்தோடு செயற்படுகின்ற வெளியாரினதும் நற்பண்புகளுக்கு காரணமாகின்றது. நிறுவன ஒழுக்காற்று விடயங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரிவானதாகவும் செயற்றிறன் மிக்கதாகவும் நடைமுறைப்படுத்திச் செல்வது மற்றும் நிறுவனத்தின் நற்பண்புகளை உறுதிப்படுத்தும் விசாரணைகளினூடாக தொழில் கொள்வோர்,தொழிலாளர்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் நிவாரணத்தினை வழங்குவதும் இப்பிரிவின் குறிக்கோளாகும்.

16.2

16.2.1 விசாரணைப்பிரிவின் ஆரம்பப் பணிகளும் அதன் குறிக்கோள்களும்

01. நிறுவனத்திற்குள் ஒழுக்காற்றினை பேணிச்செல்ல உதவுதல்.
02. தவறினை இனங்காணுதல் - அது தொடர்பில் விழிப்புணர்வூட்டல் மற்றும் தண்டனைகளை சிபார்சு செய்வதனூடாக குற்றங்களை மேற்கொள்ளும் அளவினை குறைப்பதற்கு உதவுதல்
03. சமுர்த்தி உத்தியோகத்தர்களிடத்தே நற்பண்புகள் தொடர்பில் சிந்தனை ரீதியானமாற்றத்தினை ஏற்படுத்துதல்.
04. துஷ்பிரயோகங்களுக்குள்ளான நிதி மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பில் விசாரணை செய்து சொத்து முகாமைத்துவத்திற்கு உதவுதல்.

16.2.2 பணிகள்

- முறைப்பாடுகளின் அடிப்படையில் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
- குற்றப்பத்திரிகைகளை தயாரிப்பதும் உரியவர்களுக்கு வழங்குவதும்.

- விசாரணைக் குழுக்களை நியமித்தல்(முறைப்பாடுகளை நெறிப்படுத்தும் உத்தியோத்தர்களை நியமித்தலும் பிரதிவாதிக்கான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்திக்கொள்ள அங்கீகரிப்பதும்)
- முறைப்பாடுகளை நெறிப்படுத்தும் செயற்பாடுகள்
- முறைக்கேடுகள் தொடர்பிலான நடவடிக்கைகளின் போது சமுர்த்தி அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- விசாரணைக்குழுவின் இறுதி அறிக்கையை பெற்றுக்கொள்ளல்.
- ஒழுக்காற்று உத்தியோகத்தர்களுக்கு விசாரணைகள் தொடர்பில் சிபார்சினை மேற்கொண்டு சமர்ப்பித்தல்.
- ஒழுக்காற்று கட்டளைகளுக்கு எதிராக கிடைக்கின்ற மேன்முறையீடுகள் தொடர்பில் செயற்படுதல்.
- பிரதேச செயலகப்பிரிவு மட்டம் வரை பரவலாக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று அதிகாரங்களை செயற்படுத்தும் பொருட்டு உதவுதல்.
- ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

16.3 ஒழுக்காற்று விசாரணை

16.3.1 நடப்பாண்டிற்குள் பெற்றுக்கொண்ட முன்னேற்றம்.

	முடிக்கப்பட்டவை	**நடைமுறையில் உள்ளவை**
ஒழுக்காற்று விசாரணை	10	43

16.3.2 சமுர்த்தி முகாமையாளர்களினதும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் ஒழுக்காற்று விசாரணை முன்னேற்றம்.

பதவி வெறிதாக்கப்பட்ட எண்ணிக்கை - 03
பதவி நீக்கஞ் செய்யப்பட்ட எண்ணிக்கை - 04

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று விசாரணை முன்னேற்றம்.

பதவி வெறிதாக்கப்பட்ட எண்ணிக்கை - 15
பதவி நீக்கஞ் செய்யப்பட்ட எண்ணிக்கை - 36

17.0 நீதிப்பிரிவு

நீதிநெறி,ஒழுக்கநெறி மற்றும் நல்லாட்சியினைக் கொண்ட அரசாங்க நிறுவனமொன்றினை கட்டியெழுப்பும் பொருட்டு முன்னோடி ஒன்றாகவும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நற்பண்புகளை உறுதிப்படுத்தும் பொருட்டு நிறுவனத்தின் மொத்தப் பணிகளையும் தெளிவானதாக நடாத்திச்செல்வதன் ஊடாக உயர்ந்த சேவையொன்றினை நாட்டு மக்களுக்கு வழங்கி வறுமையை நீக்கி சுபீட்சமிகு தேசமொன்றினை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

நிறுவன நடவடிக்கைகள் விரிவடைந்ததாகவும் செயற்றிறன் மிக்க நிலையில் நிறைவேற்றி அரசாங்க சேவை,ஊழியர்கள் ஆகிய இரு பிரிவினர்களுக்கும் பயனுள்ள ஒரு நிறுவனமாக உருவாக்கிக்கொள்வது நிதிப்பிரிவின் குறிக்கோளாகும்.

கடமைகளும் பொறுப்புகளும்

1. நிறுவனத்திற்குள் சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணுவதற்கு ஒத்துழைத்தல்.
2. சட்டம் தொடர்பான விளக்கங்களை மேற்கொள்வதனூடாக குற்றமிழைப்பதற்கு ஊக்குவிக்கின்ற காரணிகளை குறைத்தல்.
3. சமுர்த்தி உத்தியோகத்தர்களிடத்தே சட்டத்தினூடாக சிறந்த ஒரு நிலை தொடர்பில் நன்மையான ஆற்றல்களை ஏற்படுத்துதல்.

பணிகள்

1. முறைப்பாடுகளின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
2. சட்ட மீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளின் போது நிபுணத்துவ ரீதியான சேவைகளை வழங்குவதும் சட்ட ரீதியான ஆவணங்களை தயாரிப்பதும்
3. நிறுவனத்திற்குள் சட்டத்தினையும் ஒழுங்கினையும் நடாத்திச்செல்வதற்கு ஒத்துழைத்தல்.
4. தவறுகளை இனங்காணுதல் - அது தொடர்பில் சட்டரீதியான ஆலோசனைகள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அதனூடாக தவறு செய்வதற்கான முயற்சிகளை குறைப்பதற்கு ஒத்துழைத்தல்.

5. சமுர்த்தி உத்தியோகத்தரிடம் சட்டம் தொடர்பான அறிவு விளக்கத்தினை வழங்குவதன் ஊடாக நற்பண்புகள் தொடர்பான எண்ண ரீதியான மாற்றங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. அதிகாரசபையால் ஒப்படைக்கப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகுவதும் பிரதிநிதித்துவப்படுத்துவதும் அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும்
7. சட்டமீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளில் நிபுணத்துவ ரீதியான சேவையினை வழங்குதல்,சட்டரீதியான ஆவணங்களை தயாரித்தல்
8. நிறுவனத்தினால் நியமிக்கப்படுகின்ற சட்டத்தரணிகள் குழுவில் சட்டத்தரணிகளை ஒருங்கிணைப்புச்செய்வதும் பின்பணி ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதும்
9. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்ற முறைபாடுகள் தொடர்பில் செயற்படுதல்.
10. வீடமைப்புக்கடன் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
11. மேற்படி பணிகளின் பொருட்டு குறித்த எழுத்து மூல ஆவணங்களை பராமரித்தல்.

முன்னேற்றம்

1. நிறுவனத்தின் பொருட்டு தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் அதிகமான எண்ணிக்கை நிறுவனத்தின் சார்பாக நீதிமன்ற தீர்ப்புக்கள் கிடைத்துள்ளன.

2. ஒரு சில வழக்குகளில் நிலுவைச்சம்பளமின்றி சேவையினை வழங்குவதனை மாத்திரம் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கவனயீனம்,மேற்பார்வைகள் இன்மை ஆகிய காரணங்களால் அதிகாரசபைக்கு எதிரான தீர்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

4. சமுர்த்தி பயனாளிகளின் அறிவின்மை சட்டத்தின் முன்னே வர அசமந்த போக்கினை காட்டுகின்றதனால் அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் அதிகாரசபைக்கு எதிரான தீர்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சட்டரீதியான நடவடிக்கைகளின் முன்னேற்றம் 2011.12.31ம் திகதியன்று

வழக்கு வகை	தொடர்ந்தும் உள்ளவை
1. உயர் நீதிமன்ற வழக்கு	05
2. மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு	03
3. சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம்	02
4. மேல் நீதிமன்ற வழக்கு	01
5. மாவட்ட நீதிமன்ற வழக்கு	05
6. தொழில் நியாயசபை வழக்கு	51
7. மனித உரிமை ஆணைக்குழுக்கான முறைபாடுகள்	24
8. குறைகேள் அதிகாரி முறைப்பாடுகள் (ஓம்புட்ஸ்மன்)	03

18.0 நிதி முகாமைத்துவப்பிரிவு

நிறுவனத்தின் நிதி நிர்வாகம் என்பதன் மூலம் கருதப்படுவது செலவுகளை வரையறை செய்வதன்று. உள்ளிருக்கின்ற வரையறுக்கப்பட்ட வளங்களை கூடியளவு பயனுள்ளதாக நிறுவனத்தின் வெற்றிக்காக தேர்வு செய்து கொள்வதாகும்.இங்கு இலங்கை சமுர்த்தி அதிகாரசபை மற்றும் வங்கி நிதியியல் சேமிப்பு மற்றும் மீதியான நிதி ஒதுக்கீடுகள் என அதிகாரசபைக்குக் கிடைக்கும் சகல கிடைப்பனவுகளையும் சேர்த்து சிறந்த முறைப்படி முதலீடு செய்வதும் முகாமைத்துவம் செய்வதும் இப்பிரிவின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

18.1 சமுர்த்தி வேலைத்திட்டத்தினை நாடு முழுவதும் அமுல்படுத்தும் போது அதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குவதும் நிதிக்கட்டுப்பாடுகளை பேணுவதும் என்ற இரண்டு பணிகளையும் நிறைவேற்றுவதற்கு உதவுவதே இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயமாகும்.

நடப்பாண்டிற்குள் திட்டம் மற்றும் வலையமைப்பில் மறுசீரமைப்பினை ஏற்படுத்துவதற்கும் அப்பிரிவுகளில் நிதி நிர்வாகத்தினை மையப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசேடமாக செலவுகளை நிதிப்பிரிவின் ஒத்துழைப்புடன் செயற்பட்ட பிரிவுகள் மாதாந்த கணக்குத்தொகுதியில் வங்கிச்சங்கங்களின் முதலீடுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.அதன் பிரகாரம் வங்கிநிதி முறைக்குள் சிறுகுழுக்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் செயற்பாடுகளின் போது இப்பிரிவின் பங்களிப்பானது உயர்ந்த மட்டத்தில் இருந்தது.

18.2 நிதிப்பிரிவின் செயற்பாடுகள் கீழ் குறிப்பிடுகின்றவாறு இருக்க முடியும்.

- ❖ திறைசேரி மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற மற்றும் நிதி வளங்கலை முக்கியமாக கொண்டு வருடாந்த வரவு செலவினை தயாரித்தல்.வரவு செலவினை திருத்தம் செய்வதும் வரவு செலவு கட்டுப்பாடும்.

- ❖ சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு பிரதேச ரீதியாகவுள்ள நிதி வளங்கலை மையமாகக்கொண்டு வருடாந்த வரவு செலவினை தயாரித்தல்,வரவு செலவு திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் வரவு செலவு கட்டுப்பாடு.

- சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு பிரதேச ரீதியாகவுள்ள நிதி வளங்கலை விடுவித்தல்,நிதித்தகவல்களை சேகரித்தல் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை மேற்கொள்ளல்.

- மொத்த சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கணக்கியல் தன்மையினை பாதுகாக்கும் பொருட்டு பிரதேச ரீதியாக கணக்குத் தகவல்களை சேகரித்தலும் தலைமை அலுவலகத்தின் கணக்குகளுடன் ஒன்றிணைந்து இறுதி நிதிக்கூற்றினைத் தயாரித்தலும்.

- இறுதி நிதிக்கூற்றினை கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பித்தல்,கணக்காய்வு விசாரணைகளில் உருவாகும் விடயங்கள் தொடர்பில் பின்னாய்வினை மேற்கொள்வதும் திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகளை மேற்கொள்வதும்.

- முகாமைத்துவம் மற்றும் நெறிப்படுத்தல் தீர்மானங்களின் பொருட்டு தேவையான நிதித்தரவுகளையும் தகவல்களையும் வழங்குவதும் வழிகாட்டுவதும்.

- இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சொத்துக்களை பாதுக்காத்தல் மற்றும் வேலைத்திட்டங்களை பயனுள்ளதாக ஈடுபடுத்திக்கொள்வதற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது.

- சமுர்த்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புள்ள வருமானங்களை சேகரித்தலும் கணக்குப் பதிவுகளும்.

- சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்குரிய அபிவிருத்திச்செலவுகள் மற்றும் ஊழியர் சம்பளம் உட்பட சகல செலவுகள் தொடர்பிலும் நிதி அதிகாரத்தினை வழங்குதல்,செலவுகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்குப்பதிவுகளை மேற்கொள்ளல்.

- சமுர்த்தி வேலைத்திட்டத்தின் காலத்தின் பிரகாரம் தேவைப்படும் கணக்கு முறைகளை முறைப்படி அறிமுகப்படுத்துவதும் செயற்படுத்துவதும்

- வங்கிச்சங்கங்களுக்கு அச்சிடப்பட்ட எழுதுகருவிகளை வழங்கும் பொருட்டு கிடைக்கின்ற காசோலைகளை உரிய மாவட்டங்களில் கணக்குப் பதிவித்து வங்கியில் இடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வங்கிச்சங்க எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தினை பராமரித்தல், மேலதிக நிதி மீதியை முதலீடு செய்வதும் கணக்குகளை பராமரிப்பதும்.

- இலங்கை சமுர்த்தி நிதியத்திற்கு நிதி சேகரித்தல்,கணக்கு பதிவித்தல் மற்றும் தேவைகளின் போது நிதியங்களை முதலீடு செய்வதும் கணக்குகளைப் பதிவிப்பதும்.

- மாதாந்தம் மாவட்டச்செயலகங்களிலிருந்து வீடமைப்பு அபிவிருத்தியின் பொருட்டு குறித்த பங்களிப்புத் தொகையினை வரவழைத்துக்கொள்ளல், பரிசுக்குரியோரின் நிதியினை விடுவித்தல், லொத்தர் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய நிதியினை பயனுள்ளதாக முதலீடு செய்தல் மற்றும் மாதாந்த,வருடாந்த லொத்தர் நிதியம் தொடர்பில் இறுதிக்கணக்குகளை தயாரித்து லொத்தர் நம்பிக்கைச் சபைக்கு வழங்குதல்.

- சமுர்த்தி அதிகாரசபையின் சகல விநியோக நடவடிக்கைகளையும் ஒழுங்குசெய்தல்.
- களஞ்சியசாலை பொருட்களின் கிடைப்பனவும் விநியோக நடவடிக்கைகளும்
- சமுர்த்தி உத்தியோகத்தர் நலன்புரி நிதியத்திற்கு நிதியினை சேகரித்தல் கணக்கு பதிவுகளை மேற்கொள்ளல், மாவட்டச்செயலகத்திற்கு முற்பணமாக நிதியினை விடுவித்தல்.

இரண்டாம் பகுதி

இலங்கை சமுர்த்தி அதிகார சபை
2011ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

1. பொது

இலங்கை சமுர்த்தி அதிகார சபையானது, 1995ம் ஆண்டின் 30ம் இலக்க சமுர்த்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். இதன் பணியாதெனில் சமுகத்தில் உள்ள இளைஞர்கள்,யுவதிகள் மற்றும் வசதி வாய்ப்புகளற்ற நிலைக்குள்ளாகியுள்ள குழுக்களின் பொருளாதார சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதாகும்.

இவ் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கமைய வரலாற்றுக் கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றின் பொருட்டு பணவீக்கத்தின் காரணிகளின் தாக்கங்கள் சீராக்கம் செய்யப்படவில்லை.

2. கணக்கீட்டுக் கால எல்லை

கணக்கீட்டுக் கால எல்லை 2011.01.01 இருந்து 2011.12.31ம் திகதி வரையாகும்.

3. மானியங்களைக் கணக்கு வைத்தல்

1. அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மீண்டெழும் மானியங்கள் வருமானச்செலவு கணக்கிலும் மூலதன மானியங்களை அரசாங்க பங்களிப்புத் தொகைகளிலும் சீராக்கஞ் செய்யப்பட்டுள்ளன.

2. மூலதனத் தேவைகளின் பொருட்டு நிதியங்களிலிருந்து கிடைக்கப்பெற்றவைகளையும் வங்கிநிதிப்பிரிவில் இருந்து கிடைக்கப் பெற்றவைகளையும் பங்களிப்பு உரித்து என்றதன் கீழும், மீண்டெழும் தேவைகளுக்கு நிதியங்களிலிருந்து கிடைத்தவைகளையும் வங்கி நிதிப்பிரிவிலிருந்து கிடைத்தவைகளையும் வருமானச்செலவுக் கணக்கின் ஏனைய வருமானங்களின் கீழும் காட்டப்பட்டுள்ளன.

4. சொத்துக்களும் அவற்றினை மதிப்பிடுதலும்

i . நிலையான சொத்துக்களும் பெறுமானத் தேய்வும்.

தேய்மானமானது இலகு முறைச்செயற்பாடுகளின் அடிப்படையில் வருடாந்தம் கீழ் குறிப்பிடப்படுகின்ற விகிதாசாரங்களுக்கேற்ப கணக்கிடப்பட்டுள்ளது. காணி நிலங்களுக்கு தேய்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

நிர்மாணச் செலவுகள்	10%
இயந்திரம் மற்றும் விளம்பர உபகரனங்கள்	20%
வாகனங்கள்	20%
தொலைபேசியும் இணைப்புகளும்	20%
அலுவலக உபகரணங்கள்	20%
கணணியும் துணைக் கருவிகளும்	25%
கற்கை உபகரணங்கள்	20%
பயிற்சி நிலைய உபகரணங்கள்	20%
பயிற்சி நிலைய இயந்திரங்கள்	20%
பயிற்சி நிலையக் கட்டிடங்கள்	5%
பயிற்சி நிலையத்தினை மேம்படுத்தல்	20%
தளபாடங்களும் வீட்டுப்பாவனை உபகரணங்களும்	20%
அச்சு இயந்திரங்களும் துணைக் கருவிகளும்	20%
காற்றுச் சீராக்கி உபகரணங்கள்	20%
விவசாய உபகரணங்கள்	20%
கணணி மென்பொருள்	25%
ஏனைய உபகரணங்கள்	20%
ஊடக உபகரணங்கள்	20%
விளையாட்டு உபகரணங்கள்	20%
தட்டச்சு இயந்திரங்கள்	20%
தபால் அச்சு இயந்திரம்	20%
தீ பாதுகாப்பு பெட்டகங்கள்	20%
இயந்திரம் மற்றும் உபகரணம்	20%
பயிற்சி நிலையஏனைய உபகரணங்கள்	20%
பயிற்சி நிலையத் தளபாடம்	20%

தலைமையக முகாமையாளர் தளபாடங்கள்	20%
நூல் நிலைய புத்தகங்கள்	25%
அலுவலக சிறு உபகரணம்	20%
கணணி வலையமைப்பு	25%
வங்கிக் கட்டிடங்கள் நிர்மாணித்தல்	5%
வங்கிக் கட்டிடங்கள் திருத்தல்	5%
மகாசங்க தளபாடங்களும் உபகரணங்களும்	20%
மகாசங்க தொலைபேசி வசதிகள்	20%
தொலைபேசி இணைப்புகள்	20%

சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் முழுமையாக பெறுமானத்தேய்வு சீராக்கப்படுவதுடன் நீக்கப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு கணக்கிலிடப்படுவதில்லை. முழுமையாக தெய்மானங்களைக் கொண்டுள்ள சொத்துக்களுக்கு தேய்மான வீதங்கள் குறிப்பிடப்படவில்லை.

5. இருப்புக்கள்

வர்த்தக இருப்புக்கள், எழுது கருவிகள் மற்றும் பண்டகசாலை நுகர்வுப்பொருட்கள் இருப்பு கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. இருப்பு மதிப்பீடானது "முதலில் உள்ளே வந்தது முதலில் வெளியே செல்லல் (FIFO) எனும் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

6. கடன்பட்டோரும் ஏனைய அறவிட வேண்டிய பெறுமதிகளும்

தேறும் என மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கடன்பட்டோர் மற்றும் ஏனைய அறவிடப்படவேண்டிய பெறுமதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

I. நடைமுறைப் பொறுப்புக்கள்

உரிய திகதியில் செலுத்த வேண்டிய அல்லது ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடகாலத்தினுள் கொடுக்கப்பட வேண்டிய பொறுப்புக்களே நடைமுறை பொறுப்புக்களாகக் காட்டப்பட்டுள்ளன.

II. **ஓய்வூதியப் பயன்கள்**

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் ஓய்வூதிய நன்மைகளை ஒதுக்கீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கையானது ஊழியர்கள் சேவைக்கு இணைந்த தினத்திலிருந்து பூர்த்தியான வருடங்களின் எண்ணிக்கையின்படி ஓய்வூதிய பணிக்கொடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

8.வருமானங்கள் மற்றும் செலவினங்கள்

I வருமானங்கள் மற்றும் செலவினங்கள் திரட்டிய **(அட்டுறு)** அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

II அதிகார சபையின் மூலம் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக திறைசேரி ஒதுக்கீடுகளின்படி இடப்பட்ட மூலதனச் செலவானது 100% ஒதுக்கீடு செய்யப்பட்டு **வருமானச் செலவுகள் கணக்கீட்டில்** இடப்பட்டுள்ளது.

III அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களுக்காக கிடைக்கப் பெற்ற வட்டி **ஊழியர் கடன் நிதியத்தில்** வரவு வைக்கப்பட்டுள்ளது.

IV நிதியங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானம் உரிய நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.

9 அபிவிருத்திச் செலவாக 2008ம் ஆண்டுக்கு முன்னர் நீக்கப்பட்டிருந்த கருத்திட்டங்களிலிருந்து மீள அறவிடப்பட்டுள்ள தொகை மற்றும் எதிர்காலத்தில் அறவிட வேண்டியுள்ள தொகைக்கு சீராக்கங்களை உட்படுத்தி சமுர்த்தி நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2008ம் ஆண்டிலிருந்து அபிவிருத்திக் கருத்திட்டங்களிலிருந்து அறவிடும் தொகை சமுர்த்தி வங்கியின் கீழ் வரவாகின்றமையினால் இந்நிதிக் கூற்றுகளில் உள்ளடங்குவதில்லை.

10. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது கிளைக் காரியாலயமாக மாவட்ட செயலாளர் அலுவலகங்களை நடைமுறைப்படுத்திச் செல்வதோடு கிளைக் கணக்கு முறையில் உள்ள பன்முகப்படுத்தப்பட்ட கிளைக்கணக்கு முறையினை பயன்படுத்தி கணக்குப்பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப பிரதான அலுவலகத்தின் மூலம் மாவட்ட அலுவலகத்திற்காக கிளையின் நடைமுறைக் கணக்கு ஒப்பிடுதலைத் தவிர அக்கணக்குகளில் இறுதி ஆண்டு மீதியானது மீதிக்கணக்கில் ஐந்தொகையில் நடைமுறைச்சொத்துகளில் காட்டுவது 2005 ஆண்டு வரை பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையாகும். இக்கொள்கையினை மாற்றி, 2006ஆம் ஆண்டு கணக்கு தயார்படுத்தும்போது "மாவட்டச் செயலாளர்" என்ற பெயரில் நடைமுறைக் கணக்கில் உள்ள ஒவ்வொரு கணக்கு மீதியினை தனித்தனியான ஐந்தொகை மூலம் வெளிக்காட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்புகள் : -

1 . முதலீடுகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பங்கு முதலீடுகள், விலைப்பட்டியலிடாத நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடாகும்.

2 . நிதியங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள், வருமானச் செலவுக் கணக்கில் அபிவிருத்திச் செலவாக காட்டப்பட்டுள்ளதுடன் செலவுக்குச் சமமான தொகை வருமானச் செலவுக் கணக்கில் பிற வருமானங்களின் கீழ் வெவ்வேறான நிதியங்களில் இருந்து கிடைப்பனவாகக் காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய வருடத்தின் மிகை (குறைவுக்கு) தாக்கங்கள் ஏற்படாது.

3 . ஊடகம் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வேலைத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் 2004ஆம் ஆண்டு வரை மீண்டுடெழும் செலவாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தும் இவ் வேலைத்திட்டத்தின் பொருட்டு திறைசேரியினால் மூலதன ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதனால் 2005ஆம் ஆண்டிலிருந்து ஊடகம் மற்றும் கண்காணிப்பு மதிப்பீட்டு வேலைத்திட்டங்களின் செலவுகள் அபிவிருத்தி செலவுகளின் கீழ் 100% ஒதுக்கம் செய்து காட்டப்பட்டுள்ளது.

4. 2004ஆம் ஆண்டிலிருந்து பலாங்கொடைப் பயிற்சி நிலையமானது அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் ஒரு சுயாதீனமான அலகொன்றாக கருதி பன்முகப்படுத்தப்பட்ட கிளை முறையின் கீழ் கணக்குகள் தயாரிக்கப்பட்டது.அதற்கமைய பயிற்சி நிலையத்தின் பொருட்டு பிறிதொரு வருமானச்செலவுக் கணக்கு தயாரித்து அதே போன்று பயிற்சி நிலையத்தின் வருமானத்தினை கணக்கிட்டு பயிற்சி நிலையத்தின் கொடுக்கல் வாங்கல்களை தலைமையலுவலகத்தின் கணக்குகளுடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிலையத்தின் பொதுப்பணி செலவுகளை அதிகாரசபையின் ஏனைய நிர்வாகச்செலவின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

5. வங்கி நிதிப்பிரிவு அதிகார சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்வதுடன் சுயாதீன ஓர் அலகாகச் செயற்பட்டு இலாபத்தினை ஈட்டுவதில் ஈடுபட்டுள்ளதனால் அப்பிரிவின் கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் தனியான ஓர் வருமானக் கூற்று ஒன்றும் ஐந்தொகை ஒன்றும் தயாரிக்கப்பட்டு அப்பிரிவின் இலாபத்தினைக் கணக்கிட்டுள்ளது. வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவு அதிகார சபையின் கீழ் உள்ள பிரிவாக உள்ளதால் ஐந்தொகை விடயங்கள் தலைமை அலுவலகக் கணக்குகளுடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

6. 2009ம் ஆண்டிலிருந்து நில்லம்ப பயிற்சி நிலையம் அதிகாரசபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு சுயாதீன அலகொன்றாகக் கருதி பன்முகப்படுத்தப்பட்ட கிளை முறையின் கீழ் கணக்குகள் தயாரிக்கப்பட்டன.அதன் பிரகாரம் பயிற்சி நிலையத்தின் பொருட்டு வருமான செலவுக் கணக்கொன்றினை தயாரித்து அதிலிருந்து பயிற்சி நிலைய வருமானத்தினை கணக்கிட்டு பயிற்சி நிலையத்தின் கொடுக்கல் வாங்கல்களை தலைமையலுவலகத்தின் கணக்குகளுடன் கூட்டிணைத்துள்ளது. பயிற்சி நிலையத்தின் பொதுப்பணிச் செலவுகள் அதிகார சபையின் ஏனைய செலவுகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

7. விசேட வேலைத்திட்ட செலவாக கணக்குகளில் குறிப்பிடப்படுகின்ற ரூபா 1,000,000.00 இற்கான செலவினை மேற்கொண்டுள்ளமையானது வறுமையை ஒழிக்கும் பொருட்டு 2006ம் ஆண்டில் நடாத்தப்பட்ட சார்க் மாநாட்டுச் செலவாகும்.

8. 2010ம் ஆண்டுவரை 20% இருந்து வந்த பெறுமானத்தேய்வு வீதாசாரம் இருந்து வந்த பயிற்சி நிலைய மேம்படுத்தல்கள்,வங்கிக்கட்டிட நிர்மாணங்கள் மற்றும் வங்கிக்கட்டிட மேம்படுத்தல்கள் கணக்குகளில் தேய்வு வீதமானது 2011ம் ஆண்டிலிருந்து 5% தேய்மான வீதங்களில் சீராக்கங்களை மேற்கொண்டு கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9. 2003ம் ஆண்டில் தெஹியோவிட்ட பிரதேச செயலகத்தில் சம்பளப்பணமான ரூபா 416,319.68 கொள்ளையினை வழிப்பணமாக கணக்கில் காட்டப்பட்டிருந்ததுடன் கேகாலை மாவட்ட உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற இந்த வழக்கானது இதுவரையில் முடிக்கப்படாததனால் வழக்கு விசாரணையின் தீர்ப்புக்கள் கிடைக்கும் வரை கேகாலை மாவட்டச் செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
2011-12-31ம் திகதியில் ஐந்தொகை

	குறிப்பு	2011			2010	
		ரூ.சதம்			ரூ.சதம்	
சொத்துக்கள்						
நீண்டகால சொத்துக்கள்						
ஆதனப்பொறித்தொகுதியும் உபகரணங்களும்	1		**553,156,895.79**		472,821,130.94	
ஆதனப்பொறித்தொகுதியும் உபகரணங்களும் - வங்கி	25		**1,088,134.00**		1,273,100.00	
முதலீடுகள்	2		**2,278,627,117.91**	**2,832,872,147.70**	2,187,855,069.80	**2,661,949,300.74**
முதலீடுகள் - வங்கி	24	15,694,945,197.00	**15,694,945,197.00**	15,694,945,197.00	15,437,355,884.00	15,437,355,884.00
அபிவிருத்திச்செலவுகள்						
அபிவிருத்திச்செலவுகள் கிரயம்	3		**16,893,716,666.30**		14,648,866,372.09	
அபிவிருத்திச்செலவு ஒதுக்கம்	4		**(16,893,716,666.30)**	-	(14,648,866,372.09)	-
நடைமுறைச்சொத்துக்கள்						
எழுதுகருவிகளும் வியாபார இருப்புகளும்	5		**29,073,902.21**		23,571,928.64	
கடன்பட்டோர்	6		**1,899,980.88**		4,774,238.88	
கிடைக்கவேண்டிய கடன் - வங்கி	23	1,928,513,820.00			1,043,904,524.00	
கழி: அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம்		(181,155,092.00)	**1,747,358,728.00**			
ஏனைய சொத்துக்கள் - வங்கி	27		**1,187,980,697.00**		348,075,460.00	
முற்பணங்கள்	9		**108,652,260.67**		28,906,256.10	
வைப்புக்கள்	7		**1,677,500.00**		1,677,500.00	
கிடைக்கவேண்டிய நிதி	10		**1,224,005,795.11**		1,215,116,513.01	
கிடைக்கவேண்டிய ஊழியர் கடன்	8		**111,863,728.08**		105,566,616.57	
கிடைக்கவேண்டிய முதலீட்டு வட்டி	11		**50,193,844.78**		42,080,079.54	
கிடைக்கவேண்டிய காப்புறுதி நட்டவீடு	13		**379,799.40**		351,349.40	
வழியிலுள்ள பணம்	12	32,125,153.12				
கழி : காசு இழப்புக்கான ஒதுக்கம்		(416,319.68)	**31,708,833.44**		**215,495,981.13**	
பலாங்கொடை பயிற்சி நிலையம்			**(0.00)**		(12,631.92)	
நில்லம்ப பயிற்சி நிலையம்			**25,000.00**			
காசு மீதி (மாவட்டம்)	14		**7,154,424.13**		1,655,050.87	
காசு மீதி (பிரதேச)	14		**56,820,957.17**		142,687,010.57	
காசு மற்றும் வங்கி மீதி - வங்கி	26		**11,038,524.00**		6,666,493.00	
காசு மீதி (தலைமையலுவலகம்)	16		**52,613,616.93**	**4,622,447,591.80**	240,880,697.85	**3,421,397,067.64**
மொத்தச்சொத்துக்கள்				**23,150,264,936.50**		**21,520,702,252.38**

	குறிப்பு	2011 ரூ.சதம்			2010 ரூ.சதம்	
இருப்புகளும் பொறுப்புகளும்						
அரச பங்களிப்பு			**14,942,423,130.47**		14,337,198,797.64	
லொத்தர் நிதியப்பங்களிப்பு			**21,706,291.20**		21,706,291.20	
சொத்துக்கள் சாட்டுதல் பி.செ பலாங்கொடை வங்கிநிதி,சசண,சவன நிதியங்களிலிருந்து பங்களிப்பு	48		**1,900,000.00**		1,900,000.00	
			331,251,010.90		331,251,010.90	
வங்கிநிதிப்பிரிவின் பங்களிப்பு			**12,587,376.38**		12,587,376.38	
பங்களிப்பு - சமுர்த்திச்செயலணி			**-**			
ADB பங்களிப்பு			**149,655.00**	**15,310,017,463.95**	149,655.00	**14,704,793,131.12**
திரண்ட உரிமை						
மிகை - குறைவு			**(19,225,502,253.64)**		(18,195,253,907.03)	
மூலதன ஒதுக்கம் - வங்கி	32		**975,000,000.00**		975,000,000.00	
திரண்ட இலாபம் வங்கி	32		**3,743,532,057.00**	**(14,506,970,196.64)**	3,302,894,384.00	(13,917,359,523.03)
				803,047,267.31		**787,433,608.09**
நீண்டகால பொறுப்புக்கள்						
நிதியங்கள்	17		**3,314,764,456.83**		3,127,214,080.40	
ஓய்வூதியப்பணிக்கொடை கட்டுப்பணம்	18		**3,321,005,018.55**		2,787,919,202.90	
பணிக்கொடைத் தொகை - நீர்வளச்சபை			**377,941.49**	**6,636,147,416.87**	377,941.49	**5,915,511,224.79**
வைப்புக்கள் - வங்கி	29		**12,527,974,903.00**		11,710,328,652.00	
சலுகைக்கடன் பெறுவனவு - வங்கி	30		**1,350,490,903.00**	**13,878,465,806.00**	822,145,936.00	**12,532,474,588.00**
நூலகப்புத்தகங்கள் பெறுவனவு			**99,985.00**	**99,985.00**	99,985.00	
நடைமுறைப்பொறுப்புக்கள்						
அட்டுறு செலவுகளும்(திரட்டிய) ஒதுக்கங்களும்	19		**5,873,688.16**		681,458,762.81	
கடன்கொடுத்தோர்	20		**-**			
ஏனைய பொறுப்புக்கள் - வங்கி	31		**45,413,417.00**		26,906,489.00	
பொது வைப்புக்கள்	20		**114,604,323.16**		94,959,513.65	
செலுத்த வேண்டிய தொகை	21		**1,619,305,796.99**		1,322,927,370.28	
டென்டர் வைப்புகளும் பிணைகளும்	22		**53,570.84**		179,570.84	
நவோதய வைப்புக்கள்	15		3,724,756.67		4,414,945.13	
பிரதேச பொது வைப்புக்கள்	15		944,776.25		18,359,342.39	
பிடிபணம்	15		42,584,132.25	**1,832,504,461.32**	135,976,852.40	**2,285,282,831.50**
மொத்த பொறுப்புகளும் இருப்புகளும்				**23,150,264,936.50**		**21,520,702,252.38**

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
2011-12-31 ம் திகதியில் முடிவடையும் காலத்திற்கான வருமானச்செலவு கணக்கு

	குறிப்பு	2011 ரூ.சதம்	2010 ரூ.சதம்
வருமானங்கள்			
அரச பங்களிப்பு (மீண்டெழும்)		**7,661,858,000.00**	**7,989,361,000.00**
மூலதன பங்களிப்பு (அபிவிருத்திக்கருத்திட்டங்கள்)		**2,023,115,739.33**	**-**
ஏனைய வருமானங்கள்			
வங்கிநிதிப்பிரிவின் கிடைப்பனவு		71,533,984.63	39,707,061.66
சமுர்த்தி நிதியத்தின் கிடைப்பனவு	44	6,150.50	3,050.00
எழுதுகருவி சுழற்சிநிதிய கிடைப்பனவு	45	5,069,475.55	2,389,924.50
வீடமைப்பு லொத்தர் நிதியத்தின் கிடைப்பனவு	56	229,367,009.14	224,422,925.62
பல்வேறு வருமானங்கள்	32	6,210,237.82	8,718,644.64
பலாங்கொடை பயிற்சி நிலைய மிகைகள்	47	1,740,742.13	291,487.56
மொத்த வருமானம்		**9,998,901,339.10**	**8,264,894,093.98**
நெறிப்படுத்தல் செலவுகள்			
ஆளணிக்கிரயம்	33	8,159,621,793.90	7,406,755,057.51
பிரயாணச்செலவு	34	87,913,091.13	96,701,377.90
வழங்கல்கள்	35	33,816,845.73	49,206,214.20
பராமரிப்புச்செலவுகள்	37	18,258,106.51	17,312,002.93
ஒப்பந்தச்சேவைகள்	36	76,325,186.66	75,256,665.75
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச்செலவுகள்	42	2,479,292,929.40	3,043,810,010.20
தேய்மானங்கள்		68,238,728.53	156,217,839.38
ஏனைய நெறிப்படுத்தல் செலவுகள்	38	7,981,558.84	9,080,862.50
வங்கிநிதிப்பிரிவின் செலவுகள்	40	25,234,480.69	15,173,333.25
நில்லம்ப செலவுகள்	41	2,053,465.64	955,852.53
மொத்த நெறிப்படுத்தல் செலவுகள்		**10,958,736,187.03**	**10,870,469,216.15**
நெறிப்படுத்தல்களின் மிகை/(குறைவு)		**(959,834,847.93)**	**(2,605,575,122.17)**
நிதிக்கிரயம்	39	161,888.00	149,573.90
சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் விற்பனை இலாபம்		-	167,080.00
அதிவிசேட வகைகளுக்கு முந்திய தேறிய மிகை/(குறைவு)		**(959,996,735.93)**	**(2,605,557,616.07)**
வருடத்தின் மிகை/(குறைவு)		**(959,996,735.93)**	**(2,605,557,616.07)**
முன்னைய வருடத்தின மிகை/(குறைவு)		**(18,195,253,907.03)**	**(15,730,186,264.40)**
முன்னைய வருட சீராக்கங்கள்		**(70,251,610.68)**	**140,489,973.44**
முன்னைய வருட சீராக்கங்களின் பின்னர் மிகை/(குறைவு)		**(18,265,505,517.71)**	**(15,589,696,290.96)**
தேறிய மிகை/(குறைவு)		**(19,225,502,253.64)**	**(18,195,253,907.03)**

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
2011.12.31இல் முடிவடைந்த காலத்திற்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

	2011 ரூ.சதம்	2010 ரூ.சதம்
நெறிப்படுத்தல் செயற்பாடுகள்		
வருமானத்தினை மிஞ்சிய செலவு	**(959,996,735.93)**	**(2,605,557,616.07)**
சீராக்கங்கள்		
பெறுமானத்தேய்வு	(130,609,294.74)	156,336,131.88
முன்னைய வருட சீராக்கங்கள்	(70,251,610.68)	140,489,973.44
பணிக்கொடை கட்டுப்பணத்திற்கான ஒதுக்கங்கள்	533,085,815.65	307,539,940.88
நிலையான சொத்துக்களை நீக்கும் இலாபம்	50,000,000.00	(167,080.00)
அபிவிருத்திச்செலவுகள்	2,244,850,294.21	2,816,994,110.08
தேக்கி வைத்த இலாபம் - வங்கி	440,637,673.00	395,107,823.00
தொழிற்படு மூலதனத்தின் மாற்றத்திற்கு முன்னர் நெறிப்படுத்தல் மிகை/(குறைவு)	2,107,716,141.51	1,210,743,283.21
எழுதுகருவிகள் மற்றும் வர்த்தக இருப்புக்கள் மிகை/(குறைவு)	(5,501,973.57)	2,405,146.94
கடன்பட்டோர் (மிகை)/(குறைவு)	2,874,258.00	3,155,793.07
கிடைக்கவேண்டிய கடன் -வங்கி (மிகை)/(குறைவு)	(703,454,204.00)	(10,353,873.00)
ஏனைய சொத்துக்கள் (மிகை)/(குறைவு)	(839,905,237.00)	896,593,168.00
முற்பணங்கள் (மிகை)/(குறைவு)	(79,746,004.57)	(3,981,881.99)
கிடைக்க வேண்டிய நிதி(மிகை)/(குறைவு)	(8,889,282.10)	104,095,893.24
கி.வே.நிதி - 2118 கணக்கிலிருந்து உத்தியோகபூர்வ கணக்கிற்கு	-	538,805.50
கி.வே.நிதி-எழுதுகருவிகள்நிதியத்திலிருந் உத்தியோகபூர்வகணக்கிற்கு	-	34,282.59
கிடைக்க வேண்டியஊழியர்கடன் (மிகை)/(குறைவு)	(6,297,111.51)	(3,988,083.35)
கிடைக்கவேண்டியமுதலீட்டுவட்டி (மிகை)/(குறைவு)	(8,113,765.24)	(31,231,597.47)
கிடைக்கவேண்டியகாப்புறுதிநட்டஈடு(மிகை)/(குறைவு)	(28,450.00)	210,780.00
பலாங்கொடை பயிற்சி நிலையம் (மிகை)/(குறைவு)	(12,631.92)	17,611.17
நில்லம்ப பயிற்சி நிலையம் (மிகை)/(குறைவு)		6,000.00
திரட்டிய செலவு மிகை/(குறைவு)	(675,585,074.65)	76,361,921.93
கடன்பட்டோர்	-	(14,502,746.00)
ஏனைய பொறுப்புக்கள் - வங்கி	18,506,928.00	(14,441,245.00)
பொது வைப்புக்கள் மிகை/(குறைவு)	19,644,809.51	94,853,530.65
கேள்வி வைப்புக்கள் மிகை/(குறைவு)	(126,000.00)	142,780.00
செலுத்த வேண்டிய நிதி மிகை/(குறைவு)	296,378,426.71	21,027,864.55
செ.வே.நிதி - 1350கணக்கிலிருந்து2118 கணக்கிற்கு	-	(538,805.50)
நவோதய விசேட வைப்புக்கள்	(690,188.46)	(423,408.81)
வீடமைப்பு லொத்தர் பங்களிப்புத்தொகை		(65,660.00)
பிரதேச பொது வைப்புக்கள்	(17,414,566.14)	(853,198,537.70)
பிடிபணம் மிகை/(குறைவு)	(93,392,720.15)	3,711,671.89
நெறிப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் 01	5,963,354.42	1,481,172,693.92

முதலீட்டுச்செயற்பாடுகள்		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	**(50,805,071.76)**	**(258,658,766.11)**
நிலையான சொத்துக்களின் கொள்வனவு-வங்கிநிதி	**184,966.00**	**(1,273,100.00)**
நிலையான சொத்துக்களை நீக்குதல்	**51,078,601.65**	**167,080.00**
முதலீடுகள்	**(90,772,048.11)**	**(246,841,047.07)**
முதலீடுகள் - வங்கிநிதி	**(257,589,313.00)**	**(2,049,022,115.00)**
அரச மானியங்கள் கிடைப்பனவு	**605,224,332.83**	**3,236,000,000.00**
அபிவிருத்திச்செலவுகள்	(2,244,850,294.21)	**(2,816,994,110.08)**
முதலீட்டுச்செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் 02	(1,987,528,856.60)	**(2,136,622,058.26)**
நிதிச்செயற்பாடுகள்		
நிதியம்	**187,550,376.43**	**229,197,769.09**
நிதியம் வங்கிநிதி	**-**	**99,985.00**
வைப்புக்கள் - வங்கி	**817,646,251.00**	**885,779,869.00**
சலுகைக்கடன்களை பெறல் - வங்கி	**528,344,967.00**	**(96,083,676.00)**
நிதிச்செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் 03	**1,533,541,594.43**	**1,018,993,947.09**
நிதி மற்றும் நிதித்தன்மை கொண்டவற்றின் தேறிய நிதி அதிகரிப்பு	**(448,023,877.75)**	**363,544,582.75**
கால எல்லையின் ஆரம்பத்தில் நிதியும் நிதிக்குச் சமனானவையும்	**607,801,553.10**	**244,256,970.35**
கால எல்லையின் இறுதியில் நிதியும் நிதிக்குச் சமனானவையும்	**159,777,675.35**	**607,801,553.10**
வருட இறுதியில் நிதியும் நிதிக்குச் சமனானவையும்		
வழிப்பண மீதி	**32,125,153.12**	215,912,300.81
காசு மற்றும் வங்கி மீதி (மாவட்டச்செயலகம்)	**7,154,424.13**	1,655,050.87
காசு மற்றும் வங்கி மீதி (பிரதேச செயலகம்)	**56,820,957.17**	142,687,010.57
காசு மற்றும் வங்கி மீதி (தலைமையலுவலகம்)	**52,638,616.93**	240,880,697.85
காசு மற்றும் வங்கி மீதி (வங்கி நிதி)	**11,038,524.00**	6,666,493.00
	159,777,675.35	**607,801,553.10**

வைஎஸ்/பீ/எஸ்ஏ/எப்ஏ/2011/03 2013 சனவரி 07

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை சமுர்த்தி அதிகாரசபை.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் V ஆம் பகுதியின் 17(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 ஒக்டோபர் 10 ஆந் திகதி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொதுத் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற மூலதன பங்களிப்புத் தொகையில் வங்கி நிதிப் பிரிவின் சமுர்த்தி வங்கி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான நிதியப் பெறுவனவு வருமானச் செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நில்லம்ப பயிற்சி நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 571,093 தொகை முன்னைய ஆண்டின் சீராக்கற் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக நில்லம்ப பயிற்சி நிலையத்தில் இருந்து பெற வேண்டிய பணக் கணக்கு அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வங்கி நிதிப் பிரிவினால் ரூபா 241 மில்லியன் நிதியத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி நடைமுறையல்லாச் சொத்துக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு பங்கு ரூபா 14.50 படி தனியார் வங்கி ஒன்றின் 5,557,188 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 80,579,226 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் முதலீட்டுக் கணக்கின் ரூபா 55,571,880 தொகையாகப் பதிவு செய்திருந்தமையால் முதலீட்டுப் பெறுமதி ரூபா 25,007,346 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) காகிதாதிகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியக் கட்டிடங்களை மேம்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,251,404 தொகையினை நிலையான சொத்தாக கணக்கிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) சமுர்த்தி வங்கிச் சங்கங்களை கணனிமயமாக்கும் அடிப்படை நடவடிக்கைகளுக்காக 932 வங்கிச் சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 23,300,000 தொகை கணனி மென்பொருட்களின் கொள்வனவாக நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டு அதற்காக ரூபா 5,825,000 தொகை வருடாந்த பெறுமானத்தேய்வாக கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களும் பற்றாக்குறைகளும் முறையே ரூபா 23,300,000 ஆலும் ரூபா 5,825,000 ஆலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தில் வருட இறுதி இருப்பு மீள் கணிப்பீட்டின் போது ஏற்பட்ட ரூபா 3,289,139 தொகையான இருப்பு வேறுபாடு வருமானமாகக் கருதப்பட்டு கணிப்பிடப்பட்டிருந்தமையால் வருட இறுதியில் நிதியத்தின் மீதி அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 13,008,268 தொகையான ஊழியர் வீடமைப்புக் கடன் வட்டி, வீட்டுக் கடனாக கணக்கிடப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வட்டி

வருமானமும் வருட இறுதியில் வீடமைப்புக் கடன் கணக்கு மீதியும் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஐ) வங்கி நிதிப் பிரிவினால் வழங்கப்பட்ட ஊழியர் கடன் மீதியான ரூபா 1,236,097,118 இற்காக வருட இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த வட்டி கணிக்கப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கு மீதிகள் அவை தொடர்பான பட்டோலை மீதிகளுடன் 2012 திசெம்பர் வரை இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

விடயம்	கணக்கின் படியான மீதி	பட்டோலைகளின் படியான மீதி	வேறுபாடு
	ரூபா	ரூபா	ரூபா
ஊழியர் சைக்கிள் கடன்	99,739,615	99,698,832	40,783
ஊழியர் வீடமைப்புக் கடன்	612,096,738	610,909,336	1,187,402
சன புபுது கடன்	221,930	82,117	139,813

2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 1,899,981 கூட்டுத்தொகையான 4 தொங்கல் கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாதிருந்ததுடன் இக் கடன்பட்டோர் மீதியினை கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

(ஆ) உடனடிக் கடன் ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் செயற்படாது இருந்த போதிலும் இதற்காக 2 அரசாங்க வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த வைப்புத் தொகையில் இருந்து ரூபா 558,771 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கி நிதிப் பிரிவின் கோர்க்கப்படாத பேரேட்டுத் தாள்களை அச்சிடுவதற்கான கொடுப்பனவுகளுக்குரிய பெறுமதி சேர் வரியினை இரண்டு தடவைகள் கொடுப்பனவு செய்ததன் காரணமாக கணக்குப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணமாக 2007 ஆம் ஆண்டு முதல் வங்கி நிதிப் பிரிவின் கணக்குகளில் பெறவேண்டியவையாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 517,304 தொகையான மீதி நிதி அமைச்சிடமிருந்து மீள அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுத் திறைசேரியினால் மீள்நிரப்பல் வழங்கப்படும் வரை வங்கி நிதிப் பிரிவின் நிதி பயன்படுத்தப்பட்டு சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த சனபுபுது கடனுக்கான சலுகை வட்டி ரூபா 156,433,387 தொகை 2012 செப்தெம்பர் வரை பொதுத் திறைசேரியிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(உ) பெறவேண்டிய காசுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 45,364 தொகையான மீதி 2009 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ''அதிஸ்டம்'' பத்திரிகையின் மூலம் சமுர்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 379,064 தொகை அறவிடப்படாது 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக பெறவேண்டிய மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள்
		ரூபா	
(அ)	அரசாங்க மூலதனப் பங்களிப்பு	554,419,261	சொத்துக்கள் கொள்வனவிற்காகப் பயன்படுத்தப்பட்ட விதத்தைக் காண்பிக்கும் விபரமான பதிவேடு
(ஆ)	ஊழியர் பணிக்கொடைக் கடன்	524,260,761	விபரமான பட்டோலை, சரியாக தயாரிக்கப்பட்ட கணக்குக் கூற்று
(இ)	உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டங்கள் இரண்டிற்கு வழங்கப்பட்ட ஏற்பாடு	400,000	உரிய செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள்
(ஈ)	அபிவிருத்திச் செலவினம்	2,044,850,294	திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பிற்கு மேலதிகமாக ஏற்கப்பட்டிருந்த ரூபா 21,734,555 தொகை வழங்கப்பட்ட விதம் தொடர்பான விபரம், 4 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ரூபா 22,424,054 கூட்டுத்தொகையான விபரமான அறிக்கை.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான தொடர்பு		இணங்காமைகள்
(அ)	1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 5(ஊ) மற்றும் 20(1) ஆம் பிரிவுகள்	சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்து வதற்கான பணத்தை வழங்குவதற்கு தேசிய லொத்தர் சபையின் உதவியுடன் லொத்தர் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இதற்காக ஸ்தாபிக்கப்பட்ட லொத்தர் நிதியத்தின் மூலம் பல ஆண்டுகாலமாக லொத்தர் நடாத்தப்பட்டிருக்க வில்லை.
(ஆ)	தாபன விதிக் கோவை XXXII ஆம் அத்தியாயத்தின் 2.3.2 ஆம் பிரிவு	தேர்தலின் போது வேட்பாளராக போட்டியிடுவதற்கு எதிர்பார்க்கும் ஓர் உத்தியோகத்தருக்கு பெயர் மும்மொழிவுப் பத்திரம் பொறுப்பேற்கப்படும் நாளுக்கு ஒரு கிழமைக்கு முன்பிருந்து தேர்தல் திகதி வரையான காலப்பகுதிக்காக அவர் சம்பளமற்ற லீவைப் பெற்றிருக்க வேண்டிய போதிலும் உள்ளூராட்சி தேர்தல் - 2011 இற்காக வேட்பாளர்களாக முன்வந்திருந்த அதிகாரசபையின் 23 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	நிதிப் பிரமாணம்	
	(i) நி.பி. 715	காரியாலயப் பயன்பாட்டிற்காக அல்லது தற்காலிகமாக வைத்துக்கொள்வதற்காக முறையான அதிகாரத்துடன் உத்தியோகத்தர்க ளுக்கு, கிளைகளுக்கு அல்லது அலகிற்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் முறையாகப் பொறுப்பேற்றமையை வெளிப்படுத்தும் ஆவணங்களுடன் அவை இனங்காணப்படக் கூடியவகையில் பொருட் பதிவேட்டு வழங்கல் மற்றும் பெறுவனவுப்

பத்திரங்களில் குறித்த பொருட்களின் இனங்காணலை குறிக்கும் இல. குறிப்பிடப்பபட வேண்டிய போதிலும் 20 டிஜிடல் வகை கமராக்களும் 20 வகை மடிக்கணனிகளும் தொடர்பாக அத் தேவைப்பாடு நிறைவேறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி 1646 — ஒவ்வொரு வாகனத்தினதும் நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மாதாந்தப் பொழிப்புகளும் உரிய மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் 33 வாகனங்களுக்காக 2011 ஆம் ஆண்டின் 04 மாதங்களுக்கான ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு வழிகாட்டி - 2006

- 4:2:1 ஆம் பந்தி — நிறுவகத்தின் கொள்வனவு அலகினால், ஆகக் குறைந்தது 3 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அத்தகைய கொள்வனவு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- 4:2:2(ஆ) ஆம் பந்தி — நிறுவகத்தின் கொள்வனவுச் செயற்பாடு ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் முதல் பூர்த்தியாகும் வரை ஒவ்வொரு கொள்வனவுச் செயற்பாட்டிற்கான நடவடிக்கைகள் கால ஒழுங்கில் விபரிக்கப்பட்ட நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சமுர்த்தி கொடி தினத்தின் மாதிரிப் படிவம் மற்றும் பதாதை அச்சீட்டிற்காக அத்தகைய நேரஅட்டவணை ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

(உ) திறைசேரிச் சுற்றறிக்கை

(i) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை — நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2002 நவம்பர் 28 ஆம் — அதிகாரசபையின் கணனி தொடர்பாக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம்

	திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை	ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் இல. 756	வாகனம் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.
(எ)	பீஎப்/எப்எஸ்/ஏ– வாகனம் / 2009 ஆம் இலக்க மற்றும் 2010 யூலை 14 ஆம் திகதிய அரசாங்க நிதி திணைக்களச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பந்திகள்	திருத்தம் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ள வாகனங்கள் 03 மாதங்களுக்குள் அவசியமான நடைமுறைகளை மேற்கொண்டு திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் 10 வாகனங்கள் தொழிநுட்பக் கோளாறுகளுக்கு உட்பட்டு 3 ½ மாத காலம் முதல் 2 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஏ)	2008 திசெம்பர் 06 ஆந் திகதிய 2009/05 ஆம் இலக்க சமுர்த்தி அதிகாரசபை சுற்றறிக்கையின் அ .1 (V)(VI) பந்தி	மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கு முரிய சகல ஆவணங்களும் உரிய சமுர்த்தி சங்கங்கள்/ சமுர்த்தி படையணியினால் பேணப்பட வேண்டிய போதிலும் இரு பிரதேச செயலாளர் பிரிவுகளின் 14 சமுர்த்தி படையணி/ சங்கங்களினால் சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஐ)	2009 மார்ச் 03 ஆம் திகதிய 177 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானம்	சமுர்த்தி நலன்பெறுனர்களை இனங்காணாத கட்டாய சேமிப்புக் கணக்குகளின் மீதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்காக பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 12,467,468 கூட்டுத்தொகையான இனங்காணப் படாத கட்டாய சேமிப்புகள் 2011 பெப்ரவரி முதல் 2012 ஆகஸ்ட் வரை பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படாது முறையான அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.
(ஒ)	சமூக அபிவிருத்தி மன்றத்தின் பிரமாணங்கள்	

(i)	நிதியப் பயன்பாடு	-	நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பான ஓர் அறிக்கை 06 மாதங்களுக்கு ஒரு தடவை அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட இரு பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக அபிவிருத்தி மன்றத்தால் இப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
		-	ஒவ்வொரு ஆண்டின் போதும் ஆகக் குறைந்தது 80% நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களிற்கு இணங்க அந்த ஆண்டின் போது செலவு செய்ய வேண்டிய போதிலும் 7 மாவட்டங்களின் சில சமூக அபிவிருத்தி மன்றங்கள் இப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(ii)	கூட்டங்கள்		சமூக அபிவிருத்தி மன்றம் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வண்டின் போது ஒரு சமூக அபிவிருத்தி மன்றம் கூட்டத்தைக் கூட்டியிராததுடன் மேலும் ஒரு சமூக அபிவிருத்தி மன்றம் ஒரு கூட்டத்தை மாத்திரம் கூட்டியிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டது.
(iii)	நிதியச் சேகரிப்பு மற்றும் கணக்குகளைப் பேணல்		மதுபானம் மற்றும் புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரத்திற்காக ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்காக வழங்கப்பட்ட பொருட்களுக்கான அச்சீட்டுச் செலவினத் திற்காக மாவட்டச் செயலாளரினால் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்காக ரூபா 2,500 தொகை அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக 24 பிரதேச செயலாளர் பிரிவுகள் 2012 திசெம்பர் மாதமளவிலும் அத்தொகையை

வழங்கியிருக்கவில்லை.

(iv)	கணக்காய்வு	மன்றத்தின் கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட வேண்டியதுடன் வருமானச் செலவினம், மாதாந்த கணக்கு அறிக்கைகளின் பிரதிகள் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தொடர்ச்சியாக இது தொடர்பாக அதிகாரசபைக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நாட்டின் ஒரு சமூக அபிவிருத்தி மன்றத்தினாலும் 2011 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 959,996,736 பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,605,557,616 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 1,645,560,880 தொகையான முன்னேற்றம் காணப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானங்களின் 21% ஆன அதிகரிப்பு இதற்குக் காரணமாகியிருந்ததுடன் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான ரூபா 2,023 மில்லியன் தொகையான அரசாங்க மூலதனப் பங்களிப்பு ஆண்டிற்கான வருமானமாகக் கருதப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தமையே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்கான அரசாங்கத்தின் மீண்டெழும் பங்களிப்பு ரூபா 328 மில்லியன் தொகையால் அதாவது 4% ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் ஒட்டு மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 1% ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் 18% ஆல் குறைவடைந்தமையும் பதவியணிக் கிரயம் 10% இனால் அதிகரித்திருந்தமையும் தெளிவாகக் காணப்பட்டன. மீளாய்வாண்டின் பதவியணிக் கிரயம் ஒட்டுமொத்த செலவினத்தில் 74% ஆனதுடன் இது மொத்த வருமானத்தின் 82% சதவீதமாகக் காணப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 நிதியத்தின் கணக்குகளைப் பேணுவதிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமூக அபிவிருத்தி நிதியம்

மீளாய்வாண்டின் இறுதியில் நாடெங்கிலும் அமைந்துள்ள 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் சமூக அபிவிருத்தி நிதியத்தில் காணப்பட்ட மீதிகள் தொடர்பான விபரங்களை 2012 திசெம்பர் மாதம் வரையிலும் அதிகாரசபைக்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்புகளின் போது வெற்றி பெற்ற எனினும், 2012 நவம்பர் மாதமளவிலும் உரிய நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிராத 380 பரிசுகளுக்கான பணப் பெறுமதி ரூபா 57 மில்லியன் தொகையாகும்.

(ii) தரவு முறைமை உரிய முறையில் நாளதுவரையாக்கப்படாமையாலும் நலன்பெறுனர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாகப் பெறப்பட்டிராமையாலும் 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய பரிசுகளில் 12% முதல் 18% வரையான வீச்சிலான பரிசுகள் நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

4.1.2 எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2001 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட சமுர்த்தி லொத்தர் நிதியத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய மீதி ரூபா 55,173,447 ஆக இருந்துடன் 2011 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் திட்டமிடப்பட்ட் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மேம்பாட்டு மற்றும் விளம்பர நிதியத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய மீதி ரூபா 20,487,000 ஆனதுடன் இது எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் நிலவிய இந் நிதியத்தில் இருந்து முறையே முன்னைய ஆண்டின் போதும்

மீளாய்வாண்டின் போதும் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 208,000 தொகையும் ரூபா 55,000 தொகையும் செலவிட்டதைத் தவிர வேறு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(iii) சமூகத்தின் பல்வேறு பாதகமான நிலைகளை எதிர்கொண்டு நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ள நபர்களுக்கு உதவிபுரியும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட சமூக அபிவிருத்தி நிதியத்திற்காக சமுர்த்திக் கொடி விற்பனையின் மூலம், செல்வந்தர்களின் பண அன்பளிப்பு மற்றும் வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி அப் பிரிவிற்குள் திட்டமிடப்பட்ட செயற்பணிக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 200 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிலவிய ரூபா 91,120,903 தொகையான மீதி உரிய நோக்கத்திற்காக செலவு செய்யப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

4.1.3 மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் 12 பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பணம் ரூபா 3,284.1 மில்லியன் ஆக இருந்த போதிலும் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 2,257 மில்லியன் தொகையானமையால் ஏற்பாடுகளில் 31% எஞ்சியிருந்தன.

4.1.4 அதிகாரசபையின் 8 அபிவிருத்தி பிரிவுகளினால் அவற்றின் செயற்பாடுகளை அமுல்படுத்துகையில் 2011 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட 37 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய 136,547 செயற்திட்ட அலகுகளில் 73,364 செயற்திட்ட அலகுகள் அதாவது 54% மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன.

4.1.5 அதிகாரசபையின் 5 பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 119.46 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட 4,762 நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு முடியாதிருந்தது.

4:2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான செயலகத்தை நிர்மாணித்தல்

அதிகாரசபைக்கு பிரதான செயலகத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு காணி 2003 ஆம் ஆண்டின் போது ரூபா 37,560,000 செலவில் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 346,383 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(i) குத்தகை உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் காணி அபிவிருத்திக்காக இரு சந்தர்ப்பங்களின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தமையால் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) இக் காணியில் அதிகாரசபையின் எழுதுகருவிகளை களஞ்சியப்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,888,210 செலவில் ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டதை அடுத்து அந் நிர்மாணிப்புத் தொடர்பாகச் செயற்படும் விதம் குறித்து உரிய தரப்பினருடன் உடன்பாட்டிற்கு வருவதற்கு 2012 செப்தெம்பர் மாதமளவிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) எவ்வாறெனினும், அதிகாரசபையின் தலைமைக் காரியாலயம் "செத்சிறிபாய" கட்டிடத்தில் இயங்கி வருவதுடன் 2011 ஆம் ஆண்டிற்கான வாடகையாக ரூபா 61,925,132 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையால் இரு நிறுவகங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,250,000 தொகைக்காக அப் பணம் முதலீடு செய்யப்பட்ட நாள் முதல் 2011 திசெம்பர் 31 வரை நலன்கள் எதுவும் பெறப்பட்டிராததுடன் இதற்காக திருப்திகரமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அதிகாரசபை செயற்பட்டிருக்கவில்லை.

(இ) பல வருடகாலமாக வங்கி நிதிப் பிரிவில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 181,155,092 கூட்டுத்தொகையான அறவிடமுடியாக் கடனில் எத் தொகையையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ஈ) எழுதுகருவிகள் இருப்புக் களஞ்சியத்தில் நிலவும் முறைகேடுகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ஏற்பட்ட எழுதுகருவி பொருள் சேதம் ரூபா 3,688,824 ஆனதுடன் முன்னைய ஆண்டின் போது இது ரூபா 228,033 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இருப்பு சேதம் 1,518% ஆல் அதிகரித்திருந்ததுடன் இந்நிலையைக் குறைத்துக்கொள்வதற்காக முறையான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கிரிஅல்ல பிரதேச செயலாளர் பிரிவில் 02 சமுர்த்தி வங்கி சங்கங்களுக்குரிய சமுர்த்தி நலன்பெறுனர்களின் 1153 பண முத்திரைக்கான ரூபா 242,130 தொகையான பணம் உரிய நலன்பெறுனர்களுக்காக மீளளிப்புச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தெகியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில் 03 சமுர்த்தி வங்கி சங்கங்களுக்குரிய சமுர்த்தி நலன்பெறுனர்களுக்காக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,669,762 கூட்டுத்தொகையான பணம் முத்திரைப் பெறுமதி அவர்களது வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சமுர்த்தி வங்கி சங்கங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது 03 வங்கிச் சங்கங்களுக்குரிய சமுர்த்தி நலன்பெறுனர்களுக்கான கட்டாயச் சேமிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 4,759,050 தொகையினை கணக்குகளுக்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 87 சமுர்த்தி வங்கிக் கிளைகளை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 149 மில்லியன் தொகையில் ரூபா 9 மில்லியனை மீளாய்வாண்டின் போது விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஏற்பட்ட 12 வாகன விபத்துக்களுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 310,899 கூட்டுத்தொகையான காப்புறுதி நட்டஈட்டுத் தொகை 2012 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைக் கணனி பயிற்சிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,548,856 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மேலும் சிறந்த பயிற்சி நிறுவகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையின் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஓர் உத்தியோத்தருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 30,050 தொகை கிரயத்திலான டிஜிடல் வகையான ஓர் கமரா மீள பொறுப்பேற்கப்படாது உத்தியோகத்தர் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் எழுதுகருவி சுழற்சி நிதியத்தின் வழிப்போக்கில் உள்ள பணக் கணக்கின் மீதி ரூபா 2,804,904 ஆகக் காணப்பட்டது. இதில் ரூபா 1,139,757 தொகையான காசோலைகளை அதிகாரசபை பெறப்படுவதற்காக 05 நாட்களுக்கும் 30 நாட்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்ததுடன் ரூபா 246,313 தொகையான காசோலைகளை அதிகாரசபையினால் பெற்றுக்கொள்வதற்கு ஒரு மாதத்திற்கும் மேலான காலம் கடந்திருந்தது.

(இ) அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று மற்றும் வெளிக்கள உத்தியோகத்தரால் மாதாந்த முன் நிகழ்ச்சித்திட்டங்களும் செய்யப்பட்ட வேலை அறிக்கையும் உரிய தலைவர்களின் அங்கீகாரத்துடன் பேணப்பட வேண்டிய போதிலும் தலைமைக் காரியாலயத்தில் சேவையில் ஈடுபட்ட சில உத்தியோகத்தர்களிடம் இருந்து மாதாந்த முன் நிகழ்ச்சித்திட்டங்களையும் செய்யப்பட்ட வேலை அறிக்கைகளையும் உரிய முறையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட 13 உட்கட்டமைப்பு வசதி செயற்திட்டங்களின் 53 விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகையினை மிகைத்து ரூபா 672,834 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) முறையாக நிர்மாணிப்புகள் மற்றும் பேணல்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் இரு பிரதேச செயலாளர் பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 530,240 தொகை விளைவற்ற செலவினமாகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டு முதல் சனாதிபதி ஊடகப் பிரிவின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த அதிகாரசபைக்குச் சொந்தமான 32 ஊடக உபகரண அலகுகளில் மீளக் கிடைக்கப்பெற்ற 13 உபகரணங்கள் மாத்திரமே மீளப் பயன்படுத்தப்படக் கூடிய நிலையில் இருப்பதாக அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் தொழிநுட்பப் பொறியியலாளர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது உபகரணத் தொகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,874,258 தொகை உரிய நிறுவகத்திடம் இருந்து அறவிடப்படாது உபகரணங்களின் மொத்தப் பெறுமதியும் அதிகாரசபையின் உபகரணப் பெறுமானத்தேய்வாக மீளாய்வாண்டின் போது கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மனையியற் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஒரு கம்பனிக்காக அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஒருவர் தனிப்பட்ட ரீதியில் பிணை நின்றமைக்காக தனியார் வங்கி ஒன்றிற்குச் செலுத்த நேரிட்ட ரூபா 2 மில்லியன் தொகையை உரிய கம்பனியிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கும் அதிகாரசபைக்கு நட்டம் ஏற்படும் வகையில் செயற்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரசபையால் 2012 ஆகஸ்ட் மாதம் வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கி எழுதுகருவிகளை களஞ்சியப்படுத்துவதற்காக வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட களஞ்சியத்தில்

காணப்பட்ட சகல எழுதுகருவி இருப்புகளும் 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் அக் களஞ்சியத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் வாடகை வைப்பான ரூபா 1,500,000 தொகையினை 2012 ஆகஸ்ட் மாதம் வரையிலும் மீளப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம் மீதி தொடர்பாக வாடகை உரிமையாளரின் உறுதிப்படுத்தலை கணக்காய்விற்கு வழங்குவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ஈ) ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறித்த தகமைகளைக் கொண்டிராத ஓர் உத்தியோகத்தர் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக 2010 செப்தெம்பர் 15 ஆம் திகதி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர், பதவிக்கு அவசியமான தகமைகளைக் கொண்டிராத போதிலும் நேர்முகப் பரீட்சையும் இன்றி பணிப்பாளராக 2011 மார்ச் 25 ஆம் திகதி பதவி உயர்வு பெற்றிருந்தார். ஆட்சேர்க்கப்பட்ட நாள் முதல் 2011 நவம்பர் வரை சம்பளமும் படிப்பணமுமாக ரூபா 935,620 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் முழுநேர சாரதியுடன் அரசாங்க வாகனம் ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வினால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் இதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. “ உத்தியோகத்தரின் தகமை பூர்த்தி செய்யப்பட்ட 2012 சனவரி 01 ஆம் திகதி பணிப்பாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்ட திகதியாகத் திருத்தியுள்ளதாகவும் 2011 மார்ச் 25 ஆம் திகதி முதல் 2012 சனவரி 01 ஆம் திகதி வரை செலுத்தப்பட்ட மேலதிகச் சம்பளமும் படிப்பணமும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகத்தின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையில் கடமை புரிந்தமையை உறுதிப்படுத்தாது சம்பளமும் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தமை

(i) மீளாய்வாண்டின் போது 03 நாட்கள் மாத்திரமே அதிகாரசபையில் கடமைக்குச் சமூகமளித்த ஓர் உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 205,078 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் ஒரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டிருந்தது. அவ் வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 238,975 தொகையான எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) பிரதேச சபைத் தலைவரான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு அதிகாரசபைக் கடமைகளில் ஈடுபட்டிருந்தமையை உறுதிப்படுத்தாது 2011 யூன் முதல் நவம்பர் வரையான காலப்பகுதியின்

போது சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 130,041 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

4.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெஹியோவிட்ட சமுர்த்தி பொதுச் சங்க கட்டிட திருத்தத்திற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,143,618 தொகையில் 2011 நவம்பர் வரையில் ரூபா 823,404 செலுத்தப்பட்டிருந்த போதிலும் புதிய கட்டிட நிர்மாணிப்புகளும் திருத்தல்களும் முறையான தரத்தில் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் கட்டிடம் உரிய நடவடிக்கைகளுக்காக திருப்திகரமாகப் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2008 ஆகஸ்ட் மாதம் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட தெஹியோவிட்ட போமலுவ சமுர்த்தி வங்கிச் சங்கக் கட்டிடத்தின் மேல் மாடியின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவினம் ரூபா 1,339,881 ஆன போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் 2008 ஆம் ஆண்டின் பின்னர் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.6 ஆளணி முகாமைத்துவம்

ஒழுக்காற்று நடைமுறைகளை அமுல்படுத்துதல்

அதிகாரசபையில் இருந்து சம்பளம் வழங்கப்படும் ஊழியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டின் கீழ் இரு உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்படுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ii) எவ்வாறெனினும் ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான 12 ஊழியர்களுக்கு குற்றப்பத்திரம் வழங்கப்படுவதற்கு 2012 செப்தெம்பர் வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) ஊழியருக்கு குற்றப்பத்திரம் வழங்கப்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக விசாரணைக்குழு நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் 18 ஊழியர்களுக்காக முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதிகாரசபை தவறியிருந்தது.

(v) முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கை பெறப்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த 05 உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிதன்மையும் நல்ஆளுகையும்

5.1 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபையின் வளங்களின் இயலளவு, அமைப்பு வரைபடம், அச் செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் என்பவற்றை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் நிறைவேற்று மட்டத்தில் 03 பதவிகள் உள்ளடங்கலாக 138 பதவிகள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள்/ அறிக்கைகள் 2008 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளின் செயற்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல், அறிக்கையிடல் என்பன காலரீதியாக செய்யப்பட்டிருக்கவில்லை.'' கணக்காய்வு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் கணனி உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் இதற்குக் காரணமாகியிருந்தமை 2012 ஆம் ஆண்டு வரை 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் வழங்கப்பட்டிருந்ததாகவும் பணிப்பாளர் நாயகத்தால் பதிலளிக்கப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும்

கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

 (i) அரசாங்கப் பங்களிப்பு
 (ii) சமுர்த்தி பயிற்சி நிலைய கணக்குகள்
 (i) ஊழியர் கடன் கணக்குகள்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) எழுதுகருவி இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) கடன் முகாமைத்துவம்

 (i) ஊழியர் இடர் கடன் மற்றும் விழா முற்பணம்
 (ii) வாழ்வாதார அபிவிருத்திக் கடன்

(உ) நிலையான சொத்துக்கள்

(ஊ) நிதியக் கணக்குகள்

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய பதில்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் கீழுள்ள பிரகாரம் சமர்ப்பிக்கின்றேன்.

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ) வருமானச்செலவுக்கணக்கில் ஆய்வு மற்றும் அபிவிருத்திச்செலவுகளில் உள்ளடங்கியிருந்த 200 மில்லியனுக்குரிய நிதியக்கிடைப்பனவு நாளேட்டுப் பதிவிலக்கம் 15இன் மூலம் 2012 செப்ரம்பர் மாதம் சீர் செய்யப்பட்டுள்ளது.

ஆ) இது தவறொன்றின் மூலம் முன்னைய வருடக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள காரணத்தினால் அப்பதிவுகளை நாளேட்டுப் பதிவிலக்கம் 10இன் மூலம் 2012 செப்ரம்பர் மாதத்தில் சீர் செய்யப்பட்டது.

இ) கட்டிட நிர்மாணங்களின் பொருட்டு வழங்கப்பட்டிருந்த ரூபா மில்லியன் 241இற்கான தொகையிலிருந்து உண்மையான செலவினை மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த செலவை கட்டிடச்சொத்துக்களாக கணக்குப்பதிவுகளை மேற்கொள்வது வங்கிநிதிப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) இது தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் ஆலோசனைப்பிரகாரம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் சரியான பெறுமதிகள் வங்கிநிதிப்பிரிவின் புத்தகங்களில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

உ) நிலையான சொத்துக்களாக கணக்கு பதிவுகள் மேற்கொண்டதனால் ஏற்பட்ட பிழைகளை சரிசெய்து கொள்ளும் பொருட்டு அச்சொத்துக்களின் பொருட்டு தேய்மான ஒதுக்கங்களை மேற்கொள்வதனால் ஏற்பட்ட பிழைகளை சீர்செய்துகொள்ளும் பொருட்டு நாளேட்டுப்பதிவிலக்கம் 13 மற்றும் 14இன் மூலம் சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊ) ஏற்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு நாளேட்டுப் பதிவிலக்கம் 11 மற்றும் 12இன் மூலம் 2012 செப்ரம்பர் மாதம் சீர்செய்யப்பட்டுள்ளன.

எ) எழுதுகருவி சுழற்சிநிதியத்தின் வருட இறுதி இருப்பு மதிப்பீட்டின் போது பௌதீக இருப்புக்கள் கணக்கில் இடப்பட்டதன் காரணமாக ரூபா 3,289,139/=இற்கான இருப்புத் தொகை வித்தியாசத்தினை சுழற்சி நிதியத்தில் நாளேட்டுப் பதிவுகளை மேற்கொண்டு வருமானத்திலிருந்து நீக்கி ஒதுக்கக்கணக்கில் பதியப்பட்டுள்ளன.

ஏ) மாவட்டச்செயலகத்தினால் குறித்த கடன் தவணைப்பணத்தினை எமக்கு அனுப்பும் போது ஒவ்வொரு நபருக்குமுரிய தவணைப்பண வட்டி தனித்தனியாக அனுப்பப்பட மாட்டாது என்பதுடன் அனுப்பப்படுகின்ற மொத்த கடன் தவணைப்பணத்திலிருந்து

வட்டித்தொகையினை பிரித்தெடுப்பது தலைமைக் காரியாலயத்தின் வங்கிநிதிப்பிரிவாகும்.இவ்வாறு மாவட்டங்களில் இருந்து அனுப்பப்படுகின்ற தவணைப்பணங்களுக்கான காசோலை கிடைத்தவுடனே குறித்த தொகை கிடைக்க வேண்டிய வீடமைப்புக்கடன் கணக்கில் வரவு வைத்து அதற்குரிய வட்டிகளை ஒதுக்கிக்கொண்டதன் பின்னர் கிடைத்த வட்டி வீடமைப்புக்கடன் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது.

குறித்த வருடத்திற்குரிய வட்டித்தொகை அவ்வருடத்திற்குள்ளேயே கிடைத்த வட்டிக்கணக்கில் வரவு வைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒ) வங்கிநிதிப்பிரிவில் இருந்து வழங்கப்பட்ட ஊழியர் கடன் நிலுவையின் பொருட்டு வருட இறுதியில் அறவிடவேண்டிய வட்டியினை கணக்கிட்டு கணக்குப்பதிவுகளை மேற்கொள்வதற்கு பின்னைய ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.2 <u>இணங்காத கட்டுப்பாட்டுக்கணக்கு</u>

கீழ்குறிப்பிடப்படுகின்ற கணக்குகளின் மீதிகளில் வித்தியாசங்களை ஏற்கனவே கீழுள்ள பிரகாரம் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டவண்ணமுள்ளது.

விடயம்	பொதுப்பேரேட்டுக் கணக்கின் மீதி	உப அட்டவணையின் கூட்டுத்தொகை ரூபா	ஏற்பட்டிருந்த வித்தியாசம் ரூபா	தற்போதுள்ள வித்தியாசம் ரூபா
ஊழியர் மோட்டார் சைக்கிள் கடன்	99,739,615.51	99,780,398.72	129,497.00	40,783.22
ஊழியர் வீடமைப்புக்கடன்	601,242,595.89	610,909,336.36	15,586,931.00	1,187,401.64
மக்கள் எழுச்சிக்கடன்(ஜன புபுது)	221,930.00	82,117.00	139,813.00	139,813.00

2.2.3 <u>கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

அ) நீண்டகாலம் முதல் தொடர்ந்து எடுத்துச்செல்லப்பட்ட வண்ணமுள்ள ரூபா 1,899,981/= இற்கான தொங்கல் கடன்படுனர் மீதி தொடர்பில் 2012.12.31ம் திகதியில் இறுதிக்கணக்குகளின் சீராக்கம் செய்யும் பொருட்டு தீர்மானமொன்றை மேற்கொள்வது தொடர்பில் பணிப்பாளர்சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 244வது பணிப்பாளர் சபை கூட்டத்தில் நிதிப்பிரமாணம் 104இன் பிரகாரம் விசாரணைக்குழுவொன்றினை நியமித்து முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆ) துரித கடன் ஊக்குவிப்பு காப்பீட்டு நிதியம்

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவின் மூலம் வைப்புச்செய்யப்பட்டுள்ள பிணைத்தொகைகளில் இருந்து 2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் அறவிடவேண்டிய தொகையானது ரூபா 758,022.61 ஆகும்.

2012ம் ஆண்டில் இதுவரை ரூபா 199251.41 அறவிடப்பட்டது. அதன் பிரகாரம் தொடர்ந்தும் அறவிடவேண்டிய தொகையானது ரூபா 558,771.20 ஆகும்.கொடுப்பனவுகளை செலுத்தாது உள்ள உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இ) ஆசிய அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் ஆள்சார் பேரேட்டுப்படிவ அச்சிடலின் பொருட்டு மேற்கொண்ட கொடுப்பனவுகளில் சமுர்த்தி அதிகாரசபை மற்றும் நிதி அமைச்சினால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரித்தொகை இருமுறை கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு செலுத்தியிருப்பதன் காரணமாக வங்கிநிதிப்பிரிவின் கணக்குகளில் கிடைக்க வேண்டிய தொகையாக ரூபா 517,304/= ஐ சுட்டிக்காட்டப்படுகின்றது.இது தொடர்பில் நிதி அமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதனை சீர்செய்துகொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஈ) இந்நிதியினை வழங்குமாறு திறைசேரியிடம் நாம் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தோம்.இதுவரை நிதி கிடைக்காததன் அடிப்படையில் பணிப்பாளர்சபை வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் இத்தொகையினை வருடாந்த மதிப்பீட்டின் கீழ் திறைசேரியில் இருந்து கிடைக்கின்ற நிதியில் இருந்து ஈடுசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உ) 2004 மற்றும் 2005ம் ஆண்டுகளில் இருந்து கிடைக்கவேண்டியதாகவுள்ள இப்பதிவுகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து உரிய தவறுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஊ) 2003ம் ஆண்டில் இருந்து தொடர்ந்துவரும் இவ்வருடத்திற்குரிய தகவல்களை தேடிக்கொள்ள முடியாதுள்ளதனால் பணிப்பாளர்சபைக்கு இத்தகவல்களை சமர்ப்பித்து முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.4 கணக்காய்வின் பொருட்டான காட்சிகள் இல்லாமை

அ) அரசாங்கத்தின் பங்களிப்பு 554,419,261
விபரங்களுடனான தகவல்கள் நிதிப்பிரிவில் உள்ளது.

ஆ) ஊழியர் நுகர்வுக்கடன் 524,260,761/=
வங்கி நிதிப்பிரிவின் பேரேடுகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது. அதற்கமைய சரியான உப அட்டவணைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை மாவட்ட மட்டத்தில் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

இ) உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டம் இரண்டிற்கு வழங்கிய நிதி ஒதுக்கீடு

(i)கணுக்கல்ல பஹலவெலவுக்கு அண்மியதாக கால்வாய் மற்றும் பக்கச்சுவர்களை நிர்மாணித்தல்
குறித்த கருத்திட்டத்தின் பக்கச்சுவர்களை நிர்மாணித்தல் விசேட கருத்திட்ட வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி அதிகாரசபையின் மூலம் செயற்படுத்தப்பட்டது.கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது குறித்த விடயங்களுக்கேற்ப கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதி முடிவறிக்கை ரூபா 230,849/= ஆக இருந்தாலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது ரூபா 184,679/- மாத்திரமாகும். 20% த்திற்கு மேலான மக்கள் பங்களிப்பினைப் பெற்றுக்கொண்டு இக்கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (மதிப்பீட்டறிக்கை பூர்த்தியான வேலையின் அறிக்கை மற்றும் கொடுப்பனவு வவுச்சர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.)

(ii)தெஹெரகொட கெந்தலந்த பாதை நிர்மாணம்
இப்பாதையானது மேடுபள்ளங்களைக்கொண்ட ஒரு பாதையாகும் என்பதுடன் ''பெக்கோ'' இயந்திரங்களைப் பயன்படுத்தி பாதை வெட்டப்பட்டது மாத்திரம் சமுர்த்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் கிராமிய சமுர்த்தி செயலணி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செலவிடப்பட்டுள்ள தொகையானது ரூபா 197,500/- ஆகும். (மதிப்பீட்டறிக்கை முடிவான வேலை அறிக்கை மற்றும் கொடுப்பனவு வவுச்சர் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.)

ஈ) மீளாய்வு ஆண்டின் அபிவிருத்திச்செலவின் பொருட்டு மூலதனப்பங்களிப்பாக திறைசேரியிலிருந்து கிடைத்த தொகைக்கு மேலதிகமாக ரூபா 21,734,555/- அபிவிருத்திச்செலவின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பது 2011ம் ஆண்டின் தலைமை அலுவலகத்தின் ஆரம்ப நிதி மீதி மற்றும் மாவட்டச்செயலக வழிப்பணங்களில் இருந்தாகும்.இதுவரை அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பொருட்டு குறித்த பிரிவால் செலவிட்ட நிதி ஒதுக்கீடுகளுக்குரிய தரவு விபரங்கள் அந்தந்த அபிவிருத்திப்பிரிவுகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

2.2.5 <u>சட்டதிட்டங்கள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ஒவ்வாமை</u>

அ) இந்த லொத்தர் வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு தேசிய லொத்தர்சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடனடியாக லொத்தர்களை மக்கள் கொள்வனவு செய்வது மிக குறைந்த பட்சத்தில் இருந்ததனால் லொத்தர் வேலைத்திட்டத்தினை பராமரித்துச்செல்வது பொருத்தமற்றது என அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த லொத்தரை செயற்படுத்துவதனை லொத்தர் சபை இடைநிறுத்தியது. இருப்பினும் லொத்தர் நிதியத்தில் இருந்த தொகை 2012ம் ஆண்டில் திரியபியச வீடமைப்பு நிர்மாண வேலைத்திட்டங்களின் பொருட்டு பயன்படுத்தி முடிப்பதற்கு லொத்தர் நிதியம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆ) நியாயாதிக்க நிறுவனமொன்றான எமது நிறுவனத்தின் உத்தியோகத்தர் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையினை பயன்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளது.

அதற்கமைய 2011ம் ஆண்டின் மாகாண தேர்தலின் பொருட்டு தேர்தல் அபேட்சகர்களாக போட்டியிட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையில் கடமையில் ஈடுபட்டுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் தாபன விதிக்கோவையின் XXXIIவது அத்தியாயத்தின் 2:3:2 பிரிவிற்கமைய வேட்புமனுவை தாக்கல் செய்ய ஒரு வாரத்திற்கு முன்னர் தொடக்கம் தேர்தல் தினம் வரையில் சம்பளமற்ற விடுமறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

மேலும் வேட்புமனுவை தாக்கல் செய்ய ஒரு வாரத்திற்கு முன்னர் பல்வேறு திகதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சகல உத்தியோகத்தர்களினதும் அக்காலத்திற்குரியவாறு சம்பளத்தில் அறவிட்டுக்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இ) நிதிப்பிரமாணம்

(i)தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பொருட்பட்டோலை பொருட்களை இனங்காணக்கூடியவாறு வழங்கப்படுகின்ற இலக்கத்திலிருந்து பரீட்சித்து மீளப்பொறுப்பேற்றுக் கொள்வதுடன் மாவட்டச்செயலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பொருட்பட்டோலைகளில் அப்பொருட்களில் உள்ள பிற குறியீட்டு இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. இந்த தவறுகளையும் தற்போது சீர்செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ii)அதிகாரசபையிடமுள்ள 33 வாகனங்களுக்குமுரிய வாகன ஓட்டுனர் குறிப்பேடு நிருவாகப்பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன் பிரதிகளை அரசாங்க கணக்காய்வுப்பிரிவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.அத்துடன் ஒவ்வொரு வாகனத்தினதும் நாளாந்த வாகன ஓட்டுநர் குறிப்பேட்டுப் புத்தகம் மாத இறுதியில் முடிவடைந்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன்னர் நிர்வாகப்பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு சகல வாகனங்களினதும் சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதனால் அதற்கமைய உரிய பிரகாரம் அவை வழங்கப்படும் என்பதினை வினயமுடன் அறியத்தருகின்றேன்.

ஈ) தேடி வழங்கல் வழிகாட்டல் கோவை - 2006-

4.2.1 பந்தி

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை உட்பட இன்னும் பல நிறுவனங்களை ஒன்றோடு ஒன்றிணைத்து ''திவிநெகும'' என்ற பெயரில் திணைக்களம் ஒன்றினை தாபிப்பதற்கு 2010ம் ஆண்டிலிருந்து திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக புதிய திணைக்களத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தேடிவழங்கல் தேவைகள் தொடர்பில் தெளிவான விதத்தில் ஆவணப்படுத்தல்களை மேற்கொள்வது கஷ்டமானது என்பதனால் எதிர்வரும் மூன்று வருடங்களின் பொருட்டு தேடிவழங்கல் திட்டம் தயாரிக்கப்படவில்லை.இருப்பினும் வருடாந்த வரவுசெலவு மதிப்பீட்டிற்குள் தேடிவழங்கல் நடவடிக்கையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகையில இருந்து மாவட்ட மற்றும் பிரதான அலுவலக சமுர்த்திப்பிரிவுகளின் தேவையின் பொருட்டு வருடாந்த தேடி வழங்கல் திட்டம் ஒன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வருடாந்த வரவுசெலவு மதிப்பீட்டில் தேடிவழங்கல்

நடவடிக்கைகளின் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து மாவட்ட மற்றும் தலைமையலுவலக சமுர்த்திப்பிரிவுகளின் தேவைகளின் பொருட்டு வருடாந்த தேடிவழங்கல் திட்டம் ஒன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

4.2.2 (ஆ)

பந்தி - இது தொடர்பில் இருந்த குறைபாடுகளை ஏற்றுக்கொள்வதுடன் அவற்றினை சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனை வினயமுடன் அறியத்தருகின்றேன். 2012ம் ஆண்டில் இதனை சரிசெய்து சமுர்த்தி கொடி மற்றும் பதாதைகள் அச்சின் பொருட்டு குறித்த காலவரையறைகள் உட்படுத்தப்பட்ட நேரசூசிக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உ) (i)இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு வாகனங்களை கொள்வனவுசெய்த வருடங்களில் குறித்த வாகனங்களின் பெறுமதி மற்றும் எண்ணிக்கை வருடாந்த நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்யும் அட்டவணையில் உட்படுத்தியுள்ளது. அதேபோன்று ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் அட்டவணையொன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது.

(ii)அதிகாரசபைக்கு சொந்தமான கணணிகளின் கொள்வனவுகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்திலேயே அவ்வாறு கொள்வனவு செய்கின்ற கணணிகளது பெறுமதி வருடாந்த நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்யும் அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளது.மேலும் திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் IAI02/2002 இற்கமைய கணணிப்பட்டியல் ஒன்றினைப் பராமரிப்பது கணணி தொழில் நுட்பப்பிரிவின் மூலம் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊ) வாகனங்கள் தொடர்பான வருடாந்த ஆய்வுச்சபை ஒன்றினை நியமித்து ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது.

எ) PF/FS/A hehi/2009 என்ற இலக்கமும் 2010 ஜுலை 14ம் திகதி இடப்பட்ட அரசாங்க நிதித்திணைக்கள சுற்றறிக்கை பந்தியிலக்கம் 03 மற்றும் 05.
திருத்த வேண்டிய நிலைக்குள்ளான வாகனங்களில் குறைபாடாக உள்ளவற்றினை பரீட்சித்துப்பார்த்து தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சினைப் பெற்று திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.10 வருடங்களுக்கு மேலான பழைய வாகனங்கள் நீக்கஞ்செய்யப்படவேண்டிய நிலையில் இருந்தாலும் கடமைத் தேவையின் அடிப்படையில் திருத்தங்களை மேற்கொண்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அகற்ற வேண்டிய வாகனங்கள் தொடர்பில் அமைச்சின் மூலம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் முன்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏ) சமுர்த்தி செயலணி மற்றும் சமுர்த்திச் சங்கங்களில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு ஒப்பந்தத்திலுமான கொடுக்கல் வாங்கல்களை முறையாக பராமரித்துக்கொள்ளும் பொருட்டு ஆலோசனைகள் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளன.இருப்பினும் சமுர்த்திப் பயனாளிகளால் இந்நடவடிக்கைகள் பராமரிக்கப்படுகின்ற

காரணத்தினால் அவர்களால் வழங்கப்படுகின்ற ஆலோசனைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அதிகமான சந்தர்ப்பத்தில் கவனத்திற்கொள்ளப்படுவதில்லை. இது தொடர்பில் சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் முறையாக கண்காணிப்பினை மேற்கொள்ளுமாறு அறிவிப்பதற்கு பயிற்சிப்பட்டறைகளின் போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒ) திறைசேரி நெறிப்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தின் TO/TM/RES/03/2012 மற்றும் 2012/12/12 மூலதன கிடைப்பனவாக கணக்கில் பதிவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஓ) <u>**(i)சமூக அபிவிருத்திமன்ற அமைப்பு விதி நிதியப்பயன்பாடு**</u>
தெஹியோவிட்ட மற்றும் கிரிஎல்லை ஆகிய பிரதேசசெயலகங்களில் இருந்து இவ்வறிக்கைப் பிரதிகள் எமக்கு அனுப்பப்பட்டுள்ளன.சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியங்களை செலவிடுவதற்காக 2011ம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்கள் அதிகாரசபைக்கு வரவழைத்து அங்கீகரிக்க வேண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதனால் ஒவ்வொரு மாவட்டமும் இப்பணியினை பிழையின்றி மேற்கொண்டுள்ளது.

(ii)கூட்டங்கள்
இச்சமூக அபிவிருத்தி மன்றங்களது அறிக்கைகள் ஏற்கனவே எமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால் அதற்கமைய கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதனை குறிப்பிடுகின்றேன்.

(iii)நிதியங்களை சேர்ப்பதும் கணக்கு வைப்பதும்
நிதியினை அனுப்புவதில் ஒருசில தாமதங்கள் ஏற்பட்டிருந்தாலும் இதுவரை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா தவிர்ந்த ஏனைய பிரதேசசெயலகங்களில் இருந்து அறவிடப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து அத்தொகையினை அறவிட்டுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனையும் அறியத்தருகின்றேன்.

(iv)கணக்காய்வு
சமூக அபிவிருத்தி மன்றத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளை மகாசங்க செயற்பாட்டில் உள்ள பணியாக பராமரித்துச்செல்லப்படுவதனால் வருடாந்தம் மகாசங்க கணக்காய்வின் போது சமூக அபிவிருத்தி மன்றத்தின் கணக்குகளும் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

4. நெறிப்படுத்தல் மீளாய்வு

4.1 வினைத்திறன்

4.1.1 நிதியக்கணக்குகளை பராமரித்துச் செல்வதில் உள்ள குறைபாடுகள்

அ) <u>**சமூக அபிவிருத்தி நிதியம்**</u>
இதுவரையில் 112 பிரதேசசெயலகப்பிரிவுகளில் இருந்து குறித்த மீதிகள் தொடர்பான விபரங்கள் கிடைத்துள்ளதுடன் எஞ்சிய பிரதேசசெயலகப்பிரிவுகள் 05ல் இருந்து பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவண்ணமுள்ளது.

ஆ) <u>சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் நிதியம்</u>

i)ஏற்கனவே குறித்த எடுகோள்களைப்பூர்த்தி செய்துள்ள சகல பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன் இறந்த மற்றும் தகுதிகள் அற்ற பயனாளிகளது தொகை வீடமைப்பு லொத்தர் நம்பிக்கை சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2012ம் ஆண்டின் கணக்குகள் மூலம் நிதியத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii)சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு சமுர்த்தி பயனாளிகளது தகவல்கள் உள்ளடங்கிய கணணி தரவுத்தொகுதியினை தயாரித்தது 2002ம் ஆண்டிலாகும்.14 சீட்டிழுப்புகளின் தரவுத்தொகுதி முறைமைப்படுத்தப்பட்டதுடன் இந்த நிலையின் பிரகாரம் தகவல் தொகுதியினை முறைமைப்படுத்துவதில் பிழைகள் இருப்பதன் காரணத்தினால் ஒரு குறிப்பிட்ட அளவில் வெற்றி வாய்ப்புக்கள் கிடைக்காமல் போனது.

eசமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் புதிய தரவுத்தொகுதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த சீட்டிழுப்பின் பொழுது இப்புதிய தரவுத்தொகுதியினை பயன்படுத்தப்படவுள்ளது.

4.1.2 <u>உத்தேசக் குறிக்கோள்களின் பொருட்டு பயன்படுத்தாத நிதியங்கள்</u>

i)செயற்படாத சமுர்த்தி லொத்தர் நிதிய மீதியினை 2012.01.10ம் திகதி நடைபெற்ற 232வது பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் சபை படிவ இலக்கம் 15/2012 இற்கமைய திரியபியச வீடமைப்பு வேலைத்திட்டத்தின் பொருட்டு பிரயோகித்து லொத்தர் நிதியத்தினை முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii)இத்தொகையினை வங்கிச்சங்க பிரசாரம் தொடர்பான அறிவித்தல்களை மேற்கொள்வதற்கு செய்தித்தாள் நிறுவனமொன்றிற்கும் ஞாபகார்த்த மலரொன்றிற்கும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய இச்செலவுகள் நிதியத்தின் நோக்கத்தின் பொருட்டு செலவிடப்பட்டுள்ளது என்பதனை வினயமுடன் அறியத்தருகின்றேன்.எதிர்காலத்தில் நிதியத்தினை எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

iii)சமூக அபிவிருத்தி நிதியம் குறித்த பிரதேச செயலகப்பிரிவில் சமூக அபிவிருத்தி மன்றத்தின் மூலம் ஈட்டப்பட்ட தொகையாகும்.இருப்பினும் அவை குறித்த பணிகளின் பொருட்டு ஈடுபடுத்தும் நடவடிக்கைகளான மேற்பார்வை செய்வது இவ்வதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகின்ற பணியாகும்.அதற்கமைய சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தின் நிதியங்களை செலவிடும் பொருட்டு 2011ம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்களையும் அவற்றினை அதிகாரசபைக்கு வரவழைத்து அங்கீகரித்துக்கொள்ளல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருப்பதனால் ஒவ்வொரு சமூக அபிவிருத்தி மன்றத்திலிருந்தும் இந்நிதியத்தினை சரியான பணிகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.1.3 மீளாய்வு ஆண்டிற்குள் அதிகாரசபையின் 12 பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட தொகையான ரூபா மில்லியன் 3,284.1 எனவும் செலவிடப்பட்டுள்ள தொகையானது ரூபா மில்லியன் 2,257 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அங்கீகரித்த தொகையிலிருந்து செலவிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டு விகிதாசாரமானது 68.7% ஆகும் என வினயமுடன் அறியத்தருகின்றேன். அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் மாவட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பொருட்டு நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டாலும் திறைசேரியில் இருந்து கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக நிதி ஒதுக்கீடு எஞ்சியுள்ளது. அத்துடன் பூர்த்திசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கான திரட்டிய தொகையானது ரூபா மில்லியன் 393 ஆகும்.

4.1.4 இப்பிரிவினால் திட்டமிடப்பட்ட 37 வேலைத்திட்டங்களுக்குரிய 136,546 கருத்திட்டங்களுக்குரியவாறு நிதி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கல்களின் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களில் திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட நிதியினை வருடத்தின் நடுப்பகுதியில் கிடைத்ததன் காரணமாக ஒருசில கருத்திட்டங்களை செயற்படுத்துவது முடியாமல் போனது.அதற்கமைய கருத்திட்டங்களின் எண்ணிக்கையை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனவை தொடர்பில் வினயமுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

4.1.5 அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்பட்டதனால் இந்த நிலை உருவாகியது.அதற்கமைய ரூபா மில்லியன் 119 மட்டளவிலான செலவுக்கிரயத்தினைக் கொண்ட வேலைத்திட்டத்தினை செயற்படுத்த முடியாமல் போனதினை வினயமுடன் சுட்டிக்காட்டுகின்றேன்.

4.2 <u>சீரற்ற முகாமைத்துவம்</u>

<u>அ) தலைமை செயலகத்தினை நிர்மாணித்தல்</u>

i)குறித்த வாடகை ஒப்பந்தத்தின் பிரகாரம் கட்டிட நிலத்திற்கான வாடகை இலக்கமும் நீர் மற்றும் மின்சாரமும் பெறப்பட்டுள்ளதுடன் கிராம உத்தியோகத்தர் மூலம் வீட்டிலக்கமும் பெற்றுக்கொண்டு சமுர்த்தி அதிகாரசபையின் பொருட்டு பிரதான களஞ்சிய கட்டிடமொன்றினை இதுவரை நிர்மாணித்து பயன்படுத்தி வருகின்றது.

ii)இக்காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள களஞ்சியக்கட்டிடம் மற்றும் நிலம் தொடர்பில் உருவாகியுள்ள பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையோடு செயற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உருவாகும் புதிய ‘‘திவிநெகும’’ திணைக்களத்திற்குத் தேவையான கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சுக்கு தேவையான அங்கீகாரத்தின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

iii)இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு இதுவரை தலைமை அலுவலகம் ஒன்று இல்லாததன் காரணமாக 27000த்திற்கு உட்பட்ட ஊழியர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் கடமை நடவடிக்கையின் பொருட்டான தலைமை அலுவலகம் செத்சிரிபாய அலுவலகத் தொகுதியில் அமைந்துள்ளதுடன் அதன்பொருட்டு தொடர்ந்தும் வாடகை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ஆ) கல்கமுவ பழங்கள் ஏற்றுமதி உற்பத்தி நிறுவனத்தில் பங்குகளை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா 4,760,000/- முதலீடு செய்தல்

சமுர்த்தி அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பங்குகளை சிலோன் பிஸ்கட் நிறுவனம் கொள்வனவு செய்ய இணங்கியிருந்ததன் காரணமாக அதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தாலும் பதில் கிடைக்காததன் காரணத்தினால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் குற்றத்தடுப்பு திணைக்களத்திற்கு விசாரணையின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ACX சமுர்த்தி தனியார் நிறுவனம்

இவ்வாறான நிறுவனமொன்று தற்போது இல்லாததன் காரணமாக முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவினருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இ) வங்கிநிதிப்பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் கடன் வேலைத்திட்டத்தின் பொருட்டு வழங்கப்பட்ட நிதியிலிருந்து அறவிடாத மீதிகளின் பொருட்டு அறவிடமுடியாக்கடன் ஒதுக்கமாக இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.இதன் கீழ் செயற்பட்ட People Leasing வேலைத்திட்டத்திற்குரியவாறு மில்லியன் 38இல் இருந்து 2012ம் ஆண்டில் ரூபா 379569 அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையினை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் People Leasing நிறுவனத்திடமிருந்து தொடர்ந்தும் அறவிடவேண்டிய தொகையாக 2012ம் ஆண்டில் ஆரம்பத்திலிருந்த பெறுமதியானது ரூபா 38158865.00 எனக்காட்டப்பட்டிருந்தாலும் இந்நிறுவனத்தினால் பொருள் இறக்குமதி வரியாக ரூபா 13040056.00 தொகையினை கழித்துள்ளது.அத்துடன் 2012ம் ஆண்டிற்குள் மூன்று சந்தர்ப்பங்களில் ஆரம்பத்தொகையாக ரூபா 244,341/- தொகை அறவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தொடர்ந்தும் அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகையானது ரூபா 24,739,234.18 ஆகும்.

சசன கடன் மற்றும் சவனகடன்
சசன மற்றும் சவன கடன்களைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளை செலுத்தாமல் உள்ள சகல பயனாளிகளிடமிருந்து குறித்த செலுத்தாமல் உள்ள கடனை இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிகளோடு கலந்துரையாடி உடனடியாக அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தியதிலக்க எப்பரல்ஸ் நிறுவனம்
தியதிலக்க எப்பரல் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா மில்லியன் 28 தொகையிலிருந்து 18.2 மட்டளவிலான தொகையினை குறித்த நிறுவனத்தினால் செலுத்தாத காரணத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் குற்றத்தடுப்பு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
ஈ) சமுர்த்தி வங்கிச்சங்க எழுதுகருவிகளின் அச்சுப்பதிவு நடவடிக்கைகள் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அங்கு எழுதுகருவிகள் பாரிய அளவு இருப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.இருப்பினும் கணக்கீட்டுச் செயற்பாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக ஒரு சில எழுதுகருவிகள் பாவனையில் இருந்து நீக்கப்பட்டன. (தனித்தாள் பேரேட்டுப்படிவம்

அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதுவரை பயன்படுத்தப்பட்ட 5-14,5-15,5-16,5-17,5-18,5-19,5-20 போன்ற படிவங்கள் பாவனையில் இருந்து நீக்கப்பட்டன)

அத்துடன் 2000-2010ம் ஆண்டுவரை மாவட்டச்செயலகங்கள் உட்பட தலைமையலுவலகத்தின் களஞ்சியசாலைகளில் உள்ள எழுதுகருவிகள் பல்வேறு காரணங்களினால் பயன்படுத்த முடியாத நிலைக்குள்ளாகியுள்ளது. அவ்வாறான சகல இருப்புக்களையும் இனங்கண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப்பெற்றுக்கொண்டு 2011ம் ஆண்டில் நீக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் 2011ம் ஆண்டில் இருப்புக்களின் இழப்பு மற்றும் நீக்கங்களின் வீதாசாரம் காரணமாகியது.

உ) இது தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன் பணமுத்திரைப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்காத காரணத்தினால் அத்தொகையினை ஈடுசெய்து கொள்ளமுடியாமல் போனதாக உறுதிப்படுத்தப்பட்டது.அதற்கமைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊ) பயனாளிகளின் பொருட்டு ஈடுசெய்துகொண்ட பணமுத்திரைக்கான இத்தொகையை பயனாளிகளின் கணக்குகளை இனங்கண்டுகொண்டு குறித்த கணக்குகளில் வரவு வைப்பதற்கு அவ்வங்கிச்சங்கங்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எ) பயனாளிகளின் கணக்குகளுக்கு வரவுவைக்க வேண்டிய கட்டாயச்சேமிப்புக்களுக்குரிய இத்தொகை பயனாளிகளின் கணக்குகளை இனங்கண்டு உரிய கணக்குகளில் வரவுவைப்பதற்கு அவ்வங்கிச்சங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏ) வங்கிச்சங்க கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதியங்கள் அத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.இங்கு அனுப்பப்படுகின்ற மதிப்பீடுகள் மற்றும் நிர்மாணிப்பதற்கு உள்ள காணிகளின் உரிமையினையும் சரியாக உறுதிப்படுத்திக்கொள்வதன் பின்னர் குறித்த நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படும் ஆண்டிற்கு கிடைத்த சரியான கோரிக்கைகளின் பொருட்டு மாத்திரம் அதற்கமைய நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

ஒ) இந்த 310,899/= ரூபாய்கான காப்புறுதி நட்டஈட்டுத்தொகை 2001ம் ஆண்டில் இருந்து 2003 வரையான ஆண்டுகளில் ஏற்பட்ட வாகன விபத்துக்கள் காரணமாக அறவிடவேண்டியுள்ள தொகையாகும். இத்தொகையினை அறவிட்டுக்கொள்வது தொடர்பில் காப்புறுதி நிறுவனங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.இவற்றினை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மேலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓ) கணணி வலையமைக்கு உட்படுத்தும் போது சகல சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் ஆரம்ப கணணி அறிவினைப் பெற்றிருப்பது அவசியமானதாகும் என்பதனால் மாவட்ட மட்டத்தில் உள்ள சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் கணணி பயிற்சியினை வழங்குவது குறிக்கோளாக இருந்தது.அதற்கமைய இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையும் ஒரு அரசாங்க நிறுவனமாக இருந்தமையினால் அந்நிறுவனத்தின் கிளைகள் அதிகமானவைகள் மாவட்ட மட்டங்களில் இருந்தமையும் 07 நாட்களின் பொருட்டான பாட நெறிக்கட்டணம் ரூபா 3352.50 ஆகிய பொதுப் பாடநெறிக்கட்டணமாக இருந்ததனால் இந்நிறுவனத்தினை தெரிவுசெய்துகொள்வதற்கு முடியுமாக இருந்தது.

4.3 செயற்திறனற்ற நெறிப்படுத்தல்

அ) ஒப்படைக்கப்பட்ட கடமைகளின் அடிப்படையில் இவ்வுத்தியோகத்தர் இவ்வதிகாரசபையில் கடமையாற்றுவதனால் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற கொடுப்பனவில் இருந்து இத்தொகையினை அறவிட்டு புதிய கமரா ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) 2012.12.31ம் திகதியில் தயாரிக்கப்பட்ட எழுதுகருவிகள் சுழற்சிநிதியத்தில் டிசம்பர் 31ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற மாவட்ட நிதி மீதி வழிப்பணமாகக் காட்டப்பட்டுள்ளதுடன் இறுதிக்கணக்குகளை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் இச்சகல தொகையும் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது.

இ) தலைமை அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களால் மாதாந்த முன்வேலைத்திட்டம் மற்றும் மேற்கொண்ட பணி அறிக்கைகளை ஒவ்வொரு மாதத்திலும் 10ம் திகதிக்கு முன்னர் நிர்வாகப்பிரிவிற்கு சமர்ப்பிப்பதற்கு எழுத்துமூல ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஈ) **கிரிஎல்ல பிரதேச செயலகப்பிரிவு**

கிரிஎல்லவின் கருத்திட்டங்கள் 09ல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரிசீலனையின் பின்னர் அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் மேலதிக தொகையொன்றினை செலவிடுதல் அல்லது நிதி கிடைக்கப்படவில்லை.இங்கும் மொத்த மதிப்பீட்டுச்செலவினை மீறியதாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் கருத்திட்டத்தினை செயற்படுத்தும்போது இடத்திற்குத் தேவையானதன் பிரகாரம் வேலை விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

தெஹியோவிட்ட பிரதேசசெயலகப்பிரிவு

	கருத்திட்டம்	மதிப்பீட்டுத்தொகை (ரூபா)	ஒப்பந்தமிடப்பட்ட தொகை (ரூபா)	செலுத்தப்பட்ட தொகை (ரூபா)
1	எல்கொட சனசமூக நிலையம்	441,454	378,087	378,087
2	திகல பாதை	484,851	394,941	394,941
3	பல்பணிக்கட்டிடம்	164,389	123,332	123,332
4	ஹத்தபிட்டிய மதகு	518,479	393,767	393,767

மேலுள்ள பிரகாரம் ஒப்பந்தமிடப்பட்ட தொகைக்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.மொத்த மதிப்பீட்டு செலவுகளை தாண்டியதாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் கருத்திட்டத்தினை செயற்படுத்தும் போது இடத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வேலை விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

உ) **எல்கொட சனசமூக நிலையத்தினை திருத்துதல்**

இக்கட்டிடமானது 30 வருட கால பழைமை வாய்ந்த கட்டிடமொன்றாகும். பழைமையான ஓடுவேயப்பட்ட கூரை கறைபடிந்து உடைந்திருந்ததனால் சமுர்த்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் எஸ்பெஸ்டஸ் தகடிடப்பட்டு கூரை தயாரிக்கப்பட்டுள்ளது.சகல வகையான கூட்டங்களை

நடாத்துவது சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலங்களை நடாத்திச்செல்வதற்காக இக்கட்டிடம் பயன்படுத்தப் பட்டுள்ளது. கூரையின் மேல் மரமொன்று விழுந்ததனால் சமுர்த்தி செயலணி நிதியினைப் பெற்றுக்கொண்டு கூரையினையும் ஏனைய திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>திம்பிரிபொல மல்வர்சா நீர் விநியோகத்திட்டம்</u>

இக்கருத்திட்டமானது மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதில் முதலாவது கூட்டம் மாத்திரம் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் கட்டத்தின் கீழ் சமுர்த்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் கொன்கிறீட் உருளைகள் இடப்பட்டு கிணற்றினை அமைத்தல் நீர் இறைக்கும் இயந்திரத்தினை கொள்வனவு செய்தல் மற்றும் அதனை பொருத்துவதற்கான அறையொன்றினை நிர்மாணித்து வடிகாண்களை வெட்டி 143அடி குழாய் பொருத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நீர்த்தாங்கியினை பொருத்துவதற்கு பொருத்தியினை நிர்மாணிப்பதும் கிணற்றில் நீர் தாங்கியை பொருத்துகின்ற இடத்திற்கு நீர்குழாய்களை பதிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

52 பயனாளிகள் பயனைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்ற இக்கருத்திட்டத்தில் பிளாஸ்ரிக்கினால் ஆன நீர்த்தாங்கியை கொள்வனவு செய்து பொருத்துதல் மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்ந்தும் குழாய்களை புதைப்பதற்கான மூன்றாம் கட்டத்தின் கீழ் சமுர்த்தி அதிகாரசபையின் மூலம் ஏற்கனவே ரூபா 226,030/- ற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டிற்குள் சகல பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு கருத்திட்டத்தினை மக்கள் பாவனைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>கிரிஎல்ல தெஹரகொட புதிய பாதை குடிநீர் கிணற்றினை நிர்மாணித்தல்</u>

மதிப்பீட்டிற்கமைய 25 அடிகள் மட்டளவில் தோண்டப்பட வேண்டியிருந்தாலும் கபூக் கல் காணப்பட்டதன் காரணமாக 6-7 அடிமட்டளவில் தோண்டப்பட்டுள்ளதுடன் அந்த அளவிற்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அத்தோடு குறித்த தரத்திற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கையிட்டுள்ளார்.

கணக்காய்வுக்குட்படுகின்ற சந்தர்ப்பத்தில் கிணறு துப்பரவற்ற நிலையில் இருந்தாலும் தற்போது கிணறு துப்புரவாக்கப்பட்டு நீர் பயன்படுத்தப்படுகின்றது.
இக்கருத்திட்டத்தினை அவதானிக்கும் பொருட்டு களப்பரிசீலனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அங்கு பிரதேசவாசிகள் கூறியதாவது நிர்மாணிக்கப்பட்டுள்ள இச்சிறிய கிணறு 10 குடும்பங்கள் மட்டளவில் நீரை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ள ஒரு பயனுள்ள கருத்திட்டமொன்றாகும்.

4.4 முரண்பாடுகளுக்குள்ளான கொடுக்கல் வாங்கல்கள்

அ) நிதிப்பிரமாணம் 104இற்கமைய விசாரணைக்குழுவொன்றினை நியமித்து தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை பயன்படுத்த முடியாத உபகரணங்கள் தொடர்பில் செயற்படுத்த முடியாததன் காரணமாக இதுவரை

உபகரண இருப்பின் பெறுமதி மீளசொத்துக்களாக கணக்கிடப்பட்டு தேய்மானங்களை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆ) சீகிரி உருக்குத் தளபாடங்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு இத்தொகையினை செலுத்துமாறு பல சந்தர்ப்பங்களிலும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவரை இத்தொகையினை செலுத்தாததன் காரணமாக அந்நிறுவனத்திற்கு எதிராக மற்றும் அப்போதிருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கபட்டுள்ளது.

இ) சலுசல நிறுவனத்தினால் இத்தொகை அங்குள்ளதாகவும் தற்போதைக்கு அத்தொகையினை மீள வழங்குவதற்கு அந்நிறுவனத்திடம் நிதி ஒதுக்கீடு இல்லை எனவும் நிறுவனம் அதிக நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அறிவித்துள்ளது. அத்துடன் திறைசேரியிலிருந்து நிதி கோரப்பட்டுள்ளதாகவும் அது கிடைத்த உடனேயே இத்தொகையினை செலுத்துவதாகவும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்கள்.

ஈ) நீதி விசாரணை பிரிவு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பகாலத்திலிருந்து இப்பிரிவின் பிரதிப்பணிப்பாளராக ஈடுபடுத்தப்பட்டிருந்தது இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களாகும்.சட்ட உத்தியோகத்தர்களால் சட்ட நடவடிக்கைகள் பராமரித்துச்செல்லப்பட்டதுடன் பிரதிப்பணிப்பாளரால் நெறிப்படுத்தல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் ஈடுபடுத்தப்பட்டது.இப்பிரிவின் விசாரணை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு நேரடிப் பொறுப்பினை பிரதிப்பணிப்பாளர் வகித்தார்.
அதற்கமைய இலங்கை நிர்வாக சேவையின் இவ்வுத்தியோகத்தரும் இரண்டாம் பதவிநிலை அடிப்படையில் இப்பிரிவின் பிரதிப்பணிப்பாளராக கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்.அவர் தனது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி அப்பதவிக்கு பொருத்தமான ஒரு நபர் என்ற விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.காலகாலம் தாமதமாக இருந்த ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் பலவற்றினை நிறுவனத்திற்கு நன்மை தரக்கூடிய விதத்தில் தீர்த்துள்ளதுடன் 500 ஒழுக்காற்று விசாரணைகளை முடித்துள்ளார்.

இவ்வுத்தியோகத்தரின் இரண்டாம் நிலைக்காலம் 2010 செப்ரம்பர் 15ம் திகதியோடு முடிவடைய இருந்ததுடன் அன்றைய தினத்தில் அவ்வுத்தியோகத்தரை அரச சேவைக்கு மீள விடுவிக்க வேண்டியிருப்பினும் இக்காலத்திற்குள் அதிகாரசபையின் சேவையில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மிகக் குறைந்த மட்டத்தில் (மூன்று பேர் மட்டுமே) இருந்தாலும் இவ்வுத்தியோகத்தரால் நிறைவேற்றப்பட்ட கடமைகளை ஒப்படைப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமையினாலும் நிறுவனத்தினை திணைக்களமாக்கும் வேலைத்திட்டங்கள் காரணமாக வெளி அரச உத்தியோகத்தர்கள் இரண்டாம் நிலை அடிப்படைக்கு வருகை தராமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் உத்தியோகத்தரை இந்நிறுவனத்திலிருந்து விடுவிப்பது பாரிய நிர்வாகச்சிக்கலொன்றாக இருந்தது.

இந்த நிலையின் அடிப்படையில் இவ்வுத்தியோகத்தர் இலங்கை நிர்வாக சேவையில் 10 வருடங்களை பூர்த்தி செய்திருந்ததனாலும் 11/1 தரத்தினை பெறுவதற்கிருந்த சந்தர்ப்பம் அதிகாரசபை சேவைக்காரணமாக தாமதமாகி இருந்தமையும் ஆகிய விடயங்களைக் கவனத்திற் கொண்டு கடமைத் தேவையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் 2010/01/12ம் திகதியின்

199ம் இலக்க மற்றும் 2010/09/21ம் திகதியின் 208ம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானங்களுக்கமைய பிரதிப்பணிப்பாளர் ஒருவராக 2010/09/15ம் திகதியில் இருந்த நிரந்தர பணியாளர் குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

அரசசேவையிலும் இலங்கை நிர்வாக சேவையிலும் இருந்த நன்மைகளுடனான வாய்ப்புக்களை கைவிட்டுவிட்டு இவ்வதிகாரசபையின் நிரந்தர பணியாளர் குழுவின் பொருட்டு சேவைத்தேவையின் அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட இவ்வுத்தியோகத்தருக்கு அசாதாரணம் ஏற்படாதவாறு அவர் இலங்கை நிர்வாகசேவையின் SLI - 1 சம்பள முறையில் பெற்றிருந்த சம்பள உயர்வின் அளவு அதன்நேர் ஒத்த அதிகாரசபையின் சம்பள முறைத்திட்டமான MM-1-1 சம்பளத்தினூடாக வழங்குவதற்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய உத்தியோகத்தரின் சம்பளத்தில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிரந்தரமான பதவிநிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் பணியளவில் உள்ள சந்தர்ப்பங்களிலும் இரண்டாம் நிலையின் அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் அதிகாரசபையில் கடமைக்கு வருகை தராத சந்தர்ப்பத்தில் கடமைத் தகைமைகளைக் கவனத்திற்கொண்டு இவ்வுத்தியோகத்தருக்கு 2010.10.19ம் திகதி நடைபெற்ற முறையான நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் நேர்முகப்பரீட்சைக்குட்படுத்தி இந்த நேர்முகப்பரீட்சைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளராக (மனிதவளம்) பதில் கடமையாற்றுவதற்கும் 2011.03.25ம் திகதியிலிருந்து அப்பதவியில் நிரந்தரமாக பதவியுயர்த்தப்பட்டது.

பிரதிப்பணிப்பாளர் ஒருவராகவும் பணிப்பாளர் ஒருவராகவும் இந்த அதிகாரசபையில் பல பதவிகளில் கடமைகளை நிறைவேற்றியுள்ளதனாலும் தற்போது கடமைபுரிவதனாலும் அனுபவமுள்ள இவ்வுத்தியோகத்தர் குறித்த பதவியில் தகுதியான ஒரு நபராக பிரத்தியேக ரீதியாக வெளிக்காட்டியுள்ளதனை வினயமுடன் சுட்டிக்காட்டுகின்றேன். மேலும் இச்சந்தர்ப்பத்திலும் முகாமைத்துவசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்களுக்கமைய புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ள முடியாததனால் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கவேண்டியுள்ளது.

ஏற்கனவே மனிதவளப்பிரிவின் கடமைகளுக்கு மேலதிகமாக ஒழுக்காற்றுப்பிரிவின் கடமைகளும் எவ்வித பாரபட்சமுமின்றி உத்தியோகத்தர் நிறைவேற்றுகின்றார் என்பதனையும் வினயமுடன் சுட்டிக்காட்டுகின்றேன்.

உங்களது கணக்காய்வு விசாரணையின் 2.2.8.4 பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கொண்டு உத்தியோகத்தருக்கு பணிப்பாளர் என மேற்கொள்ளப்பட்ட நியமனம் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படுகின்ற தீர்மானங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

i)பணிப்பாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்ட 2011/03/25ம் திகதி (அவர் தகுதிகளை பூர்த்தி செய்துள்ளார்) 2012/01/01ம் திகதி என மீள் திருத்தப்பட்டுள்ளது.

ii)2011/03/25ம் திகதியிலிருந்து 2012/01/01 ம் திகதி வரை செலுத்திய மேலதிக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உ) அதிகாரசபையில் சேவையாற்றியதாக உறுதிப்படுத்தலின்றி சம்பள மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்

i)பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் (நிர்வாகம்) MNB/E18/3/2/1/VOL11 என்ற இலக்கமும் 2010/06/08ம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை என்னால் 2010/07/14ம் திகதியிடப்பட்டதும் ச/அதி/02/நிறு/10/02-39 என்ற இலக்கத்தினுடைய கடிதத்தின் மூலம் இவ்வுத்தியோகத்தரை அமைச்சின் ஊடாக நெறிப்படுத்தல் நடவடிக்கையின் பொருட்டு இவ்வதிகாரசபையின் கடமைகளில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய இவ்வுத்தியோகத்தர் 2011ம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திலும் முன்வேலைத்திட்டங்களை சமர்ப்பித்துள்ளதுடன் அதற்கமைய இவ்வுத்தியோகத்தரை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மேலே குறிப்பிடப்பட்ட கடமைகளின் பொருட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தியோகத்தர் 2011ம் ஆண்டில் மேற்கொண்ட பணிகள் தொடர்பான விபரங்களுடனான அறிக்கை ஒன்றினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கோரியுள்ளது.

GA-9969 என்ற இலக்கத்தினையுடைய வாகனம் ஊடகப்பிரிவின் நடவடிக்கைகளின் பொருட்டு இணைப்புச்செய்யப்பட்டுள்ளது.

அப்பிரிவினதும் அமைச்சின் ஊடக நடவடிக்கைகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனை வினயமுடன் அறியத்தருகின்றேன்.இவ்வாகனத்தின் ஓட்டுநர் பதிவுத்தாளின் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ii)புத்தலை பிரதேச சபையின் தலைவராக கடமையாற்றுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இக்காலத்தில் அதிகாரசபைக்குரிய கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக பிரதேசசெயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

4.5 **<u>ஒப்பந்த நிருவாகக் குறைபாடுகள்</u>**

இக்கட்டிடத்தினை நிர்மாணிக்கும் பொருட்டு ரூபா 823,404/- செலுத்தப்பட்டுள்ளது. தற்போது கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றது. நிர்மாணிக்கும் போது ஏற்பட்ட ஒருசில குறைபாடுகளை இனங்கண்டு குறித்த ஒப்பந்ததாரரைகொண்டு இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ஆ) இருமாடிகளைக்கொண்ட இக்கட்டிடத்தின் கீழ் தளத்தின் வேலைகள் சகலதும் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது அது பயன்படுத்தப்படுகின்றது. மேல்மாடியில் நிர்மாணிக்கும் பொருட்டு கிடைத்த ரூபா 133,9881/- இற்கான தொகையில் கொன்கிறீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு அதன் மேல் கூரை அமைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய வேலைகளின் பொருட்டு ரூபா 1815624/- இற்கான மதிப்பீடொன்றினை தயாரித்து அதற்கான நிதி ஒதுக்கீட்டினை 2012ல் விடுவித்துள்ளது.அதற்கமைய இங்கு வேலைத்திட்டங்கள் இவ்வாண்டில் முடிவுறுத்த முடியும்.

4.6 **<u>ஊழியர் முகாமைத்துவம்</u>**

(i)திரு.காமினி ராஜநாயக்க சமுர்த்தி முகாமையாளர் 2011/09/12ம் திகதி மீளச்சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். குற்றப்பத்திரிகையினை வழங்குவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவர் 2012/11/05ம் திகதி இறந்துள்ளார்.

திருமதி சதுரிக்கா தயானி தேனுவர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் 2012/11/05ம் திகதி குற்றப்பத்திரிகையை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii)கணக்காய்வு அறிக்கைகளுக்குரிய விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சாட்சி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டதனால் இக்குற்றப்பத்திரிகையினை வழங்குவது தாமதமாகியது. இருப்பினும் தற்போது இக்குற்றப்பத்திரிகையினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii)இவ்வூழியர் தொடர்பில் தற்போது நீதிமன்றத்தில் செயற்படுத்தப்படுகின்ற வழக்கு முடிவடைந்ததன் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆவணக்கோவை பின்தள்ளி வைக்கப்பட்டது.

(iv)விசாரணை நடவடிக்கைகள் இறுதி அறிக்கைகள் கிடைத்ததன் பின்னர் ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(v)05 உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்றுக்கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

5. **<u>கணக்கீட்டு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்</u>**

5.1 கூட்டுத்திட்டமிடல்

2009ம் ஆண்டிலிருந்து 2013ம் ஆண்டுவரையிலான காலத்திற்குரிய கூட்டுத்திட்டமிடல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் 2003/06/02ம் திகதியிடப்பட்ட PED/12 என்ற இலக்கத்தினையுடைய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் விபரங்கள் உள்ளடக்கிய கூட்டுத்திட்டமிடலொன்றினை திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் புதிய திணைக்களத்தின் பணியாளர்கள் மற்றும் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அந்தந்த பதவிகளுக்குரிய பொறுப்புக்களை இனங்காணக்கூடிய விதத்தில் மீளத்தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5.2 உள்ளகக் கணக்காய்வு

அ) உள்ளகக்கணக்காய்வுப்பிரிவின் அங்கீகரித்த பணியாளர்களுக்கமைய வெற்றிடமாக இருப்பது நிறைவேற்றுநர் பதவிகள் 03உடன் 38 பணியாளர் பதவிகள் மாத்திரமாகும்.இருப்பினும் 2011ம் ஆண்டில் விசாரணை முகாமையாளர் 150 பேரினது சேவையினையும் இப்பிரிவிற்கு பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததனால் உள்ளகக் கண்காய்வுத் திட்டத்தினை தயாரிக்கும் போது அவ்வெண்ணிக்கையும் உட்பட்டதாக முழு ஊழியர்களின் எண்ணிக்கையானது 286 ஆக கருதப்பட்டது.அதற்கமைய இப்பிரிவின் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கையானது 148 ஆகும் என்பதுடன் இவ்வெற்றிட எண்ணிக்கை உருவாகியுள்ளது.2012ம் ஆண்டில் புதிய முகாமையாளர்களை ஆட்சேர்த்துக்கொள்வதன் மூலம் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ) 2011ம் ஆண்டிற்குள் வெளியிடப்பட்டிருந்த கணக்காய்வு விசாரணைகள் மற்றும் அறிக்கைகள் அதிகமானவை அதற்கு முன்னைய வருடத்திற்கு சொந்தமானவை என ஏற்றுக்கொள்கின்றேன். கணக்காய்வுப்பிரிவில் ஏற்பட்டிருந்த உத்தியோகத்தரின் வெற்றிடங்கள் மற்றும் கணணி உத்தியோகத்தரின் குறைபாடுகள் காரணமாக இந்த நிலைமை உருவாகியது.எவ்வாறிருந்தும் 2012ம் ஆண்டு ஆகும்போது சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் மற்றும் மகாசங்கங்களின் அத்தோடு பிரதேச செயலகங்களில் குறித்த 2006ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரையிலான கணக்காய்வு விசாரணையும் நிதிக்கூற்று வெளியிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்பதனை வினயமுடன் அறியத்தருகின்றேன். எதிர்காலத்தில் கணக்காய்வு விசாரணைகளை வெளியிடுவதற்கு முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. இப்பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனத்தினை செலுத்தி சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உரிய பிரகாரம் நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு குறித்த உத்தியோகத்தர்கள் விளக்கமளிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.பி.பீ.திலகசிரி
பணிப்பாளர் நாயகம்

இலங்கை சமுர்த்தி அதிகார சபை

04ஆம் மாடி,

“செத்சிரிபாய”,

பத்தரமுல்லை

மின்னஞ்சல் : samuaut@samurdhi.gov.lk

தொலைநகல்: 011-2889046

தொலைபேசி: 011-2872202

பொருளாதார அபிவிருத்தி

அமைச்சு.